# இறையனார் களவியல்

என்னும்

# இறையனார் அகப்பொருள்

# இறையனார் களவியல்

---

[க]

அன்பி னைந்திணைக் களவெனப் படுவ
தந்தண ரருமறை மன்ற லெட்டினுட்
கந்தருவ வழக்க மென்மனார் புலவர்.

என்பது சூத்திரம்.

[பாயிரம்]

இந் நூல் உரைப்பினும் அந் நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்கற்பாற்று.

என்னை,

'ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே'

என்பதாகலானும், 'பருப்பொருட்டாகிய பாயிரங்கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்கும்' என்பதாகலானும், பாயிரம் உரைத்து [1]உரைக்க என்பது மரபு. என் போலவோ எனின், 'கொழுச் சென்றவழித் துன்னூசி இனிது செல்லுமதுபோல' என்பது.

1-உரைக்க வேண்டும்.

[பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம்]

அப்பாயிரந்தான் இருவகைப்படும், பொதுப்பாயிரமும் சிறப்புப்பாயிரமும் என. அவற்றுள் பொதுப்பாயிரம் என்பது எல்லா நூன்முகத்தும் உரைக்கப்படுவது; சிறப்புப்பாயிரம் என்பது தன்னால் [1]உரைக்கப்படும் நூற்கு இன்றியமையாதது.

[பாயிரத்தின் இன்றியமையாமை]

பாயிரம் என்ற சொற்குப் பொருள் யாதோ எனின், புறவுரை என்றவாறு. ஆயின், நூல் கேட்பான் [2]புகுந்தே நூல் [3]கேளாது புறவுரை [4]கேட்டு [5]என்பயன் எனின், நூற்குப் புறனாக வைத்தும் நூற்கு இன்றியமையாதது, ஆதலின் என்க. என்போலவோ எனின், கருவமைந்த மாநகரிற்கு உருவமைந்த வாயின்மாடம் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும், வகை மாண்ட நெடுஞ் சுவர்க்குத் தகைமாண்ட பாவை போலவும் என்பது. ஆகலின் பாயிரங் கேட்டே நூல் கேட்கப்படும்.

[பொதுப்பாயிரம்]

அவற்றுள், அப் பொதுப்பாயிரந்தான் நான்கு வகைப் படும்: அவை, ஈவோன்றன்மையும், ஈதலியற்கையும், கொள்வோன்றன்மையும், கோடன்மரபும் என.

என்னை,

'ஈவோன் றன்மை யீத லியற்கை
கொள்வோன் றன்மை கோடன் மரபென
ஈரிரண் டென்ப பொதுவி னியற்கை'

என்பதாகலின்.

ஈவோன்றன்மை என்பது — ஆசிரியனது தன்மை என்றவாறு;

ஈதலியற்கை என்பது — அவன் உரைக்கும் முறைமை என்றவாறு;

---

1-உரைக்கின்ற. 2-புகுந்தோன். 3-கேளாமுன். 4-கேட்பது. 5-என்னையோ.

**கோள்வோன்றன்மை** என்பது — மாணாக்கனது தன்மை என்றவாறு;

**கோடன்மரபு** என்பது — அவன் கேட்கும் முறைமை என்றவாறு.

அவை யெல்லாம் விரித்துரைப்பிற் பெருகும்; [1] விரிந்த நூலிற் கண்டுகொள்க.

[சிறப்புப்பாயிரம்]

இனிச் சிறப்புப்பாயிரம் எட்டு வகைப்படும். அவை யாவையோ எனின், ஆக்கியோன் பெயரும், வழியும், எல்லையும், நூற்பெயரும், யாப்பும், நுதலிய பொருளும், கேட்போரும், பயனும் என இவை.

என்னை,

'ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே'

என்றாராகலின்.

இவற்றொடு, காலமும் களனும் காரணமும் கூட்டிப் பதினொன்று என்பாரும் உளர்;

என்னை,

'காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரும் உளரே'

என்றாராகலின்.

**ஆக்கியோன் பெயர்** என்பது — நூல் செய்த ஆசிரியன் பெயர் என்றவாறு; இந்நூல் செய்தார் யாரோ எனின், மால்வரை புரையும் மாடக்கூடல் ஆலவாயிற் பால்புரை பசுங்கதிர்க் குழவித்திங்களைக் குறுங்கண்ணியாகவுடைய அழலவிர் சோதி அருமறைக் கடவுள் என்பது.

---

1-முடிந்த.

வழி என்பது — இந்நூல் இன்னதன் வழித்து என்பது. இது, வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவனாற் செய்யப் பட்டதாகலான் வழிநூல் என்று சொல்லப்படாது, முதனூல் எனப்படும் என்பது.

எல்லை என்பது — இந்நூல் இன்ன எல்லையுள் நடக்கும் என்பது. இந்நூல் எவ்வெல்லையுள் நடக்குமோ எனின், வடக்கு வேங்கடம், தெற்குக் குமரி, கிழக்கும் மேற்குங் கடல் எல்லை-யாக நடக்கும் என்பது.

என்னை,

'வடக்குந் தெற்குங் குடக்குங் குணக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
நூலதின் முறையே வாலிதின் விரிப்பின்'

எனவும்,

'வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து'

எனவும் காக்கைபாடினியாரும் தொல்காப்பியனாரும் சொன்னா-ராகலின் என்பது.

நூற் பெயர் என்பது — நூலது பெயர் என்றவாறு. நூல் பெயர்பெறுமிடத்துப் பல்விகற்பத்தாற் பெயர்பெறும்; என்னை, செய்தானாற் பெயர்பெறுதலும், செய்வித்தானாற் பெயர் பெறுதலும், இடுகுறியாற் பெயர் பெறுதலும், அளவினாற் பெயர் பெறுதலும், சிறப்பினாற் பெயர்பெறுதலும் என்க.

செய்தானாற் பெயர் பெற்றன : அகத்தியம், தொல்காப்பியம் என இவை.

செய்வித்தானாற் பெயர் பெற்றன : சாதவாகனம், இளந் திரையம் என இவை.

இடுகுறியாற் பெயர் பெற்றன : நிகண்டு, நூல், கலைக்-கோட்டுத் தண்டு என இவை.

அளவினாற் பெயர் பெற்றது : **பன்னிருபடலம்** என்பது.

சிறப்பினாற் பெயர் பெற்றது: **களவியல்** என்பது; என்னை, களவு கற்பு என்னுங் கைகோள் இரண்டனுள் களவினைச் சிறப்புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன்.

என்னை,

> 'முற்படப் புணராச் சொல்லின் மையிற்
> கற்பெனப் படுவது களவின் வழித்தே.' [இறை - கரு]

என்று வேண்டுதலின். கற்பு, களவுபோல ஒருதலையான அன்பிற்று அன்று.

இனி, **யாப்பு** என்பது — நூல் யாப்பு. நூல் யாக்குமிடத்து நான்கு வகையால் யாக்கப்படும்; தொகுத்தும், விரித்தும், தொகைவிரியாகவும், மொழிபெயர்த்தும் என.

என்னை,

> 'தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்
> ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே' [மரபியல் - கூச]

என்றாராகலின்.

அவற்றுள், இது தொகுக்கியாக்கப்பட்டது : என்னை, உலகத்து நடக்கும் அகப்பொருட் செய்யுளிலக்கணம் எல்லாம் இவ்வறுபது சூத்திரத்துள்ளே தொகுத்தானாகலின் என்பது.

இனி, **நுதலியபொருள்** என்பது — நூற்பொருளைச் சொல்லுதல் என்பது. இந்நூல் என் நுதலிற்றோ எனின், தமிழ் நுதலிற்று என்பது.

**கேட்போர்** என்பது — இன்னார் கேட்டார் என்பது. இந்நூல்கேட்டார் யாரோ எனின், குற்றமுடைய நூலாயினன்றே குற்றமின்மை ஆராயவேண்டுவது; இது முனைவன்றன்னாற் செய்யப்பட்ட நூலாகலான் [1]குற்றமின்றே; [2]இன்மையிற் கேட்டாரையும் இன்றென்பது. இன்றேயெனினும், உரை நடந்து வாராநின்றமை நோக்கக் கேட்டாரையும் உடைத்தென்பது.

---

1-குணமின்மை. 2-யின்மையின்.

யாரோ கேட்டார் எனின், மதுரை உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன் என்பது. அவன் கேட்டற்குக் காரணஞ் சொல்லுதும் :

[முச்சங்க வரலாறு]

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கம் இரீஇயினார் பாண்டியர்.

அவருள் தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், [1] முரிஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என இத் தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் என இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றி யாண்டு சங்கமிருந்தார் என்பது. அவர்களைச் சங்கமிரீஇயினார் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார் எழுவர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவர்க்கு நூல் அகத்தியம் என்ப.

இனி, இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறு பாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக் கோமானும், கீரந்தையும் என இத்தொடக்கத்தார் அறுபத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும், [2] குருகும், வெண்டாளியும், [3] வியாழமாலை அகவலும் என இத் தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசை நுணுக்கமும், பூத புராணமும் என இவை. அவர் மூவாயிரத்து எழுநூற்றியாண்டு

---

1-முரஞ்சியூர். 2-குருகுவெண்டாளியும். 3-அகவலும்.

சங்கமிருந்தார் என்ப. அவரைச் சங்கமிரீஇயினார் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார் ஐவர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்து என்ப. அக்காலத்துப்போலும் பாண்டியனாட்டைக் கடல்கொண்டது.

இனிக், கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும், சேந்தம்பூதனாரும், அறிவுடையரனாரும், பெருங் குன்றூர் கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனாரும், மதுரை மருதனிளநாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் என இத் தொடக்கத்தார் நாற்பத் தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத் தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புற நானூறும், ஐங்குறு நூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என்று இத் தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல் காப்பியமும் என்ப. அவர் சங்கமிருந்த யாண்டு ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்கமிரீஇயினார் கடல்கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங் கேறினார் மூவர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தரமதுரை என்ப.

[களவியலின் வரலாறு]

அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லவே, பசிகடுகுதலும், அரசன் சிட்டரையெல்லாங் கூவி, 'வம்மின், யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் நுமக்கு அறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னை [1]யுள்ளிவம்மின்' என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக், கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த

1. புள்ளுமின்.

பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்னர், அரசன், 'இனி நாடு நாடாயிற்றாகலின், நூல்வல்லாரைக் கொணர்க' என்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, 'பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேம்' என்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, 'என்னை, எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது [1]பொருளதிகாரத்தின்பொருட்டன்றே, பொருளதிகாரம் பெறேமேயெனின், இவை பெற்றும் பெற்றிலேம்' எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயில் அழல் நிறக்கடவுள் சிந்திப்பான்: 'என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று: அதுதானும் ஞானத்திடைய தாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்' என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து, மூன்று செப்பிதழகத்து எழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

இட்ட பிற்றைஞான்று, தேவர்குலம் வழிபடுவான், தேவர்கோட்டத்தை எங்குந் துடைத்து, நீர் தெளித்துப் பூவிட்டுப், பீடத்தின்கீழ் என்றும் அலகிடாதான் அன்று [2]தெய்வதத்துக் குறிப்பினான், 'அலகிடுவேன்' என்று, உள்ளங்குளிர அலகிட்டான்; இட்டாற்கு அவ்வலகினோடும் இதழ் போந்தன. போதரக், கொண்டுபோந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத்தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்டப், பிராமணன் சிந்திப்பான்: 'அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றான் என்பது கேட்டுச் செல்லாநின்றது உணர்ந்து நம்பெருமான் அருளிச் செய்தானாகும்' என்று, தன் அகம் புகுதாதே, கோயிற் றலைக்கடைச் சென்று நின்று, கடைகாப்பார்க்கு உணர்த்தக், கடைகாப்பார் அரசற்கு உணர்த்த, அரசன், 'புகுதுக' எனப் பிராமணனைக் கூவச், சென்று புக்குக் காட்ட, ஏற்றுக்கொண்டு நோக்கிப், 'பொருளதிகாரம்! இது நம்பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச் செய்தானாகற்பாலது!' என்று, அத்திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, 'நம்பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்

1 - பொருளாய்வின். 2 - தெய்வத்தவக்.

செய்த பொருளதிகாரம், இதனைக் கொண்டுபோய்ப் பொருள் காண்மின்' என, அவர்கள் அதனைக் கொண்டுபோந்து கன்மாப்பலகை ஏறியிருந்து ஆராய்வுழி, எல்லாரும் தாந்தாம் உரைத்த உரையே நன்றென்று சில நாளெல்லாஞ் சென்றன.

[களவியல் உரை கண்டமை

செல்ல, 'நாம் இங்ஙனம் எத்துணை உரைப்பினும் ஒருதலைப்படாது: நாம் அரசனுழைச் சென்று, நமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும் என்று கொண்டுபோந்து, அவனாற் பொருளெனப்பட்டது பொருளாய், அன்றெனப்பட்டது அன்றாய் ஒழியக்காண்டும்' என்று, எல்லாரும் ஒருப்பட்டு, அரசனுழைச் சென்றார். அரசனும் எதிர்சென்று, 'என்னை, நூற்குப் பொருள் கண்டதோ?' என, 'அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்' என, 'போமின், நுமக்கோர் காரணிகனை யான் எங்ஙனம் நாடுவேன்! நீயிர் நாற்பத்தொன்பதின்மர் ஆயிற்று, நுமக்கு நிகராவார் ஒருவர் இன்மையின் அன்றே' என்று அரசன் சொல்லப், போந்து, கன்மாப் பலகை ஏறியிருந்து, 'அரசனும் இது சொல்லினான், யாம் காரணிகனைப் பெறுமாறு என்னைகொல்' என்று சிந்திப்புழி, சூத்திரஞ் செய்தான் ஆலவாயில் அவிர்சடைக் கடவுளன்றே, அவனையே காரணிகனைத் தரல்வேண்டும் எனச் சென்று வரங் கிடத்தும் என்று வரங்கிடப்ப, இடையாமத்து, இவ்வூர் உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன் என்பான், பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத்தான், ஒரு மூங்கைப்பிள்ளை உளன்: அவனை அன்னனென்று இகழாது கொண்டுபோந்து, ஆசனத்தின்மேல் இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருள் உரைத்தாற் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும், மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளா இருக்கும்; அவன் குமார தெய்வம், அங்கோர் சாபத்தினாற் றோன்றினான்' என முக்கால் இசைத்த குரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்று; ஆக எழுந்திருந்து, தேவர்குலத்தை வலங்கொண்டு போந்து, உப்பூரி குடிகிழாருழைச் சங்கமெல்லாஞ் சென்று, 'இவ்வார்த்தை யெல்லாஞ் சொல்லி, 'ஐயனாவான் உருத்திரசன்மனைத் தரல்

வேண்டும்' என்று வேண்டிக்கொடுபோந்து, வெளியது உடீஇ, வெண்பூச் சூட்டி, வெண்சாந்து அணிந்து, கன்மாப் பலகை யேற்றிக் கீழிருந்து சூத்திரப் பொருள் உரைப்ப, எல்லாரும் முறையே பொருளுரைப்பக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்தவிடத்து ஓரோவிடத்துக் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் நிறுத்தி, பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்தவிடத்துப் பதந்தொறுங் கண்ணீர்வார்ந்து, மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து, 'மெய்யுரை பெற்றாம் இந்நூற்கு!' என்றார்.

அதனால், உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மனாவான் செய்தது இந்நூற்கு உரை என்பாரும் உளர்: அவர் செய்திலர், மெய்யுரை கேட்டார் என்க. மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரை கண்டு, குமாரசுவாமியாற் கேட்கப்பட்டது என்க. இனி உரை நடந்து வந்தவாறு சொல்லுதும்:

### [உரை நடந்துவந்த முறை

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனார் கீரங்கொற்றனார்க்கு உரைத்தார்: அவர் தேனூர்கிழார்க்கு உரைத்தார்; அவர் படியங்கொற்றனார்க்கு உரைத்தார்: அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கு உரைத்தார்: அவர் மணலூராசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்கு உரைத்தார்; அவர் செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங் குமாரனார்க்கு உரைத்தார்: அவர் திருக்குன்றத்தாசிரியர்க்கு உரைத்தார்: அவர் மாதளவனார் இளநாகனார்க்கு உரைத்தார்; அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க்கு உரைத்தார். இங்ஙனம் வருகின்றது உரை.

பயன் என்பது, இது கற்க இன்னது பயக்கும் என்பது. இது கற்க இன்னது பயக்கும் என்பது அறியேன், யான் நூற்பொருள் அறிவல் என்னுமே யெனின், சில்லெழுத்தினான் இயன்ற பயனறியாதாய், பல்லெழுத்தினான் இயன்ற நூற்பொருள் யாங்ஙனம் அறிதியோ எனப்படும்; ஆகலின், இன்னது பயக்கும் என்பது அறியல்வேண்டும். என் பயக்குமோ இது கற்க எனின், வீடுபேறு பயக்கும் என்பது.

[களவு என்றதன் காரணம்]

என்னை, இது களவியலன்றே, இது கற்க வீடுபேறு பயக்குமாறு என்னை. களவு கொலை காமம் இணைவிழைச்சு என்பனவன்றே பாவத்தாராலும் உலகத்தாராலும் கடியப்பட்டன, அவற்றுள் ஒன்றன்றோ இது எனின், அற்றன்று, களவு என்னுஞ் சொற்கேட்டுக் களவு தீதென்பதூஉம், காமம் என்னுஞ் சொற்கேட்டுக் காமம் தீதென்பதூஉம் அன்று, மற்று அவை நல்ல ஆமாறும் உண்டு: என்னை, ஒரு பெண்டாட்டி தமரொடு கலாய்த்துக் கொண்டு சாதல் என்னும் உள்ளத்தளாய் நஞ்சு கூட்டி வைத்தது, விலக்குவாரை இல்லாதபோழ்து உண்பல் என்று நின்றவிடத்து, அருளுடையானொருவன் அதனைக் கண்டு, இவள் இதனை உண்டு சாவாமற்கொண்டுபோய் உகுப்பல் என்று, அவளைக் காணாமே கொண்டுபோய் உகுத்திட்டான்; அவளும் சாநீக்கத்துக்கண் நஞ்சுண்டு சாவான் சென்றாள்; அது காணாமையிற் சாக்காடு நீங்கினாள். அவன் அக்களவினான் அவளை உய்யக்கொண்டமையின் நல்லுலகிற் செல்லும் என்பது. மற்றும் இதுபோல்வன களவாகா, நன்மை பயக்கும் என்பது.

இனிக் காமம் நன்றாயவாறும்: ஒன்று சுவர்க்கத்தின்கட் சென்று போகந்துய்ப்பல் என்றும், உத்தரகுருவின்கட்சென்று போகந்துய்ப்பல் என்றும், நன்ஞானம் கற்று வீடு பெறுவல் என்றும், தெய்வத்தை வழிபடுவல் என்றும் எழுந்த காமம் நன்றாயன்றே? மேன்மக்களாலும் புகழப்பட்டு, மறுமைக்கும் உறுதி பயக்கும் ஆகலின், இக் காமம் பெரிதும் உறுதியுடைத்து என்பது. உறுதி உடைத்தாமாறு: அறுவகைப்பட்ட பாஷண்டிகரும் இணைவிழைச்சுத் தீதென்ப. அஃது உண்டாமிடத்துச் சுற்றத்தொடர்ச்சி உண்டாம்; உண்டாகவே, கொலையே களவே வெகுளியே செருக்கே மானமே என்று இத்தொடக்கத்துக் குற்றம் நிகழும் என்பது. அதுகேட்கவே, தலையாயினார் அதன்கணின்று நீங்குவர்.

இனி, இடையாயினார், பெண் என்பது எற்புச் சட்டகம், முடைக் குரம்பை, புழுப் பிண்டம், பைம்மறியா நோக்கப் படுத்தார்க்கு நகைமைத்து; ஐயும் பித்தும் வளியும் கூடும்

கொழுவும் புரளியும் நரம்பும் சூத்திரப்பாட்டங்களும் என்று இவற்றது இயைபு பொருளன்று; பொருளாயின், பூவே சாந்தே பாகே எண்ணெயே அணிகலனே என்றிவற்றாற் புனையவேண்டா, தான் இயல்பாகவே நன்றாயின் என்று அதன் அசுபத்தன்மை உரைப்பக் கேட்டு நன்குவப்பர்.

கடையாயினார் மத்திமத்தானும் நீங்கார் : என்னை, பல்பிறப்பிடை ஆணும் பெண்ணுமாய்ப் பயின்று, போகந் துய்த்து வருகின்றமையின். அவர்க்கு இது காட்டப்பட்டது. என்னை, 'பேதையைக் காதல் காட்டிக் கைவிடுக்கு மன்பகு-ஞல், அவன் தாழப்பட்ட இணைவிழைச்சினுள்ளே மிக்க-தொன்று காட்டப்பட்டது. எஞ்ஞான்றும் மூப்பும் பிணி சாக்காடு இல்லாது, நிச்சநிரப்பு இடும்பை இல்லாது இவனும் பதினாறாட்டைப் பிராயத்தானாய், இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய், ஒத்த பண்பும், ஒத்த நலனும், ஒத்த அன்பும், ஒத்த செல்வமும், ஒத்த கல்வியும் உடையராய்ப், பிறிதொன்-றிற்கு ஊனமின்றிப் போகந்துய்ப்பர் என்று காட்டப்பட்டது என்பது. என்போலவோ எனின், கறிக் கின்னாதானைக் கட்டி பூசிக் கடுத் தீற்றியவாறு போலவும், கலங்கற் சின்னீர் தெரு-ளாமையான் உண்பானை, அறிவுடையான் ஒருவன் பேய்த்-தேரைக் காட்டி, 'உதுகாணாய், நன்னீர் தோன்று-கின்றது, அந்நீர் பருகாய், இச்சேற்றுநீர் பருகி மன் செய்தி!' என்று கொண்டுபோய் நன்னீர் காட்டி ஊட்டியது போலவும், தான் ஒழுகா நின்றதோர் இணைவிழைச்சினுள்ளே மிக்கதோர் ஒழுக்கங் காட்டினான். காட்டவே, கண்டு, 'இது பெறுமாறு என்னைகொல்லோ?' என்னும்: எனவே, மக்கட்பாட்டினானும் வலியானும் வனப்பானும் பொருளானும் பெறலாவது அன்று, தவஞ் செய்தாற் பெறல் ஆம்.

என்னை,

'வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்' [குறள். தவம் - ௫.]

என்பதாகலான் என்பது. அது கேட்டு, இனி யானும் தவஞ் செய்து இதனைப் பெறுவல் என்று, அதன்பாட்டு வேட்கை-

யால், தவஞ்செய்யும் செய்யாளினுனைப், 'பாவ, இதன் பரத்ததோ வீடுபேற்றின்பம்' என்று, வீடுபேற்றின்பத்தை விரித்து உரைக்கும். அதுதான் பிறப்புப் பிணி மூப்புச் சாக்காட்டு அவலக் கவலைக் கையாற்றின் நீங்கி, மணியினது ஒளியும், மலரினது நாற்றமும், சந்தனத்தது தட்பமும்போல, உண்ணின்று எழுதரும் ஒரு பேரின்ப வெள்ளத்தது என்பது கேட்டு, அதனை விட்டு. வீடுபேற்றின் நன்மை அவாவினின்று, தவமும் ஞானமும் புரிந்து. வீடு பெறுவானும் என்பது. அவனை வஞ்சித்துக் கொண்டுசென்று, நன்னெறிக்கண் நிறீஇயினமையின் களவியல் என்னுங் குறி பெற்றது.

இதுகற்க நாற்பொருளும் பயக்கும் என்பது

இனிப், புகழ் பொருள் நட்பு அறன் என்னும் நான்கினையும் பயக்கும், இது வல்லுநை : என்னை, நற்றுவல்லன் என்பதனின் மிக்க புகழ் இல்லை. உலகத்தாராலும் சமயத்தாராலும் ஒருங்கு புகழப்படுமாகலான் என்பது. இனிப், பொருளும் பயக்கும் ; என்னை, பொருளுடையாரும் பொருள்கொடுத்துங் கற்பாராகலின் என்பது. இனி, நட்பும் பயக்கும் : என்னை, கற்றுரைச் சார்ந்து ஒழுகவே நமக்கும் அறிவுபெருகும் என்று பலருஞ் சார்ந்து ஒழுகலின் என்பது. இனி, அறனும் பயக்கும்; என்னை ஞானத்தின் மிக்க கொடை இன்மையான் என்பது. இது பயன்.

இனிக், காலம் என்பது — கடைச்சங்கத்தார் காலத்துச் செய்யப்பட்டது.

இனிக், களம் என்பது — உக்கிரப்பெருவழுதியார் அவைக் களம் என்பது.

காரணம் என்பது — அக் காலத்துப் பாண்டியனும் சங்கத்தாரும் பொருளிலக்கணம் பெறாது இடர்ப்படுவாரைக் கண்டு ஆலவாயிற் பெருமானடிகளால் வெளிப்படுக்கப்பட்டது.

பாயிரம் முற்றும்.

[நூல்]

இனிப், பாயிரம் உரைத்தபின்னர் நூல் உரைக்கற்பாலது. அதுதான் நான்கு வகையான் உரைக்கப்படும்: அவை யாவையோ எனின், நூல் நுதலியது உரைத்தலும், நூலுள் அதிகாரம் நுதலியது உரைத்தலும், அதிகாரத்துள் ஒத்து நுதலியது உரைத்தலும், ஒத்தினுட் சூத்திரம் நுதலியது உரைத்தலும் என இவை. அவற்றுள், நூல்நுதலியது உரைக்குமிடத்து, நூலாமாறும் நூல் என்ற சொற்குப் பொருளாமாறும் உரைத்து உரைக்கற்பாற்று.

[மூவகை நூலும், எதிர் நூலும்

அவற்றுள், நூல் ஆமாறு உரைக்குமிடத்து, நூல்தான் மூன்றுவகைப்படும், முதனூலும் வழிநூலும் சார்புநூலும் என;

என்னை,

முதல்வழி சார்பென நூன்மூன் றாகும்

என்றாராகலின்.

அவற்றுள், முதனூல் ஆவது — வரம்பில் அறிவன் பயந்த-தாகும்;

என்னை,

'வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்' [மரபியல் - கக]

எனவும்,

'முதல்வ னூற்குப் பிறன்கோட் கூறாது.

எனவும்,

'தந்திரஞ் சூத்திரம் விருத்தி மூன்றற்கு
மூன்றுந்தா வில்லது முதனூ லாகும்.'

எனவும் சொன்னாராகலின்.

இனி, அந்நூலோடு ஒத்த மரபிற்றாய் ஆசிரியமத விகற்பம் படக் கிளப்பது வழிநூல் எனப்படும்;

என்னை,

'முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
யழியா மரபினது வழிநூ லாகும்'

என்றாராகலின்.

அவ்விரு நூலுள்ளும் ஒருவழி முடிந்த பொருளை ஓர் உபகார நோக்கி, ஒரு கோவைப்பட வைப்பது சார்புநூல் ஆகும்;

என்னை,

'இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும்'

என்றாராகலின்.

இனி, எதிர்நூல் என்பதும் ஒன்று உண்டு. அது யாதோ எனின், முதனூலின் முடிந்தபொருளை ஓர் ஆசிரியன் யாதானும் ஒரு காரணத்தாற் பிறழவைத்தால், அதனைக் கருவியால் திரிவு காட்டி ஒருவாமை வைத்தற்கு, ஒள்ளியான் ஒரு புலவனால் உரைக்கப்படுவது;

என்னை,

'தன்கோ ணிறீஇப் பிறன்கோண் மறுப்ப
தெதிர்நூ லென்ப வொருசா ரோரே'

என்றாராகலின்.

அல்லதூஉம்,

'நூலெனப் படுவது நுதலிய பொருளை
யாதிக் கண்ணே யறியச் சுட்டி
யோத்துமுறை நிறுத்துச் சூத்திர நிறீஇ
முதல்வழி சார்பென மூவகை மரபிற்
றொகைவகை விரியின் வகையறத் தெரிந்து
ஞாபகஞ் செம்பொரு ளாயிரு வகையிற்
பாவமைந் தொழுகும் பண்பிற் றாகிப்
புணர்ச்சியி னமைந்தது பொருளகத் தடக்கித்
தனக்குவரம் பாகித் தான்முடி வதுவே'

எனவும் சொன்னாராகலின்

அன்றியும்,

'நூலெனப் படுவது நுவலுங் காலை
நுதலிய பொருளை முதலிற் கூறி
முதலு முடிவு மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
யுண்ணின் றமைந்த வுரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே'

என்றாராகலானும், இவ்வகை சொல்லப்பட்டது நூல் என்ப.

[நூல் என்றதன் சொற்பொருள்]

இனி, நூல் என்ற சொற்கும் பொருள் உரைக்கப்படும்: நூல் போறலின் நூல் என்ப, பாவைபோல்வாளைப் பாவை என்றாற்போல. நூல்போறல் என்பது, நுண்ணிய பலவாய பஞ்சின் நுனிகளாற் கைவன்மகடூஉத் தனது செய்கைநலந் தோன்ற ஓரிழைப்படுத்தலாம் உலகத்து நூல்நூற்றல் என்பது. அவ்வாறே, சுகிர்ந்து பரந்த சொற்பரவைகளாற் பெரும்புலவன் தனது உணர்வுமாட்சியிற் பிண்டம் படலம் ஒத்துச் சூத்திரம் என்னும் யாப்புநடைபடக் கோத்தல் ஆயிற்று, நூல்செய்தலாவது; அவ்வகை நூற்கப்படுதலின் நூல் எனப்பட்டது.

இனி, ஒரு சாரார் நூல்போலச் செப்பஞ் செய்தலின் நூல் என்ப.

இனித், தந்திரம் என்னும் வடமொழிப்பொருளை நூல் என வழங்குதல் தமிழ் வழக்கு என்று கொள்க. இது நூல் என்ற சொற்குப் பொருள்.

[நூல் நுதலியது]

இனி, நூல் நுதலியதூஉம் உரைக்கற்பாலது. அது பாயிரத்துள்ளே உரைத்தாம்; தமிழ் நுதலிற்று என்பது. தமிழ்தான் நான்கு வகைப்படும், எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பும் என.

[அதிகாரம் நுதலியது]

அவற்றுள், இவ்வதிகாரம் என்னுதலி எடுத்துக்கொள்ளப்பட்டதோ எனின், பொருள் ஆராய்தலை நுதலி எடுத்துக்

கொள்ளப்பட்டது. இனி, அதிகாரம் நுதலியது எல்லாம் ஒத்து நுதலாவன்றே, பல ஒத்துக்கொண்டது ஓர் அதிகாரமாகலான்.

இதனுள் இவ்வோத்து என் நுதலி எடுத்துக் கொள்ளப்பட்டதோ எனின், ஒத்தினது பன்மையின்மையின் ஒத்து இன்று என்பது.

[சூத்திரம் நுதலியது]

இனிச், சூத்திரம் நுதலியதூஉம் உரைக்கற்பாலது. இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின் —சூத்திரம் உரைக்கின், அது நான்கு வகையான் உரைக்கப்படும், கருத்துரைத்துக் கண்ணழித்துப் பொழிப்புத்திரட்டி அகலங்கூறல் என.

இச் சூத்திரத்தின் கருத்து என்னையோ எனின், இவ் வதிகாரத்து உரைக்கின் பொருள் இன்னது என்பதூஉம், இன்னதனோடு ஒக்கும் என்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று. அன்னதாகல் இச் சூத்திரம் கண்ணழிப்ப விளங்கும்.

கண்ணழித்தல் என்பது பதப்பொருள் சொல்லுதல்.

இதன் பொருள்: அன்பின் ஐந்திணைக் களவு எனப்படுவது என்பது — அன்பினுடைய ஐந்திணையிற் களவு எனப்பட்ட ஒழுக்கம் என்றவாறு; அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள் என்பது — அந்தணர் என்பார் பார்ப்பார், அருமறை என்பது வேதம், மன்றல் என்பது மணம், எட்டு என்பது அவற்றது தொகை என்றவாறு; கந்தருவ வழக்கம் என்மனார் புலவர் என்பது — கந்தருவ வழக்கத்தோடு ஒக்கும் வழக்கினைக் களவு என்று சொல்லுவர் கற்றுவல்லோர் என்றவாறு.

இனிப், பொழிப்புத் திரட்டல் என்பது — அன்பினுடைய ஐந்திணையிற் களவு எனப்பட்ட ஒழுக்கம் பார்ப்பார் வேதத்துக்கண் மகட்கோடலாறு என்னும் எட்டினுள் கந்தருவர் ஒழுகலாறு ஒப்பது, அதனைக் களவு என்று சொல்லுவர் கற்று வல்லோர் என்றவாறு.

இனிச், சூத்திரத்துப் பொருளைத் தூய்மை செய்தற்குக் கடாவிடை உள்ளுறுத்து உரைக்கும் உரையெல்லாம் அகலவுரை எனக் கொள்க.

[அன்பு என்பது]

அன்பின் ஐந்திணை என்றவிடத்து, அன்பு அறிந்தேனுமின்றே, அன்பினுடைய ஐந்திணையும் அறிவது எனின், அது, 'குடத்துள் விளக்கும், கடற்றுள் வாளும் போல' இதுகாண் அன்பு என்று [1]போதத்திறந்து காட்டலாகாது. அன்புடையரான குணங் கண்டவிடத்து இவை உலமையான் ஈங்கு அன்பு உண்டென்று அனுமித்துக் கொள்ளற்பாற்று. அன்புடையரான குணம் யாவையோ எனின் — சாவிற்சாதல், நோவின்னோதல், ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், புணர்வு நனிவேட்டல், பிரிவு நனி யிரங்கல் என இவை; என்றார்க்கு, இவை திரிபுடைய; என்னை இவை திரிபுடையவாறு எனின்,

சாவிற் சாதல் என்பது, அன்பினானே நிகழ்வது அன்று, பிணியுடையளாய் வாழ்க்கையை முனிந்து செல்வாள் இது தலைக்கிடாகச் சாவல் என்று சாவவும் பெறும்; இனிக், 'கண்டீரன்றே, குடுமிக்கூந்தலில் நறுநெய் பெய்து, கொண்டானிற் பின்னையும் இருந்து, சோறு தின்று வாழ்கின்றாள், ஓ கொடியளேகாண்! என்று நித்தல் பழிதூற்றப்பட்டிருந்து, பின்னுமே ஒரு நாட் சாவல், அதனான் இன்றே சாவல்' எனச் சாவவும் பெறும்; அதுவன்றிப் புகழ்வேண்டிச் சாவவும் பெறும்; கணவனொடு செத்தார் சுவர்க்கம் புகுவர் என்னும் உரைகேட்டு அது வேட்கையானுஞ் சாம்; அப்பரிசு அன்றி அன்பினானுஞ் சாம்; அஃது ஒருதலையா நிகழ்வது அன்று என்பது.

இனி, நோவின் நோதல் என்பது, இன்னநோ என்று அறியலாகாது; அதுவும் திரிபுடைத்து; அன்பு உள்வழியும் அன்பு இல்வழியும் தோன்றும் என்று மறுக்கப்படும்.

ஒண்பொருள் கொடுத்தல் என்பது, கணிகையர் கூட்டம் பொருளான் ஆம்; ஆகலின், அதுவும் அன்பு அன்று.

1 - தந்த.

நன்கினிது மொழிதல் என்பது, நன்கினிது சொல்லிப் பகைவருந் தம் கருமம் முடிப்பர்; ஆகலின். அதுவும் அன்பு அன்று.

புணர்வு நனிவேட்டல் என்பது, அசசம காரணத்தானும் புணர்வு வேட்டார் போலப் புணர்வர்: ஆகலின், அதுவும் திரிபுடைத்து.

பிரிவு நனியிரங்கல் என்பது, நீரும் ஆடார், பூவுஞ் சூடார், சாந்தும் அணியாராய்ப் பிரிந்திருந்தார்போல வாடியிருப்பர், அன்பு இலாதாரும்: ஆகலின், அதுவும் திரிபுடைத்து.

இனித், திரிபின்றி இக்குணங்கள் நிகழ்ந்தவழி அன்பு உண்டு எனக் கொள்க. அஃது எங்ஙனம் நிகழுமோ எனின், அவன் இறந்துபட்டவாறே தானும் இறந்துபட்டவழி அன்பி-னானே ஆயிற்று எனக் கொள்க. அல்லாதனவும் இவ்வகையால் திரிபு இல்லன அன்பினானே ஆயிற்று எனக் கொள்க.

அல்லதூஉம், அன்பு எனப்பட்டது, தான் வேண்டப்பட்ட பொருளின்கண் தோன்றும் உள்ளநிகழ்ச்சி. அதனைக் காட்டிக் காண்க என்னுனான்றே, தான் அறிந்தபடி பொருளாகலின்; என்னை, யாணுக்கன் நீர்வேட்டான், நீர்வேட்ட வேட்கையைக் காட்டுக என்றான், தான் அறிந்தபடி பொருளாகலின்; காட்-டுக என்னுமேயெனின் வஞ்சித்தானும்; அவனை ஆசிரியன் அறிவிக்கலுறுமேயெனின் பேதையாயினானும்.

[பொருள் இரண்டு வகைப்படும்]

அல்லதூஉம், உலகத்துப் பொருளதான் இரண்டுவகை-யான் உணர்த்தப்படும், உண்மைமாத்திரை உணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படாதனவும், உண்மையும் பிழம்பும் உணர்த்தப்-படுவனவும் என.

அவற்றுள், உண்மையுணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படா-தன காமமும் வெகுளியும் மயக்கமும் இன்பமும் துன்பமும் முதலாகவுடையன;

என்னை,

'ஒப்பு முருவும் வெறுப்பு மென்றா
கற்பு மேரு மெழிலு மென்றா
சாயலு நாணு மடனு மென்றா
நோயும் வேட்கையு நுகர்வு மென்றாங்
காவயின் வரூஉங் கிளவி யெல்லா
நாட்டிய மரபி னெஞ்சுகொளி னல்லது
காட்ட லாகாப் பொருள வென்ப' [பொருளியல் - ௫௨]

என்றாராகலின்.

இனி, உண்மையும் பிழம்பும் உணர்த்தப்படுவன மாடக்கூட மாகிலத் தொடக்கத்தன என்று கொள்க. அன்பெனும் பொருண்மைமாத்திரை யல்லது, பிழம்பு உணர்த்தப்படாது என்பது; என்றார்க்கு, அன்பு என்பது தான் கருதப்பட்ட பொருளின்கண் தோன்றும் வேட்கையன்றே, ஈண்டு நம்மால் அன்பு என்று விகற்பிக்கப்படாநின்றது: அஃது யாதோ எனின், நாணுச் சுருங்க, புணர்வுவேட்கை பெருக, ஒருவனோடு ஒருத்தியிடை நிகழும் அன்பு விசேட இலக்கணம் உடைத்து என்று கொள்க.

[ஐந்திணை என்பன]

அஃதேயெனின், அன்பு அறிந்தேன்; ஐந்திணை யாவன யாவையோ எனின், குறிஞ்சி நெய்தல் பாலை முல்லை மருதம் என இவை. ஆயின், ஐந்திணை என்றதல்லது அவற்றது பெயரும் முறையும் இலக்கணமும் அறியச் சொல்லிற்றிலரோ எனின், இது சுருக்க நூலாகலிற் சொல்லிற்றிலர்; அவை முடிந்த நூலிற்கொண்டு உரைக்கப்படும். உரைக்குமிடத்து, முதல் கரு உரிப்பொருள் என மூன்று வகையான் உரைக்கப்படும்;

என்னை,

'முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே.' [அகத்திணையியல்-௩]

என்றாராகலின்.

[ஐந்திணை முதற்பொருள்]

அவை வருமாறு :

அவற்றுள், முதல் இரண்டு வகைப்படும், நிலமும் பொழுதும் என.

என்னை,

'முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டி
னியல்பென மொழிப வியல்புணர்ந் தோரே.' [அகத்திணையியல்-௪]

என்றாராகலின்.

குறிஞ்சிக்கு நிலம், மலையும் மலைசார்ந்த இடமும்; பொழுது, கூதிரும் யாமமும் முன்பனியும்.

நெய்தற்கு நிலம், கடலும் கடல்சார்ந்த இடமும்; பொழுது, எற்பாடு.

பாலைக்கு நிலம் இல்லை.

'நடுவ ணைந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே.' [அகத்திணையியல் - ௨]

என்றார் தொல்காப்பியனார் ஆகலின். பொழுது, நண்பகலும், வேனிலும், பின்பனியும். நிலம் இன்றிப் பொழுதினானே திணையாமோ எனின், குறிஞ்சியும் முல்லையும் அடுத்த நிலமே காலம்பற்றிப் பாலைநிலமாம் என்பது.

முல்லைக்கு நிலம், காடும் காடுசார்ந்த இடமும்; பொழுது, காரும் மாலையும்.

மருதத்திற்கு நிலம், பழனமும் பழனஞ் சார்ந்த இடமும்; பொழுது, வைகறை யாமம்.

அஃது என்னை பெறுமாறு எனின்,

'மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.' [அகத் - ரு]

'காரு மாலையு முல்லை.' [அகத் - சு]

'குறிஞ்சி
கூதிர் யாம மென்மனார் புலவர்.' [அகத் - எ]

'பனியெதிர் பருவமு முரித்தென மொழிப.' [அகத் - அ]

'வைகுறு விடியன் மருதம்.' [அகத் - கூ]

'எற்பாடு
நெய்த லாதன் மெய்பெறத் தோன்றும்' [அகத் - க0]

'நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே.' [அகத் - கக]

'பின்பனி தானு முரித்தென மொழிப.' [அகத் - கஉ]

மருதத்திற்கும் நெய்தற்கும் பெரும்பொழுது சொல்லிற்றின்மையின், அறுவகை இருதுவும் உரிய எனக் கொள்க; இவை முதல்

[ஐந்திணைக் கருப்பொருள்]

இனிக், கரு என்பது தெய்வமும உணவும் மாவும் மரமும் புள்ளும் பறையும் செய்தியும் யாழும் முதலாக உடையது;

என்னை,

'தெய்வ முணவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇய
அவ்வகை பிறவுங் கருவென மொழிப.' [அகத் - உ0]

என்றாராகலின். அவை அம்முறையானே சொல்லுதும்.

**குறிஞ்சிக்குத்,**

**தெய்வம் - முருகவேள்**

**உணவு - ஐவன நெல்லும், தினையும;**

**மா - புலியும், பன்றியும், யானையும்;**

மரம் - அகிலும், ஆரமும், திமிசும், தேக்கும், வேங்கையும்;

புள் - கிளியும், மயிலும் :

பறை - வெறியாட்டுப்பறையும், தொண்டகப்பறையும், குரவைப்பறையும் ;

செய்தி - தேன் அழித்தலும், கிழங்கு அகழ்தலும், குன்றம் ஆடுதலும், தினைக்கிளி கடிதலும் ;

யாழ் - குறிஞ்சியாழ்.

'பிறவும்' என்றதனால்,

தலைமகன் பெயர் - சிலம்பன், வெற்பன், பொருப்பன் ;

தலைமகள் பெயர் - கொடிச்சி, குறத்தி :

நீர் - அருவிநீரும், சுனைநீரும் ;

ஊர் - சிறுகுடியும், குறிச்சியும் ;

பூ - குறிஞ்சியும், காந்தளும், வேங்கையும், சுனைக்குவளையும்:

மக்கள் பெயர் - குறவர், இறவுளர், குன்றவர் எனப்படும்.

நெய்தற்குத்,

தெய்வம் - வருணன் ;

உணா - மீன்விலைப்பொருளும், உப்புவிலைப்பொருளும் ;

மா - சுறவும், முதலையும் ;

மரம் - புன்னையும், ஞாழலும், கண்டலும் ;

புள் - அன்னமும், அன்றிலும், மகன்றிலும் ;

பறை - மீன்கோட் பறையும், நாவாய்ப பறையும் ;

செய்தி-மீன்விற்றலும், உப்புவிற்றலும், அவை படுத்தலும்

யாழ் - விளரியாழ்.

இனிப் 'பிறவும்' என்றதனால்,

தலைமகன் பெயர் - துறைவன், கொண்கன், சேர்ப்பன் ;

தலைமகள் பெயர் - நுளைச்சி, பரத்தி ;

நீர் - மணற்கிணறும், உவர்க்கழியும் ;

பூ - வெள்ளிதழ்க் கைதையும், நெய்தலும் ;

ஊர் - கலமேறு பட்டினமும், சிறுகுடியும், பாக்கமும் ;

மக்கள் பெயர் - பரதர், பரத்தியர், நுளையர், நுளைச்சியர் எனப்படும்.

தொல்காப்பியனார் பாலைக்கு நிலம் வேண்டிற்றிலர் ; வேண்டாமையின், தெய்வமும் வேண்டிற்றிலர்.

பிறர், பகவதியையும் ஆதித்தனையும் தெய்வம என்று வேண்டுவர் ;

உணா - ஆறலைத்தனவும், சூறைகொண்டனவும் ;

மா - வலியழிந்த யானையும், புலியும், செந்நாயும் ;

மரம் - இருப்பையும், ஓமையும் ;

புள் - கழுகும், பருந்தும், புறவும் ;

பறை - பூசற் பறையும், ஊரெறி பறையும், நிரைகோட் பறையும் ;

செய்தி - நிரைகோடலும், சாத்தெறிதலும், சூறை கோடலும் ;

பண் - பஞ்சுரம்.

'பிறவும்' என்றதனால்,

தலைமகன் பெயர் - மீளி, விடலை, காளை ;

தலைமகள் பெயர் - எயிற்றி, பேதை ;

பூ - மராம்பூவும், குராம்பூவும், பாதிரிப்பூவும் ;

நீர் - அறுநீர்க்கூவலும், அறுநீர்ச்சுனையும் ;

மக்கள் பெயர் - எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் எனப்படும் ;

ஊர் - கொல்குறும்பு.

முல்லைக்குத்,

தெய்வம் - வாசுதேவன் ;

உணா - வரகும் சாமையும் ;

மா - முயலும், சிறுமானும் ;

மரம் - கொன்றையும், குருந்தும் ;

புள் - கானங்கோழியும், மயிலும், சிவலும் ;

பறை - மன்றுகோட் பறையும், முரசும் ;

செய்தி - வரகுக்குக் களைகட்டலும், அவை அறுத்தலும், கடாவிடுதலும், நிரைமேய்த்தலும் ;

பண் - முல்லை.

'பிறவும்' என்றதனால்,

தலைமகன் பெயர் - குறும்பொறை நாடன் ,

தலைமகள் பெயர் - கிழத்தி, மனைவி ; (இப பெயா மருதநிலத்துத் தலைமகட்கும் உரிய; )

பூ - முல்லையும், தோன்றியும் ;

நீர் - கான்யாறு;

ஊர் - பாடியும், சேரியும ;

மக்கள் பெயர் - இடையர், இடைச்சியர், ஆயர். ஆய்ச்சியர் எனப்படும்.

மருதத்துக்குத்,

தெய்வம் - இந்திரன் ;

உணா - செந்நெல்லும், வெண்ணெல்லும் ;

மா - எருமையும், நீர்நாயும் ;

மரம் - வஞ்சியும், காஞ்சியும், மருதம் ;

புள் - நீர்க்கோழியும், தாராவும் ;

பறை - மணமுழவும், நெல்லரிகிணையும் ;

செய்தி - நெல்லரிதலும், அவை கடாவிடுதலும், பயிர்க்குக் களைகட்டலும்;

யாழ் - மருதயாழ்.

'பிறவும்' என்றதனால்,

தலைமகன் பெயர் - ஊரன், மகிழ்நன்.

தலைமகள் பெயர் - கிழத்தி, மனைவி:

பூ - தாமரைப்பூவும், செங்கழுநீர்ப்பூவும்.

நீர் - மனைக்கிணறும், பொய்கையும்.

மக்கள் பெயர் - கடையர், கடைசியர், உழவர், உழத்தியர்.

ஊர் - பேரூர் எனப்படும்

இக் கூறப்பட்ட கரு மயங்கியும் வரப்பெறும்.

என்னை,

'எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்' [அகத் - [illegible]]

என்றாராகலின்

[ஐந்திணை உரிப்பொருள்]

இனி, உரிப்பொருள் ஆவது திணைக்கு உரியபொருள் என்றவாறு, அவை யாவையோ எனின், புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல், அவற்றின் நிமித்தம் என இவை.

என்னை,

'புணர்தல் பிரிதல் இருத்த லிரங்க
லூட லவற்றி னிமித்த மென்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே.' [அகத் - ௧௬]

என்றாராகலின். அவற்றுள்,

புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சி;

பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலை;

இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லை;
இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தல்;
ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதம்.

புணர்தலே பொருளாலோ குறிஞ்சி எனின், புணர்தலே அன்று: பிரிவாற்றாமையும், வன்புறையும், தலைமகன் நீங்கினவும், பாங்கற்கு உரைத்தனவும், பாங்கன் கழறினவும், தலைமகன் எதிர்மறுத்தனவும், பாங்கன் எதிர்ந்தனவும், தலைமகளைக் கண்டனவும், ஆற்றுவித்தனவும், தலைமகன் சென்றனவும், தலைமகன் தலைப்பெய்தனவும் உதவிக்கொடுத்தன வெல்லாம்; தலைமகட்கும் தோழிக்கும் இவ்வகையானே நோக்கி விகற்பிக்க, இறப்பவும் பலவாம் அவை யெல்லாம் புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாய் அடங்கும். ஏனையவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

[திணை என்னது என்பது]

இனி, ஒழுக்கத்தினைத் திணை என்பாரும், நிலத்தினைத் திணை என்பாரும் என இருபகுதியர் ஆசிரியர். அது பொருந்தாது: ஒழுக்கமே திணை எனப்படும். குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது; என்னை, விளக்காகிய சுடர் இருந்த இடமே விளக்கு எனப்பட்டது போல என்பது.

இனி, ஒரு சாரார் ஒழுக்கத்தினையும் திணை என்ப, நிலத்தினையும் திணை என்ப ஆதலானன்றே, 'அன்பினைந்திணை' என்றது, ஐந்திணையாடை, ஐந்திணை மஞ்சிகை என்றதுபோல என்ப; அது பொருந்தாது. அஃதே கருதியது எனின், முன்னர்த்.

'திணைமட கைகோள்' [இறையனார் - ௧௬]

என்றானன்றே,

'இணையே கைகோள்' என்னுமன்றே, இணை என்று கருதினையின் என்பது. அஃதேயெனின், 'ஐந்து திணை' என்னும், ஐந்து சாண், ஐந்து தூணம் என்றதுபோல எனின், அறியாது கடாவினாய்; ஐந்து தலையுடைய நாகத்தை ஐந்தலை நாக-

மும் என்ப; ஐந்து தலை நாகமும் என்ப; இரு முடிபும் உடைத்து. என்னை, குற்றியலுகரப் புணரியலுள்,

'முதனிலை யெண்ணின் வல்லெழுத்து வரினு
ஞனமவத் தோன்றினும் யவவந் தியையினு
முதனிலை யியற்கை யென்மனார் புலவர்.'[குற்றியலுக - எ௩]

என்றாராகலின்.

[ஐந்திணைக் களவு]

அஃதேயெனின், அன்பினானாய ஒழுக்கத்தைத அன்பின் வேறென்று கொள்வல், தச்சனானாய மாடம் தச்சனின் வேறு ஆயதுபோல என்றாற்கு, அதுவன்று; பொன்னினானாய குடம் பொன்னின் வேறல்லதுபோல என்பது. மூன்றாம் வேற்றுமை காரண காரியத்தை வேறு உணரவும் நிற்கும், வேறன்றி உணரவும் நிற்கும்: அவற்றுள், வேறன்றி உணரநிற்கும் பகுதி கொள்க.

அஃதேயெனின், 'ஐந்திணை' என்பதன் முன்னர்க், 'களவு' என்னுஞ் சொல் எத்திறத்தான் வந்தது? ஒரு சொன்முன் ஒரு சொல் வருங்காற் பயனிலை வகையானும், தொகைநிலை வகையானும், எண்ணுநிலை வகையானும் என மூன்றினுள் ஒன்றுபற்றியன்றே வருவது: அவற்றுள், இஃது எவ்வகையான் வந்ததோ எனின், தொகைநிலை வகையான் வந்தது என்பது. தொகை தாம் பல; அவற்றுள் இஃது எத்தொகையான் வந்ததோ எனின், வேற்றுமைத் தொகையான் வந்தது என்பது. அவ்வேற்றுமைத் தொகை தாம் பல; அவற்றுள் இஃது எவ் வேற்றுமைத் தொகையோ எனின், ஏழாம் வேற்றுமைத் தொகை என்பது. அவ்வேழாம் வேற்றுமை உருபுதாம் பல, அவற்றுள் யாது தொக்கது எனின், உள் என்பது தொக்கது. ஐந்திணையுட் களவு என்பதாயின், ஐந்திணையுள்ளுங் களவு வேறாகாதோ, குடத்துள் விளக்கும் தடற்றுள் வாளும் அவ்விடத்தின் வேறாயதுபோல எனின், ஏழாம் வேற்றுமை இடத்தையும் இடத்துநிகழ் பொருளையும் வேறு உணரவும் நிற்கும், வேறன்றி உணரவும் நிற்கும்; அவற்றுள், வேறு உணர நின்றவழிக் காட்டிக் கடாவினாய்; வேறன்றி உணர நின்றவழிக்

காட்டியக்கால் அதுபோலக் கொள்க. அரங்கினுள் அகழ்ந்தான், மாடத்தினுள் அகழ்ந்தான் என்றதுபோல, ஐந்திணையுள்ளுங் களவு வேறன்று என்பது.

அஃதேயெனின், 'அன்பின் ஐந்திணைக் களவு அந்தணர் அருமறை' என அமையாதோ? 'எனப்படுவது' என்றது எற்றிற்கோ எனின், செய்யுளின்பத்தின்பொருட்டு வந்தது என்னும் ஒருவன்; அற்றன்று, அதனான் ஒருபொருள் உரைப்பல் என்னும் ஒருவன். அதனான் ஒரு பொருள் உரைப்பான் பக்கம் வலியுடைத்து. அஃதியாதோ எனின், களவு என்றற்குச் சிறப்புடைத்து என்றவாறு. 'ஊர் எனப்படுவது உறையூர்' என்ற இடத்துப் பிறவும் ஊருண்மை சொல்லி, அவற்றுளெல்லாம் உறையூர் சிறப்புடைமை சொல்லுப. இங்குப் பிறவும் களவுண்மை சொல்லி, அக் களவுகட்கெல்லாம் இக் களவு சிறப்புடைத்து சுவர்க்கம் வீடுபேறுகளை முடிக்குமாகலான், 'எனப்படுவது' என்று சொல்லிச் சிறப்பிக்கப்பட்டது. அது பாயிரத்துள்ளும் உரைத்தாம். மற்று உலகத்துக் களவாயின எல்லாம், கைகுறைப்படவும் கண்சூலவும் கழுவேற்றவும் பட்டுப், பழியும் பாவமும் ஆக்கி, நரகந் தொடக்கத்துக் கதிகளில் உய்க்கும். இது மேன்மக்களாற் புகழப்பட்டு ஞான வொழுக்கத்தோடு ஒத்த இயல்பிற்றாகலானும், பழி பாவம் இன்மையானும், 'எனப்படுவது' என்று விசேடிக்கப்பட்டது.

[எண்வகை மணம்]

இனி, **அந்தணர் அருமறை** மன்றல் எட்டினுள் என்பது: அந்தணர் என்பார் பார்ப்பார்; அருமறை என்பது வேதம்; மன்றல் என்பது மணம்; எட்டு என்பது அவற்றது தொகை கொடுத்துச் சொன்னவாறு. அவை யாவையோ எனின் — பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என இவை;

என்னை,

'அறநிலை யொப்பே பொருள்கோ டெய்வம்
யாழோர் கூட்ட மரும்பொருள் வினையே

யிராக்கதம் பேய்நிலை யென்றிக் கூறிய
மறையோர் மன்ற லெட்டவை யவற்றுட்
றுறையமை நல்லியாழ்ப் புலமையோர் புணர்ப்பிதன்
பொருண்மை யென்மனார் புலமை யோரே.'

என்பதன் பொருளென்று உணர்வது.

**பிரமம்** என்பது — நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங் காத்தாற்குப் பன்னீராட்டைப் பிராயத்தாளை அணிகலன் அணிந்து கொடுப்பது. கொடாவிடின், ஓர் இருதுக்காட்சி ஒருவனைச் சாராது கழிந்தவிடத்து ஒரு பார்ப்பனக் கொலையோடு ஒக்கும் என்பது; இதனை அறநிலை என்றுணர்வது.

**பிரசாபத்தியம்** என்பது — மைத்துன கோத்திரத்தான் மகள் வேண்டிச் சென்றால் மறாது கொடுப்பது: இதனை ஒப்பு என்று உணர்வது.

**ஆரிடம்** என்பது — ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நீரிற் கொடுப்பது: இதனைப் பொருள்கோள் என உணர்வது.

**தெய்வம்** என்பது — வேள்வி ஆசிரியற்கு வேள்வித் தீமுன் வைத்துக் கொடுப்பது: இதனைத் தெய்வம் என்று வழிபடப்பட்டது.

**காந்தர்வம்** என்பது — இருவர் ஒத்தார் தாமே கூடுங் கூட்டம்; இதனை யாழோர் கூட்டம் என்று உணர்வது.

**அசுரம்** என்பது — கொல்லேறு கொண்டான் இவளை எய்தும், வில்லேற்றினான் இவளை எய்தும், திரிபன்றி எய்தான் இவளை எய்தும், மாலை சூட்டப்பட்டான் இவளை எய்தும் என இவ்வாறு சொல்லிக் கொடுப்பது, இஃது அரும்பொருள் வினைநிலை என்பது.

**இராக்கதம்** என்பது — அவள் தன்னினும் தமரினும் பெறாது வலிந்து கொள்வது.

**பைசாசம்** என்பது—மூத்தாண்மாட்டும் துயின்றாண்மாட்டும் களித்தாண்மாட்டும் சார்வது; இது பேய்நிலை எனப்படும்.

இவ்வெட்டு மணமும், 'மன்றல் எட்டு' என்று சொல்லப்பட்டன என வுணர்க.

இனிக், கந்தருவ வழக்கம் என்பது — கந்தருவர் என்பார் ஈண்டுச் செய்த நல்வினைப் பயத்தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றி, இருவரும் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுப் புணர்வது; இது காந்தர்ப்பமணம். இதனை ஒப்பதனைக் களவு என்று வேண்டும் இவ்வாசிரியன்.

அஃதேயெனின், கந்தருவ வழக்கம்போல்வது என்னாது, 'கந்தருவ வழக்கம்' என்றமையான், அதனைக் களவு என்று கொள்ளாமோ எனின், கொள்ளாம். நூற் கிடக்கை அவ்வியல்பிற்றன்று, ஆகலான், போல்வது என்றே கொள்ளற்பாலது. போறல் என்பது சிறிது ஒத்துச் சிறிது ஒவ்வாது ஒழிவது; என்னை, 'குவளைப் பூப்போலுங் கண்' என்றால், இளநீல மாத்திரை ஒக்கும், மற்று ஒவ்வாப்புடை பெரிது; 'பவளம்போலும் வாய்' என்றால, செம்மை மாத்திரை ஒக்கும், மற்று ஒவ்வாப் புடை பெரிது. இங்கும் ஏகதேசத்துப் புணர்தலும், கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றிப் புணர்தலும், ஒத்த குலத்தினர் ஆகலும், ஒத்த அன்பினர் ஆகலும் என்னும் இத்துணையே ஒப்பிக்கப்பட்டது. ; மற்றைப் புடையெல்லாம் ஒவ்வாது.

அஃதேயெனின், 'கந்தருவ வழக்கம் போல்வது' என வேண்டாவோ சூத்திரத்துள் எனின், வேண்டா; உவமம் தொகுத்தவாறு சொல்லுதும்: பசுப்போல்வானைப் பசு என்றலும், பாவைபோல்வாளைப் பாவை என்றலும் போல என்பது.

அஃதேயெனின், அவை எட்டும், அதனையொத்த இதுவும் என, மணம் ஒன்பதாகற்பால எனின், அதுவன்று; அவ்வெட்டும் உலகியலில் உள்ளன; இஃது அன்னது அன்று; இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கமாகலின், இதனை உலக வழக்கத்தினோடு இயையான் என்பது. அஃதேயெனின், இதனை முதனூல் என்று புகுந்தமையாற், 'கந்தருவ வழக்கம்' என்றே மொழியற் பாற்று; 'என்மனார்' என்று சொல்லற்பாற்று அன்று; அது வழிநூல் வாய்பா-

டாகலான் என்பது கடா. அதற்கு விடை : பிற நூலெல்லாம் ஆசிரியப் பகுதிப்படும், இதுவும் அவைபோல ஆசிரியப் பகுதிப் படுங்கொல்லோ எனின், படாது. கந்தருவ வழக்கம் போல்வது களவாதல் மூன்று காலத்துப் புலவர்க்கும் ஒப்ப முடிந்தமையான், அவ்வகை சொன்னான் என்பது.

அஃதே யெனின், தன்னையொத்த புலவர் இல்லை யன்றே! தான் தலைவனாகலான், எல்லாம் உணர்ந்தானாகலான் எனின் ; அஃதே கருத்து, அறிந்திலை ; தன்னானே உரைக்கப்பட்டது எனினும், பிறவற்றை யெல்லாந் திரியவும் திரியாமையும் கொண்டார், இதனைத் திரியாமையே கொண்டார் எல்லாரும் என்றற்கு அவ்வாறு உரைக்கப்பட்டது. தன் மதம் உணர்ந்தாரையும் புலவர் என்றான், தானறியும் பொருளுக்கு ஏனோரும் புலவராகலின்.

இனி, **என்மனார்** என்பது, 'என்ப' என்னும் முற்றுச் சொல்,

'குறைக்கும்வழிக் குறைத்தல் [எச்சவியல் - எ]

என்பதனாற் பகரம் குறைத்து,

'விரிக்கும்வழி விரித்தல்' [எச்சவியல் - எ]

என்பதனான், 'மன், ஆர்' என்பன இரண்டு இடைச்சொற் பெய்து விரித்து, 'என்மனார்' என்று ஆயிற்று.

'என்மனார்' என்பது 'புலவர்' என்னும் பெயர்கொண்டு முடிந்தது, முற்றுச்சொல் எச்சப் பெயர்கொண்டு முடியும் ஆகலின் என்பது.

[உ]

**அதுவே**
**தானே யவளே தமியர் காணக்**
**காமப் புணர்ச்சி யிருவயி னொத்தல்.**

என்பது என்னுதலிற்றோ எனின், மேற் கந்தருவ வழக்கத்தோடு ஒக்கும் ஒழுக்கம் களவு என்று வேண்டிற் றல்லது, இன்ன

இலக்கணத்தது என்றிலர், அதனை உணர்த்துதல் நுதலிற்று ; இச் சூத்திரத்துட் கருதிய பொருள் மேலதனோடு இயையும்.

இதன் பொருள் : அதுவே என்பது — பண்டறி சுட்டு, மேற் சொல்லப்பட்ட கந்தருவ வழக்கம்போலுங் களவு என்றவாறு ; தானே அவளே என்பது — தானே அவள், அவளே தான் என்றவாறு, என் சொல்லியவாறோ எனின், தான் அவள் என்னும் வேற்றுமை யிலர் என்றவாறு ;

இங்ஙனம் வாசகம் வேறுபடச் சொல்லப்படாராயினும், அன்பினானும் குணத்தினானும் கல்வியினானும் உருவினானும் திருவினானும் திரிபிலர் ஒருவரோடொருவர் என்பது. அஃது என்போலவோ எனின் — உருளரிசி, கொத்தமுரி என்றாற் போல எனின், அது பொருந்தாது ; என்னை காரணம் எனின், கந்தருவ வழக்கத்தோடு ஒக்கும் எனவே வேற்றுமை யின்மை முடிந்தது, அவர் வேற்றுமை யிலராகலின் ; இன்னும் ஒரு வாசகம் வேறுபடுத்து அப்பொருளே சொல்லப் புனருத்தமாம் ; என்னை, ஒரு பொருளை வேறுபட்ட வாய்பாட்டாற் பல்காற் சொல்லுவது புனருத்தமாகலின்.

இனி, ஒருவன் சொல்வது : இவனும் பற்பனூறாயிரவர் கூர்வேல் இளையரோடு திரிதரினன்றித் தனியனாதல் இலன், பெரியனாதலால் ; இவளும் பற்பனூறாயிரவர் ஆயமகளிர் புடை சூழத் திரிதரினன்றித் தனியளாதல் இலள், பெரியளாதலால். இங்ஙனம் இல்லாதார், இவனும் இளையரினீங்கித் தானேயாய், இவளும் ஆயத்தின் நீங்கித் தானேயாய், இங்ஙனம் புணர்வர் என்ப. இவனை இளையரின் நீக்கியும், இவளை ஆயத்தின் நீக்கியும் பிரித்துக் கோடற்குத், 'தானே அவளே' என்று சொல்லப்பட்டது என்னும். இவ்வுரையும் பொருந்தாது. என்னோ காரணம் எனின், கந்தருவ வழக்கத்தோடு ஒக்கும் எனவே, தமியராய்ப் புணர்தன் முடிந்தது ; இன்னும் ஒருகால் அப் பொருளையே சொல்லப் புனருத்தமாம் என்பது.

மற்று என்னோ உரையெனின், தானே அவளே என்பது, ஆண்பால்களுள் இவனோடு ஒத்தாரும் இல்லை, மிக்காரும் இல்லை, குறைபட்டார் அல்லது ; எக்காலத்தும் எவ்விடத்தும் ஞானத்-

தானும் குணத்தானும் உருவினானும் திருவினானும் பொருவிலன் தானே என்பது; இவளும் அன்னள் எனவே, இருவரும் பொருவிறந்தார் என்பதனைப் பயக்கும்.

நின்ற ஏகாரம், ஐந்து ஏகாரத்துள்ளும் என்ன ஏகாரமோ எனின், ஆண் குழுவின் இவனையே பெருமைக்கண் பிரித்து வாங்கினமையானும், பெண்குழுவின் இவளையே பெருமைக்கண் பிரித்து வாங்கினமையானும் பிரிநிலை ஏகாரம் எனப்பட்டது; பலவற்றுள் ஒன்று பிரிப்பது பிரிநிலை ஏகாரம் எனப்படும் ஆகலான் என்பது.

அஃதேயெனின், கந்தருவ வழக்கத்தோடு ஒக்கும் எனவே, எத்திறத்தானுங் குறைபாடு இன்மை முடியாதோ எனின், முடியாது; கந்தருவர்க்கும் ஞானக் குறைபாடும் தருமக் குறைபாடும் ஆள்வினைக் குறைபாடும் உண்டு. இச் சொல்லப்பட்டன சிறிதே யன்றே ஒப்பித்தது, பொருவிறப்புச் சூத்திரத்தாற் சொல்லவேண்டும் என்பது.

தமியர் காண என்பது — தம் உணர்வினர் அன்றியே எதிர்ப்பட என்றவாறு.

அஃதேயெனின், இவர் தம் உணர்வினர் அல்லராகின்றது, காணுமுன் ஆபவோ, கண்டபின் ஆபவோ, காட்சியோடு உடனாபவோ எனின், காணுமுன் தம் உணர்வினர் அல்லராபவே எனின், காட்சி காரணம் அன்றாயிற்றும் தம் உணர்வினர் அல்லர் ஆதற்கு; அல்லதூஉம் காரணமின்றி ஆகலானே எப்பொழுதும் தம் உணர்வினர் அல்லராகல் வேண்டும்.

இனிக், கண்டபின் தம்முணர்வினர் அல்லர் ஆபவே எனின், காட்சியது நீக்கத்துக்கண்ணும் தம் உணர்வினர் அல்லராயினார் ஆகல்வேண்டும்; 'உண்டபின் வந்தான் சாத்தன்' என்றால், உண்டற் கருமக் கழிவின்கண் வந்ததுபோல. அல்லதூஉம் கண்டபின் தம் உணர்வினர் அல்லராகவே, கண்ட சமவாயத்தின் தம் உணர்வினராப; ஆகவே, கண்டும் தம் உணர்வினராய் நின்றார் பின்னை மயங்குதற்குக் காரணம் என்னையோ என்பது.

இனிக், காட்சியும், தம் உணர்வினர் அல்லராகலும் உடன் நிகழ்மையெனின், காட்சி என்னுங் காரணத்தால் தம் உணர்வினர் அல்லராதற்றன்மை நிகழற்பாற்றன்று. ஒரு காலத்து ஓரிடத்து ஒருங்கு தோன்றின பொருள் ஒன்றனை ஒன்று முடித்தன எனப்படாமை கண்டும், ஆவிற்கு இருகோடு போல என்பது. அதனால், மூன்று அல்லது பல்லாறாவது காலம் இல்லை. இன்மையின், அவர் காட்சியானே தம் உணர்வினர் அல்லர் என்பது முடிக்கல் வேண்டும். எங்ஙனம் முடிக்குமாறு எனின், காணுமுன்னே தம உணர்வினர் அல்லராகற்றன்மை உடையர் என்பது. என்னை, ஏனாதிமோதிரம் செறித்தற் றிருவுடையான் ஒருவன், ஏனாதிமோதிரஞ் செறிக்கும் அத்திரு அவன் செறிக்கின்ற பொழுதே உண்டாயிற்றன்று; அரசு வீற்றிருக்கற் றிருவுடையான் ஒருவன், அரசு வீற்றிருக்கும் அத்திரு அவன் அரசு வீற்றிருக்கின்ற பொழுதே உண்டாயிற்று அன்று; முற்கொண்டு அமைந்து கிடந்தது, அது பின்னை ஒரு காலத்து ஓரிடத்து ஒரு காரணத்தான் எய்துவிக்கும். அதுபோல, இன்ன நாள், இன்ன பக்கத்து, இன்ன பொழுது, இன்ன இடத்து இவள் காரணமாக இவன் தன் உணர்வினன் அல்லனாம் என்பதூஉம், இவன் காரணமாக இவள் தன் உணர்வினள் அல்லளாம் என்பதூஉம் முன்னே முடிந்து கிடந்தன. அது பின்னுங் கொணர்ந்து எய்துவிக்கும்;

என்னை,

'ஒளிப்பினும் ஊழ்வினை ஊட்டாது கழியாது'

என்பதாகலான்.

காட்சி துணைக்காரணம் அவ்வினை பயத்தற்கு; வித்து முளைத்தற்கு நிலனும் நீரும் இருதுவும் துணைக்காரணம் ஆயிற்றுப் போலவும், சோறுதல் இயல்பிற்றாகிய அரிசி சோறுதற்கு அடுவானைத் தொடக்கமாகவுடைய காரணம் துணைக்காரணம் ஆயிற்றுப் போலவும் என்பது. அஃதேயெனின், காட்சி துணைக்காரணம் பிற எனின், காட்சியின்முன் கிளர்ந்ததோ? பின் கிளர்ந்ததோ? உடன் கிளர்ந்ததோ உள்ளத்துத் தான் கிளர்கின்றது என, முன்னைக் கடா வந்து எய்துமால்.

என்னையோ எனின், காட்சியோடு உடனே கிளரும் : என்னை, இருட்டகத்து விளக்குக்கொண்டு புக்கால், விளக்கு வாராத முன்னரும் இருள் நீங்காது : விளக்கு வந்தபின்னரும் இருள் நீங்காது ; விளக்கு வருதலும் இருள் நீக்கமும் உடனே நிகழும். அதுபோலக், காட்சியும் ஞான வொழுக்கக் குணங்களது தன்மையறிவும் உடனே நிகழும். விளக்கினைக் காட்சியாகக் கொண்டு, ஞானவொழுக்கக் குணங்களை இருளாகக் கொள்க.

இனிக், காமப் புணர்ச்சி என்பது — தலைமகனும் தலைமகளும் தமியராய் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுத் தம் உணர்வினரன்றி வேட்கை மிகவினாற் புணர்வது.

ஆயின் இவர், பேற் பொருவிறந்தார் தலைமகனுந் தலைமகளும் என்றமையான், இவனும், கற்கந்தும் எறிபோத்தும் கடுங்கண் யானையும் தறுகட் பன்றியும் கருவரையும் இருநிலனும் பெருவிசும்பும் அனையார், ஆளி மொய்ம்பினர், அரிமான் துப்பினர் பற்பல் நூறாயிரவர் கூர்வேல் இளையர் தற்சூழச் செல்வன் என்பது முடிந்தது.

இவளும் உடன்பிறந்து, உடன் வளர்ந்து, நீர் உடனாடிச், சீர் உடன்பெருகி, ஒல் உடனாட்டப், பால் உடனுண்டு, பல் உடனெழுந்து, சொல் உடன்கற்றுப், பழமையும் பயிற்றியும் பண்பும் நண்பும் விழுப்பமும் ஒழுக்கமும் மாட்சியும் உடையார், பற்பல் நூறாயிரவர் கண்ணும் மனமும் கவரும் ஒண்ணுதல் மகளிர் தற்சூழத், தாரகை நடுவண் தண்மதிபோலச் செல்வாள் என்பது முடிந்தது.

முடியவே, தமியராய்ப் புணர்ந்தார் என்பதனொடு மாறு கொள்ளும் எனின், மாறுகொள்ளாது ; என்னை, அவள் ஆயங்களும் பொழிலிடம் புகுதலும் விளையாட்டு விருப்பினாற் பிரியும். என்னை பிரியுமாறு எனின், ஒருவர் ஒருவரின் முன்னர்த் தழை [illegible]ழைகக்கன தொடுத்தும் என்றும், கண்ணி தண்ணறு நாற்[illegible] செய்தும் என்றும், போது மேதக்கன கொய்தும் [illegible]ய மயிலொடு மாறாடுதும் என்றும், குயிலொடு மாறு [illegible]தும் என்றும், அருவியாடி அஞ்சுனை குடைதும் என்றும்,

வாசமலர்க்கொடியில் ஊசலாடுதும் என்றும் பரந்து, அப்பா-லுள்ளார் இப்பாலுள்ளாள்கொல்லோ என்றும், இப்பாலுள்ளார் அப்பாலுள்ளாள்கொல்லோ என்றும் இவ்வகை நினைத்துப் பிரிப என்பது.

இவ்வகை அவளைத் தமியளாக்கிப் பிரிபவோ எனின், எட்டியுஞ் சுட்டியுங் காட்டப்படும் குலத்தள் அல்லளாகலானும், பான்மை அவ்வகைத்தாகலானும் பிறவாறு நினையார் பிரிப என்பது. ஆயின், இவ்வகைப்பட்ட ஆயத்திடை மேனாள் பிரிந்து பயின்றறியாதாள் தமியளாய் நிற்குமோ எனின், நிற்கும்; தான் பயின்ற இடம் தன் ஆயத்திேனாடு ஒக்கும் ஆகலான் என்பது.

யாங்ஙனம் நிற்குமோ எனின், சந்தனமும் சண்பகமும தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகும் கோங்கும் வேங்-கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரி-யும் பாவைஞாழலும் பைங்கொன்றையொடு பிணியவிழ்ந்த பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகைசிறந்து, வண்ட-றைந்து தேனார்ந்து வரிக்குயில்கள் இசைபாட, தண்டென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவுசெய்யும் பொழிலது நடுவண், ஒரு மாணிக்கச் செய்குன்றின்மேல், விசும்பு துடைத்து பசும் பொன் பூத்து, வண்டு துவைப்பக்

வெறியுறு நறுமலர் வேங்கை
காதல் கவிகூர்ந்து, தன் செ
சிலம்புபுடைப்ப, அம் மல
நடந்து சென்று, நறைவிர
கொய்தவிடத்து, மரகதம
மருங்கினதோர் மாதவிவ
பூநாறு கொழுநிழற்கீழ்க்
தகடுபடு பசும்பொற் சிகர
தரும் அருவி, பொன் செ
தொடு வயிரம் உந்தி,
அதிர்குரல் முரசின் கண்
வரிக்குயில்கள் இசைபா

தோர் பளிக்குப் பாறை மணித்தலத்துமிசை, நீல ஆலவட்டம் விரித்தாற்போலத் தன் கோலக் கலாவங் கொளவிரித்து, முளை யிளஞாயிற்று இளவெயில் எறிப்ப, ஓர் இளமயில் ஆடுவது கண்டு நின்றாள்.

அப்பால், தலைமகனும் பற்பல் நூறாயிரவர் கூர்வேலிளைய-ரொடு குளிர்மலைச்சாரல் வேட்டம் போய் விளையாடுகின்றான், ஆண்டு எழுந்ததோர் கடுமாவின்பின் ஓடிக், காவல் இளையரைக் கையகன்று, நெடுமான்றேரொடு பாகனை நிலவுமணற் கானி-யாற்று நிற்கப் பணித்துத், தொடிகழல் அடியதிரச் சுருளிருங் குஞ்சி பொன்ஞாணிற் பிணித்துக், கடிகமழ் நறுங்கண்ணிமேல் கணவண்டு மணனயர, அஞ்சாந்தின் நறு நாற்றம் அகன் பொழிலிடைப் பரந்து நாற, அடுசிலையொடு கணை ஏந்தி, வடிவு-கொண்ட காமன்போலச் சென்று, அவள் நின்ற இரும்பொழில் புகும். அஃதியாங்ஙனமோ எனின், வடகடலிட்ட ஒரு நுகம் ஒருதுளை, தென்கடலிட்ட ஒருகழி சென்று கோத்தாற் போல-வும், வெங்கதிர்க் கனலியும் தண்கதிர் மதியமும் தம் கதிவழிச் தலைப்பெய்தாற் போலவும் தலைப்பெய்து, ஒருவர் ஒருவரைக் காண்டல் நிமித்தமாகத் தமியர் ஆவர்.

[தலைமகன் குணம் நான்கு]

தமியராதல் என்பது, தம் உணர்வினர் அல்லராதல். தம் என்பது என்னோ எனின், தலைமகற்கு [illegible]பன குணம்.

[illegible]ப்பொருண்

(குறள் - [illegible])

அப்பொருட்கண் நின்று

[illegible]ன், காப்பன காத்துக்

ஆராய்ந்து உணர்தல்

கடைப்பிடி என்பது கொண்டபொருள் மறவாமை.

இந்நான்மையும் தலைமகற்கு வேட்கையான் மீதூரப்பட்டுப், புனல் ஓடுவழிப் புற்சாய்ந்தாற்போலச் சாய்ந்து கிடப்பது.

[தலைமகள் குணம் நான்கு]

இனித் தலைமகட்கு நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன குணம்: அவற்றுள்,

நாணம் என்பது பெண்டிர்க்கு இயல்பாக உள்ளதொரு தன்மை;

மடம் என்பது கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை;

அச்சம் என்பது பெண்மையின் தான் காணப்படாததோர் பொருள் கண்டவிடத்து அஞ்சுவது;

பயிர்ப்பு என்பது பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலைமை.

இந்நான்மையும், புனல் ஓடுவழிப் புற்சாய்ந்தாற்போல, வேட்கையான் மீதூரப்பட்டுச் சாய்ந்து கிடக்கும்.

வேட்கை என்பது என்றோ எனின், ஒருவர் ஒருவரை இன்றியமையாமை. அவ்வின்றியமையாது நின்ற வேட்கை எல்லா உணர்வினையும் நீக்கித் தானேயாய், நாண்வழிக் காசு போலவும், நீர்வழி மிதவைபோலவும், பான்மைவழி யோடி இருவரையும் புணர்விக்கும் என்பது. ஆகலான், தமியராய்ப் புணர்வது தலைமையொடு மாறுகொள்ளாது என்பது. இது காமப்புணர்ச்சி என்பது.

[களவுப்புணர்ச்சி — உள்ளட்புணர்ச்சி]

இதனை, ஓர் ஆசிரியன், உள்ளத்தானே புணர்ச்சி என்னும்; என்னை, மெய்யுறுபுணர்ச்சி பொருவிறந்தார பதனொடு மாறுகொள்ளும். யாங்ஙனம் மாறுகொள்ளுமோ எனின், ஏகதேசத்துப் பிறர்க்குரிய பொருளை வெளிப்படுத்

பெருமைசொல்லப்படாது; அதுபோல, இவனும் கொடுப்ப அடுப்ப எய்தற்பாலான் ஏகதேசத்து எதிர்ப்பட்டுச் சென்றெய்தி முயங்கினமையின். என்னை, பிறர்க்கு உரிய பொருள் எளிதாகச் செய்யப்படாமையினும், பெரியனுப்ச் சென்றது. அங்ஙனமாகில், உலகத்துப் பன்மக்களெல்லாம் பெரியர்; சீராத பொழுது பிறருடைமை கொள்ளாது, சீர்த்த பொழு வெளவுதலால்.

இனி, இவளும் குரவரது பணியாற் சென்று அவனை வழிபடற்பாலாள், ஏகதேசத்துத் தலைப்பட்டு வழிபட்டமையாற் பெருமை இலள்; என்னை, தேர்ந்து காணாது, உள்ளம் ஓடின வழி ஓடுதலான். உள்ளத்தான் வேட்கப்படாத பொருளில்லை; அவ் வேட்கப்பட்டவற்றுக்கணெல்லாம், அறத்தின் வழுவாமையும் பொருளின் வழுவாமையும் தனக்குத் தகவும் ஆராயாது, உள்ளம் ஓடினவழி ஓடுவித்தல் தக்கதன்று என்பதனால் அதுவும் மாறுகொள்ளும் என்பது.

மற்று என்னையோ உரைக்குமாறு எனின், அவர் தம்முள் மெய்யுற்றுப் புணர்ந்திலர், இருவர்தம் காமமுமே தம்முட் புணர்ந்தன என்று, இங்ஙனம் உள்ளங்களானின்று புணர்வது புணர்ச்சி; இது பிறரொருவர் உணர நெடுங்காலம் புணர்தலாகாது என நீங்கும் நீக்கம் பிரிவு; அப்பிரிவின்கட் சொல்லுவது மெய்யுறு புணர்ச்சிக்குச் சொல்லுவன எல்லாஞ் சொல்லவே அமையும். பாங்கற் கூட்டத்தின்கண்ணும் தோழியிற்கூட்டத்தின்கண்ணும் எல்லாம் அதுவே.

வரைந்து எய்திய ஞான்று மெய்யுறு புணர்ச்சி உண்டாவது என்ப.

[களவுப்புணர்ச்சி — மெய்யுறுபுணர்ச்சி]

அது பொருந்தாது என்று மெய்யுறு புணர்ச்சி வேண்டுவார் சொல்லுவது: மெய்யுறு புணர்ச்சி தக்கின்று என்று ஆகாத உள்ளப்புணர்ச்சி வேண்டியது, அங்ஙனங் கருதின், பிறர்க்கு உரிய பொருண்மேல் உள்ளத்தை ஓடவிடுதல் தக்கன்று என்று மீட்க அமையாதோ என்பது. அல்லதூஉம்,

உள்ளத்தான் வேட்கை செல்லினும் மெய்யுற்றார் ஆயிற்று. அதன்கண் இருபுடை கருதி ஆகாதே; ஆகவே, இவட்குக் கற்பழியும் பிறரொருவரை வழிபட. இனி, உள்ளஞ் சென்ற பொழுதே அமைந்து இரண்டாவதில்லை என்று கருதினானே எனினும் மெய்யுறவே; குற்றம் என்னை என்பது. அல்லதூஉம், மெய்யும் மொழியும் என்பன உள்ளத்தின் வழியவன்றே, அஃது இறந்தபின்னை இறவாது நின்றது என்னை என்பது. அல்லதூஉம், பார்ப்பான் பாதகனாயிற்றென்று நினைக்குமாயின் பிராயச்சித்தத்திற்கு உரியனும்; அதனாற் செய்கையும் நினைப்பும் ஒக்கும் என்பது. அல்லதூஉம், மெய்யுறுவது ஆகாது என்னுந் தெரிந்துணர்ச்சி உண்டாயின் தமியர் என்பதனொடு மாறுகொள்ளும் என்பது.

அல்லதூஉம், கந்தருவர் உள்ளத்தாற் புணர்ந்தாராயின், இவரும் உள்ளத்தாற் புணர்ப என்பது; என்னை கந்தருவ வழக்கத்தோடு ஒக்கும் என்றமையின் என்பது. அல்லதூஉம் தெரிந்துணர்வு உண்டாமே எனின், அன்பினான் நிறைந்தார் என்பது அமையாது; என்னை, நிறைந்திருந்ததோர் கொள்கலம் பிறிது ஒன்றற்கு இடங் கொடாததுபோல என்பது. இவர் உத்தமராகலான் உள்ளத்தானே புணரப் போகம் முடியும் எனின், பின்னையும் எஞ்ஞான்றும் மெய்யுறவுவகை கூடாதாம். புத்திரலாபத்திற்கு மெய்யுறுபவே எனின், கருமப் பொருட்டன்றி வேட்கை யில்லை என்பதனால், உள்ளப்புணர்ச்சி உரையன்று, மெய்யுறுபுணர்ச்சியே வேண்டும் என்பது.

[சோற்பாடு]

இனி, ஒரு சாரார் உரைக்குமாறு: மெய்யுறு புணர்ச்சி தக்கது, இன்சொல்லும் கூற்றும் இன்றிப் பசுப்போலப் புணர்ந்தார் என்பது தகாது, சொற்படுகால் முறைமையான் நிகழ்ந்து புணர்தல் தகவுடைத்து. அவை யாவையோ எனின்—காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என இவை. அவற்றுள்,

காட்சி என்பது — இருவரும் தமமுட கண்ணுறுவது. அதற்குச் செய்யுள் :

பூமரு கண்ணிணை வண்டாப் புணர்மென் முலையரும்பாத்
தேமரு செவ்வாய் தளிராச் செருச்செந் நிலத்தைவென்ற
மாமரு தானையெங் கோன்வையை வார்பொழி லேர்கலந்த
காமரு பூங்கொடி கண்டே களித்தவெங் கண்ணிணையே.' (க)

ஐயம் என்பது — கண்ணுற்ற பின்னை ஐயப் படுவது. எங்ஙனமோ எனின், வரையரமகள்கொல்லோ, வானரமகள் கொல்லோ, நீரரமகள்கொல்லோ. இத்துணை மேதகவுடையாள்! அன்றி, மக்களுள்ளாள்கொல்லோ! என்றும் ஐயப்படுவது. அதற்குச் செய்யுள் :

உரையுறை தீந்தமிழ் வேந்த னுசிதன்றென் னாட்டொளிசேர்
விரைவுறை பூம்பொழின் மேலுறை தெய்வங்கொ லன்றிவிண்டோய்
வரையுறை தெய்வங்கொல் வானுறை தெய்வங்கொ னீர்மணந்த
திரையுறை தெய்வங்கொ லையந் தருகித் திருநுதலே.' (உ)

இவளும் அவனை ஐயப்படும். கடம்பமர் கடவுள்கொல்லோ, இயக்கன்கொல்லோ! அன்றி, மக்களுள்ளான்கொல்லோ என்று இங்ஙனம் ஐயப்படும்.

இவ்வகை நினைந்தபின்னைத் தெளிவு வருமாறு : ஆடை மாசுண்டலானும், கால் நிலந்தோய்தலானும், கண் இமைத்தலானும், கண்ணி வாடுதலானும், சாந்து புலர்தலானும் என்று இங்ஙனந் தெரியும்; தெரிந்த பின்னைத் துணியும் என்பது. அதற்குச் செய்யுள் :

பாவடி யானைப் பராங்குசன் பாழிப் பகைதணித்த
தாவடி வேன்மன்னன் கன்னித் துறைச்சுரும் பார்குவளைப்
பூவடி வாணெடுங் கண்ணு மிமைத்தன பூங்கிதன்மேற்
சேவடி தோய்வகண் டேன்றெய்வ மல்லளிச் சேயிழையே.' (ந)

இவளும் அவனை இவ்வாறே தெரிந்து மக்களுள்ளான் என்பது துணியும். துணிந்தபின்னை இருவர்க்கும் வேட்கை மிகத் தம்மிற் கூடுவது. இவ்வாறு புணரப் பெரிதும் வனப்புடைத்தாய்க் காட்டும் என்பது.

இவ்வுரை பொருந்தாது. என்னை காரணம் எனின், இது கைக்கிளை இலக்கணம். தெய்வங்கொல்லோ, மகடூஉக்கொல்லோ

என ஐயமுற்ற ஐயநிலையும், தெய்வ இலக்கணந் தீண்டாவாகலின் ஐயந்தெளிந்து மகடூஉவாதல் துவரவுணர்ந்த அத்துணிவு நிலைமையும் எனக் கைக்கிளையிலக்கணமாகச் சொல்லப்பட்டமையின். ஈண்டு அகத்திணையுள் அஃது உரைப்பது திணைமயக்கம் ஆகலின், மேலதே பொருள்.

'காமப் புணர்ச்சி' என்றமையின் காமத்தின் வேறு புணர்ச்சியாதல் வேண்டும்பிற, 'வாளாற்கொண்ட கோடி' என்றதுபோல எனின், அற்றன்று, 'பொன்னாற்செய்த மஞ்சிகை', 'மண்ணாற்செய்த குடம்' என்பதுபோல, வேறன்றி நிற்புழிக் கொள்க என்பது.

இஃது இயற்கைப் புணர்ச்சி எனப்படும்; புலவராற் கூறப்பட்ட இயல்பினாற் புணர்ந்தாராகலானும், கந்தருவ வழக்கத்தோடு ஒத்த இயல்பினாற் புணர்ந்தாராகலானும் என்பது.

இனித், தெய்வப் புணர்ச்சி எனவும் படும்; இருவரும் தெய்வத்தன்மையாற் புணர்ந்தாராகலின் என்பது. அல்லதூஉம், முயற்சியும் உளப்பாடும் இன்றி ஒருவற்கு ஒரு கருமம் கைகூடினவிடத்துத் தெய்வத்தினான் ஆயிற்று என்ப. அதுபோல இவர்க்கும் முயற்சியும் உளப்பாடும் இன்றிப் புணர்வு முடிந்தமையானும் தெய்வப் புணர்ச்சி எனப்பட்டது. இதுவே முன்னுறுபுணர்ச்சி எனவும்படும்; இவள் நலம் இவனானே முன்னுற எய்தப்பட்டமையானும், இவன் நலம் இவளானே முன்னுற எய்தப்பட்டமையானும் என்பது.

இனித், தெய்வப் புணர்ச்சி, முன்னுறு புணர்ச்சி, இயற்கைப் புணர்ச்சி என்பனவற்றுள் ஒன்று சொல்லாது, காமப் புணர்ச்சி யென்றே கூறிய காரணம் என்னை யெனின், இவற்றுள் ஒன்றே சொல்லினும் ஒக்கும்; அல்லது, அவை எல்லாம் அன்பினானே நிகழுமாகலின் காமப்புணர்ச்சி யென்றார் என்பது; பல காரணத்தினாய பொருளை ஒரு காரணத்தினாற் சொல்லுவது சிறப்புடைமை நோக்கி. என்னை, நிலனும் நீரும் காலமும் வித்தும் என இவற்றினது கூட்டத்தினாய முளையை நென்முளை என்ப. நென்முளைக்கு நெல் சிறைப்புடைக் காரணம். [illegible]

நீரும் முதலாகவுடையன பொதுக்காரணம். அவை பயற்று முளை முதலாவுடையனவற்றிற்குங் காரணமாகலான். அதுபோல ஈண்டும் தெய்வமும் இயற்கையும் முன்னுறவும் பொதுக் காரணம், காமம் சிறப்புக்காரணம், ஆதலான் காமப்புணர்ச்சி எனப்பட்டது.

இனி, இருவயின் ஒத்தல் என்பது — என் சொல்லியவாறோ எனின், புணராதமுன் நின்ற அன்பு புணர்ந்த பின்னும் அப்பெற்றியே நிற்கும் என்றவாறு. ஆயின் உலகினோடு ஒவ்வாது பிற, உலகினிற் புணராதமுன் நின்ற அன்பு புணர்ந்த பின்றைத் தவிர்தலானும், உண்ணாதமுன் நின்ற வேட்கை உண்டபின்றைத் தவிர்தலானும் என்பது. என்றாற்கு, அறியாது சொல்லுதி, உலகத்துள்ள பான்மை முன்னே கேட்டாயன்றே, இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டது என நூல் எடுத்துக் கோடற்கண்ணே சொல்லிப்போந்தது; இனி ஒருகால் உலகினோடு ஒவ்வாதெனல் வேண்டுமோ என்பது. ஆயின், உலகினுள் அன்பன்றாக. புணராதமுன் நின்ற வேட்கை புணர்ந்த பின்னும் அப்பெற்றியே நிற்கும் எனின், புணர்ச்சியானாய பயம் இல்லையாம்பிற, உண்ணாத முன்னின்ற வேட்கை உண்டபின்றையும் தவிராது அப்பெற்றியே நிற்குமாயின் உண்டதனானாய பயம் இல்லை; அதுபோல என்றாற்கு, அதுவன்று; புணராதமுன் நின்ற வேட்கை புணர்ச்சியுட் குறைபடும், அக் குறைபாட்டைக் கூட்டத்தின்கண் தம்முட் பெற்ற செய்குணங்களானாய அன்பு நிறைவிக்கும்; பின்னும் முன்னின்ற அன்பு கூட்டத்திற் குறைபடும். அதற்கு இடையின்றியே குணத்தினானாய அன்பு நிறைவிக்கும்; நிறைவித்தபின் முன்னின்ற அன்பு கூட்டத்திற் குறையாது எஞ்ஞான்றும் ஒரு பெற்றியேயாய் நிற்கும் என்பது.

இனி, அவ்வகை புணராத முன்னும் புணர்ந்த பின்னும் ஒத்த அன்பினனாய் நின்ற தலைமகன் பிரியும் என்றுமோ, பிரியான் என்றுமோ; பிரியும் என்றுமே எனின், அன்பிலன் ஆயினானாம்; என்னை, பிரிவு அன்பிற்கு மறுதலையாகலான். இனிப் பிரியானே எனினும், அன்பிலன் ஆயினானாம். என்னை, பிரியா-

திருப்ப இவ்வொழுகலாறு பிறர்க்குப் புலனாம்; ஆகவே அவள் இறந்துபடும், அவள் இறந்துபாட்டிற்குப் பரியான் ஆயினனும் ஆகவே, மூன்றாவது செய்யப்படுவது இல்லையாலோ எனின், பிரியும் என்பது. ஆயின், அன்பின்மை தங்காதோ எனின், தங்காது பிரியும் அன்பினனே நிகழுமாறு சொல்லுதும்:

தெய்வப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் இயற்கையன்பி-னானும் செயற்கையன்பினானும் கடாவப்பட்டுத் தனது நயப்பு உணர்த்தும். இயற்கையன்பு என்பது காரணம் இன்றித் தோன்றும் அன்பு; செயற்கையன்பு என்பது அவடன் குணங்-களால் தோன்றிய அன்பு. அவ்விரண்டினானும் கடாவப்பட்டு நின்று தலைமகன் சொல்வது நயப்பு என்பது.

தலைமகன் வண்டிற்கு உரைப்பானாய்த் தலைமகள் கேட்பத் தன் நயப்பு உணர்த்தியது எங்ஙனமோ எனின், 'அவள் கையிணைச் செங்காந்தள் எனவும், கண்ணிணைக் கருங்குவளை எனவும், வாயினை அரக்காம்பல் எனவும் என்று தடுமாறிக் குழன்மேலும் கோதைமேலும் சுழல்வாய், இவள் செவ்வாயது நறுநாற்றம் அறிதியன்றே! இனி, நீர்ப்பூ நிலப்பூ கோட்டுப்பூ கொடிப்பூ என்று இப் பல்வேறு வகைப்பட்ட பூவின்மேலுஞ் செல்வாய், ஆயபற்பூவினது நாற்றம் அறிதியன்றே! அறிவாய், இவ் வகைப்பட்டாள் செவ்வாய்போல நாறுந் தகைமைய உளவே ஆம்பல் நறுமலர்? என்றால் தேறப்படும் வண்டே, உரையாய்' என உணர்த்தினன் என்பது அதற்குச் செய்யுள்:

'வேறு மெனநின் றிகன்மலைந் தார்விழி ஞத்துவிண்போ
யேறுந் திறங்கண்ட கோன்றென் பொதியி லிரும்பொழில்வாய்த்
தேறுந் தகையவண் டேசொல்லு மெல்லியல் செந்துவர்வாய்
நாறுந் தகைமைய வேயணி யாம்ப னறுமலரே.' (ச)

என்றது, வேறும் என நின்று இகன் மலைந்தார் விழிஞத்து விண்போய் ஏறுந் திறங்கண்ட கோன் தென்பொதியில் இரும் பொழில்வாய் வண்டாதலால், தேறுந் தகைமைய என்றவாறு.

என்றதனாற் போந்த பொருள்: வெல்லுவது கருதி விழிஞத்-துக் கடற்கோடியுள் மலைந்த பல்வேந்தரையும் படுவித்து, இவர் என் பகைஞர் என நினையாது, அவர்க்குத் தவத்தானும் தானத்-

தானும் அன்றிப் புகலாகாச் சுவர்க்கங் கொடுத்த பெருந்தன்மையானது நிலத்து வண்டாதலின் நீயும் பெருந்தன்மையை; ஆகலின் தெளியப்படுதி. அல்லதூஉம், பொதியில் என்பது எல்லாத் தேவர்களுக்கும் பொதுவாகிய இல் என்றவாறு; அத்தேவர்களுடைய வனம் அவ் விரும்பொழில் என்றவாறு; அப் பொழில்வாழ்வாய் நீயும் அத்தன்மையை அன்றே! ஆகலானும் தெளியப்படுதி. அன்ஞப் நீ பொய் உரையாய்; இவள் வாய்போல நாறும் ஆம்பற்பூ உளவோ என்றவாறு. என்றதனால் தன் நயப்பு உணர்த்தினான்.

இனி, மெல்லியல் என்பது — மென்மையைத் தனக்கு இயல்பாக உடையாள் என்றவாறு; மென்மை என்பது பெண்டிர்க்கு மிக்க இயல்பு; அதனைத் தனக்குச் செய்துகோளன்றி இயல்பாக உடையாள் என்றவாறு; எனவும் தன் நயப்பு உணர்க்கின்றான்.

இனிச் செந்துவர்வாய் என்பது — செம்மையைத் தனக்கு மிகவுடைய வாய் என்றவாறு. செம்மையுடையார் என்பது உலகத்துத் தம் குணங்களை மறையாது ஒழுகுவாரை. இவள் வாயும் தன் குணமாகிய வடிவும் [1] மொழியும் நறுநாற்றமும் என்று இவற்றான் விளங்கிப் பொலிந்து தோன்றுவது என்றவாறு; என்றதனானும் தன் நயப்பு உணர்த்தினானாம்.

இனி, நாறுங் தகைமையவே என்பது, ஐந்து ஏகாரத்துள்ளும் இவ்வேகாரம் வினாவின்கண் வந்த ஏகாரம் எனக் கொள்க.

‘தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே
யீற்றசை யிவ்வைந் தேகா ரம்மே.’ [இடையியல் - ௯]

என்பவாகலின்.

அணி ஆம்பல் நறுமலர் என்பது — அழகிய ஆம்பல் நறுமலர் என்றவாறு. அணியாம்பல் நறுமலர் என்றதனாற் போந்தது அழகியாரின் குணங்களும் பெரும்பான்மையும்

---

1 - ஒளியும.

அழகியவாகலான், அவ்வாம்பற்கண்ணது மிக்க நறுநாற்றம் என்றற்குச் சொல்லப்பட்டது. அவ்வகை நறுநாற்றம் மிக-வுடைய ஆம்பல் இவள் வாய்போல நாறுமே என்றவாறு.

மலரே என்று நின்ற ஏகாரம் ஈற்றசை ஏகாரம்.

இனி, இதனைச் சோதிக்குமாறு : 'செந்துவர் வாய் நாறுந் தகைமையவே' என்றதல்லது, போல என்றது இல்லையால் எனின், உவமம் தொக்கு நின்றது என்று கொள்க.

என்னை,

'வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே
வினையின் றொகையே பண்பின் றொகையே
யும்மைத் தொகையே யன்மொழித் தொகையென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே.' [எச்சவியல் - கசு]

என்று ஓதினமையின்.

ஆயின், உவமம் தொகுக; உவமிக்கும் முறைமையன்றி உவமித்தீர். உலகத்துப் பெண்பால்கள் வாயது நறுநாற்றத்-திற்கு உவமையாவது ஆம்பல் என்றவாறு.

என்னை,

'ஆம்ப னாறுந் தேம்பொதி துவர்வாய்.' [குறுந் - ௩00]

என்பவாகலின்.

இவவாறன்றி, இவள் வாய்போல நாறும் ஆம்பல் உளவே என, வாயை உவமை யாக்கி, ஆம்பலை உவமிக்கப்படும் பொருளாகச் சொல்லுதல் குற்றம்பிற எனின், அறியாது சொல்லினுய், உலகத்து, இவை உவமை, இவை உவமிக்கப்படும் பொருள் என்று நிலைபெற்றன உளவே யில்லை. உரைக்குங் கவியது குறிப்பினன் உவமையும் உவமிக்கப்படும் பொருளாம்; உவமிக்கப்படும் பொருளே உவமையாகவும் அமையும்.

என்னை,

'பொருளது புரைவே புணர்ப்போன் குறிப்பின்
மருளற வரூஉ மரபிற் றென்ப'

என்று ஓதினமையான்.

'கண்போ னெய்தல் போர்விற் பூக்கும்.' [நற்றிணை - அ]

எனவும்,

'கண்ணென மலருங் குவளை'

எனவும்,

'குவளை யுண்க ணிவளும் யானும்.' [அகம் - கடுசு]

எனவும்,

'நெய்த லுண்கண் பைதல் கூர' [நற்றிணை - ககஙு]

எனவும் இருவகையானுஞ் சொல்லுப ஆகலின், இருவகையானும் உவமிக்க அமையும் என்பது.

இனி, மருதநிலத்து ஆம்பலைக் குறிஞ்சி நிலத்து ஆம்பலாகச் சொல்லுதல் திணைவழுவாம்பிற எனின், ஆகாது; குறிஞ்சி நிலத்து வண்டு குறிஞ்சிநிலத்தே திரிவன அல்ல; எல்லா நிலத்துஞ் சென்று, எல்லாப் பூவும் ஊதுமாகலானும் அமையும். அல்லதூஉம்,

'எந்நில மருங்கிற் பூவும் புள்ளு
மந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்' [அகத்திணையியல் - உக]

என்பதாகலானும் அமையும்.

இனிச், சுனைக்குவளையும் சுனையாம்பலும் உண்மையானும் அமையம். அது [1]பெருங்குறிஞ்சியிற் கண்டுகொள்க.

இனித், தலைமகன் என்னுஞ் சொல்லொடு மாறுகொள்ளும், பிறனொரு தலைமகன் நிலத்துப் புணர்ந்தான் என்றமையின் எனின், மாறுகொள்ளாது; என்னை, நின்ற ஒருவனுடைய பாண்டியனது பொதியில் இடமாகச் சொன்னமையான். என்னை, அக்குலத்துள் தோன்றுவார் தேவர்களே யாகலான் நம்மால் வேண்டப்பட்ட தலைமகன் தேவருள் மிக்கான் எனப்படான், மக்களுண் மிக்கான் ஆயதல்லது. ஆகலின், இவன் நிலத்துப்

1 - குறிஞ்சிப்பாட்டு.

புணர்ந்தான் என்பது தலைமையொடு மாறுகொள்ளாது என்பது. அல்லதூஉம்,

'மழைவளந் தருஉ மாவண் டித்தன்
பிண்டி நெல்லி னுறந்தை யாங்கட்
கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தங்
குழைமா ணொள்ளிழை நீவெய் யோளொடு
வேழ வெண்புணை தழீஇப் பூழியர்
கயநா டியானையின் முகனமர்ந் தாஅங்
கேந்தெழி லாகத்துப் பூந்தார் குழைய
நெருந லாடினை புனலே.' [அகம் - ௬]

என்றும்,

'பகுவாய் வராஅற் பல்வரி யிரும்போத்து.' [அகம் - ௩௬]

என்றும், களவித் தலைமகனைப் பாட்டிடைத் தலைமகன் நிலத்துப் புனலாடினான் என்றும், புணர்ந்தான் என்றும் பிறசான்றோர் செய்யுளுள்ளுஞ் சொல்லப்பட்டதாகலினானும் அமையும் என்பது இப் பாட்டினால், தன்கண் நின்ற அன்பு வெளிப்படுத்துத் தலைமகளைப் புகழ்ந்து, நயப்பு உணர்த்திற்றாயிற்றுப் போந்த பொருள். இன்னுஞ் செய்யுள் :

'தாவுண்டை வண்டினங் காள்வம்மின் சொல்லுமின் றன்னிகில்லாக்
கோவுண்டை கோட்டாற் றழிவித்த கோன்கொங்க நாட்டசெங்கேழ்
மாவுண்டை வாட்டிய நோக்கிதன் வார்குழல் போற்கமழும்
பூவுண்டை தாமுள வோநுங்கள் கானற் பொழிலிடத்தே.' (௫)

'இருங்கழல் வானவ ஞற்றுக் குடியிகல் சாய்ந்தழியப்
பொருங்கழல் வீக்கிய பூழியன் மாறன்றென் பூம்பொதியின்
மருங்குழ லுங்களி வண்டினங் காளுரை யீர்மடந்தை
கருங்குழ லுறுமென் போதுடைத் தோறுங் கடிபொழிலே.' (௬)

'விண்டே யெதிர்ந்ததெவ் வேந்தர் படவிழி ஞத்துவென்ற
வொண்டே ருசிதனெங் கோன்கொல்லிச் சார லொளிமலர்த்தா
துண்டே யுழல்வா யறிதியன் றேயுள வேலுரையாய்
வண்டே மடந்தை குழல்போற் கமழு மதுமலரே.' (௭)

'பொருங்கழல் வானவற் காயன்று பூலந்தைப் போர்மலைந்தா
ரொருங்கழ லேறவென் றான்கொல்லிச் சாரலொண் போதுகடம்
மருங்குழல் வாய்நீ யறிதிவண் டேசொல் லெனக்குமங்கை
கருங்குழல் போலுள வோவிரை நாறுங் கடிமலரே.' (௮)

'மேதற்றமில் லாதவெதவ் வேந்தரைச் சேவூர்ச் செருவழித்துக்
கூற்ற மவர்க்காய வன்கொல்லிச் சாரல்கொங் குண்டுழல்வாய்
மாற்ற முரைநீ யெனக்குவண் டேமங்கை வார்குழல்போ
னாற்ற முடைய வுளவோ வறியு நறுமலரே.' (கூ)

'கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே.' (குறுந் - உ)

இவையும் அப்பாற்படுத்துக்கொள்க.

அவ்வகை தன்னைப் புகழத் தலைமகள் ஆற்றாளாயினாளாம்; என்னை, சிறியவரும், தம் முன்னின்று தம்மைப் புகழ்ந்தவிடத்து, நாணி வருந்துபவாகலான்; தான் பெருமையும் பெருநாணும் உடையாள், தலைமகன் முன்னின்று புகழ ஆற்றாளாவது சொல்லவேண்டுமோ? அவ்வகை ஆற்றாளாயினளது ஆற்றாமை தலைமகற்குப் புலனாயிற்று. புலனாக, அதனைக் கண்டு, நீருடை நிலத்து நிவந்த நீண்மரம் வெப்பத்தால் தெறப்படாததுபோல, யான் உழையேனாக இவ் வேறுபாடு இவட்கு ஆகாதன்றே! இஃது, எற்றினான் ஆயிற்றுக்கொல்லோ என நினைந்தான். நினைந்து, அறிந்தேன் என்னது காதன்மிகவினாற் பாராட்டப்போலும் என உணர்ந்தான். உணர்ந்து, யான் தன் முன்னின்று தன்னைப் பாராட்டவும் இவ்வகை மெலிவு சென்ற பெருநாணுடையாள், புறத்து யாரானும் ஒருவர் இவ்வொழுக்கத்தை உணர்வார்கொல்லோ என்று உட்கொண்ட ஞான்று இவள் இறந்துபடும்போலும் எனப் பெரியதோர் ஆற்றாத் தன்மையன ஆயினான். ஆற்றாத் தன்மையன் என்பது எவ்வுணர்வும் இன்றி அவ்வாற்றாமை தானேயாவது. அவ்வகை ஆற்றானாய தலைமகனது ஆற்றாமைக்குக் கவன்று முன் நாணிற் சென்று எய்திய ஆற்றாமை நீங்கித் தலைமகள் ஆற்றாளாயினாள், வேலேறுபடத் தேளேறு மாய்ந்தாற்போல. அது தலைமகற்குப் புலனாயிற்று. புலனாக, இவள் எவ்விடத்தும் தன் தன்மை என்பது ஒன்றிலள், என் தன்மையளே; யான் ஆற்ற ஆற்றி, யான் ஆற்றாத இடத்துத் தானும் ஆற்றாளாம் ஆகலான், யான் பிரிந்தவிடத்து

என் குறிப்பன்றி இறந்துபடாள்; அல்லதூஉம், யான் பிரியாது-விடப் புறத்தார் உணர்வர். புறத்தார் உணரவே, இவள் ஆற்றாளாம். ஆகலான், யான் பிரியவே புறத்தார் உணரார். ஆகவே, இவள் ஆற்றும் எனக் கருதி, இவள் கருங்குழற் கற்றை மருங்கு திருத்தி, அளகமும் நுதலும் தகைபெற நீவி, ஆகமும் தோளும் அணிபெறத் தைவந்து, குளிர்ப்பக் கூறித், தளிர்ப்ப முயங்கிப் பிரிவல் என வலித்தான். வலித்துப், பிரிவச்சம் என்பது ஒன்று சொல்லும்.

[பிரிவச்சம்]

பிரிவச்சம் என்பது, தான் பிரிவு அஞ்சிற்றும் பிரிவச்சம்; அவளைப் பிரிவு அஞ்சுவித்ததும் பிரிவச்சம்; ஆகலின், பிரிவச்சம் எனப்பட்டது. அது யாங்ஙனஞ் சொல்லுமோ எனின், 'நின்னிற் பிரியேன், பிரியின் ஆற்றேன்' என்னும். அதற்குச் செய்யுள் :

'மின்னிற் பொலிந்தசெவ் வேல்வலத் தான்விழி ஞத்தெதிர்ந்த
மன்னிற்கு வானங் கொடுத்தசெங் கோன்மன்னன் வஞ்சியன்னாய்
நின்னிற் பிரியேன் பிரியினு மாற்றே னெடும்பணைத்தோட்
பொன்னிற் பசந்தொழி யாதிடவென்னீ புலம்புவதே.' (௧0)

'அணிநிற நீண்முடி வேந்தரை யாற்றுக் குடியழியத்
துணிநிற வேல்வலங் காட்டிய மீனவன் றெண்டியன்ன
பிணிநிற வார்குழற் பெய்வளைத் தோளிநின் னிற்பிரியேன்
மணிநிறம் பொன்னிற மாயிட வென்னீ வருந்துவதே.' (௧௧)

பொன்னார் புனைகழற் பூழியன் பூலந்தைப் பூவழிய
மன்னா ரயில்கொண்ட வேந்தன் விசாரிதன் வெண்டிரைமேன்
முன்னாண் முதலறி யாவண்ண நின்ற பிரான்முசிறி
யன்னாய் பிரியேன் பிரியினு மாற்றே னழுங்கற்கவே.' (௧௨)

என, இவ்வகை கேட்ட தலைமகள், 'எம்பெருமான் நின்னிற் பிரியேன், பிரியினும் ஆற்றேனாவல் என்கின்றானேல், பிரிவு என்பதும் ஒன்று உண்டுபோலும்; கேட்ட தகைமையால் அது தம் காதலரைக் காணாதும் கேளாதும் கையின் அகன்று மெய்யின் நீங்குவது' எனக் கலங்கிக், கார்மருங்கின் மின்னுப் போலவும், நீர்மருங்கிற் கொடிப்போலவும், தளிரும் முறியும் கதைந்து, குளிரும் நளிரும் கவினி எழாநின்றதோர் கவின்

பெறு கொடிப்போலும் காரிகை, கண்ணாடி மண்டிலத்து ஊது ஆவிபோலக் காண ஒளிமழுங்கிக், கனல்முன் இட்ட மெழுகுப்-பாவைபோல மனம் உருகிப் பசந்து காட்டினாள். காட்டியும் ஆற்றினாள், 'யான் ஆற்றாவிடின் எம்பெருமானும் இறந்துபடும்' என. அங்ஙனம் ஆற்றினாளது நீர்மையைக் கண்டு, 'இவள் எவ்விடத்தும் தன் தன்மை யென்பது ஒன்று இலள், என் தன்மையளே போலும்' எனப் பெரியதோர் கழிபுவகை மீதூர நின்று, வன்புறை என்பதோர் சொற்சொல்லும்.

[வன்புறை]

வன்புறை என்பது வற்புறுத்துவது. அஃதியாங்ஙனமோ எனின், அணித்து எம் இடம் என்பது. அதற்குச் செய்யுள் :

'பாவணை யின்றமிழ் வேந்தன் பராங்குசன் பாழிவென்ற
வேலனை வெஞ்சிலை யான்வஞ்சி யன்ன வினையவெம்மூர்த்
தூவணை மாடச் சுடர்தோய் நெடுங்கொடி துன்னி நம்மூ
ராவணை வீதியெல் லாநிழற் பாய்கின் றணைவருமே.' (௧௩)

'திணிநிற நீடோ ளரசுகத் தென்னறை யாற்றுமன்னோர்
துணிநிற வேல்கொண்ட கோன்றெண்டி யன்னாய் துயரலெம்மூர்
மணிநிற மாடத்து மாட்டிய வொன்சுடர் மாலைநம்மூ
ரணிநிற மாளிகை மேற்பகல் பாரித் தணவருமே.' (௧௪)

'ஒன்றக் கருதா வயவர் நறையாற் றுடனழிந்து
பொன்றப் படைதொட்ட கோன்புன னாடனை யாய்நுமர்கள்
குன்றத் திடைப்புனங் காவல ரிட்ட குளூஉச்சுடரெம்
மன்றத் திடையிரு ணீக்கும் படித்தெங்கள் வாழ்பதியே. (௧௫)

'சேலங் குளர்வயற் சேவூ ரெதிர்நின்ற சேரலனை
மாலங் கடைவித்த மன்னன் வரோதயன் வஞ்சியன்ன
வேலங் கமழ்குழ லேழையெம் மூரெழின் மாடத்துச்சிச்
சூலந் துடக்குநம் மூர்மணி மாடத் துகிற்கொடியே.' (௧௬)

என, அங்ஙனங் கேட்ட தலைமகள், 'எம்பெருமான் அணித்து எம் இடம் என்கின்றானல், அணியதற்கு அருமையில்லை என்கின்றானும். அருமையில்லை என்றதனாற் போந்த பொருள், பல்காலுங் கேட்கவும் காணவுமாம் என்றவாறு போலும். பல்காலுங் கேட்பாருங் காண்பாரும் ஆற்றியுளர் ஆகாதே ;

அதனால் எம்பெருமான், என்னைக் காண்டற்கும் கேட்டற்கும் ஆற்றியுளனும் போலும்' என, ஆற்றுவாளாம். அங்ஙனம் ஆற்றுதலை அறிந்த பின்றைப் பிரிவானும்.

இனி, 'இவளும் பெருநாணினள்; யான் பிரியாதுவிடின் இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனும். ஆகவே, இவள் ஒருதலையாக இறந்துபடும்' என, இவ்வகை பிரிவச்சமும் வன்புறையும் சொல்லிப் பிரியுமாகலின், பிரிவும் அன்பினானே நிகழ்ந்தது என்பது.

[தலைவன் தலைவியது அருமையறிதல்]

இவ்வாற்றால் தலைமகளை ஆற்றிப் பிரிந்த தலைமகன் அவளைத் தமியளாக நீங்குமோ எனின், நீங்கான். அவள் தன்னை காணாமைத் தான் அவளைக் காண்பதோர் அண்மைக்கண், மழைக்கொண்டலுள் மின்னுப் புக்கு ஒளித்தாற்போல, ஒரு தழைப்பொதும்பரிடை மறைந்து நிற்கும் என்பது. அங்ஙனம் நிற்பத், தலைமகளும் தன் குழற்கற்றைப் பொறையும் கோதையும் துயல்வரக், கொடியிடை நடுவு தளரப், பரவை அல்குல் துகில் அசையப், பைம்பொற்றோடு மின்னுப் படைப்ப, அரவ வண்டறையும் தாமரை அகவிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி மேற் செம்பொற் சிலம்பு அரற்ற, அன்னம்போல மென்மெல ஒதுங்கிக் காமவல்லிக் கொடியும், கற்பகக் கொழுந்தும் நடப்பதென நடந்துசென்று, அப் பனிவரைச்சாரல் அருகினது ஒரு மணியருவிமருங்கு ஓலுறுத்தப் பளிங்கு விளிம்பு அடுத்த நீலப் பைஞ்சுனை மருங்கினதோர் மரகதச் சிலாவட்டத்தயல் மாணிக்கச் சதுரப் பாறைமேல், தாது தவிசு படுத்த மாதவிப் பந்தர்ப் போதுவேய்ந்த பூநாறு கொழுநிழல் இருந்தாள். இருந்தாளாகத், தாதும் தளிரும் போதும் மேதக்கனவற்றால் குறுங்கண்ணியும், நெடுங் கோதையும், விரவுத்தழையும், சூட்டுக்கத்திகையும், மோட்டு வலயமும், பிறவும் ஆகப் புனைந்து, வண்டும் தேனும் புடைமருட்ட, அடியுறையென ஏந்திப், பிரிந்த ஆயம் பெயர்ந்து எய்திப், போற்றும் பல்லாண்டும் கூறிநின்றார். நிற்ப, அவளும் தாரகை நடுவண் தண்மதி போல்வதோர் பொலிவினளாய்க் காட்டினாள். காட்டினாளைக் கண்டு, 'இவளை யான் எய்தினேன்! எய்தியது உண்டேல் கனவேபோலும்! கனவே யாயி-

னும் இவள் எனக்கு எய்துதற்கு அரியளாம்' என ஆற்றானாயினான். அதற்குச் செய்யுள் :

'சினவேல் வலங்கொண்டு செந்நிலத்தேற்றதெவ் வேந்தர்கள்போய்
இனவேய் நரல்குன்ற மேறவென் றோனிருந் தண்சிலம்பிற்
புனவே யனையமென் றோளிதன் னாகம் புணர்ந்ததெல்லாம்
கனவே நனவாய் விடினுமெய் தாகினிக் கண்ணுறவே.' (௧௭)

'இருநிலங் காரண மாக நறையாற் றிகன்மலைந்த
பொருநில வேந்தரைப் பொன்னால காள்வித்த பூமுகவேற்
பெருநிலங் காவலன் றென்புன னாடன்ன பெண்ணணங்கின்
திருநலஞ் சேர்ந்ததெல் லாங்கன வேயென்று சிந்திப்பனே.' (௧௮)

'கையேர் சிலைமன்ன ரோடக் கடையற்றன் கண்சிவந்து
செய்யே ரயில்கொண்ட நேரியன் கொல்லி நெடும்பொழில்வாய்
மையேர் தடங்கண் மடந்தைமெல் லாகம் புணர்ந்ததெல்லாம்
பொய்யே யினிமெய்ம்மை யாயினு மில்லைப் புணர்திறமே.' (௧௯)

என, இவ்வகையான் அவளது அருமை நினைந்து இவ்வொழுக்கம் கூடாதென்று கருதுவானாயினவரையும் யான் இவ்வகையாளைப் புணருமாறு என்னைகொல்லோ என்பானாயின் கூட்டத்திற்கே முயல்வானாம். அவ்வகை நினைந்து நீங்குவான் ஆயத்தோடுஞ் செல்லாநின்ற தலைமகளை நோக்கிச் சொல்லும் : அதற்குச் செய்யுள் :

'தேயத் தவருயி ரைப்புல னன்றென்பர் செந்நிலத்தைக்
காயக் கனன்றெதிர்ந் தார்மரு மத்துக் கடுங்கணைகள்
பாயச் சிலைதொட்ட பஞ்சவன் வஞ்சிப்பைம் பூம்பொழில்வாய்
ஆயத் திடையிது வோதிரி கின்றதென் னாருயிரே.' (௨௰)

'இன்னுயிர் கண்டறி வாரில்லை யென்ப ரிகன்மலைந்தார்
மன்னுயிர் வான்சென் றடையக் கடையலுள் வென்றுவையந் [வாய்
தன்னுயிர் போனின்று தாங்குமெங் கோன்கொல்லித் தாழ்பொழில்
என்னுயி ராயத் திடையிது வோநின் றியங்குவதே.' (௨௧)

என, இவ்வாறு சொல்லி, இனி இவளைக் கைகூடாதென ஆற்றானாயினான். அவ்வாற்றாத்தன்மை ஆற்றுவது ஒன்றனைப் பற்றும். ஆற்றுவது யாதோ எனின், தான் எய்திய ஆரணங்காகிய அவ்வுருவினை நினைந்து, தான் எய்தும் உபாயமாவது தன் காதற்றோழனை இதுகொண்டு முடிக்குங்கொல்லோ என்பது. அது பற்றுக்கோடாக ஆற்றி நீங்கும் என்பது. (௨)

**ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் றன்வயின்
பாங்கி னோரிற் குறிதலைப் பெய்தலும்
பாங்கிலன் றமியோ ளிடந்தலைப் படலுமென்
றாங்க விரண்டே தலைப்பெயன் மரபே.**

என்னுதலிற்றோ எனின், இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் அதன்பின்னே தெருண்டு வரைதல் தலை; என்னை, வழிப்போகாநின்றான் ஒருவன் பிழைத்துச் சேறும் சாணகமானும் மிதித்தவிடத்துக் காலைக்கழீஇப் பாதுகாத்துத் தன் இல்லம் புக்கதுபோல, அவனும் ஞானவொழுக்கக் குணங்களின் வழியே சொல்லாநின்றான் இழுக்கினால், அவ் விழுக்கினை இழுக்காவது அறிந்து, அதன்கணின்று மீடல் மிக்கது; மீண்டு நிற்கிலான் எனின், இவ்வாறு ஒழுகும் என்று அவன் ஒழுகும் திறம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் என்பது — அவ்வாறு கூடிப்பிரிந்த தலைமகன் என்றவாறு; தன் வயின் பாங்கினோரிற் குறி தலைப்பெய்தலும் என்பது — தன் பாங்கனாற் குறியிடத்துத் தலைப்பெய்தலும் என்றவாறு; பாங்கிலன் தமியோள் இடந்தலைப்படலும் என்பது — பாங்கனை யின்றித் தனியாளை இடத்து எதிர்ப்படுதலும் என்றவாறு; ஆங்க என்பது அசைச்சொல்; இரண்டு என்பது தொகை; தலைப்பெயல் மரபே என்பது — தலைப்பெய்தற்கு இலக்கணம் என்றவாறு.

அவ்வாறு புணர்ந்து நீங்கிய தலைமகன் பிற்றைஞான்று தன் பாங்கனாற் குறியிடத்துத் தலைப்பெய்தலும், பாங்கனை யின்றியே சென்று தனியாளை இடத்து எதிர்ப்படுதலும் என அவ்விரண்டில் ஒன்றே தலைப்பெய்தற்கு இலக்கணம் என்றவாறு.

அவ்வகை புணர்ந்த கிழவோன் என்பது, தெய்வம் இடை நிற்பப் பான்மையால் உய்க்கப்பட்டு யாரும் இல் ஒரு சிறைத் தலைப்பெய்த தலைமகன் என்றவாறு. எனவே, அவ்வாறு புணரப்பட்டாள் தலைமகள் எனப்பட்டது.

கிழமையுடைமையின் கிழவோன் எனப்பட்டது; தலைமை யுடைமையின் தலைமகன் என்னப்பட்டது; அவட்கும் அவ்வாறே கொள்க.

[பாங்கற் கூட்டம்]

இனிப், பாங்கற் கூட்டம் ஆமாறு சொல்லுதும்: இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து ஆற்றுவித்துப் பிரிந்த தலைமகன் ஆங்குப்பட்ட வார்த்தை யெல்லாம் நினைக்கும். நினைக்குமாறு யாதோ எனின், 'நின்னிற் பிரியேன், பிரியின் ஆற்றேன்' எனச் சொல்லிப், 'பிரியப்பட்டாள் தன்னைக் காணாத என் நிலைமை நினைந்து ஆற்றாளாங்கொல்லோ' எனவும், 'ஆற்றாளாகி நின்றாள் தனது வேறுபாட்டைப் புறத்தார் அறியாமை மறைக்குமாறு அறியாது வருந்துங்கொல்லோ' எனவும், இவை முதலாயின நினைந்து ஆற்றானாம்.

[உற்றது வினாதல்]

ஆற்றாநிலைமையானைப் பிற்றைஞான்று சிறுகாலையே தலைப்படும் பாங்கன்; தலைப்பட்டு, அடியிற்கொண்டு முடிகாறும் நோக்குவான், புதையிருள் இரியல்போகப் பொன்தாழ் அருவி மணி நெடுங்கோட்டு உதயம் என்னும் மணிவரை யுச்சி உலகுதுயில் பெயர்த்துத் தோன்றிய வளர் ஒளி இள ஞாயிற்றின் வனப்பு ஒழித்த திருவொளி மழுங்கியது நோக்கி, 'என்னைகொல்லோ எம்பெருமாற்கு இற்றை வேறுபாட்டு வாட்டம்?' என்னும். அதற்குச் செய்யுள்:

'நீடிய பூந்தண் கழனிநெல் வேலி நிகர்மலைந்தார்
ஓடிய வாறுகண் டொண்சுடர் வைவே லுறைசெறித்த
ஆடியல் யானை யரிகேசரிதெவ்வர் போலழுங்கி
வாடிய காரண மென்னைகொல் லோவுள்ளம் வள்ளலுக்கே.' (உஉ)

'வண்டுறை வார்பொழில் சூழ்நறை யாற்றுமன் னோடைவைவேல்
கொண்டுறை நீக்கிய தென்னவன் கூடற் கொழுந்தமிழின்
ஒண்டுறை மேலுள்ள மோடிய தோவன்றி யுற்றதுண்டே
தண்டுறை வாசிக்கை வாடிட வென்னீ தளர்கின்றதே.' (உங)

'தெவ்வா யெதிர்நின்ற சேரலர் கோனைச் செருக்கழித்துக்
கைவா னிதியமெல் லாமுட னேகடை யற்கவர்ந்த
நெய்வா யயிநெடு மாறன் பகைபோ னினைந்துபண்டை
ஒவ்வா வுருவ மொழியுமென் னேவள்ள லுள்ளியதே.' (உச)

[உற்றதுரைத்தல்]

இவ்வகை பாங்கன் வினவானாயின் தலைமகற்கு உற்றது கடைப்பிடியாது விட்டானும், இவ்வகை கடைப்பிடித்து வினவிய பாங்கற்கு, 'நெருநல் இவ்வகையார் ஒருவரைக் கண்டேற்கு என் உள்ளம் பள்ளத்துவழி வெள்ளம்போல ஓடி, இவ்வகைத்து ஆயிற்று' என்று சொல்லும்; அதற்குச் செய்யுள்:

'அளையா ரரவின் குருளை யணங்க வறிவழிந்து
துளையார் நெடுங்கைக் களிறு நடுங்கித் துயர்வதுபோல்
வளையார் முளையெயிற் றூர்மன்னன் மாறன்வண் கூடலன்ன
இளையா ளொருவ ரணங்கநந் தாம்மெய் யிளைக்கின்றதே.' (உரு)

'அலையார் கழன்மன்ன ராற்றுக் குடியழ லேறச்செற்ற
கொலையா ரயிற்படைக் கொற்றவன் கூடலன் னாளொருவர்
முலையாய் முகிழ்த்துமென் றோளாய்ப் பணைத்து முகத்தனங்கன்
சிலையாய்க் குனித்துக் குழலாய்ச் சுழன்றதென் சிந்தனையே.'(உசு)

'பொருநெடுந் தானைப்புல் லார்தம்மைப் பூலந்தைப் பூவழித்த
பருநெடுந் திண்டோட் பராங்குசன் கொல்லிப் பனிவரைவாய்த்
திருநெடும் பாவை யனையவள் செந்தா மரைமுகத்துக்
கருநெடுங் கண்கண்டு மீண்டின்று சென்றதென் காதன்மையே.'()

'சிறுவெள் ளரவி னவ்வரிக் குருளை
கான யானை யணங்கி யாஅங்
கிளையள் முளைவா ளெயிற்றள்
வளையுடைக் கையளெம் மணங்கி யோளே.' (குறுந் - ககக)

'எலுவ சிறாஅ ரேமமுறு நண்ப
புலவர் தோழ கேளா யத்தை
மாக்கட னடுவு ணெண்ணாட் பக்கத்துப்
பசுவெண் டிங்க டோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற் றெம்மே.' (குறுந்-கஉக)

[கழறியுரைத்தல்]

இவ்வாறு சொல்லக்கேட்ட பாங்கன் கழறும். கழறுதல் என்பது அன்புடையார்மாட்டுத் தீயன கண்டால் அவ்வன்பில் தலைப்பிரியாத சொற்களால் நெருங்குவது. கழறுமாறு : 'குன்றம் உருண்டாற் குன்றி வழியடை யாகாதவாறு போலவும், யானை தொடுவுண்ணின் மூடுங்கலம் இல்லதுபோலவும், கடல் வெதும்பின் வளாவுநீர் இல்லதுபோலவும், எம்பெருமான், நின் உள்ளம், அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடியின் வரைத்தன்றிக் கைம்மிக்கு ஓடுமேயெனின் நின்னைத் தெருட்டற்பால நீர்மையார் உளரோ, நீ பிறரைத் தெருட்டின் அல்லது? அப்பெற்றியாய நீ, இன்னதோர் இடத்து இன்னதோர் உருவுகண்டு, "என் உணர்வு அழியப் போந்தேன்" என்றல் தக்கின்று' என்னும். அதற்குச் செய்யுள் :

'ஆய்கின்ற தீந்தமிழ் வேந்த னரிகே சரியணிவான்
தோய்கின்ற முத்தக் குடைமன்னன்கொல்லியஞ் சூழ்பொழில்வாய்
ஏய்கின்ற வாயத் திடையோ ரிளங்கொடி கண்டெனுள்ளம்
தேய்கின்ற தென்ப தழகிய தொன்றோ சிலம்பனுக்கே.' (உஅ)

'தண்டேர் நறைநறுந் தார்மன்ன ராற்றுக் குடிதளரத்
திண்டேர் கடாய்ச்செற்ற கொற்றவன் கன்னிச் செழும்பொழி[ல்வாய்
வண்டேர் நறுங்கண்ணி யாயங்கொர் மாதர் மதிமுகநீ
கண்டே தளரினல் லாரினி யாரிக் கடலிடத்தே.' (உகூ)

[கழற்றெதிர்மறை]

இவ்வாறு பாங்கன் கழறத், தலைமகன் ஆற்றானாய்ச் சொல்லும் சொற்கள் கழற்றெதிர்மறை என்பது. அதற்குச் செய்யுள்:

'விண்டார் படவிழி ஞக்கடற் கோடியுள் வேல்வலங்கைக் [க்கும்
கொண்டான் குடைமன்னன் கூடற் குடவரைக் கொம்பொடொ
வண்டார் குழன்மட மங்கை மதர்வைமென் னோக்கமென்போற்
கண்டா ருளரே லுரையார் பிறவின்ன கட்டுரையே.' (௩0)

'மண்கொண்டு வாழ வலித்துவந் தார்தம் மதனழிந்து
புண்கொண்ட நீர்மூழ்கப் பூலந்தை வென்றான் புகாரனைய
பண்கொண்ட சொல்லம் மடந்தை முகத்துப்பைம் பூங்குவளைக்
கண்கண்ட பின்னை யுரையீ ருரைத்தவிக் கட்டுரையே.' (௩௧)

'அம்ம வாழி கேளிர் முன்னின்று
கண்டனி ராயிற் கழறலிர் மன்னோ
நுண்டாது பொதிந்த செங்காற் கொழுமுகை
முண்டகங் கெழீஇய மோட்டுமண லடைகரைப்
பேஎய்த் தலைஇய பிணரரைத் தாழை
எயிறுடை நெடுந்தோடு காப்பப் பலவுடன்
வயிறுடைப் போது வாலிதின் விரைஇப்
புலவுப் பொருதழித்த பூநாறு பரப்பின்
இவர்திரை தந்த வீர்ங்கதிர் முத்தங்
கவர்நடைப் புரவிக் கால்வடுத் தபுக்கு
நற்றேர் வழுதி கொற்கை முன்றுறை
வண்டுவாய் திறந்த வாங்குகழி நெய்தற்
போது புறங்கொடுத்த வுண்கண்
மாதர் வாண்முக மதைஇய நோக்கே.' (அகம் - ௧௩0)

'இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே.' (குறுந் - ௫அ)

[கவன்றுரைத்தல்]

இவ்வாறு தலைமகன் தனது ஆற்றாமையின் கழற்றெதிர் மறுத்து உரைப்பக் கேட்ட பாங்கன், 'தானே தகாதனவற்றைத் தகா என்று உரைப்பாலான், யான், எம்பெருமாற்குத் தக்கதோ இவ்வாறு உண்மெலிவது ? எனவும் தெருண்டிலன் ; தெருளாவிட்டது தான் காணப்பட்ட உருவம் அந்நீர்மைத்தே யாம் ; அன்றாயின், தெருளுமன்றே' எனக் கவன்றான். அக் கவற்றிற்குச் செய்யுள் :

'வன்றாட் களிறு கடாஅயன்று வல்லத்து மன்னவியச்
சென்றான் கருங்கயல் சூட்டிய சென்னிச்செம் பொன்வரைபோல்
நின்றா னிறையு மறிவுங் கலங்கி நிலைதளரும்
என்றாற் றெருட்டவல் லாரினி யாரிவ் விருநிலத்தே.' (௯௨)

[இயல் இடம் கேட்டல்]

இவ்வகை சிந்தித்து, 'அவனை இடனன்றிக் கழறினேன், என் பாக்கியம்பிற, கழற்றெதிர் மறுத்துச் சொல்வானாயிற்று ;

சொல்லாதுஇறந்துபட்டா னெனினும் செய்யலாவதில்லை; பெரியதோர் இழுக்கம் செய்தேன் என ஆற்றாயினன். ஆற்றாயினனது ஆற்றாமை ஆற்றுவதொன்றனைப் பற்றும்; 'யான் இறந்துபட்டவிடத்து இவனை இஃது எய்துவிக்கல் ஆகாது; யான் உளனாவதே பொருள்' என இறந்துபடானாய் நின்று, 'எவ்விடத்து? எத்தன்மைத்து? நின்றாற் காணப்பட்ட உரு' என்னும். அதற்குச் செய்யுள் :

'வல்லிச் சிறுமருங் குற்பெருந் தோண்மட வார்வடிக்கண்
புல்லிப் பிரிந்தறி யாதமந் தாரத்தெந் கோன்புனனாட்
டல்லித் தடந்தா மரைமல ரோவன் றண்ணளியார்
கொல்லிக் குடவரை யோவண்ணல் கண்டதக் கொம்பினையே.'()

'கண்டார் மகிழுங் கடிகமழ் தாமரை யோகடையல்
விண்டார் விழுநிதிக் குப்பையும் வேழக் குழாமும்வென்று
கொண்டான் மழைதவழ் கொல்லிக் குடவரை யோவுரைநின்
ஒண்டா ரகல மெலிவித்த மாத ருறைவிடமே.' (௩௪)

[இயல் இடம் கூறல்]

என்பது கேட்டுக், கோடையால் தெறப்பட்டு வாடி நின்ற சந்தனமரம் மழைபெற்றுத் தளிர்த்தாற்போலப், பெரியதோர் கழியுவகை மீதூர அவனை எய்தினனேபோல, 'இன்னவிடத்து இத்தன்மைத்து என்றாற் காணப்பட்ட உரு' என்னும். அதற்குச் செய்யுள் :

'அடிவண்ணந் தாமரை யாடர வல்கு லரத்தமங்கை [கரும்பின்
கொடிவண்ண நுண்ணிடை கொவ்வைசெவ் வாய்கொங்கை கோங்
படிவண்ணஞ் செங்கோற் பராங்குசன் கொல்லிப் பனிவரைவாய்
வடிவண்ண வேற்கண்ணி னாலென்னை வாட்டிய வாணுதற்கே.' ()

'திருமா முகந்திங்கள் செங்கய லுண்கண்செம் பொற்சுணங்கேர்
வருமா முலைமணிச் செப்பிணை வானவன் கானமுன்னக்
குருமா நெடுமதிற் கோட்டாற் றரண்கொண்ட தென்னன்கன்னிப்
பெருமான் வரோதயன் கொல்லியஞ் சாரலப் பெண்கொடிக்கே.'()

கடித்தடம் விண்ட கமல முகங்கம லத்தரும்பே
பொடித்தடங் காமுலை பூலந்தைத் தெம்மன்னர் பூவழிய
இடித்தடங் காவுரு மேந்திய கோன்கொல்லி யீர்ம்பொழில்வாய்
வடித்தடக் கண்மல ராலென்னை வாட்டிய வாணுதற்கே.'(௩௭)

'நிணங்கொள் புலாலுணங்க னின்றுபுள் ளோப்புத றலைக்கீடாகக்
கணங்கொள்வண் டார்த்துலாங் கன்னி நறுஞாழல் கையிலேந்தி
மணங்கமழ் பூங்கானன் மன்னிமற் றாண்டோர்
அணங்குறையு மென்பதறியே னறிவேனே லடையேன் மன்னோ.'

(சிலப்பதிகாரம், கானல்வரி - ௧.)

இவ்வாறு உணர்த்தப்பட்ட பாங்கன், 'நீ இனையையாகல் ; என்னின் ஆவது உண்டேற் காண்பல்' என்று தலைமகனை ஆற்றுவித்து, அவன் சொன்ன இடம் நோக்கிச் செல்வானாவது. இது தலைமகன் நிலைமை.

இனித், தலைமகளது நிலைமை : பிற்றைஞான்று தன் ஆய வெள்ளத்தோடும் வந்து, தான் விளையாடும் இடம் புகுதலுடையாள், நெருநலைநாளால், "நின்னிற் பிரியேன் பிரியின் ஆற்றேன்" என்று சொல்லினான் ஆயத்துள்ளே வருவான் கொல்லோ!' என்னும் பெருநாணினானும், 'ஆற்றாமையான் இறந்துபட்டான் சொல்லோ!' என்னும் அச்சத்தினானும் மீதூரப்பட்டுத் தன் தன்மையளன்றித் தன் ஆய வெள்ளம் புடைபெயருமாறு புடைபெயர்ந்து வருகின்றாள், நெருநலை நாளால் தலைமகனை வழிபட்ட இடம் எதிர்ப்பட்டுக், தலைமகனைக் கண்டாளேபோல் நின்றாள். என்னை, இனியாரொடு தலைப்பெய்த இடம் காண்டலும் அவ்வினியாரைக் கண்டாலே போல்வது உலகத்துத் தன்மை. அவ்வாறு நிற்ப, ஆயங்களும் நெருநலைநாளாற் பிரிந்தாற்போலத், தழை விழைதக்கன தொடுத்தும் என்றும், கண்ணி தண்ணறு நாற்றத்தன செய்தும் என்றும், போது மேதக்கன கொய்தும் என்றும், இவ்வாறு விளையாட்டு விருப்பினாற் பிரியும். பிரியநின்றாள், எப்பெற்றி நின்றாளோ எனின், ஆயத்துள்ளே வருவான் கொல்லோ என்னும் நாண் நீங்கிற்று ; என்னை, ஆயங்கள் நீங்கினமையான். இனி, இறந்துபட்டான் கொல்லோ என்னும் அச்சத்தினான் மீதூரப்பட்டு நின்றாள். நின்ற நிலைமைக்கண் பாங்கன் சென்று, அவள் தன்னைக் காணாமைத், தான் அவளைக் காண்பதோர் அண்மைக்கண் காணும். கண்டு, 'இவ்விடமே அவனாற் காணப்பட்ட இடமும், இவ்வுருவே அவனாற் காணப்பட்ட உருவும்' எனத் துணியும். அதற்குச் செய்யுள் :

[குறிவழிக் காண்டல்]

'தண்டா தலர்கண்ணி யண்ணறன் னுள்ளந் தளர்வுசெய்த
வண்டார் குழலவ ளேயிவள் மானீர் மணற்றிமங்கை
விண்டா ருடற்குன்ற மேறி விழிகட் கழுதுறங்கக்
கண்டான் பொதியி லிதுவே யவன்சொன்ன கார்ப்புனமே.' (௬அ)

'சினமு மழிந்து செருவிடைத் தோற்றதெவ் வேந்தர்கள்போய்க்
கனவும் படிகடை யற்செற்ற வேந்தன் கருங்குழலார்
மனமும் வடிக்கண்ணு நங்குமந் தாரத்து மன்னன்கன்னிப்
புனமு மிதுவிது வேயவன் றான்கண்ட பூங்கொடியே.' (௬௧)

[தலைவனை வியந்துரைத்தல்]

என நினைந்து நின்று, 'இவ்வுருவினைக்கண்ட எம்பெருமான் ஆற்றுதற்குக் காரணம் என்னை? பெரியார்க்கே ஆகாதே! அரியன தாம் கற்று வல்லன் அவன் ஆகலான் ஆற்றினான்; பிறராயின் இறந்துபடுப. இறந்துபடாது என்காறும் வந்த இருந்துணைப் பெருந்தக்கானை யான் பெரியதோர் இடனன்றிக் கழறினேன்' என நினைக்கும். அதற்குச் செய்யுள் :

'இருநெடுந் தோளண்ண லேபெரி யான்வல்லைத் தேற்றதெவ்வர்
வருநெடுந் தானையை வாட்டிய கோன்கொல்லி மால்வரைவாய்த்
திருநெடும் பாவை யனையவள் செந்தா மரைமுகத்த
கருநெடுங் கண்கண்டு மாற்றிவர் தாமென்னைக் கண்ணுற்றதே.' ()

'பெரிய நிலைமை யவரே பெரியர் பிறையெயிற்றுக்
கரிய களிறுந்தி வந்தா ரவியக் க[illegible] யல்வென்ற
வரிய சிலைமன்னன் மான்[illegible] ாதயன் வஞ்சியன்னாள்
அரிய மலர்நெடுங் கண்கண்[illegible] ண்ணை லாற்றியதே.' (௪௧)

மற்று இவ்வகையும் சிந்திக்கும்

'துறைமேய் வலம்புரி தோய்ந்து மணலுழுத தோற்றமாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்டாது போர்க்குங்கானல்
நிறைமதி வாண்முகத்து நேர்கயற்கண் செய்த
உறைமலியுய்யா நோயூர்சுணங்கு மென்முலையே தீர்க்கும்போலும்.'
(சிலப்பதிகாரம், கானல்வரி - அ.)

எனவும்,

'மணங்கமழ் குழலிவள் வடிக்கண் செய்த மம்மர்வெந்நோய்
சுணங்கணி வனமுலை யல்லது தீர்க்கல்லா.'

எனவும், இவ்வகை நினைந்து ஆற்றானாயும், இறந்துபடானா-யினான், அவனை அஃது எய்துவிக்குந் திறம் என்னைகொல்லோ என்பதனான். ஆற்றியுளனாய்த் தலைமகனைச் சென்றெய்தி, 'யான் கண்ட இடம் மேதக்கதேகாண்' என்னும்; அதற்குச் செய்யுள் :

[கண்டமை கூறல்]

'இரவோ னன்ன கொழுநிறற் றூஅய்
நிலவோ ரன்ன வெண்மண லொழுகி
வண்டுந் தேனும் வரிக்கடைப் பிரசமுங்
கொண்டு புணர்நரம் பென்று முரன்று
விழைவு விடுத்த விழுமி யோரையும்
விழைவு தோற்று விக்கும் பண்பிற்று.'

'மின்னே ரொளிமுத்த வெண்மணன் மேல்விரை நாறுபுன்னைப்
பொன்னேர் புதுமலர் தாய்ப்பொறி வண்டு முரன்றுபுல்லா
மன்னை யழிய மணற்றிவென் றான்கன்னி வார்துறைவாய்த்
தன்னே ரிலாத தகைத்தின்றி யான்கண்ட தாழ்பொழிலே.' (சஉ)

'களிமன்னு வண்டுளர் கைதை வளாய்க்கண்டல் விண்டுதண்டேன்
துளிமன்னு வெண்மணற் பாயிரி தேசுட ரோன்மருமான்
அளிமன்னு செங்கோ[1]லதிரிய ஞற்றுக் குடியுள்வென்ற
ஒளிமன்னு முத்தக் குடைமன்னன் கன்னி யுயர்பொழிலே.'(சங)

'தேனுறை பூங்கண்ணிச் சேரலர் சேனை யழியச்செற்ற
ஊனுறை வைவே லுசிதன்றன் வையை யுயர்மணன்மேல்
கானுறை புன்னைப்பொன் னேர்மலர் சிந்திக் கடிகமழ்ந்து
வானுறை தேவரு மேவும் படித்தங்கொர் வார்பொழிலே.'(சச)

[மொழிபெற வருந்தல்]

என்று சொல்லி, 'நீயாகாதே இவ்வகை மேதக்கன எய்தற்-பாலாய்' எனத், தலைமகனும் அவ்விடம் நோக்கிச் செல்லும். சென்றவிடத்துத் தனியளாய் நின்ற தலைமகளை எதிர்ப்படும். எதிர்ப்படவே, தலைமகள் காணும். காணவே, ஆற்றாமையான் இறந்துபட்டான்கொல்லோ என்னும் அச்சம் நீங்கும். நீங்கத் தன் தன்மையள் ஆயினாள். தன்றன்மை என்பது நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் இவற்றொடுங் கூடி நிற்பது. அத் தன்மையளாய் நிற்பத், தலைமகளது குறிப்பின்றிச் சாரலாகா-

1. லிகைய.

மையின் ஆற்றானாயினான் தலைமகன். ஆற்றாமை என்பது பிறிது எவ்வுணர்வும் இன்றி அவ்வாற்றாமை தானே ஆவது. அவ்வாற்றாமை ஆற்றுவது ஒன்றனைப் பற்றும். ஆற்றுவது பிறிது இன்மையின் ஒருசொற் சொல்லும். என் சொல்லுமோ எனின், 'நின்னை யான் இப் பொழிலுறை தெய்வம் என ஐயுறுவல், அல்லையாயின் வாய்திறவாய், ஆவி சென்றால் பெயர்ப்பது அரிதன்றே' என்று இவ்வகைபோல்வன சொல்லும்; அதற்குச் செய்யுள் :

'மேவியொன் னாரைவெண் மாத்துவென் றான்கன்னி வீழ்துறை
தேவியென் றுநின்னை யானினைக் கின்றது சேயரிபாய் [வாய்த்
காவிவென் றுயகண் ணாயல்லை யேலொன்று கட்டுரையாய்
ஆவிசென் றாற்பெயர்ப் பாரினி யாரிவ் வகலிடத்தே.' (௪௫)

'திரையுறை வார்புனற் சேவூர்ச் செருமன்னர் சீரழித்த
உரையுறை தீந்தமிழ் வேந்த னுசிதனெண் பூம்பொதியில்
வரையுறை தெய்வமென் றேற்கல்லை யேலுன்றன் வாய்திறவாய்
விரையுறை கோதை யுயிர்செல்லின் யார்பிறர் மீட்பவரே.' (௪௬)

[மருங்கு அணைதல்]

என்றான் தலைமகனோ எனின், அல்லன்; தலைமகன் இடனாகப் பிறந்த ஆற்றாமை. அதுவும் தலைமகன் எனவேண்டும். அச்சொற் கேட்டலும், இறந்துபட்டான் எனக் கருதிக் கவன்று நோக்கினாள். நோக்கி, உண்மை கண்டாள்; கண்டாட்குக் கெடுத்துத் தேடும் நன்கலம் எடுத்துக் கொண்டாற் போலப் பெரியதோர் கழிபுவகை ஆயிற்று; ஆயின உவகை ஒரு மூரல் முறுவலைத் தோற்றிற்று; தோன்றவே, 'எம்பெருமான் முன்னர்ப் பெரியதோர் நாணின்மை செய்தேன்' என ஆற்றாளாயினாள். 'யான் முன் நிற்பவும் ஆற்றானாயினான் எம்பெருமான்; எனது ஆற்றாமை கண்டவிடத்து இறந்துபடும்பிற' என ஆற்றாமை நீங்கும். நீங்க, நாண் வந்து அடையும்; அடையவே, மறைவது காணாது, மாதுபடுநோக்கி தன் மணிக்காந்தள் மெல் விரலாற் போதுபுரை நெடுங்கண் புதைத்தாள். புதைப்ப, 'இனிச் சார ஆற்றும்' என நினைந்து, 'நின் கருநெடுங்கண் புதைத்தது இவற்குப் பெரியதோர் ஆற்றாமையைச் செய்யுமென்-

ருகாதே? அவற்றின் பரத்தனவோ, சுரும்புடைக் கோதை, நின் கரும்புடைத்தோள்?' என்னும்; அதற்குச் செய்யுள் :

'அரும்புடைத் தொங்கற்செங் கோலரி கேசரி கூடலன்ன
சுரும்புடைக் கோதைநல் லாயிவற் குத்துயர் செய்யுமென்றுன்
பெரும்புடைக் கண்புதைத் தாய்புதைத் தாய்க்குநின் பேரொளிசேர்
கரும்புடைத் தோளுமன் றேவென துள்ளங் கலக்கினவே.' (௪௭)

'தேந்தண் பொழிலணி சேயூர்த் திருந்தார் திறலழித்த
வேந்தன் விசாரிதன் றெவ்வரைப் போன்மெலி விக்குமென்றுன்
பூந்தடங் கண்புதைத் தாய்புதைத் தாய்க்குன் பொருவில்செங்கேழ்க்
காந்தள் விரலுமன் றேவெம்மை யுள்ளங் கலக்கினவே.' (௪௮)

'சொல்லிற் சொல்லெதிர் கொள்ளா யாழநின்
திருமுக மிறைஞ்சி நாணுதி கதுமெனக்
காமங் கைம்மிகிற் றாங்குத லெளிதோ
கொடுங்கே ழிரும்புற நடுங்கக் குத்திப்
புலிவிளை யாடிய புலவுநாறு வேழத்தின்
தலைமருப் பேய்ப்பக் கடைமணி சிவந்தநின்
கண்ணே கதுவ வல்ல நண்ணார்
அரண்டலை மதில ராகவு முரசுகொண்
டோம்பரண் கடந்த வடுபோர்ச் செழியன்
பெரும்பெயர்க் கூட லன்னநின்
கரும்புடைத் தோளு முடையவா லணங்கே.' (நற்றிணை - ௩௯)

என்பது சொல்லி, குழலும் கோதையும் திருத்துவானுகச்சாரும். இது பாங்கற் கூட்டம் ஆமாறு.

[இடந்தலைப்பாடு]

இனிப் பாங்கிலன் தமியோன் இடந்தலைப்படுமாறு : 'யான் இவளை எய்நிற்று விதியானே; இன்னும் அவ்விதி கைதருமேற் காண்பல்' எனப் பாங்கற்குச் சொல்லாதே தான் முன் எதிர்ப்பட்ட இடம் நோக்கிச் செல்லும்; அதற்குச் செய்யுள் :

[பொழிலிடைச் சேறல்]

'ஆமா றறிபவர் யாரே விதியையந் தீந்தமிழ்நர்
கோமான் குலமன்னன் கோனெடு மாறன்கொல் லிச்சிலம்பில்
ஏமாண் சிலைநுத லேழைமுன் னேயெதிர்ப் பட்டணைந்த
ஆமா ணிரும்பொழி லேயின்னும் யான்சென்று துன்னுவனே.'()

'பெரும்பான் மையுமறி தற்கரி தாம்விதி பேணிநில்லாப்
பொரும்பா ரரசரைப் பூலந்தை வாட்டிய கோன்பொதியிற்
கரும்பார் மொழிமட மாதரைக் கண்ணுற்று முன்னணைந்த
சுரும்பா ரிரும்பொழி லேயின்னும் யான்சென்று துன்னுவனே.'()

[பொழில்கண்டு உவத்தல்]

என நெருநல்நாளால் அவளைக் கண்ணுற்ற பொழிலே புக்கான். புக்காற்கு, அப்பொழில் பெரியதோர் சார்வாயிற்றாக, ஆற்றாமை நீங்கினான். என்னை, இனியாரொடு தலைப்பெய்த இடங்கண்டாலும் அவ்வினியாரைக் கண்டாலே போலும் என்ப; அதற்குச் செய்யுள் :

'துனிதா னகலமண் காத்துத் தொடுபொறி யாயசெண்டை
பனிதாழ் வடவரை மேல்வைத்த பஞ்சவன் பாழிவென்ற
குனிதாழ் சிலைமன்னன் கூடலன் னாளது கூடலைப்போல்
இனிதா யெனதுள்ள மெல்லாங் குளிர்வித்த தீம்பொழிலே.' (௯க)

'தேர்மன்னு தானை பரப்பித்தென் சேயூர்ச் செருமலைந்த
போர்மன்னர் தம்மைப் புறங்கண்டு நாணிய பூங்கழற்கால்
ஆர்மன்னு வேலரி கேசரி யந்தண் புகாரனைய
ஏர்மன்னு கோதையைப் போலினி தாயிற்றிவ் வீர்ம்பொழிலே.' ()

என்று, முன் பாங்கற் கூட்டத்துச் சொன்னவாறே நின்ற தலைமகளை ஆங்குச் சொன்னவாறே சென்று தலைமகன் புணர்வது. இது பாங்கிலன் தமியோள் இடந்தலைப்படுமாறு.

பாங்கற் கூட்டம் நிகழின், இடந்தலைப்பாடு நிகழாது; இடந்தலைப்பாடு நிகழின், பாங்கற் கூட்டம் நிகழாது; என்னை, அத்துணை எளியள் அல்லள் ஆகலான். அஃதே யெனின், 'பாங்கிலன் தமியோள் இடந்தலைப்படலும் பாங்கனோிற் குறி தலைப்பெய்தலும்' என்று எழுதற்பாற்று இச்சூத்திரம்; என்னை, இடந்தலைப்பாடு தெய்வப்புணர்ச்சியோடு ஒக்கும் ஆகலான். அஃதே, அங்ஙனம் சொன்னானேயெனினும் மொழி மாற்றிக் கொள்க என்பது; அது பொருந்தாது. மொழி மாற்றுதல் என்பது, செய்யுள் கிடந்தவாறு செய்யலாகாதவழிச் செய்வது. அவ்வாறு செய்யுஞ் சூத்திரம் இனியதாய்க் கிடப்ப மொழி மாற்றுச் சூத்திரமாகச் செய்யல் வேண்டுமோ என்றாற்குப்

பெரும்பான்மையும் பாங்கனான் ஆம் என்பது சிந்திக்கும்; சிறுபான்மை விதியினான் ஆம் என்பது சிந்திக்கும். ஆகலான், அவன் சிந்தித்தவாற்றானே சூத்திரஞ் செய்யப்பட்டது; மொழி மாற்றுச் சூத்திரம் அன்று என்பது. உலகத்தோர் இடுக்கணுற்றால் விதியானே தீரும் என்று இரார், முன்னம் தீர்த்தற்குச் சுற்றத்தாரையும் நாட்டாரையும் நினைப்பர்; ஆகலானும் அவ்வாறே சொல்லப்பட்டது. அஃதேயெனின், புறத்துயாரானும் உணர்ந்தார் உளர் என்பது உணர்ந்த ஞான்று இவள் இறந்துபடும் என்னும் கருத்துடையான், பிற்றைஞான்றே சென்று பாங்கற்கு உணர்த்தற்பாலனே எனின், குற்றம் குணம் என்பது தெருளாது உணர்த்தும் என்னும் ஒருவன். அது பொருந்தாது; அங்ஙனம் தெருளாது உணர்த்தின் பாங்கற்கே உணர்த்தக்கடவனோ வழிப்போவார்க்கு உணர்த்த அமையாதோ என்பது. மற்றென்னோ எனின், தான் உணர்ந்தானன்றே இவ்வொழுக்கத்தினை! தான் உணர்ந்ததனோடு ஒக்குமன்றே இவன் உணர்ந்தது! அவனைத் தன்னின் வேறல்லன் என்று கருதினமையான் அமையும்.

இனிப் பாங்கனாற் குறிதலைப்பெய்தலும் என்று ஒருமைப்படச் சூத்திரஞ் செய்யாது, 'பாங்கினோரின்' என்று பன்மைப்படக்கூறியது எற்றிற்கு; அவன் ஒருவனல்லனோ எனின், பாங்கன் பார்ப்பானாகலின் பன்மை வாசகத்தாற் சொன்னார் என்பது அல்லதூஉம், இருமுதுகுரவராலும் இவனை எம்போலக் கொண்டு ஒழுகு என்று தலைமகற்குக் காட்டிக் கொடுக்கப்பட்டான் பாங்கன் என்பதூஉம், நீயும் எம்போலக் கொண்டு ஒழுகுவாய் என்று தலைமகனைப் பாங்கற்குக் காட்டிக் கொடுக்கப்பட்டான் என்பதூஉம் போதரல்வேண்டி இவ்வாறு பன்மைப்படச் சொன்னார் என்பது. அஃதேயெனின், இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பிற்றைஞான்று இவள் வேறுபாடு கண்டு தாய் இற்செறிக்கில் என் செய்யுமோ எனின், பார்ப்பார் சான்றோரை முன்னிட்டு அருங்கலங்களோடு பாங்கன்சென்று வரைந்து எய்துவிக்கும். அங்ஙனம் கிடந்ததே விதி என்னின், அன்று; இவ்வாற்றாற் புணர்தல் முறைமையாக்கும் விதி எனில், தாய்க்குப் புலனாகாமைக்கொள்ளும் என்பது. அஃதே

யெனின், ஆயம் கழிக்கானலிடையே கொண்டு புகுதாது மற்றோர் கானலிடமே கொண்டுபுக்கவிடத்துத் தலைமகன் குறிபிழைப்பும், பாங்கன் அங்குச் சென்ற செலவின் பிழைப்பும் இவையெல்லாந் தங்கும்பிற எனின், அதுவன்று; அவ்வாறு படினும் வரைந்து புகும்.

அதுவன்றிப் பிற்றைஞான்று இக்கூட்டம் நிகழ்விப்பான் நின்றவிதி பிறிதோர் கானலிடங்கொண்டு புக உள்ளம் பிறப்பிக்குமோ என்பது. அஃதேயெனின், இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த பிற்றைஞான்று பாங்கன் தலைமகனைக் கண்டு, 'எற்றினான் ஆயிற்று நினக்கு இவ் வேறுபாடு?' என்று வினவினவாறு போல, அன்றேயானும் பிற்றைஞான்றேயானும் தலைமகளது வேறுபாடு கண்டு, 'நினக்கு இஃது எற்றினான் ஆயிற்று?' என்று தோழி வினவாமைக்குக் காரணம் என்னையோ எனின், தலைமகளது வேறுபாட்டை விதி தோழிக்குப் புலனாகாமைக் கொள்ளும் என்பது. ஆயின் தலைமகன் வேறுபாட்டையும் பாங்கற்குப் புலனாகாமைக் கொள்ளற்பாற்று, அஃது அன்றுதற்குக் காரணங் கூறற்பாற்று எனின், விதிக்குக் காரணம் கூறற்பாற்றன்று என்பதும் ஒன்று; காரணங் கூறினும் பாங்கற்குப் புலனாயதனால் ஆய பயனுண்டு; அக்கூட்டம் பாங்கன் அறிந்து வினவ முடியும். தோழி தலைமகண்மாட்டு வேறுபாடு கண்டறிந்து வினவப் பாங்கற்கூட்டம் முடியாது: தோழி தன்னால் ஆவதும் இல்லை. இது காரணம் என்பது. அஃதேயெனின், 'ஆங்கவிரண்டே தலைப்பெயல்' என அமையும், 'மரபு' என்றது எற்றிற்கோ எனின், தலைப்பெயற்கு இலக்கணம் என்றவாறு. மரபு எனினும் இலக்கணம் எனினும் எல்லாம் ஒருபொருட் பன்மொழி என்றவாறு. (௫.)

[௪]

**அவ்வியல் பல்லது கூட்டக் கூடல்**
**எவ்விடத் தானுங் களவிற் கில்லை.**

என்பது என்னுதலிற்றோ எனின், இந்நூலகத்துக் களவினது இலக்கணத்தையும் கற்பினது இலக்கணத்தையும் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

சூத்திரக் கிடக்கை நான்கு வகைப்படும்: ஆற்றொழுக்கு, சிங்கநோக்கு, தவளைப்பாய்த்து, பருந்துவீழ்க்காடு என.

அவற்றுள், ஆற்றொழுக்கு என்னும் சூத்திரக் கிடக்கை, ஆற்றுநீர் தொடர்பறாது ஒழுகுமாறுபோலச் சூத்திரங்களும் தம்முள் இயைபுபட ஒழுகுவது.

சிங்கநோக்கு என்பது, சிங்கம் நோக்குமிடத்து முன்னையாரையும் பின்னையாரையும் நோக்குவதுபோல, இறந்ததனோடும் எதிர்வதனோடும் இயைபுபடக் கிடப்பது.

தவளைப் பாய்த்து என்பது, தவளை பாய்கின்றுழி இடை நிலங்கிடப்பப் பாய்வதுபோலச் சூத்திரம் இடையிட்டுப்போய் இயைபு கொள்வது.

பருந்தின் வீழ்க்காடு என்பது, பருந்து வீழ்கின்றுழி நடுவே வீழ்ந்து தான் கருதினபொருள் கொண்டுபோம், அதுபோல இதுவும் தான் கருதி முடிக்கின்ற பொருளை முடித்துப்போம் இயைபின்றியே என்பது.

இஃது அவற்றுட் சிங்கநோக்கு என்பது. என்னை காரணமெனின், இறந்த பாங்கற்கூட்டத்தினையும் நோக்கி, வருகின்ற தோழியிற்கூட்டத்தினையும் கற்பினையும் எல்லாம் நோக்கினமையின் என்பது.

இதன் பொருள்: அவ்வியல்பு அல்லது என்பது — மேற் சொல்லப்பட்ட இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த இயல்பல்லது என்றவாறு; கூட்டக்கூடல் என்பது — ஒருவர் இடை நின்று புணர்ப்பார் உண்டாகப் புணர்தல் என்றவாறு; எவ்விடத்தானும் களவிற்கு இல்லை என்பது — எந்நேரத்துக்கண்ணுங் களவெனப்பட்ட ஒழுக்கத்திற்கு இல்லை என்றவாறு.

எனவே, உலகினுள் ஒருவனோடு ஒருத்தியிடை நிகழும் ஒழுக்கமன்று, உலகினுட் கூட்டவும் நிகழ்ந்து, கூட்டாமையும் நிகழ்தல் உடைமையால்; இது புலவரால் நாட்டப்பட்ட ஒழுக்கம் என்பது அறிவிக்கப்பட்டது என்பது.

'கூட்டக் கூடல் எவ்விடத்தானும் களவிற்கில்லை' எனவே, கூட்டாமைக்கூடல் கற்பிற்கில்லை என்பதாம்.

தலைமகன் உலாப்போயின இடத்துப் பரத்தைமாட்டுப் பிரிந்தான் என்று கருதி ஒரு சிவப்பு உண்டாம். அச் சிவப்பு நீக்கி வாயில்கள் கூட்டவே கூடும் என்பது. அஃதேயெனின், இஃதன்றே [1]நெடுந்தோகைப் பாட்டினுள் கூர்முண் முள்ளி கூட்டாமற் கூடிற்று எனின்? அதுவும் கூட்டவே கூடிற்று. எவ்வாயிலாற் கூடினனோ எனின், ஆற்றாமைவாயிலாற் கூடினனும்; கூடினவாறு அதனகத்துக் கண்டுகொள்க. அஃதேயெனின், களவினிற், 'கூட்டக்கூடலில்லை' என்றது எற்றிற்கு? அதுவும் ஆற்றாமை கூட்டக் கூடுப என்னுமோ எனின், அங்கு ஆற்றாமை கூட்டுமேயெனினும் வாயில் இலக்கணமின்று; இங்கு வாயில் இலக்கணமுடைத்து. என்னை, வாயில்களும் அவளது பொறுமையை நீக்குவதன்றே செய்வது. இதுவும் அவளது பொறுமையை நீக்கினமையின் அமையாதோ எனின், அமையாது; இங்கு வாயிலிலக்கணம் உடைத்தாகலின் அமையும் என்பது.

'அவ்வியல்பு அல்லது கூட்டக்கூடல் களவிற்கு இல்லை' என அமையும், 'எவ்விடத்தானும்' என்றது எற்றிற்கோ எனின், உணர்த்த உணர்தல் ஓரிடத்து உண்டு என்றற்குச் சொல்லினார். யார் உணர்த்த யார் உணர்பவோ எனின், தோழி உணர்ந்தமை தலைமகன் உணர்த்தத் தலைமகள் உணரும் என்பது. அஃது ஆமாறு :

பகற்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகன் புணர்ச்சியது இறுதிக்கண் ஒருநாள் தலைமகளைக் கோலஞ்செய்தான். செய்ய, அவள் இறப்ப நாணினள். நாணத், தலைமகன் கருதுவான் : 'யான் செய்கின்றது இயற்கைக் கோலம் அல்லது போலும் என்றும் இவள் வேறுபடுகின்றது' என உணர்ந்து, அவளை ஆற்றுவித்தற்கு, 'நின் தோழி செய்யுமாறே கோலஞ் செய்தேன்' எனச் சொல்லும். சொல்ல, ஒக்கும்; 'என் தோழியோடு தலைப்பெய்துடையர்போலும்' என உணர்வாள் ஆவது.

---

1 - அகநானூறு 26.

அவ்வாறு உணர்ந்தாள் பெருநாணினள் ஆகலான் இறந்துபடாளோ எனின், இறந்துபடாள்; இவளைத் தன்னின் வேறன்றிக் கருதும் ஆகலின். வேறன்றிக் கருதும் எனின், இவ்வொழுக்கந்தன்னை உணர்ந்த அமையாதோ எனின், உணர்ந்தாள்; 'யான் காவற் குற்றப்பட்டேன்' எனத் தோழி கவலுமாகலான். தலைமகன் உணர்த்தியதனாற் பயன் என்னோ எனின், நெடுங் காலம் ஒழுகக்கருதுவான், 'யான் பிரிந்தபோது இவளை ஆற்றுவித்துக்கொண்டு இருக்கும்' என்பதனானும், 'ஒருநாள் இதனையறியும், அறிந்தக்கால் நதுமென ஆற்றுளாங்கொல்லோ' என்பதனானும், இவ்வாறு உணர்த்தல் ஆற்றுதற்குக் காரணமாம் என்பதனானும் உணர்த்தும்.

இது பொருந்தாது என்ப ஒரு சாரார்; என்னை, பகற் குறிக்கண் இது நிகழுந்துணையும் நடவாது; இவ்வகை வந்த சான்றோர் செய்யுளும் இல்லை. இதனானே, 'எவ்விடத்தானும்' என்பது, நன்று மறுத்தற்குச் சொல்லப்பட்டது; மிகையன்று என்பது. 'கூட்டக்கூட்டல் களவிற்கு இல்லை' என்றிரால், பாங்கற் கூட்டம், தோழியிற்கூட்டம் என்று பேரிட்டது எற்றிற்கோ எனின், அவர் துணையாயினமையின் அவ்வாறு சொல்லப்பட்டது. துணையாயினாரைக் கூட்டினார் என்றாமோ எனின், என்றாம்; கூடும் இருவரும் அக்கருத்தினர் அல்லராகலான் என்பது. (ச)

[ரு]

புணர்ந்த பின்றை யாங்ஙன மொழுகாது
பணிந்த மொழியாற் றோழி தேளத்
திரந்துகுறை யுறுதலுங் கிழவோன் மேற்றே.

என்பது என் நுதலிற்றோ எனின், பாங்கனானுதல், தமியாளை இடத்து எதிர்ப்பட்டாதல் புணர்ந்த தலைமகன், அதன் பின்னை தெருண்டு வரைதல் தலை; அல்லாவிடின், இவ்வாறு ஒழுகும் என்று, அவன் ஒழுகுந் திறம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: புணர்ந்த பின்றை என்பது — பாங்கனானும் தமியாளை இடத்து எதிர்ப்பட்டானும் புணர்ந்த பின்றை

என்றவாறு : ஆங்ஙனம் ஒழுகாது என்பது — பிறரைஞான்றும் அப்பெற்றியே ஒழுகாது என்றவாறு : பணிந்த மொழியான் என்பது — இழிந்த சொற்களான் என்றவாறு : இழிந்த சொல் என்பது, வாய்பாட்டு இன்னுமை நோக்கிப் பணிந்த மொழி எனப்பட்டது ; பணிந்த மொழியன்றே, 'இத்தழை நல்ல, இக் கண்ணி நல்ல' என்று இங்ஙனம் கையுறை பாராட்டிச் சென்று நிற்றல் ; தனக்குத் தகாது, இழிந்தார்க்கன்றே அஃது உரியது என்பது ; தோழி தேஎத்து என்பது — தோழிமாட்டு என்றவாறு; இரந்து குறையுறுதலும் கிழவோன் மேற்றே என்பது — இரத்தலும் குறையுறுதலும் செய்து நிற்றல் தலைமகற்கு உரித்து என்றவாறு.

இரத்தல் என்பது, குறையுடையார் செய்யும் செய்கை செய்து ஒழுகுவது.

குறையுறுதல் என்பது, இக்குறை இன்றியமையான் என்பதுபடப் பசைந்து ஒழுகுதல் ; அஃதேயெனின், இவளால் இக்குறை முடியுமென்று இரக்குமோ, முடியாதென்று இரக்குமோ எனின், முடியுமென்று இரக்குமேயெனின், இவளை இகழ்ந்து மதித்தானும் : தோழி என்பாள் குற்றேவல் மகள், அவளால் எய்தலாம் என்று கருதினமையான் என்பது; இகழ்ந்து மதிப்பவே, 'அருமையும் பெருமையும் காவலுமுடையள் இவளை எத்திறத்தானும் எய்துவது அரிது' என்று கருதினான் என்பதனோடு மாறுகொள்ளும் என்பது.

இனி, முடியாதென்று இரக்குமே எனின், இரத்தலுானே பயமின்று ; ஒருவரால் ஒருகருமம் ஆகாமை அறிந்தே அவருழைச் சென்று அக் கருமத்திற்கு முயல்வார் நெறியறியாதாரன்றே என்பது.

மற்று என்னோ எனின், முடியும் முடியாது என்று சீர்தூக்கிக்கொண்டு இரப்பான் அல்லன் ; தனது ஆற்றாமை மீதூரப்பட்டு இரக்கும் என்பது. அஃதேயெனின், இவளால் முடியும் முடியாது என்று கருதானாகலான், பிறரானும் முடியும் முடியாது என்று கருதானாகல்வேண்டும்; ஆகலான், பிறரையும் இரக்க அமையாதோ எனின், என்றார்க்கு அஃதன்று ; இது

முடியுஞான்று இவளாலே முடிவதாகக் கிடந்ததாகலான், அவ்விதி இவளுழையே செல்லுமுள்ளம் பிறப்பிக்கும் என்பது. அஃதன்றே உலகத்தார்க்குப் பண்பின்வழியே ஊக்கம் நிகழும் என்பது.

இதனை எப்பெற்றி கருதுமோ இவள் எனின், ஐயப்பட்டு நிற்கும். 'இவன் ஒரு குறையுடையான்போலும், அக் குறை இன்றியமையான் ; அஃது என்மாட்டது என்று கருதுவேனாயின்,இறப்பவும் பெருந்தன்மையனாகலின் இறப்பவும் சிறியேனை வேண்டுங்கருமம் இலனன்றே! அதனால், என்கண்ணது எனவும் ஆகாது. யார் அறிவார், சிறியராற் பெரியார் முடிக்குங் கருமங்களும் உள ; அதனால் தன்கண்ணதும் ஐயமேயாம்' என்பது.

'இனி, எம்பெருமாட்டிகண்ணது என்று கருதுவேனாயின், அவள் ஒருவராற் நட்டவும் சொல்லவும்படும் தன்மையள் அல்லளாகலான் அவள்கண்ணது எனவும் ஆகாது. யார் அறிவார், அவர்தாமும் அவளினையும் பெருந் தன்மையராகலான் அவள்கண்ணது எனவும் ஐயமேயாம்.'

'இனி, இவ்வாயத்துள் ஒருவர்கண்ணதேகொல்லோ எனவும் ஐயமேயாம்' பேராராய்ச்சியள் ஆகலான் கதுமெனத் துணியாளன்றே ஒன்றன் திறத்து.

'இனி, அருள் காரணமாகக்கொல்லோ இத் தழையும் கண்ணியும் கொண்டுவருவது எனவும் ஆகாது. ஆற்றாத இயல்பினனாய் வரும் ஆகலான், அதன்கண்ணும் ஐயமேயாம்' என்பது. அதற்குச் செய்யுள் :

'முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்.' (இறையனார் - எ.)

என்னும் சூத்திரத்துட் காட்டுதும்.

அஃதேயெனின், இவளை அவட்குச் சிறந்தமை அவன் அறியுமாறு என்னை ? பிறர் சொல்லினாரும் இல்லையாலோ எனின் ; அறிந்தானன்றே, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர்த் தன்னை அவள் காணாமைத் தான் அவளைக் காண்பதோர் அணிமைக்கண் நின்றானாக, மற்றையாரெல்லாம் தலைமகட்குச்

செய்யும் வழிபாடும், இவள் விசேடத்தாற் செய்யும் வழிபாடும், எல்லார்க்கும் தலைமகள் அருளிச்செய்யும் அருளிச்செய்கையும், இவட்கு விசேடத்தாற் செய்யும் அருளிச்செய்கையும் கண்டமையான், 'இவளாம் இவட்குச் சிறந்தாள்; இதுவும் எனக்கோர் சார்பு' என்பதனை உணர்ந்தான். உணர்ந்தமையான், அவளுழையே செல்லும் என்பது. அஃதேயெனின். அவளுழைச் செல்கின்ற ஆயங்கள் ஐயுறுவோ எனின், எங்ஙனம் ஐயுறும்; தழையும் கண்ணியும் கோடற்பொருட்டாக வேறோரிடத்துத் தனியளாய் நின்ற நிலைமைக்கண் செல்லும் என்பது. அவள் இன்னணம் தனியளாய் நிற்பது அறிந்துசெல்லுமோ எனின், செல்லான்; விதியே கொண்டுசென்று தலைப்படுவிக்கும் என்பது.

அஃதேயெனின், 'இரத்தல் கிழவோன் மேற்றே' என்னாது, 'குறையுறுதல்' என்றது எற்றிற்கோ எனின், இரத்தல் என்பது, குறையுடையார் செய்யுஞ் செய்கைசெய்து ஒழுகுவது; குறையுறுதல் என்பது, இக்குறை இன்றியமையான் என்பது படப் பசைந்து ஒழுகுவது. அஃதேயெனின், 'இரந்து குறையுறுதல்' என அமையாதோ, 'இரந்து குறையுறுதலும்' என்று உம்மைகொடுத்தது எற்றிற்கோ எனின், தெருண்டு வரைதல் சிறப்புடைத்து; தெருளானாயின், இவ்வாறு ஒழுக என்றற்குச் சொல்லப்பட்டது.

இனி, ஒரு சாரார் சொல்லுவது: 'புணர்ந்த பின்றை' என்பது — இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தபின்றை என்றவாறு; 'ஆங்ஙனம் ஒழுகாது' என்பது — பாங்கனுழைனும் தமியாளை எதிர்ப்பட்டானும் புணராது, தோழியை இரந்து பின்னிற்றற்கண்ணே முயலும் என்பாரும் உளர். அது பொருந்தாது; என்னை காரணமெனின், தன் பாங்கன் தனக்குச் சிறந்ததுணை, அவள் பாங்காய தோழி சிறக்குமாறு உண்டோ என்பதனான். அப் பொழுது அவளை நினையான், தன் பாங்கன்றனையே நினைக்கும் என்பது. (௫)

[௬]

இரந்துகுறை யுருது கிழவியுந் தோழியும்
ஒருங்கு தலைப்பெய்த செவ்வி நோக்கிப்

**பதியும் பெயரும் பிறவும் வினாஅய்ப்**
**புதுவோன் போலப் பொருந்துபு கிளந்து**
**மதியுடம் படுத்தற்கு முரிய னென்ப.**

என்பது என்னுதலிற்றோ எனின், மதியுடம்படுக்குந் திறம் இது என்பது உணர்த்துதல் நுதலிற்று. மேற் சூத்திரத்தினோடு இயைபு என்னையோ எனின், மேல் பணிந்த மொழியால் தோழியை இரந்து பின்னிற்கும் எனப்பட்டது; அங்ஙனம் இரந்து பின்னின்ற இடத்து, 'எத்திறத்துக்கொல்லோ இவனுடைய குறை' என்று ஐயப்பட்டு நிற்பதல்லது, இன்னதென்று உணராளன்றே! உணராமையால், 'என் குறை இன்னது என்று அறிவித்து இரந்துபின்னிற்பென்' என்னும் கருத்தினால் இது செய்யும் என்பது இயைபு.

இதன் பொருள்: இரந்து குறையுறாது என்பது — இரந்துவைத்துக் குறையுறவு தோன்றாமை என்றவாறு; கிழவியும் தோழியும் என்பது — கிழவி எனப்படுவாள் தலைமகள், தோழி எனப்படுவாள் செவிலித்தாய் மகள், என்னை, 'தோழி தானே செவிலி மகளே' (தொல் - களவியல். ௩௪.) என்றாராகலின், அவ்விருவரும்; ஒருங்கு என்பது — ஓரிடத்தராதல்; தலைப்பெய்தல் என்பது — கூடியிருத்தல்; செவ்வி நோக்கி என்பது — அன்னதோர் பதநோக்கிச் சென்றுநிற்றல் என்றவாறு, அங்ஙனம் நிற்பாற்கு ஒருசொற்படுகால் முறைமை வேண்டும்; பதியும் பெயரும் பிறவும் வினாஅய் என்பது — பதிவினாதல் என்பது எவ்வூர் என்பது, பெயர் வினாதல் என்பது என்ன பெயர் என்பது, பிறவினாதல் என்பது, 'இங்கே சில மா போந்தன உளவே, இளையர் போந்தார் உளரோ, யானை போந்தன உளவோ' என்று இத்தொடக்கத்தன வினாதல் என்றவாறு. அதற்குச் செய்யுள் :

[பதியும் பெயரும் வினாதல்]

'நீரின் மலிந்தசெவ் வேனெடு மாறனெல் வேலியொன்னார்
போரின் மலிந்தவெங் தானை யுரங்கொண்ட கோன்பொதியிற்
காரின் மலிந்தபைம் பூம்புனங் காக்கின்ற காரிகையீர்
ஊரின் பெயருநும் பேரு மறிய வுரையின்களே.' (௬௩)

'நிதியின் கிழவ னிலமகள் கேள்வனெல் வேலியொன்னார்
கதியின் மலிந்தவெம் மாவுங் களிறுங் கவர்ந்துகொண்டான்
பொதியின் மணிவரைப் பூம்புனங் காக்கும் புனையிழையீர்
பதியின் பெயருநும் பேரு மறியப் பகர்மின்களே.' (௫௪)

'அறையார் கழன்மன்ன ராற்றக் குடியமர் சாய்ந்தழியக்
கறையா ரயில்கொண்ட கோன்கொல்லிக் கார்ப்புனங் காக்கின்ற
பிறையார் சிறுநுதற் பெண்ணா ரமிழ்தன்ன பெய்வளையீர் [வான்
மறையா துரைமி னெமக்குநும் பேரொடு வாழ்பதியே.' (௫௫)

'கறையின் மலிந்தசெவ் வேல்வலத் தாற்றென் கடையல்வென்ற
அறையுங் கழலரி கேசரி யந்தண் புகாரனைய
பிறையின் மலிந்த சிறுநுதற் பேரமர்க் கண்மடவீர்
உறையும் பதியுநும் பேரு மறிய வுரைமின்களே.' (௫௬)

'பிறவும்' என்றதனால், இவையுஞ் சொல்லிச் சென்று நிற்கும்; அவற்றிற்குச் செய்யுள் :

[வேழம் வினாதல்]

'வருமால் புயல்வண்கை மான்றேர் வரோதயன் மண்ணளந்த
திருமா லவன்வஞ்சி யன்னவஞ் சீறடிச் சேயிழையீர் [கட
கருமால் வரையன்ன தோற்றக் கருங்கைவெண் கோட்டுச்செங்
பொருமால் களிறொன்று போந்ததுண் டோநும் புனத்தயலே.'()

'முடியுடை வேந்தரு மும்மத யானையு மொய்யமருட்
பொடியிடை வீழத்தென் பூலந்தை வென்றான் புகாரனைய
வடியுடை வேனெடுங் கண்மட வீர்நுங்கள் வார்புனத்திற்
பிடியொடு போந்ததுண் டோவுரை யீரோர் பெருங்களிறே.' (௫௮)

[கலைமான் வினாதல்]

'சினமாண் கடற்படைச சேரலன் றென்னறை யாற்றழிந்து
மனமாண் பழியவை வேல்கொண்ட கோன்வையை நாடனைய
கனமாண் வனமுலைக் கையார் வரிவளைக் காரிகையீர்
இனமான் புகுந்தது வோவுரை யீர்நும் மிரும்புனத்தே. (௫௯)

'சிலைமாண் படைமன்னர் செந்நிலத் தோடச செருவிளைத்த
கொலைமா னயின்மன்னன் றென்புன னாடன்ன கோல்வளையா
இலைமாண் பகழியி னேவுண்டு தன்னினத் திற்பிரிந்தோர்
கலைமான் புகுந்ததுண் டோவுரை யீர்நுங்கள் கார்ப்புனத்தே. (௬௦)

'கண்ணுற் றெதிர்ந்தசெவ் வேந்தர் படக்கடை யற்கொடிமேல்
விண்ணுற்ற கோளுரு மேந்திய வேந்தன் வியன்பொதியிற்
பண்ணுற்ற தேமொழிப் பாவைநல் லீரோர் பகழிமூழ்கப்
புண்ணுற்ற மானென்று போந்ததுண் டோநும் புனத்தயலே. ()

[வழி வினாதல்]

'வெல்லுந் திறகினைந் தேற்றார் விழினுத்து விண்படரக் [ன்றேன்
கொல்லின் மலிந்தசெவ் வேல்கொண்ட கோன்கொல்லிச் சாரலி
புல்லும் பொழிலின வேங்கையின் கீழ்நின்ற பூங்குழலீர்
செல்லு நெறியறி யேனுரை யீர்நுஞ் சிறுகுடிக்கே.' (௬௨)

[மொழிபெறாது கூறல்]

'தன்னும் புரையு மழையுறு மேறுதன் றானைமுன்னால் [வாய்
துன்னுங் கொடிமிசை யேந்திய கோன்கொல்லிச் சூழ்பொழில்
மின்னுங் கதிரொளி வாண்முகத் தீரென் வினாவுரைத்தால்
மன்னுஞ் சுடர்மணி போதரு மோநுங்கள் வாயகத்தே.' (௬௩)

என்பன கொள்க.

புதுவோன்போல என்பது — எஞ்ஞான்றும் அந்நிலத்துச் சென்று அறியாதானும் அவரைக் கண்டறியாதானும் போல என்றவாறு; பொருந்துபு கிளந்து என்பது — அந்நிலத்திற்கும் அவரை வினாதற்கும் பொருந்துவன கிளந்து என்றவாறு; மதி உடம்படுத்தற்கும் உரியன் என்ப என்பது — மதி என்பது அறிவு: அவ்வறிவினை ஒருப்படுத்தற்கும் உரியன் என்றவாறு.

யார் அறிவையோ எனில், தோழியறிவை எனக் கொள்க. அவளது அறிவினை ஒருப்படுக்கும் எனவே, முன் கவர்ந்துநின்றது என்பது போந்தது. எங்ஙனம் கவர்ந்து நின்றதோ எனின், இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பிற்றை ஞான்றுட் கொண்டு கண்சிவந்து நுதல் வேறுபட்டுக் காட்டிற்று; 'இவட்கு இவ்வேறுபாடு தெய்வத்தினான் ஆயிற்றுக்கொல்லோ' எனவும், 'மக்களினான் ஆயிற்றுக்கொல்லோ' எனவும், இனி 'இவனும் அதற்கொண்டு தழையும் கண்ணியும் கொண்டு பின்னிலை முனியாது இரந்து பின்னிற்கின்றான், இவனுடைய குறை யார்மாட்டது கொல்லோ' எனவும் எனக்கொள்க. அங்ஙனம் கவர்ந்த தோழி 'இவள் வேறுபட்டது இவன்காரணம் போலும், இவன் இரந்து

பின்னிற்கின்றது இவள்காரணம் போலும்' என ஒருங்கு கண்ணி வேறாக வகுத்துணரும் என்பது. அதற்குச் செய்யுள் :

[இருவர்நினைவும் ஒருவழியுணர்தல்]

'விரையா டியகண்ணி வேந்தன் விசாரிதன் கொல்லிவிண்டோய்
வரையா டியபுனங் காவலு மானின் வழிவரவு
நிரையா டியகுழ லாட்கு மிவற்கு நினைப்பினில்லை
உரையா டலர்கண்ணி னுள்ளத் துள்ளது மொன்றுளதே.' (௩௬)

'பொருங்கண்ணி சூடிவர் தார்படப் பூலந்தைப் பொன்முடிமேல்
இருங்கண்ணி வாகை யணிந்தான் பொதியி லிரும்புனத்து
மருங்கண்ணி வந்த சிலம்பன்றன் கண்ணுமிவ் வாணுதலாள்
கருங்கண்ணுந் தம்மிற் கலந்ததுண் டாமிங்கோர் காரணமே.' ()

என இத் தொடக்கத்தன கொள்க. அஃதே யெனின், 'இரந்து குறையுறாது கிழவியும் தோழியும் தலைப்பெய்த செவ்விநோக்கி' என அமையாதோ? 'ஒருங்கு' என வேண்டியது என்னை? களவுகாலத்துத் தலைமகன் தேரொடும் ஒருங்கு செல்ல அமையும் என்றற்கு வைத்தார்; என்னை, சான்றோர் செய்யுள் அங்ஙனம் வந்ததாகலின். அது வருமாறு:

'நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாய்வாழி கடலோதம்
ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாய்மற் றெம்மோடு
தீர்ந்தாய்போற் றீர்ந்திலையால் வாழி கடலோதம்.'
(சிலப்பதிகாரம் - கானல்வரி, ௰௩)

என்று இத் தொடக்கத்தன கொள்க.

'மதியுடம் படுத்தற்கும் உரியன்' என்ற உம்மை யாதோ எனின், வரைந்து எய்துதல் மிக்கதே என்பது போதர ஆங்ஙனம் உரைத்தார். (௬)

[எ]

**மூன்றுற வுணர்தல் குறையுற வுணர்தல்**
**இருவரு முள்வழி யவன்வர வுணர்தலென்**
**றம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி.**

என்பது என்னுதலிற்றோ எனின், தோழி உணர்ச்சியைப், பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: முன்னுறவுணர்தல் என்பது — இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பிற்றைஞான்று அவள் கண்சிவப்பும் நுதல் வேறுபாடுங் [1] கண்டு கரவு நாடி உணர்வதாயிற்று என்றவாறு; எங்ஙனம் உணருமோ எனின், 'எம்பெருமாட்டிக்குப் பண்டைத் தன்மைத்தன்றால் இவ்வேறுபாடு, இஃது எற்றினான் ஆயிற்று, எனக்குச் சொல்லாய்' என்னும்; என, 'நெருநல் நின்னின் நீங்கி மேதக்கதோர் சுனைகண்டு ஆடினேன், நெடுங்காலமும் நின்றாடினேற்கு ஆயிற்று: ஆகாதே, கண்சிவப்பும் நுதல்வேறுபாடும்' என்னும்; 'அஃதேல், சுனையாடினோர்க் கெல்லாம் இக் காரிகைநீர்மை பெறலாமே யெனின், யானும் ஆடிக் காண்கேன்' என்னும். அதற்குச் செய்யுள் :

[சுனையியந்துரைத்தல்]

'சேர்மன்னு வாட்படை செந்நிலத் தோடச் செருவிளைத்த
போர்மன்னன் றென்னன் பொதியிற் புனமா மயில்புரையும்
ஏர்மன்னு காரிகை யெய்தலுண் டாமெனின் யானுநின்போல்
நீர்மன்னு நீல நெடுஞ்சுனை யாடுவ னேரிழையே.' (௬௬)

'புண்டா மருநிறத் துற்றுத்தென் பூலந்தைப் போர்மலைந்த
ஒண்டா ரரசர் குழாமுட னேயொளி வானடையக்
கண்டான் பொதியின் மயிலன்ன காரிகை யெய்தனின்போல்
உண்டா மெனிற்றையல் யானுஞ்சென் றாடுவ னொண்சுனையே.' ()

'பைபுண் மாலைப் பழுமரம் படரிய
நொவ்வுப்பறை வாவ ஞென்சிற கேய்க்கும்
மடிசெவிக் குழவி தழீஇப் பையாந்
திருகுகவுண் மடப்பிடி யெவ்வங் கூர
வெந்திற லாளி வெரீஇச் சந்தின்
பொரியரை பிளிறக் குத்தி வான்கேழ்
உருவ வெண்கோ டியக்கொண்டு கழியுங்
கடுங்கண் யானை காலுற வொற்றலிற்
கோவா வாரம் வீழ்ந்தெனக் குளிர்கொண்டு
பேஎ நாறுந் தாழ்நீர்ப் பனிச்சுனை

1 - கரவு முறைடி.

கோனேஎ ரெல்வளை தெளிர்ப்ப நின்போல்
யானு மாடிக் காண்கோ தோழி
வரைவயிறு கிழித்த நிழறிக நெடுவேல்
திகழ்பூண் முருகன் றீம்புன லலைவாய்க்
கமழ்பூம் புறவிற் கார்பெற்றுக் கலித்த
ஒண்பொறி மஞ்ஞை போல்வதோர்
கண்கவர் காரிகை பெறுதலுண் டெனினே.'

எனக் கேட்டுத் தலைசாய்த்து நிலங்கிளையாநிற்பப் புணர்ச்சி உண்மை அறிந்துகொள்வது.

அல்லதூஉம், அங்ஙனம் வேறுபட்ட வேறுபாடு கண்டு ஐயுற்று நின்றாள், அந்திவானகட்டுச் செங்கோட்டு மதர்வைக் குழவித் திங்களைக் கண்டு தான்தொழுது, 'நீயும் தொழுதுகாண்' என்னும். அதற்குச் செய்யுள் :

[பிறைதொழுகென்றல்]

'திருமா லகலஞ்செஞ் சார்தணிந் தன்னசெவ் வானகட்டுக்
கருமா மலர்க்கண் ணிகைதொழத் தோன்றின்று காண்வந்தொன்
செருமா லரசுகச் செந்நிலத் தட்டதென் றீந்தமிழ்நர் [ஞர்ச
பெருமான் றனது குலமுத லாய பிறைக்கொழுந்தே.' (சுஅ)

'முன்னுந் தொழத்தோன்றி முள்ளெயிற்று யத்திசையே
இன்னுந் தொழத்தோன்றிற் றீதேகாண் — மன்னும்
பொருகளிமால் யானைப் புகழ்க்கிள்ளி பூண்போற்
பெருகொளியான் மிக்க பிறை.'

எனக் கேட்டுத் தலைமகள் தொழாதுநிற்கும், கற்பழியும் என்பதனான் ; அதுகண்டு புணர்ச்சியுண்மை அறிந்துகொள்ளும் என்பது.

அஃதன்றி, அவளை வரையணங்காகவுஞ் சொல்லும : அதற்குச் செய்யுள் :

**[தகையணங்குறுத்தல்]**

'மண்டா ணிறைந்த பெரும்புகழ் மாறன்மந் தாரமென்னுந்
தண்டா ரவன்கொல்லித் தாழ்சுனை யாடிய தானகன்றாள்
ஒண்டா மரைபோன் முகத்தவ ணின்றொ டுருவமொக்கும்
வண்டார் குழலவள் வந்தா லியங்கு வரையணங்கே.' (சுகூ)

[சுனைவியந்துரைத்தல்]

'ஆனெடுந் தானையை யாற்றுக் குடிவென்ற கோன்பொதியிற்
சேனெடுங் குன்றத் தருவியின் சேவடி தோய்ந்ததில்லை
வானெடுங் கண்ணுஞ் சிவப்பச்செவ் வாயும் விளர்ப்பவண்டார்
தானெடும் போதவை சூட்டவற் றேவத் தடஞ்சுனையே.' (௭0)

இவை நாண நாடின.

இனி, நடுங்க நாடுமாறு : நம்புனத்து உதிரமளைந்த கோட்டதோர் களிறு உண்டு என்னும்; அதற்குச் செய்யுள் :

'கலவா வயவர் களத்தா ரவியக் கணையுதைத்த
கொலையார் சிலைமன்னன் கோனெடு மாறன்றென் கூடலன்ன
இலவார் துவர்வாய் மடந்தைநம் மீர்ம்புனத் தின்றுகண்டேன்
புலவார் குருதி யளைந்தவெண் கோட்டோர் பொருகளிறே.' (௭க)

'பொருதிவ் வுலகமெல் லாம்பொது நீக்கிப் புகழ்படைத்தல்
கருதிவந் தாருயிர் வான்போ யடையக் கடையல்வென்ற
பருதி நெடுவேற் பராங்குசன் கொல்லிப்பைம் பூம்புனத்துக்
குருதிவெண் கோட்டது கண்டேன் மடந்தையோர் குஞ்சரமே.'()

'பண்டிப் புனத்துப் பகலிடத்துத் தேனலுட்
கண்டிக் களிற்றை யறிவன்மற் — றிண்டிக்
கதிரன் பழையனூர்க் கார்நீலக் கண்ணாய்
உதிர முடைத்திதன் கோடு.'

அதுகேட்டுப், 'பல்காலும் இவ்விடத்து வந்தியங்குவான் எம்பெருமானாதலான், அவனைக் களிறு ஓர் ஏதஞ்செய்தது-கொல்லோ !' என்று நடுங்குவாளாம். அதுகண்டு கூட்டமுண்மை உணரும்.

[நாணநாட்டமும் நடுங்கநாட்டமும் அகத்திணையிலக்கணம் அன்றென்பது]

இவ்வகை உணர்தல் பொருந்தாது, நாணவும் நடுங்கவும் நாடுதல் அகத்திணை யிலக்கணம் அன்றாகலான்.

என்னை,

'நாணவு நடுங்கவு நாடா டோழி
காணுங் காலைத் தலைமக டேஎத்து'

என்பதாகலான்.

அல்லதூஉம், இவள் பெருநாணினளாகலானும் பேரச்சத்தினளாகலானும் இறந்துபடுமாகலான், அவளேதக்திற்குக் கவலாளாயினளுமாம்.

அல்லதூஉம். அவனை அவமதித்துக் கருதினளுமாம்; அவளது குறிப்பறியாது உரைத்தலான் ஆசாரம் அறியாளுமாம் என்பது. இக்குற்றமெல்லாந் தங்கும், அவ்வகை உரைப்பார்க்கு.

[முன்னுறவுணர்தல்]

மற்றென்னோ உரையெனின், முன்னுறவுணர்தல் என்பது, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தபின்றை அவளது வேறுபாடு கண்டு, 'தெய்வத்தினான் ஆயிற்றுக்கொல்லோ! மற்றொருவாற்றானாயிற்றுக்கொல்லோ!' என ஐயுற்று நிற்பது: அதற்குச் செய்யுள் :

[தோற்றத்தான் ஆராய்தல்]

'கந்தா ரடுகளி யானைச் சுழனடு மாறன்கன்னிக்
கொந்தா டிரும்பொழில் வாய்ப்பணை யாயத்துக் கோலமென்பூம்
பந்தா டலினிடை நொந்துகொல் பைந்துகில் வெண்மணன்மேல்
வந்தா டலினடி நொந்துகொல் வாணுதல் வாடியதே.' (௭௩)

'பொருந்திய பூந்தண் புனறன் குடைந்துகொல் பொற்கயிற்றுத்
திருந்திய ஊசல்சென் றாடிக்கொல் சேவூர்ச் செருவடர்த்த
பருந்திவர் செஞ்சுடர் வெல்வேற் பராங்குசன் பற்றலர்போல்
வருந்திய காரண மென்னைகொல் லோமற்றிவ் வாணுதலே.' (௭௪)

[குறையுறவுணர்தல்]

இனிக், குறையுறவுணர்தல் என்பது — அவன் தழையும் கண்ணியும் கொண்டு பின்னிலைமுனியாது நிற்ப, ஒக்கும், இவன் இரந்துபின்னிற்கின்றது இவள் காரணமாகப்போலும் என உணர்வது. அது பொருந்தாது; என்னை, யாரானும் ஒருவர் தன்னுழை ஒரு குறையுடையராய்ச் சென்றவிடத்து இவள்கண்ணதென்று கருதுவளாயின் அவனை அவமதித்துக் கருதினளாம், அவளது பெருமையோடு மாறுகொள்ளும் என்பது. மற்றென்னோ குறையுறவுணருமாறு எனின், அவன் இரந்துபின்னிற்கின்றது எற்றிற்குக்கொல்லோ என உணர்வதாயிற்று; அதற்குச் செய்யுள் :

[இவர்மனத்தெண்ணம் யாதெனத்தேர்தல்]

'மழையும் புரைவண்கை வானவன் மாறன்மை தோய்பொதியில்
வரையுங் கமழு மணிநெடுங் கோட்டுவண் சந்தனத்தின்
தழையும் விழைதகு கண்ணியு மேந்தித்தண் பூம்புனத்தின்
நுழையும் பிரியகில் லானறி யேனிவ னுள்ளியதே.' (எ௫)

'திண்பூ முகநெடு வேன்மன்னர் சேவூர்ப் படமுடிமேல்
தண்பூ மலர்த்தும்பை சூடிய தார்மன்ன னேரியென்னும்
வண்பூஞ் சிலம்பன் வரைப்புனங் காண் வருஞ்சுரும்பார்
ஒண்பூந் தழையுந் தருமறி யேனிவ னுள்ளியதே.' (எசு)

இவை இரண்டும் ஐயவுணர்வே, துணிவுணர்வல்ல.

[இருவரும் உள்வழி யவன்வரவுணர்தல்]

இருவரும் உள்வழி அவன்வர வுணர்தல் என்பது — அவ்வைய வுணர்வோடு நின்றாள், இருவரும் உள்வழி அவன்வந்து நின்றால், பதியும் பெயரும் பிறவும் வினவத் துணிந்து உணரும் எனக் கொள்க; அதற்குச் செய்யுள் :

'செறிந்தார் கருங்கழற் றென்னவன் செந்நிலத் துச்செருவின்
மறிந்தார் புறங்கண்டு நாணிய கோன்கொல்லிச் சாரல்வந்த
நெறிந்தூர் கமழ்குஞ்சி யாரோ டிவளிடை நின்றதெல்லாம்
அறிந்தேன் பலநினைந் தென்னையொன் றேயிவ ளாருயிரே.' (எஎ)

'வண்ண மலர்த்தொங்கல் வானவன் மாறன்வை வேன்முகமும்
கண்ணுஞ் சிவப்பக் கடையல்வென் றான்கட லூடனைய
பண்ணும் புரைசொல் லிவட்கு மிவற்கும் பலநினைந்திங்
கெண்ணுங் குறையென்னை யொன்றே யிருவர்க்கு மின்னுயிரே.' ()

'ஏனல் காவ லிவளு மல்லள்
மான்வழி வருகுவ னிவனு மல்லன்
நரந்தங் கண்ணி யிவனோ டிவளிடைக்
கரந்த வுள்ளமொடு கருதியது பிறிதே
நம்முன் னாணினர் போலத் தம்முள்
மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
உள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லு மாடுப கண்ணி னானே'

இதனை மதியுடம்பாடு என்றமையான் முன்னை யறிவு கவர்ந்து நின்றது என்பது பெற்றாம், துணிவுணர்வு பெற்றிலம் என்பது. அஃதேயெனின்,

'அம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி' என்றா, மூன்றி-னையும் உணர்ச்சி என்று சொன்னமையால் துணிவுணர்வே ஆகற்பால எனின், துணிவுணர்வும் உணர்வே யெனப்படும், ஐய வுணர்வும் உணர்வே யெனப்படும், உணர்வென்னும் பொதுமை நோக்கி ; சந்தனமும் காஞ்சிரையும் மரம் எனப்பட்டதுபோல. இவ்வாறாகவே, தோழி ஆராய்ச்சியுடைமையும் ஆசாரமுடை-மையும் ஏதத்திற்குக் கவறலும் நன்குமதித்தலும் வெளிப்படும் என்பது. அஃதேயெனின், 'அம்மூன்றும் என்ப தோழிக்கு உணர்ச்சி' என்று, மூன்றுமேயென்று துணிந்தானாகில், உம்மை கொடுத்துச் சொல்லவேண்டும்.

என்னை,

'இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்.' (கிளவி - ௩௩)

என்றாராகலின் : அஃதேதல், உம்மை ஈண்டுத் தொகுத்துக் கூறினார், உம்மை ஈண்டுத் தொகுத்தற்கு இலக்கணம் உண்-மையான். ஆயின், 'இருவரும் உள்வழி அவன் வரவு' என்று ஆகாதன்றே, அவன் செலவு என்றதன்றி என்பது :

என்னை,

'தருசொல் வருசொ லாயிரு கிளவியும்
தன்மை முன்னிலை யாயி ரிடத்த.' (கிளவியாக்கம் - ௨௯)

'ஏனை யிரண்டு மேனை யிடத்த.' (கிளவியாக்கம் - ௩0)

என்றாராகலின். அஃது அறியாது சொன்னாய்,

'செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும்.'(கிளவி-௨அ)

என்னுஞ் சூத்திரத்துள், இலேசினான் முடியுமாகலான் அமை-யும் ; அதுவாகலினன்றே,

'தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது' (அகம் - ௩௬)

என்று சான்றோர் சொல்லியது என்பது. (எ)

[அ]

ஆங்குணர்ந் தல்லது கிழவோ டேஎத்துத்
தான்குறை யுறுதல் தோழிக் கில்லை.

என்பது என்னுதலிற்றோ எனின், இதுவும் தோழிக்குரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : ஆங்கு உணர்ந்தல்லது என்பது — அங்ஙனம் அறிந்த பின்றை யல்லது என்றவாறு ; கிழவோள் தேஎத்து என்பது — தலைமகள் மாட்டு என்றவாறு ; தான் குறை உறுதல் தோழிக்கு இல்லை என்பது — தான்குறையுற்று முடிப்பல் என்னுஞ் சொல் தோழிக்கு இல்லை என்றவாறு.

எனவே, என் சொல்லப்பட்டதாம் எனின், கரவுநாட்டம் வேண்டுவாரையும் மறுக்கப்பட்டதாம். அஃதே யெனின், 'குறையுறுதல் தோழிக்கு இல்லை' என அமையாதோ, 'தான்' என்றது எற்றிற்கோ எனின், பின்னையும் தான் அல்லள் குறை-நயப்புக் கூறுவாள், அவனது ஆற்றாமையைத் தன்கட் கொண்டு-நின்றமையால் அவனே யெனப்படும். (அ)

[௯]

முன்னுற வுணரினு மவன்குறை யுற்ற
பின்ன ரல்லது கிளவி தோன்றாது.

என்பது என்னுதலிற்றோ எனின், தலைமகன்முன் நின்று தோழி சொல்லாடுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : முன்னுறவுணரினும் என்பது — மதி யுடம்படுப்பக் கூட்டமுண்மை உணர்ந்தாளாயினும் என்றவாறு; அவன் குறையுற்ற பின்னர் அல்லது என்பது — அவன் இரந்து பின்னின்ற பின்னரல்லது என்றவாறு ; அவன் இரந்து பின்னிற்குமாறு,

'குறையுறுங் கிழவனை உணர்ந்த தோழி.' (இறையனார் - கஉ)

என்னுஞ் சூத்திரத்துட் சொல்லுதும் ; கிளவி தோன்றாது என்பது — முடிப்பல் என்னுஞ்சொல் தோன்றாது என்றவாறு.

அஃதாமாறு, மதியுடம்படுத்துத் தன் கருத்தறிவித்துப் பின்னைத் தழையும் கண்ணியும் கொண்டு பின்னிற்கும். நின்றானோடு, முடிப்பக் கருதுவாள், தன்கண் நாணுக் கெடுந்துணையுங் குறியாடும்: ஆட, அற்றைக்கன்று ஆற்றாமை அவற்குப் பெருகும்; பெருகுவது கண்டு, அற்றைக்கன்று இவட்கு நாணுச் சுருங்க, இரண்டும் துலாத்தலைப்பட்டு எடாநின்றன: நின்றுழி, அவனது ஆற்றாமையும் இதனினூங்குப் பெருகுமாறில்லையெனப் பெருக்கத்திற்கு வரம்பெய்தி நின்றது: இவளது நாணும் இதனினூங்கு நுணங்குமாறில்லையென நுணுக்கத்திற்கு வரம்பெய்தி நின்றது. நின்ற நிலைக்கண் தலைமகன் ஒரு சொற் சொல்லும். என் சொல்லுமோ எனின், ‘இன்றினூங்கெல்லாம் இக் கருமம் நின்னான் முடியும் எனக் கருதிவந்து உழந்தேன், இனி நின்னான் முடியாமை உணரப்பட்டது, பட்டமையான், இனி இளிவந்தன செய்தாயினும் முடிப்பல், இதனை இன்றியமையேனாகலான்,’ என்னும். இளிவந்தன செய்தலாவது, மடலூர்ந்தானும் வரைபாய்ந்தானும் என்றவாறு: அதற்குச் செய்யுள்:

[மடலூர்தல்]

‘படலே றியமதின் மூன்றுடைப் பஞ்சவன் பாழிவென்ற
அடலே றயின்மன்னன் றெவ்வரைப் போன்மெலி னாடவர்கள்
கடலே றியகழி காமம் பெருகிற் கரும்பனையின்
மடலே றுவர்மற் றுஞ் செய்யா தனசெய்வர் மாநிலத்தே.’ (௭௯)

‘பொருநெடுந் தானைப்புல் லார்தம்மைப் பூலந்தைப் போர்தொலைத்த
செருநெடுஞ் செஞ்சுடர் வேனெடு மாறன்றென் னாடனையாய்
அருநெடுங் காமம் பெருகுவ தாய்விடி னாடவர்கள்
கருநெடும் பெண்ணைச்செங் கேழ்மட லூரக் கருதுவரே.’ (௮௦)

‘மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே.’ (குறுந் - ௧௭)

என்றான் தலைமகனே எனின், அல்லன்; தலைமகனிடனாகப் பிறந்த ஆற்றாமை. அதுகேட்டு முன் குறைபாட்டின்கட் சென்று நின்ற நாண் உண்டன்றே, அது கெடும்; கெட,

அவனது ஆற்றாமைத் தன்மையைத் தன்கட் கொண்டு தலைமகனை ஆற்றுவிப்பதோர் சொற் சொல்லும். அஃதியாதோ எனின், 'அரியன தாங்கலன்றே பெரியாரது பெற்றிமை; நீயிர் இதன்றிறத்தின ராகன்மின், யானும் அதன்றிறத்து என்னின் ஆவதுண்டேற் காண்பன்' என்னும். என, அவனது ஆற்றாமை நீங்கும்; அது நீங்கத், தலைமகனது நிலைமை நோக்கி, இவன் இறந்துபடான் என்பது உணர்ந்து, இவை சொல்லும்; அவையாவையோ எனின், 'மடலேறுவென் என்றிரால், நுமக்கு மடலேறுதல்[1] இயைவதுகொல்லோ, என்னை, நீயிர் பேரருளினிர் ஆகலான்' என்னும்; அதற்குச் செய்யுள் :

[அருளியல் கிளத்தல்]

'பலமன்னு புள்ளினம் பார்ப்புஞ் சினையு மவையழிய
உலமன்னு தோளண்ண லூரக் கொளாய்கொல் லொலிதிரைசூழ்
நிலமன்ன னெனியன் மாற னெடுங்களத் தட்டதிங்கட்
குலமன்னன் கன்னிக் குலைவார் பெண்ணைக் கொழுமடலே.' ()

'வெள்ளாங் குருகின் பிள்ளையம் பலவே
அவையினும் பலவே சிறுகருங் காக்கை
அவையினு மவையினும் பலவே குவிமடல்
ஓங்கிரும் பெண்ணை யகமிசைத் தொகுத்த
தூங்கணங் குரீஇக் கூட்டுள சினையே.'

'அன்றியும், "மடலேறுவன்" என்றிரால், அம்மடலேறப்படுவார் உருவு எழுதிக்கொண் டன்றே ஏறுவது; நுமக்கு உருவெழுதல் ஆமோ?' என்னும்: அதற்குச் செய்யுள் :

[மொழி நடை யெழுதல் அரிதெனக் கிளத்தல்]

அண்ண னெடுந்தே ரரிகேசரியகன் ஞாலமன்னன்
வண்ண மொருவா றெழுதினு மாமணி வார்ந்தனைய
தண்ணங் கருங்குழ னாற்றமு மற்றவ டன்னடையும்
பண்ணின் மொழியு மெழுத வளவோ படிச்சந்தமே.' (௮௨)

'கனிசேர் களிற்றுக் கழனெடு மாறன் கடையல்வென்ற
தெளிசே ரொளிமுத்த வெண்குடை மன்னன்றென் னாட்டனையாள்
கிளிசேர் மொழியுங் கருங்குழ னாற்றமுங் கேட்பினைய
எளிதே யெழுத லெழுதிப்பின் னூர்க வெழின்மடலே.' (௮௩)

1 இயையாதுகொல்லோ.

'அல்லதூஉம், எழுதுஞான்று இங்ஙனமோ நீர் எழுது-வது?' என்று சொல்லும்; அதற்குச் செய்யுள் :

[அவயவமெழுதல் அரிதெனக் கிளத்தல்]

'விற்றா னெழுதிப் புருவக் கொடியென்றிர் தாமரையின்
முற்றா முகைநீ ரெழுதி முலையென்றிர் மொய்யமருட்
செற்றார் படச்செந் நிலத்தைவென் றான்றென்னன் கூடலன்னாள்
சொற்றா னெனக்கினி யோநீ ரெழுதத் துணிகின்றதே.' (௮௪)

அதுகேட்டுத் தலைமகன் பெயர்த்தும் ஆற்றானும்; ஆக, இனி இறந்துபடல் ஆகாதென்று, 'நீர் இந்நீரராகன்மின், நமக்கு இக்குறை முடித்துத் தருவன்; நம்மாற் கருதப்படுவாள் என்மாட்டுப் பெரிதும் அருளுடையவ ளாயினாள்' என்னும்: அதற்குச் செய்யுள் :

[உடம்பட்டு விலக்கல்]

'ஓங்கும் பெரும்புகழ்ச் செங்கோ லுசித னுறுகலியை
நீங்கும் படிவென்ற கோன்வையை வாய்நெடு நீரிடையான்
தாங்கும் புணையொடு தாங்குதண் பூம்புனல் வாயொழுகின்
ஆங்கும் வருமன்ன தாலின்ன ளாளவ ளாருளே.' (௮௫)

'காடார் கருவரை யுங்கவி கானுங் கடையலன்று
கூடார் செலச்செற்ற கோனெடு மாறன்றென் கூடலன்ன
ஏடார் மலர்க்குழ லாளெங்கு நிற்பினு மென்னையன்றி
ஆடாள் புனலுமெல் லூசலு மீதவ ளாரருளே.' (௮௬)

'தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்
புணைகை விட்டுப் புனலோ டொழுகின்
ஆண்டும் வருகுவள் போலு மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரி நுறழுங் கொழுங்கடை மழைக்கட்
டுளிதலைத் தலைஇய தளிரன் னோளே.' (குறுந் - ௨௨௨)

[கோண்டுநிலைகூற்று]

அதுகேட்டுத் தலைமகன், 'இவள் இனி எனக்கு இக்குறை முடிக்கும்' என, முன்னின்ற ஆற்றாமை நீங்கி ஆற்றும் என்பது.

என்னை, உலகத்து ஒருபொருள் முடியாதெனக் கவன்று நின்றார், முடிப்பதோர் உபாயங் கண்ட ஞான்று அப்பொருள் எய்தினாரேபோல மகிழ்பவாகலின், இவனும் தான் உடைய குறை எய்தினான்போலப் பெயர்ந்தான். இதனைக் கோண்டுநிலை கூற்று என்று சொல்லுவது; என்னை, தலைமகன் இறந்துபடு- வானை அச்சொல் தாங்கிக்கொண்டு நின்றமையான் என்பது. இது சொல்லி, இவனை ஆற்றுவித்துத் தலைமகண்மாட்டுச் சென்று, அக்குறை முடிக்கும் உபாயம் ஆராய்வாளாவது. (௯)

[௧0]

உள்ளத் துணர்ச்சி தெள்ளிதிற் கரந்து
கிழவோ டேஎத்துக் குறையுறூஉ முளவே
குறிப்பறி வுறூஉங் காலை யான.

என்பது என்னுதலிற்றோ எனின், தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகளைக் குறைநயப்பிக்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: உள்ளத்து உணர்ச்சி தெள்ளிதிற் கரந்து என்பது — தன் உள்ளத்து நின்ற உணர்ச்சியை நன்கு புலப்- படாமை மறைத்து என்றவாறு; கிழவோள் தேஎத்து என்பது — தலைமகண்மாட்டு என்றவாறு; குறையுறூஉம் உளவே என்பது — குறை வேண்டலும் உள என்றவாறு; குறிப்பு அறிவுறூஉங் காலை ஆன என்பது — தலைமகனது ஆற்றாமைக் குறிப்பினை அறிவுறுத்துமிடத்து என்றவாறு.

'உள்ளத்துணர்ச்சி' என்பது யாதோ எனின், கூட்ட- முண்மை உணர்ந்த உணர்ச்சி யென்றுமாம்; அல்லதூஉம், அவர் இக்குறை இன்றியமையார் என உணர்ந்த உணர்ச்சி என்றுமாம்; அல்லதூஉம், யான் குறையுற அவள் இதனை ஆற்றுங்கொல்லோ என உணர்ந்த உணர்ச்சி யென்றுமாம்; அல்லதூஉம், என்னினைய கூட்டம் முடியாதுவிடின் இவன் இறந்துபடுமாகலான் இவளைக் குறைநயப்பித்துக் கொண்டு முடிக்கலாங்கொல்லோ என உணர்ந்த உணர்ச்சி யென்றுமாம்.

'தெள்ளிதிற் கரந்து கிழவோள் தேஎத்துக் குறையுறாஉம் உளவே' என்பது, இவள் கூட்டமுண்மை உணர்ந்து உணராதாள்போன்று குறையுற்று நின்றாள் எனத் தலைமகட்குப் புலனாகாமை நன்கு மறைத்துக் குறையுறாஉங் குறையுறவும் உடையள் தலைமகள்மாட்டுக் குறைநயப்புக் கூறுமிடத்து என்றவாறு.

'உண்டு' என்னாது, 'உள' என்ற பன்மைச்சொல் எற்றிற்கோ எனின், குறையுறவுதாம் பல என்றற்குச் சொல்லப்பட்டது. அவையாவையோ எனின், மெலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தலும், வலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தலும் என இவை.

அவற்றுள், மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பிக்குமாறு: 'இங்கு வந்து ஒழுகாநின்றான் ஒரு தோன்றல் உளன், அவன் என்னினையதொரு குறையுடையான் போலும், ஒருவரால் ஒரு குறையுறவு கொள்ளுந் தன்மையானும் அல்லன், ஒருவர்க்கு ஒரு குறை முடிப்பினல்லது: அதனால், அவன், அக்குறை இன்றியமையான்; அமையாமை நோக்கி, யான் அக்குறை முடிப்பார் தன்மையேனாயினேனாய்வைத்து ஒரு பொய் பொய்த்தேன், பொய்ப்போலும் பொய்ப்பன்றென்று பொய்த்தேன்; எனெனின், இப்பொழுதைக்குச் சொல்லப் போயினாற் பின்னுமோர் உபாயந்தான் முடிக்குங்கொல்லோ பெருமான் என்று பொய்த்தேன்: என்னை, உயிருடையார் எய்தாப் பொருளில்லை என்பதனான். அவ்வாறு கருதிப் பொய்த்தேற்கு அவர் அதனை மெய்யென்று கருதிக்கொண்டு சென்றார், தாம் பொய்ப்பறியாமையின்; அன்னார் இன்று வருவர், வந்தால், இக்குறை முடியாமையிற் பொய்யென உணர்வாராகாதே' என்னும்: அதற்குச் செய்யுள்:

'பாமாண் டடக்கெரி வேந்தன் பராங்குசன் கொல்லிப்பைம்பூந்
தேமாந் துழையொடு கண்ணியுங் கொண்டிச செழும்புனத்துள்
ஏமான் சிலையண்ணல் வந்தின் றூர்பண்டு போலவின்று
பூமான் குழலா யறியே னுரைப்பதோர் பொய்ம்மொழியே.' (அஎ)

அல்லதூஉம்,

'கொடியார் நெடுமதிற் கோட்டாற் றரண்கொண்ட கோன்பொதியிற்
கடியார் புனத்தயல் வைகலுங் காண்பல் கருத்துரையான்
அடியார் கழலனலங் கலங் கண்ணியன் மண்ணளந்த
நெடியான் சிறுவன்கொல் லோவறி யேனோர் நெடுந்தகையே.' ()

'நண்ணிய போர்மன்னர் வான்புக நட்டாற் றமர்விளைத்த
மண்ணிவர் செங்கோல் வரோதயன் வையைநன் னாடனையாய்
கண்ணியன் றண்ணந் தழையன் கழலன் கடுஞ்சிலையன்
எண்ணிய தியாதுகொல் லோவக லானிவ் விரும்புனமே.'(அக)

'பன்னிய தீந்தமிழ் வேந்தன் பராங்குசன் பாழிவென்ற
மன்னிய சீர்மன்னன் கொல்லிநம் வார்புனங் கட்டழித்துத்
தின்னிய வந்த களிறு தடிந்த சிலம்பன் றந்த
பொன்னியல் பூண்மங்கை வாடிய வோமற்றிப் பூந்தழையே. (௧௦)

'அரைதரு மேகலை யன்னமன் னாயன் றகத்தியன்வாய்
உரைதரு தீந்தமிழ் கேட்டோ னுசிதனொண் பூம்பொதியில்
வரைதரு வார்புனங் கையக லான்வந்து மாவினவும்
விரைதரு கண்ணியன் யாவன்கொ லோவொர் விருந்தினனே.'()

'பொரும்பா ரரசரைப் பூலந்தை வாட்டிய கோன்பொதியி [லான்
லரும்பார்தழையுங்கொண்டியான்சொன்னபொய்யைமெய்யென்றக
பெரும்பான் மையுமின்று வாரா விடான்வரிற் பேரமர்க்கட
சுரும்பார் கருங்குழ லாயறி யேனினிச் சொல்லுவதே.' (௧௨)

'தெம்மாண் பழிந்துசெ ருப்பூக்க செந்நூர்ச் செருவினன்று
வெம்மாப் பணிகொண்ட வேந்தன்றென் னாடன்ன மெல்லியலாய்
இம்மாந் தழைய னலங்கலங் கண்ணியன் யாவன்கொல்லோ
கைம்மா வினைப்பவந் தகலா னாந்து கடிப்புனமே.' (௧௩)

'சிலையுடை வானவன் செந்து ழியச் செருவடர்த்த
இலையுடை வேலெங்கோ மாறன் கழலிறைஞ் சாதவர்போல்
நிலையிடு சிந்தைவெந் நோயொடி நீள்புனங் கையகலான்
முலையிடை நேர்பவர் நேரு மிடமிது மொய்குழலே.' (௧௪)

'இலைசூழ்செங் காந்த ளொரிவாய் முகைபவிழ்த்த வீர்ந்தண்வாடை
கொலைவேல் நெடுங்கட் கொடிச்சி கதுப்புளருங் குன்றநாட
னுலைவுடை வெந்நோ யுழக்குமா லந்தோ
முலையிடை நேர்பவர் நேரு மிடமிது மொய்குழலே.'

என இவ்வகை கூறக் கேட்டு, 'நின்னிற்பிரியேன், பிரியின் ஆற்றேன்' என்ற எம்பெருமான்வந்து இவளை இரந்துபின்னின்றமையான் இறந்துபட்டிலள் என ஏமாப்பாளாவது.

இனி, வலிதாகச் சொல்லிக் குறைநயப்பிக்குமாறு: 'இங்கு வந்து ஒழுகாநின்றான் ஒருதோன்றல் உளன், அவன் என்னி-

னாயதொரு குறையுடையான்போலும் ஒருவரான் ஒரு குறை கொள்ளுந் தன்மையனும் அல்லன், தான் பிறர்க்கு ஒரு குறை முடிப்பினல்லது ; அதனால் இக்குறை இன்றியமையான், யான் அதுநோக்கி அவன் உவப்பக் குறைமுடிப்பேனெனப் பொய்த்து ஒழுகினேன் ; ஒழுக, நெருநலைநாளால் இக்கானலுள் வந்து என்னை எதிர்ப்பட்டுத் தன் துணைப் புறந்தருவதோர் அலவனைக் கண்டு, “இதுவாகாதே அறிவும் ஆண்மையுமாவது!” என, அதனை நன்குமதித்துத் தன் ஆற்றாமையால், என்னையும் நோக்கி அலவனையும் நோக்கி, உணர்வினை என்கண்ணும் அவ்வலவன்கண்ணும் ஒழியப் போயினான், எத்தன்மையனாயினான்கொல்லோ! இன்று வந்திலன்’ என்னும் ; அதற்குச் செய்யுள்:

‘பாடுஞ் சிறைவண் டறைபொழிற் பாழிப்பற் றாவரசர்
ஓடுந் திறங்கண்ட கோன்கன்னிக் கான லுறுதுணையோ
டாடு மலவற் புகழ்ந்தென்னை நோக்கி யறிவழிய
நீடு நினைந்துசென் றானென்ன லாங்கொர் நெடுந்தகையே.’ (கூரு)

‘பொன்றா விரிபுகழ் வானவன் பூலந்தைப் பூவழிய
வென்றான் வியன்கன்னி யன்னந்தன் மென்பெடை மெய்யளிப்ப
நன்றா மிதன்செய்கை யென்றென்னை நோக்கி நயந்துருகிச்
சென்றா ரொருவர்பின் வந்தறி யாரிச் செழும்புனத்தே.’ (கூசா)

‘புணர்துணையோ டாடும் பொறியலவ னோக்கி
இணர்கைதைப் பூங்கான லென்னையு நோக்கி
உணர்வொழியப் போன வொலிதிரைநீர்ச் சேர்ப்பன்
வணர்சுரி யைம்பாலாய் வண்ண முணரேனால்.’
(சிலப்பதிகாரம், கானல்வரி — ருக.)

‘ஒருநாள் வாரல னிருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியென்
நன்னர் நெஞ்ச நெகிழ்ந்த பின்றை
வரைமுதிர் தேனிற் போகி யோனே
யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வேறுபல னன்னாட்டுப் பெய்த
வேறுடை மழையிற் கலுழுமெ னெஞ்சே.’ [குறுந் - கஎசா]

இதுகேட்டு இறந்துபடாதது எற்றிற்கோ எனின், இறந்துபடான்றே, ‘அவன் உளனாயினும் இறந்துபடும்பிற, யான் இறந்துபடின்’ என்றதனான். (க௦)

[கக]

## தன்னுட் குறிப்பினை யருகுந் தோழிக்கு
## முன்னுறு புணர்ச்சியி னருகலு முண்டே.

என்பது என்னுதலிற்றோ எனின், அங்ஙனங் குறைநயப்புக் கூறப்பட்ட தலைமகள் இன்ன தன்மையளென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : தன் உள் குறிப்பினை என்பது — தோழி தன் உள்ளத்துக் குறிப்பினை என்றவாறு ; அருகுந் தோழிக்கு என்பது — சார்த்துந் தோழிக்கு என்றவாறு ; முன்னுறு புணர்ச்சியின் என்பது—இயற்கைப் புணர்ச்சி, அங்கு, 'நின்னிற் பிரியேன் பிரியினாற்றேன்' என்றது உண்டன்றே, அதனான் என்றவாறு ; அருகலும் உண்டு என்பது — தலைமகள் தனது தன்மையைச் சார்த்தலும் உடையள் என்றவாறு.

என்பது என் சொல்லியவாறோ எனின், அறிய நிற்றலும் உடையள், அறியாமை நிற்றலும் உடையள் என்றவாறு.

மெலிதாகச் சொல்லிக் குறைநயப்புக் கூறின இடத்து, எம்பெருமான் தனக்குத் தகாத இளிவரவொடொழுகாநின்றானெனக் கவற்சி உண்டன்றே, அது புலப்படாமை நிற்கும். வலிதாகச் சொல்லிக் குறைநயப்புக் கூறியவழி, நெருநல் வாரானாயினான் என்றமையின் இறந்துபட்டான் என ஆற்றாமை பெரிதாம், அங்குப் புலப்பட நிற்கும் என்பது.

இனி, ஒருதிறத்தார் வேண்டுவது : சொல் நிகழ்தலுமுண்டு, சொல் நிகழாமையுமுண்டு என்பது ; அஃதாமாறு மெலிதாகச் சொல்லிக் குறைநயப்புக் கூறியவழி, முன் இறந்துபட்டான்கொல்லோ எனக் கருதி ஆற்றாமையொடு நின்றாள், உளனாயது கேட்டு ஆற்றாமை நீங்கும் ; நீங்க, நாணுவந்தடையும் ; அடையத், தோழிமுன்னர் நிற்கலாள், 'வேங்கைப்பூக் கொய்தும், மயிலாடுமாறு காண்டும், அருவியாடுகம்' என ஒன்றன்மேலிட்டு நீங்கும் ; அதற்குச் செய்யுள் :

கணிநிற வேங்கையுங் கொய்துங் கலாவம் பரப்பிநின்று
மணிநிற மாமயி லாடலுங் காண்டும்வல் லத்துவென்ற
துணிநிற வேன்மன்னன் றென்னர் பிரான்சுடர் தோய்பொதியில்
அணிநிற மால்வரைத் தூநீ ரருவியு மாடுதுமே. (கஎ)

விரைவளர் வேங்கையுஞ் சாந்தமுங் கொய்தும் வியலறைமேல்
நிரைவளர் மாமயி லாடுவ காண்டு நிகர்மலர்த்தார்
திரைவளர் பூம்புனற் சேலூர் படச்செற்ற தென்னன்கொல்லி
வரைவளர் பானீ ரருவியு மாடுதும் வாணுதலே. (கஅ)

எனச் சொன்னிகழ்ந்தவாறு.

வலிதாகச் சொல்லிக் குறைநயப்புக் கூறினவழி, 'நெருநல் வாராதாயினான், ஆகலின் இறந்துபட்டான்' என ஆற்றாமை நிகழ்ந்து பெருமையாற் சொற்பிறவாது எனக் கொள்க.

இனி, ஒரு சாரார் சொல்லுவது: இயற்கைப் புணர்ச்சி புணர்ந்ததற்கு இடையின்றியே இற்செறிக்கப்பட்ட தலைமகள் தோழிக்கு அறத்தொடு நிற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று என்பது.

அவர் கூறும் பொருளாமாறு: தன்னுட் குறிப்பினை அருகுந் தோழிக்கு என்பது — தன்கண் வேறுபாட்டை அறிதலுறுந் தோழிக்கு என்றவாறு; முன்னுறு புணர்ச்சியின் அருகலும் உண்டு என்பது — முன்னுறு புணர்ச்சி காரணமாகச் சார்தலும் உண்டு என்றவாறு. என்னை,

'முற்படு புணர்ச்சியிற் கடிபடு கிழத்தி
மெய்ப்பாட் டவலம் புரியுந் தோழிக்
கேதீ டாக வெண்ணிய முறையாற்
கூறவும் பெறூஉங் குறிப்பொடு புணர்ந்தே
கற்புக்கடை காக்குங் கருத்தி னானே.'

என்பதன் பொருளால், தலைமகள் தோழிக்கு அறத்தொடு நின்றது என்பது.

அஃது ஈங்குச் சொல்ல வேண்டுவதில்லை. போக்கி,

'அந்நா ளிடத்து மெய்ந்நா ணொரீஇ
அறத்தொடு நிற்ற றோழிக்கு முரித்தே.' [இறையனார் - உக]

என்பதன்கட் சொல்லுதும்.

ஒருவர்க்கு ஒரு சொற் சொல்லியவிடத்து அச் சொல் சொல்லப்பட்டார் இன்ன நீர்மையராயினர் என்பது சொல்ல-வேண்டுமன்றே, மேற் சூத்திரத்துள், 'தோழி தலைமகளைக் குறையுறும்' என்றார், இச் சூத்திரத்துள், 'குறையுறப்பட்ட தலைமகள் இன்னநிலைமையளாயினள்' என்பது சொல்லவேண்-டும்; அதனன், மேலதே உரை.

இவ்வகை குறையுறப்புக் கூறப்பட்ட தலைமகள் தலைமகனைக் காணலுறவினளாம். அக்குறிப்பு உணர்ந்த தோழி, தலைமகள் குறைநேர்ந்தாள் என்பது தலைமகற்கு அறியநிற்கும் என்பா-ரும் உளர்; அதற்குச் செய்யுள்:

[தழைவிருப்புரைத்தல்]

'சிலைமிசை வைத்த புலியுங் கயலுஞ்சென் றேங்குசெம்பொன்
மலைமிசை வைத்த பெருமான் வரோதயன் வஞ்சியன்னாள் [சேர்
முலைமிசை வைத்துமென் றோண்மேற் கடாய்த்தன்மொய் பூங்குழல்
தலைமிசை வைத்துங்கொண் டாளண்ண னீதந்த தண்டழையே.'()

'கழுது குருதி படியக் கலிநீர்க் கடையல்வென்ற
விழுது படுநெடு வேன்மன்ன னீர்ம்புனற் கூடலன்னாள்
தொழுது தலைமிசைவைத்துங்கொண்டாள்வண்டுந்தும்பியுந்தேன்
கொழுது மலர்நறுந் தாரண்ண னீதந்த கொய்தழையே.' (க00)

எனக் கொள்க. (கக)

[கஉ]

குறையுறுங் கிழவனை யுணர்ந்த தோழி
சிறையுறக் கிளந்து சேட்பட நிறுத்தலு
மென்னை மறைத்த லெவனோ வியவெனா
முன்னுறு புணர்ச்சி முறைமுறை செப்பலு
மாயப் புணர்ச்சி யவனொடு நகாஅ
நீயே சென்று கூறெனை விடுத்தலு
மறியாள் போறலுங் குறியாள் கூறலும்
படைத்துமொழி கிளவியுங் குறிப்புவேறு கோளலு
மன்ன பிறவுந் தலைப்பெயல் வேட்கை
முன்னுறு புணர்ச்சிக் குரிய வென்ப.

என்பது என்னுதலிற்றோ எனின், தலைமகளைக் குறைநயப்பித்து அவளது கருத்து உணர்ந்து தன்னினாங்கூட்டம் கூட்டலுறுந் தோழி, தலைமகன் தெருண்டு வரைந்தெய்தல் வேண்டி, இவை யெல்லாங் கூறிச் சேட்படுத்து நிறுத்தப்பெறும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

மதியுடம்படுத்துப் பின்னின்றானைத் தான் இதனை முடிக்கக் கருதுவாள் தன்கண் நாணுக் கெடுந்துணையுங் குறி-யாடிக்கொண்டு ஒழுகுமாறு உணர்த்துதல் நுதலிற்று எனவும் அமையும்.

இதன் பொருள்: குறையுறுங் கிழவனை உணர்ந்த தோழி என்பது — குறையுறவந்த தலைமகனைக் கடைப்பிடித்த தோழி என்றவாறு; கடைப்பிடியாது சென்ற காலமும் உளவாகலின், இனி அன்னதன்று என்றவாறு; அல்லதூஉங், குறையுறுங் கிழவனை உணர்ந்த தோழி என்பது — குறையுறவினான் ஆற்றா-னாகிய தலைமகனை உணர்ந்த தோழி என்றுமாம்; அல்லதூஉம், இரத்தலுங் குறையுறுதலுஞ்செய்து ஆற்றானாகிச் செல்லாநின்ற தலைமகனைத் தன்னினாகிய கூட்டம் முடியாதுவிடின் ஆற்றான் என்பதனைத் திரிபின்றி உணர்ந்த தோழி என்றுமாம்.

சிறை உறக் கிளந்து சேட்பட நிறுத்தலும் என்பது — சிறை என்பது காப்பு, உற என்பது மிகுதி, கிளத்தல் என்பது சொல்லுதல், சேண் என்பது அகற்றல், பட என்பது நிகழ்வு, நிறுத்தல் என்பது தழீஇக்கோடல் என்றவாறு; காப்பு மிகுதி சொல்லி அகற்றித் தழீஇக் கோடலுறும் என்றவாறு; ஆற்றாத் தன்மைக்கண் நிறுத்தல் என்னுஞ் சொல் [1] தழீஇக்கொள்ளும் என்பது; எனவே, தலைமகனை ஆற்றாமை செய்வனபோன்று-வைத்து ஆற்றுவிப்பன சிலசொற் சொல்லும் என்பது போந்-தது. இந் நிறுத்தல் என்னுஞ்சொல் தழீஇக்கொள்ளும் என்ப-தன்று, நீக்கிநிறுத்தார், உய்த்துவிட்டார், போக்கிவிட்டார் என்பனபோல ஒருசொல்விழுக்காடுபட நின்றது என்பாரும் உளர்.

1 - ஆற்றிக்கொள்ளும்.

அங்ஙனங் காப்பு மிகுதி சொல்லுமாறு : 'இவ்விடம் மிக்க காவலுடைத்து, நீயிர் வரற்பாலிரல்லீர்' எனச் சொல்லும்; அதற்குச் செய்யுள் :

[காப்புடைத்தேன்று மறுத்தல்]

'மண்ணிவர் செங்கோல் வரோதயன் வல்லத்து மாற்றலர்க்கு
விண்ணிவர் செல்வம் விளைவித்த வேந்தன்விண் டோய்பொதியிற்
கண்ணிவர் பூந்தண் சிலம்பிடை வாரன்மின் காப்புடைத்தாற்
பண்ணிவர் வண்டறை சோலை வளாயவெம் பைம்புனமே' (கoக)

'புல்லா வயவர் நறையாற் றழியப் பொருசழித்த
வில்லான் விளங்குமுத் தக்குடை மன்னன் வியனிலத்தார்
எல்லா மிறைஞ்சநின் றன்கொல்லி மல்லலந் சாரலிங்கு
நில்லா தியங்குமின் காப்புடைத் தையவிந் நீள்புனமே.' (கoஉ)

'பூவலர் தண்பொழிற் பூலந்தைப் புல்லா வரசழித்த
மாவலர் தானை வரோதயன் கொல்லி மணிவரைவாய்
ஏவலர் திண்சிலை யாரொமர் நீங்கா திருபொழுதுங்
காவல ராய்நிற்பர் வாரன்மி னீரிக் கடிபுனத்தே. (கoங)

இவ்வாறு தோழி சொல்லத் தலைமகன் ஆற்றினவாறு என்னையோ எனின், இச்சொல் ஆற்றுவித்தநாஉமாம்; என்னை, 'இவள் இவ்விடத்து நிலைமையை மறையாது எனக்கு உரைப்பா-ளாயது என்கட் கிடந்த பரிவினானாதே; இத்துணை என்கட் பரிவுடையாள், எனக்கு இது முடியாமையில்லை' என ஆற்று-வான். இப்படி அருமையுடைத்தாகலால், இவளின் ஆகாது என்று உணர்வானாயின், வரைந்து எய்துவானும். இவள் இவையெல்லாந் தலைமகனைச் சொல்லுதற் காரணம் என்னையோ எனின், தனது ஆற்றாமையான் முடிக்கின்றதனை எளிதென உணரும், அது படாமை அரிதென உணர்வானாக என்றற்கு. இனி, அச்சொல்லே ஆற்றுவித்தற்குக் காரணம் என்னையெனின், இது முடியாதென உணர்வானாயின் இறந்துபடுவான்கொல்லோ என்னும் அச்சத்தினான் என்பது. இதனை இச்சூத்திரத்துள் எங்குந் தந்துரைக்க.

என்னை மறைத்தல் எவனாகியரேன என்பது — ஆற்றானாகி நின்ற தலைமகனை இஃது இறப்ப இவன் இறந்துபடுமென நின்ற

தோழி, 'என்னை நீயிர் இவ்வகையிர் ஆதற்குக் காரணம் என்னை?' என்னும்; என, 'ஒக்கும்; என்னது ஆற்றாமை இன்னதிறைய-தென்பதனை அறிந்திலள், அறியாதாட்கு இன்னது என் குறையென்பேனாயின் இவள் மறுக்கவும்பெறும், இவளை இன்னும் பல்கால் நெகிழ ஒழுகுவேன், அதனால் தானே அறிந்து முடிக்கும்' என உணர்ந்து, இன்னது என்குறையென்றாதானை, 'நுங்குறையை என்னை மறைத்ததனால் நுமக்காவது என்னை?' என்னும்; அதற்குச் செய்யுள் :

[மறைத்தமை கூறல்]

'பின்னை மறைத்தசெவ் வேல்வலத் தால்விழி ஞத்திலொன்னார்
மன்னை மறைத்தவெங் கோன்வையை சூழ்பௌவ நீர்ப்புலவர்
தன்னை மறைத்திள ஞாழல் கயமூழ்த்தண் ணந்துறைவா
என்னை மறைத்த விடத்திய லாதுகொ லெண்ணியதே. (௧௦௪)

'திண்டேர் வயமன்னர் சேனு ரகத்துச் செருவழியக்
கண்டே கதிர்வேல் செறித்தவெங் கோன்கொல்லிக் கார்ப்புனத்து
வண்டேய் நறுங்கண்ணி கொண்டே குறையுற வந்ததனென்
உண்டே முடிப்ப தெனக்கு மறைப்பினு முள்ளகத்தே. (௧௦௫)

எனவே, முன் சொல்லப்பட்டதாம், 'மறையாது விட்ட-விடத்து ஆவது உண்டு' என்றாளாம் என்பது.

முன்னுறு புணர்ச்சி முறை முறை செப்பலும் என்பது — முன்னுறு புணர்ச்சி என்பது இயற்கைப் புணர்ச்சி, அதன் முறை என்பது பாங்கற்கூட்டம், அதன் முறை என்பது தோழிதன்னினைய கூட்டம், அஃது என்னை மறையாது-விடின் முடிப்பல் என்றாளாம்; அதனான், 'என் குறை அறிந்-திலள், அறிந்தஞான்று முடித்துத்தரும்' என ஆற்றுவானும் என்றவாறு.

மாயப் புணர்ச்சி அவனோடு நகாஅ நீயே சென்று கூறென விடுத்தலும் என்பது — அவன் இரந்துபின்னின்றவிடத்து மாயமான புணர்த்துச் சொல்லுகின்றது, இஃது உலகத்து நிகழ்வதொன்றன்றோ என்று அவனொடு நகாநின்றே, 'யாரறிவார், நிகழவும்பெறும் நிகழாமையும்பெறுமே எனினும், யாம் குற்றேவன் மகளிராகலான் துணிந்து சொல்லகில்லேம் அவளது

குறிப்பறியாது: நீயே சென்று நின்குறை சொல்லாய்' என்னும்; அதற்குச் செய்யுள்:

[நின்குறை நீயேகூறென்று மறுத்தல்]

'சேயே யெனநின்ற தென்னவன் செந்நிலத் தேற்றதெவ்வர்
போயே விசும்பு புகச்செற்ற கோனந்தண் பூம்பொதியில்
வேயே யனையமென் றோளிக்கு நின்கண் மெலிவுறுநோய்
நீயே யுரையாய் விரையா ரலங்க னெடுந்தகையே.' (க0சு)

'புரைத்தா ரமர்செய்து பூலந்தைப் பட்டபுல் லாதமன்னர்
குரைத்தார் குருதிப் புனல்கண்ட கோன்கொல்லிப் பாவையன்ன
நிரைத்தார் கருமென் குழலிக்கு நீயே நெடுந்துறைவா
உரைத்தால் குவதுண் டோசென்று நின்றுநி னுண்மெலிவே.' ()

என்னும்; என்றவிடத்து ஆற்றாளும்; என்னை, உலகத்தார் ஒருவரை ஒருவர், 'இக்குறை முடித்துத்தரல்வேண்டும்' என்று இரந்தவிடத்து, 'அஃது எமக்காகாது, நீரே சென்று முடித்துக் கொண்மின்' என்றால், எத்துணையும் இன்னாதன்றே, அதுபோல என்பது. அவ்வகை ஆற்றாளைப் நின்றானது ஆற்றாமை ஆற்றுவது ஒன்றனைப் பற்றும். என்னை, 'நகாநின்றன்றே சொல்லியது, அந்த நகை ஒன்றுடைத்து' என ஆற்றுவாளும் என்பது.

இனி, அறியாள் போறலும் என்பது — தலைமகன் தழையும் கண்ணியும் கொண்டு பின்னின்றவிடத்து, 'நும்மாற் சொல்லப்படுவாளை அறியேன்' என்னும்; அதற்குச் செய்யுள்:

[அறியாள்போன்று நினைவு கேட்டல்]

'பொறிகெழு கெண்டை வடவரை மேல்வைத்துப் பூமியெல்லாம்
நெறிகெழு செங்கோ னடாநெடு மாறனெல் வேலிவென்றான்
வெறிகமழ் பூங்கன்னிக் கானல் விளையாட் டயர்கின்ற
செறிகுழ லார்பலர் யார்கண்ணதோ வண்ணல் சிந்தனையே.' (க0எ)

'திளையா வெதிர்நின்ற தெம்மன்னர் சேனூர்ப் படைச்சிறுகட்
டுளையார் கருங்கைக் களிறுந்தி னன்றெண்டிச் சூழ்துறைவாய்
வளையார் வனமுலை யார்வண்ட லாடும் வரிநெடுங்கண்
இளையார் பலருளர் யார்கண்ணதோ வண்ண லின்னருளே.' (க0அ)

என்னும்; என, இதுகேட்டு ஆற்றானும். ஆற்றானாயினான், 'என் குறை இன்னார்கண்ணது என்று அறிந்திலள், அறிந்த ஞான்று முடித்துத் தரும்' என ஆற்றுவானும் என்பது.

குறியாள் கூறலும் என்பது — 'இத்தழை நல்ல, இக்கண்ணி நல்ல, இவை கொள்ளற்பால' என்று கையுறை பாராட்டி நின்ற நிலைமைக்கண், அவற்றை ஏற்றுக் கொள்ளாது மற்றொன்று சொல்லி நீங்கும்; அதற்குச் செய்யுள்:

'மன்னன் வரோதயன் வல்லத்தொன் னார்கட்கு வான்கொடுத்த
தென்னன் திருமால் குமரியங் கானற் றிரைதொகுத்த
மின்னுஞ் சுடர்ப்பவ ளத்தரு கேவிரை நாறுபுன்னைப்
பொன்னந் துகள்சிந்து வானவிற் போன்றதிப் பூந்துறையே. (௧௧0)

'காரணி சோலைக் கடைய விடத்துக் கறுத்தெதிர்ந்தார்
தேரணி தானை சிதைவித்த கோன்கன்னித் தென்றுறைவாய்
நீரணி வெண்முத்தி னைய நெடுமணன் மேலிழைத்த
ஏரணி வண்டல் சிதைக்கின்ற தாலிவ் வெறிகடலே.' (௧௧௧)

என்பது கேட்டு, 'இவள் இக்குறை முடியாள், அவத்தமே வருந்தினேன், யான் சொல்லியது இருப்ப ஏதிலதொன்று சொல்லினமையின்' என்று ஆற்றானாயினான். அவ்வாற்றாமை ஆற்றுவதொன்றனைப் பற்றும்; ஆற்றுவதாவதியாதோ எனின், 'இவள் பிறிதொன்றிற்குப் புடைகவன்று நின்ற நிலைமைக்கண் வந்தேன், அல்லாக்கால் மறுமாற்றம் தாராமை இல்லை, இவள் புடைகவலாது நின்ற நிலைமைக்கண் வருவென்' என அந்நசை-யால் ஆற்றுவானும் என்பது.

**படைத்து மொழி கிளவியும்** என்பது — இவன் இத்தழை நல்ல, இக்கண்ணி நல்ல, இம்முத்து நல்ல, இவை கொள்ளற்-பால என்று கையுறை பாராட்டி நின்ற நிலைமைக்கண் இங்ஙனஞ் சொல்லும்; யாதோவெனின், 'இவ்விடம் என்னையரானுந் தன்-னையரானும் பல்காலும் புகுதரப்படுவதோரிடம், நம்மைக் கண்டால் ஏதஞ்செய்வர், கூற்றினுங் கடுஞ்சினத்த ராகலான்; நீர் உடையதோர் குறை உண்டேயெனின், அகன்று நின்று முடித்துக்கொள்ளற்பாலீர்' என்னும்; அதற்குச் செய்யுள்:

[படைத்து மொழியான் மறுத்தல்]

'பொன்னயர் வேங்கையம் பூந்தழை யேந்திப் புரிந்திலங்கு
மின்னயர் பூணினை வாரல் சிலம்ப விழிகுத்தொன்னார்
மன்னயர் வெய்தவை வேல்கொண்ட வேந்தன மாந்தையன்னாள்
தன்னயர் பல்கால் வருவர்நண் ணன்மினித் தண்புனத்தே.'(ககஉ

'பூட்டியன் மாநெடுந் தேர்மன்னர் பூலந்தைப் பூவழிய
ஓட்டிய திண்டே ருசிதன் பொதியி னுயர்வரைவாய்
ஈட்டியர் நாயினர் வீளையர் வாளிய ரெப்பொழுதுங்
கோட்டிய வில்லர் குறவர்நண் ணன்மினிக் கொய்புனத்தே.'(ககங)

இது படைத்து மொழி கிளவி ஆயினவாறு என்னையோ எனின், பெரியார்களிடம் எனப்படுவன, பெண்பால்கட்கு உரியவழி ஆண்பால்கள் புகுதலும், ஆண்பால்கட்கு உரிய வழிப் பெண்பால்கள் புகுதலுஞ் செய்யப்படாதன. அவற்றைச் செய்யப்பட்டனவாக இல்லாது படைத்து மொழிந்தமையாற் படைத்துமொழிகிளவி யெனக் கொள்க. அதுகேட்டு ஆற்றாளும்; என்னை, 'இவள் ஒருதிறத்தின் நீக்குதற்கு இவ்வாறு சொல்லுகின்றாள்' என ஆற்றாளாயினான். அவ்வாற்றாமை ஆற்றுவதொன்றனைப் பற்றும்; என்பற்றுமோ எனின், 'இவ்வகை என்கண் ஏதத்திற்குக் கவல்வாள், யான் எய்தாதுவிடின் உள்தாம் ஏதத்திற்குங் கவலும்' என ஆற்றுவானாம்.

குறிப்பு வேறு கோளலும் என்பது — தான் கூட்டம் வேண்டுங் குறிப்பினளாயினுஞ் சொல்லுங் கூற்றுங் குறிப்பும் இன்றி வேண்டாத குறிப்பினளாய்க் காட்டுவது; அதுகண்டும் ஆற்றாளும். என்னை, 'இவளால் இக்குறை முடியாது, யான் அவத்தமே வருந்துகின்றேன்' என இதுகூறியது தானே ஆற்றுதற்குக் காரணம்; 'பிறிது, ஒன்றிற்குப் புடைகவன்று நின்றநிலைமைக்கண் வந்தேன், புடைகவற்றியில்லா நிலைமைக்கண் வந்தால் ஒரு மறுமாற்றஞ் சொல்லும்பிற' என ஆற்றிப் பெயரும். அஃதேயெனின், மேலனவும் எல்லாங் குறிப்பு வேறு கொளலே யல்லவே? இதனையே குறிப்பு வேறுகொளல் எனச் சொல்லியது எற்றிற்கோவெனின், அவை யெல்லாஞ் சொன்னிகழ்ச்சியுடைய, இது சொன்னிகழ்ச்சி யின்றிக் கூட்டம்

வேண்டாக் குறிப்பினளாவது எனக் கொள்க. இனிப், பிறர், 'குறிப்பு வேறு கொளலும்' என்பதனைச் சொல்லுமாறு : 'தன் குறிப்பினளன்றி நின்றாட்கு என் சொல்லிச் செல்கேன் ?' என்னும் ; அதற்குச் செய்யுள் :

[தலைவி தன் குறிப்பினளல்லள் என்றல்]

'ஆடியன் மாநெடுந் தேர்மன்ன ராற்றக் குடியழியக்
கோடிய திண்சிலைக் கோனெடு மாறன்றென் கூடலன்னாள்
நீடிய வார்குழ னீலமுஞ் சூடா ணினைந்துநின்றாள்
தோடியல் பூந்தொங்க லாயறி யேன்சென்று சொல்லுவதே.' ()

'நெறிநீ ரிருங்கழி நீலமுஞ் சூடாள்
பொறிமாண் வரியலவ னாடலு மாடாள்
சிறுநுதல் வெயர்வரும்பச் சிந்தியா நின்றாட்
கெறிநீர்த்தண் சேர்ப்பயா னென்சொல்லிச் செல்கோ.'

என இவ்வாறு சொல்ல ஆற்றுனையினன், அச்சொல்லை பற்றுக்கோடாக ஆற்றும் என்பது. என்னை யெனின், 'அவள் குறிப்பினளன்றி நின்றாள்' எனச் சொல்லினமையின் குறிப்பினளாய் நின்றபொழுது சொல்லுவாளாம் என ஆற்றுவானும்.

அன்ன பிறவுந் தலைப்பெயல் வேட்கை முன்னுறு புணர்ச்சிக்கு உரிய என்ப என்பது — அன்ன மற்றுமுள முன்னுறு புணர்ச்சியைப்போலத் தலைப்பெய்விப்பல் என்னுமுள்ளத்தாள் சொல்லுதற்கு உரிய கிளவிகளெனக் கொள்க. அங்ஙனம் ஓதுவான் புகப் பெருகுவது கண்டு சிலவோதிச் சில புறனடுத்தார் அஃது இலக்கணமாகலான் என்பது.

'அன்ன பிறவும்' என்றதனான் இங்ஙனமுஞ் சொல்லும் : 'நீயிர் விருந்தினிராகலான் இவளது அருமையும் பெருமையும் அறியீரன்றே, அவள் தாமரைக் கொட்டையின் அல்லியேபோலக் கிளை புறங்காப்பச் செல்வாள், இந்நிலத்துக்கு மிக்காள் ஒரு தலைமகள், எமக்குக் கண்கூடாகச் செல்வதோர் தெய்வமல்லளோ? அவளைக் கண்ணிற் கண்டு, கையிற் கூப்பித், தலையிற் பணிந்து வழிபட்டுச் செல்வதல்லது எம்போல்வார்களால் ஒரு குறையுறவுணர்த்துந் தன்மையளோ' என்று சொல்லும் ; அதற்குச் செய்யுள் :

[சொல்லற்கு அருமைசாற்றல்]

'புட்புலம் பும்புனற் பூலந்தைப் போரிடைப் பூழியர்கோன்
உட்புலம் போடு செலச்செற்ற வேந்த னுறந்தையன்னாள்
கட்புல னாய்ச்செல்லுந் தெய்வங்கண் டாய்கமழ் பூஞ்சிலம்பா
வட்கில னாகியெவ் வாறு மொழிவனிம் மாற்றங்களே.' (ககடு)

'நெருநலு முன்னா ளெல்லியு மொருசிறைப்
புதுவை யாகலிற் கிளத்த னாணி
நேரிறை வளைத்தோ ணின்றோழி செய்த
ஆருயிர் வருத்தங் களையா யோவென
எற்குறை யுறுதி ராயிற் சொற்குறை
எம்பதத் தெளிய ளல்ல ளெமக்கோர்
கட்காண் கடவு ளல்லளோ பெரும
வாய்கோன் மிளகின் மலையங் கொழுங்கொடி
துஞ்சுபுலி வரிப்புறந் தைவரும்
மஞ்சுசூழ் மணிவரை மன்னவன் மகளே.'

இனி, இவ்வகையுஞ் சொல்லும்: 'நீயிர் பெரியீர், யாம் சிறியேம், நும்மோடு எம்மிடைக் கட்டுரை பொருந்தாது' என்னும்; அதற்குச் செய்யுள்:

[குலமுறை கூறி மறுத்தல்]

'நடைமன்னு மென்றெம்மை நீர்வந்து நண்ணன்மி னீர்வளநாட
டிடைமன்னு செல்வர் நுமரெமர் பாழி யிகலழித்த
படைமன்னன் றன்குல மாமதி போற்பனி முத்திலங்குங்
குடைமன்னன் கோட்டியர் கொல்லியஞ் சாரற் குறவர்களே.'(ககசு)

'உற்றவ ரேநுமக் கொண்புன லூட்டுறு செல்வர்சொல்லிப்
மற்றெம ராய்விடின் வானவன் றூனுடை மானிலையச்
செற்றமர் சேவூர்ப் புறங்கண்ட திங்கட் டிருக்குலத்துக்
கொற்றவன் மாறன் குடகொல்லி வாழுங் குறவர்களே.' (கசஎ)

'இழைவளர் பூணண்ண லீர்ம்புன லூட்டனை நீயெமரோ
மழைவளர் மானக் கவிறுந்தி மாநீர்க் கடையல்வென்ற
தழைவளர் பூங்கண்ணி மூன்றுடை வேந்தன்றண் ணம்பொதியிற்
குழைவள ராரத் தருவியஞ் சாரற் குறவர்களே.' (ககஅ)

'இவளே,
கான நண்ணிய காமர் சிறுகுடி
நீனிறப் பெருங்கடல் கலங்க வுள்புக்கு
மீனெறி பரதவர் மகளே நீயே
நெடுங்கொடி நுடங்கு நியம மூதூர்க்

கடுந்தேர்ச் செல்வன் காதன் மகனே
நிணச்சுறா வறுத்த வுணங்கல் வேண்டி
இனப்புள் ளோப்பு மெமக்குநல னெவனோ
புலவு நாறுதுஞ் செலநின் றீமோ
பெருநீர் விளையுளெஞ் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ வன்றே
எம்ம னோரிற் செம்மலு முடைத்தே.' [நற்றிணை - ௪௫]

என, ஆற்றாமையினான் : ஆற்றாமை. 'நீயிர் பெரியீர், யாம் சிறியேம்' என்பதன்றே சொல்லியது ; யானும் அத்தன்மையே னாக எய்தலாமன்றே என்று ஆற்றாள் என்பது.

இனி, இவ்வாறும் சொல்லும் : அதற்குச் செய்யுள் :

'நீடுநீர்க் கானனெருநலு நித்திலங்கொண் டையவர்தீர்
கோடுயர் வெண்மணற் கொற்கையெம் மூரிவற்றாற் குறைவிலம்யாம்
ஆடுங் கழங்கு மணிவிளக்கு மம்மனையும்
பாடிய வைப்பன வும்பந்தாப் படுவனவும் பனிநீர்முத்தம்.'

'முன்னைத்தஞ் சிற்றின் முழங்குகட லோத மூழ்கிப்பெயர
அன்னைக் குரைப்ப னறிவாய்கடலேயென் றலறிப்பேருந்
தன்மை மடவார் தணந்துகுத்த வெண்முத்தந் தகைசூழ்கானற்
புன்னையரும்பேய்ப்பப்போ வாரைப் பேதுறுக்கும் புகாரேயெம்மூர்.

இன்னும், 'அன்னபிறவும்' என்றதனானே தழீஇக்கொளப் படுவனவற்றிற்குச் செய்யுள் :

[தழையெதிர்தல்]

'வேழம் வினவுதிர் மென்பூந் தழையுங் கொணர்ந்துநிற்றிர்
ஆழ முடைய கருமத்திர் போறி ரணிந்தகலீர்
சோழன் சுடர்முடி வானவன் றென்னன்றான் னாதமன்னர்
தாழ மழையுரு மேந்திய கோன்கொல்லித் தண்புனத்தே.' (௧௧௯)

பாவுற்ற தீந்தமிழ் வேந்தன் பராங்குசன் பாழிப்பற்றாக்
கோவுற்ற வல்லல்கண் டான்கொல்லிச் சாரலெங் கொய்புனத்துள்
ஏவுற்ற புண்ணொடு மான்வந்த தோவென்னு மீர்ஞ்சிலம்பா
மாவுற்ற புண்ணிற் கிடமெருந் தேநின்கை வார்தழையே.' (௧௨௦)

வேனக நீண்டகண் ணாளும் விரும்புஞ் சுரும்பரற்றத்
தேனக நீண்டவண் டார்கண்ணி யாய்சிறி துண்டுதெவ்வர்
வானக மேறவல் லத்துவென் றான்கொல்லி மால்வரைவாய்க்
கானக வாழ்நருங் கண்டறி வாரிக் கமழ்தழையே.' (௧௨௧)

'தடியா ரிடைவடி வேற்கண் மடந்தைதன் சொல்லறிந்தால்
கடியார் கமழ்கண்ணி யாய்கொள்வல் யான்களத் தூரில்வென்ற
வடியா ரிலங்கிலை வேன்மன்னன் வானே றணிந்தவென்றிக்
கொடியான்மழைவளர்கொல்லியஞ்சாரலிக்கொய்தழையே.' (கஉஉ)

'அங்கேழ் மலர்நறுங் கண்ணியி னுயரு ளித்தரினும்
எங்கே ழவருக் கியைவன போலா விருஞ்சிறைவாய் [வாய்ச்
வெங்கே ழயிலலங் கொண்டவன் விண்டோய் பொதியிலின்
செங்கேழ் மலரத் தளிரிளம் பிண்டியின் றீந்தழையே.' (கஉந)

'வேரித் தடந்தொங்க லண்ணல் விருந்தா யிருந்தமையாற்
பூரித்த மென்முலை யேழை புனையிற்பொல் லாதுகொல்லாம்
பாரித்த வேந்தர் பறந்தலைக் கோடிப் படப்பரிமா
வாரித்த கோமான் மணிநீர் மலயத்து மாந்தழையே.' (கஉச)

'ஏமாண் சிலைநுதி மேலையு மேற்குமின் றேனகலாப்
பூமாண் கமழ்கண்ணி யாய்நின்ற தொன்றுண்டு பூழியர்கோன்
பாமாண் டமிழன் பராங்குசன் கொல்லிப் பனிவரைவாய்த்
தேமாண் பொழிலி னகத்தன்றி யில்லையித் தேந்தழையே.' (கஉரு)

'கைந்நிலத் துச்சிலை யாற்கணை சிந்திக் கறுத்தெதிர்ந்தார்
செந்நிலத் துப்படச் சீறிய கோன்செழுந் தண்பொதியில்
இந்நிலத் திம்மலை மேலெமர் யாவிருந் தண்சிலம்பா
எந்நிலத் தெம்மலை மேலவிச் சந்தனத் தீந்தழையே' (கஉசு)

இவையெல்லாம் ஏற்கச்சொல்லிக் கொள்க, மேலனபோல.

அஃதே யெனின், இவற்கு முடிக்கக் கருதுவாள் இவ்வாற்றான் இவனை வருத்துவது எற்றிற்கோ எனின், தன்கண் நாணுக் கெடுந் துணையுங் குறியாடி, நாணினது நீக்கத்துக்கட் கொண்டுநிலை கூறுவாள் என்பது. அஃதே யெனின், முன்னுறு புணர்ச்சிபோலத் தலைப்பெய்விப்பல் என்னும் வேட்கை அவட்கு உரிய என்றமையான், முன்னுறுபுணர்ச்சியை உணர்ந்தாளோ எனின், உணர்ந்தாளல்லள்; அந்நீர்க்கு வரம்பெய்தப் புணர்ப்பல் என்னும் நினைப்பினள்.

அந்நினைப்பினை ஆசிரியன் முன்னுறுபுணர்ச்சியா ஒப்பித்தான் என்பது. (கஉ)

[கரு]

**குறையுறு புணர்ச்சி தோழி தேஎத்துக்**
**கிழவிக் கில்லை தலைப்பெய லான.**

என்பது என்னுதலிற்றோ எனின், தலைமகளது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**இதன் பொருள் :** குறையுறு புணர்ச்சி என்பது — குறையுறவினாற் புணரும் புணர்ச்சி என்றவாறு ; தோழி தேஎத்து என்பது — தோழிமாட்டு என்றவாறு ; கிழவிக்கு இல்லை என்பது — தலைமகட்கு இல்லை என்றவாறு ; தலைப்பெயல் ஆன என்பது — தலைப்பெய்தற்கு இலக்கணம் என்றவாறு.

தோழிபக்கல்நின்ற குறையுறவினானாயகூட்டம் தலைமகட்கு இல்லை என்றவாறு. அஃதியாங்ஙனமோ எனின், 'இங்குவந்து ஒழுகாநின்றான் ஒருதோன்றல் உளன், அவன் என்னினாயதோர் குறையுடையான் போலும், அக்குறை இன்றியமையான்; அக்குறை முடித்தருளாயாயின் என்னைக் குற்றேவல் இழத்தி' என, அவ் விழப்பிற்கஞ்சிக் குறைநேர்ந்து தலைமகனை ஏற்றுக்கொண்டு கூடுங் கூட்டம் இல்லை, வழக்கினுட்போல என்பது.

'அவ்வியல் பல்லது கூட்டக் கூடல்
எவ்விடத் தானுங் களவிற் கில்லை.' [இறையனார் - ச]

என அமையாதோ எனின், அதுசொல்லிப் போந்து,

'உள்ளத் துணர்ச்சி தெள்ளிதிற் கரந்து
கிழவோ டேஎத்துக் குறையுறூஉ முளவே
குறிப்பறி வுறூஉங் காலை யான.' [இறையனார் - க0]

என்றது சொல்லவே, இவ்வகை தோழியாற் குறையுறப் புணரும் புணர்ச்சி உண்டுகொல்லோ என்று ஐயமாமென்று மேலதனையே வலியுறுத்தற்குச் சூத்திரம் வேண்டிற்று என்பது.

**இனி, ஒரு சாரார் சொல்லுமாறு :** 'குறையுறுபுணர்ச்சி தோழி தேஎத்துக் கிழவிக்கில்லை' என அமையாதோ, தலைப்பெயலான என்றது எற்றிற்கோ எனின், தோழியிற் கூட்டந்தான், தலை இடை கடை என, மூன்று வகைப்படும். அவற்-

றுள் தலைக்கண்ணே அறியகில்லாது இடையாந்தரத்தும் இறுதிக்கண்ணும் எல்லாம் 'இவள்கூட்டவே கூடுகின்றேன்' என்பதனை அறிந்தே கூடும். இங்ஙனம் இல்லாவிடத்து,

'     *     *     *     *

அருள்புரி நெஞ்சமோ டெஃகு துணையாக
வந்தோன் கொடியனு மல்லன் றந்த
நீதவ றுடையையு மல்லை நின்வயின்
ஆனு வரும்படர் செய்த
யானே தோழி தவறுடை யேனே.' [அகம் - எஉ]

என்னுமாறு உண்டோ என்பது. மற்றும் இப்பெற்றியே வந்தனவெல்லாங் கொள்க. (கங)

[கச]

## தோழிக் குரியன கோடாய் தேஎத்து மாறுகோ ளில்லா மொழியுமா ருளவே.

என்பது என்னுதலிற்றோ எனின், போய் அறத்தொடுநிலை உணர்த்துவார் அவ்வறத்தொடு நிலைநிற்கும் முறைமை யுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : தோழிக்கு உரியன என்பது — தோழி சொல்லுதற்கு உரிய என்றவாறு ; கோடாய் தேஎத்து என்பது — செவிலித் தாய்மாட்டு என்றவாறு ; மாறுகோள் இல்லா மொழியுமார் உளவே என்பது — மாறுகொள்ளாமை சொல்லுஞ் சொற்களும் உண்டு என்றவாறு.

எற்றினொடு மாறுகொள்ளாமையோ எனின், தாயறிவினொடு மாறுகொள்ளாமையும், தலைமகள் பெருமையொடு மாறுகொள்ளாமையும், தலைமகள் கற்பினொடு மாறுகொள்ளாமையும், தோழிதனது காவலொடு மாறுகொள்ளாமையும், நாணினொடு மாறுகொள்ளாமையும், உலகினொடு மாறுகொள்ளாமையும் எனக் கொள்க. என்னேத்துக்கண்ணோ எனின்,

'காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்' [இறையனார் - உக]

என்னுஞ் சூத்திரத்துட் சொல்லப்பட்ட நான்கு இடத்தும் வேறுபாடு உண்டாம் ; அஃது எப்பொழுது உண்டாயிற்று

அப்பொழுதே தோழிக்குப் புலனாம்; என்னை, தான் அவள் என்னும் வேற்றுமையிலளாகலான். அவ்வாறாயினவிடத்துத் தோழி எனக்குப் புலனாயினவாறேபோல யாய்க்கும் புலனாம்; ஆயினஞான்று, வாளா ஒழியாள் அறிவாரைவினாவும்; வினாவினவிடத்து, வினாவப்பட்டார் தெய்வத்தினான் ஆயிற்று என்ப.

என்னை, பிறிதொன்று கட்டியுணருந் தன்மைத்தன்று இக்குலமாகலானும், அதுவே சொல்லுதற் பயத்தது தங்கருமமாகலானும், அறியாதேயுஞ் சொல்லுப. சொல்ல, இவள் தெய்வத்திற்கு வழிபாடு செய்விக்கும்; செய்விக்கத், தலைமகட்குக் கற்பழியும்; என்னை, தன் தலைமகனையன்றிப் பிறிதோர் தெய்வம் வணங்கார் பத்தினியாராகலின். தெய்வத்தை வணங்கக் கற்பழியும் என்று தலைமகள் ஆற்றாளாம். அல்லதூஉம், 'ஒழுக்கக் குற்றப் பாட்டினீங்கி ஓங்கிவாராநின்ற தொல்குலம், மணிக்கலங் கதுவாய்ப்பட்டதுபோல, யான் தோன்றி இவ்வகை அணங்காட்டு அறியாது அணங்காட்டு எடுத்துக்கொள்ளப்பட்டது' எனவும், 'யாம் உற்றது நிரப்பப்பாட்டானும் வேலன்றனது வெறியாட்டு வலத்தினானும் எம்பெருமானை வெறிக்களத்துக் கொண்டுவருங்கொல்லோ' என்னும் பேரச்சத்தினானும், 'எம்பெருமானை அவ்வெறிக்களத்துக் கொண்டுவருகல்லாது என்கண் நின்ற வேறுபாட்டைப் புறத்தார்க்குப் புலனாகாமை மறைப்பதுகொல்லோ' எனவும், அங்ஙனம் மறைக்க அதனைக் கேட்டு, எம்பெருமான், 'என்னினாகிய வேறுபாடு பிறிதொன்றினானும் நீங்கும்போலும்' என்று உட்கொள்ளுமெனவும் தலைமகள் ஆற்றாளாம் என்று தோழி ஆற்றாளாம்.

ஆற்றாளாயினாளது ஆற்றாமை ஆற்றுவதொன்றினைப் பற்றும்; என்னையெனின், ஆற்றுவது பிறிதின்மையின், 'யாய் அறிவாரை வினாவுமிடத்து, என்னை வினாவி, யான் அறியேன் என்றதன்புறத்தாம் பிறரை வினாவுவது; அங்ஙனம் என்னை வினாவினவிடத்து இன்னது சொல்லுவேன்' என்று கூட்டமில் நாட்டவகையாற் சிந்தித்துக்கொண்டு இருந்தாள்; இருந்த நிலைமைக்கண், தாய் பிற்றைஞான்று சிறுகாலை படிமக்கலத்தொடும் புக்காள், மகளை அடியிற்கொண்டு முடிகாறும் நோக்கி, 'அன்னாய், என் மகள் பண்டையளல்லள்; ஆகையால், இவ்-

வேறுபாடு எற்றினுனாயிற்று, நின்னால் அறியப்படுவதுண்டோ?' என்னும்; என்றவிடத்து, இவள் அன்றுகொண்டு என்னால் அறியப்படுவதாஞ் சிறிதுண்டு; அஃதியாது எனின், 'எம்மைக் கூழைக்கற்றைக் குழவிப் பிராயத்து மாழைகலந்த ஏழைநீர்மை யாரொடு நாட் கோலஞ்செய்து, "விளையாடிவம்மின்" என்று போக்கினுய்; போனவழி, யாம் போய் ஒரு வெண்மணல் பரந்த தண்மலர்ப்பொழிலிடை விளையாடாநின்றேமாக, ஒரு தோன்றல் ஒரு சுனைக்குவளைப் பூக்கொண்டு அவ்வழியே போந்தான்; போதர, நின்மகள் அவனை நோக்கிப், "அக்குவளைப் பூவை என் பாவைக்கு அணியத் தம்மின்" என்றாள்; அவனும் பிறிதொன்றுஞ் சிந்தியாது கொடுத்து நீங்கினான்; இஃது அறியாக் காலத்து நிகழ்ந்தது' என்னும்; அதற்குச் செய்யுள் :

[அறத்தோடு நிற்றல்]

'கந்தார் களிறு கடாய்ச்செந் நிலத்தைக் கறுத்தெதிர்ந்து
வந்தா ரவியவை வேல்கொண்ட கோன்கன்னி வார்துறைவாய்ப்
பந்தார் விரலிதன் பாவைக்கு வேண்டப்பைம் போதொருவர்
தந்தார் தரவவை கொண்டணிந் தாளித் தடங்கண்ணியே.' (கஉஎ)

'திண்போ ரரசரைச் சேவூ ரழிவித்த தென்னனன்னீர்
மண்போ யளிக்குஞ்செங் கோன்மன்னன் வையைநன் றுறையாய்
கண்போல் குவளையம் போதுங்கொர் காளைகைக் கண்டிரப்பத்
தண்போ துவன்கொடுத் தானணிந் தாளித் தடங்கண்ணியே.' ()

'இஃது அறிவது அறியாக்காலத்து நிகழ்ந்ததனை அறிவதறிந்து, கொண்டார்க்குரியார் கொடுத்தார் என்பதும், உற்றார்க்குரியார் பொற்றொடி மகளிர் என்பதும் நினைந்து, அவனை வழிபடாது பிறிதொன்று ஆவதாயின், இக்குலத்துக்கு வடுவாங்கொல்லோ எனக் கருதினமையான், நின்மகள் வேறுபட்டது' என்னும். எனவே, தாயறிவினொடு மாறுகொள்ளாதாயிற்று, 'விளையாடி வம்மின்' என்றமையின்.

இனிப், பெருமையொடு மாறுகொள்ளாதாயிற்று, அக் காலத்து நற்செய்கை செய்ததனை இக்காலத்து நினைந்தமையின்.

இனிக், கற்பினொடு மாறுகொள்ளாதாயிற்று, இவ்வாறன்றிப் பிறிதொன்று ஆயின இடத்துக் குடிக்கு வழுவாம் எனக் கருதினமையின்.

இனித், தனது காவலொடு மாறுகொள்ளாதாயிற்று, இருவரும் இருந்த நிலைமைக்கண் நிகழ்ந்தது என்றமையின்.

இனி, நாணினொடு மாறுகொள்ளாதாயிற்று, அறிவது அறியாக்காலத்து நிகழ்ந்தது என்றமையின்.

இனி, உலகினொடு மாறுகொள்ளாதாயிற்று, உற்றார்க்கு உரியார் பொற்றொடி மகளிர் என்றமையின். இது மாறுகோள் இல்லாமொழியின் நிகழ்ந்தவாறு. இது பூத்தருபுணர்ச்சி.

இனிக், களிறுதரு புணர்ச்சிக்குச் செய்யுள் :

'உறுகற் புடைமையி னுள்ளுமிப் பேதை யுசிதனென்னா
மறுகத் திறலுரு மேந்திய கோன்கொல்லி மால்வரைவாய்த்
துறுகற் புனமுஞ் சிதைத்தெங்க டம்மையுந் துன்னவந்த
சிறுகட் களிறு கடிந்திடர் தீர்த்த சிலம்பனையே.' (கஉக)

'கனஞ்சேர் முலைமங்கை யுள்ளு றிப் போதுங் கடையலொன்னா
மனஞ்சேர் துயர்கண்ட வானவன் மாறன்மை தோய்பொதியிற்
புனஞ்சேர் தினையுங் கவர்ந்தெம்மைப் போகா வகைபுகுந்த
சினஞ்சேர் களிறு கடிந்திடர் தீர்த்த சிலம்பனையே.' (கஙㅇ)

இவ்வகையும் அவ்வாறே சொல்லிக் கூட்டுக.

இனிப், புனல்தருபுணர்ச்சி ; அதற்குச் செய்யுள் :

'ஓங்கிய வெண்குடைப் பைங்கழற் செங்கோ லுசிதன்வையை
வீங்கிய தண்புன லாடி விளையாட் டயர்பொழுதின்
தேங்கிய தெண்டிரை வாங்க வொழுகுநின் சேயிழையாள்
நீங்கிய போதருள் செய்தனன் வந்தோர் நெடுந்தகையே.' (கஙக)

'சின்னாண் மறந்திலம் யாமுந்தென் சேலூர்ச் செருமலைந்த
மன்னாள் செலச்செற்ற வானவன் மாறன்வை யைத்துறைவாய்ப்
பொன்னார் புனலெம்மை வாங்கும் பொழுதங்கோர் பூங்கணைவேள்
அன்னா னொருவ னணைந்தெமக் குச்செய்த வாரருளே.' (கஙஉ)

இவையும் அவ்வாறே உரைத்துக்கொள்க.

'காமர் கடம்புனல் கலந்தெம்மோ டாடுவா
டாமரைக் கண்புதைத் தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலா
னீணாக நறும்பைந்தார் தயங்கப்பாய்ந் தருளினாற்
பூணாக முறத்தழீஇப் போதந்தா னகனகலம்

வருமுலை புணர்ந்தன வென்பத னென்னோழி
பருமமை தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையளே.'
[கலி. குறிஞ்சி - ரு]

என, இதுவும் புனல்தருபுணர்ச்சி.

இனி, உம்மையான் மாறுகோளில்லாக் குறிப்பும் உள எனக் கொள்க. அக்குறிப்பு நிகழுமாறு: இவளை இறைவாகே அறிவாரை வினவினவிடத்து, அறிவார், 'தெய்வத்தினான் ஆயிற்று' என்ப; என்றக்கால், தெய்வத்திற்கு வழிபாடு செய்விப்பான் வேலனைக் கூவி வெறியாட் டெடுத்துக்கொண்டு வெறியாடுமிடத்து, வேலற்குச் சொல்லுவாளாகச் சொல்லும்: அதற்குச் செய்யுள்:

[வெறி விலக்கல்]

'வண்டா ரிரும்பொழில் வல்லத்துத் தென்னற்கு மாறெதிர்ந்த
விண்டா ருடலின் மறியறுத் தூட்டி வெறியயர்ந்து
தண்டார் முருகற் றருகின்ற வேலதண் பூஞ்சிலம்பன்
ஒண்டா ரகலமு முண்ணுங்கொ லோநின் னூறுபலியே.' (கருரு)

'முருகயர்ந்து வந்த முதுவாய் வேல
சினவ லோம்புமதி வினவுவ துடையேன்
பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு
சிறுமறி கொன்றிவ ணறுநுத னீவி
வணங்கினை கொடுத்தி யாயி னணங்கிய
விண்டோய் மாமலைச் சிலம்பன்
தண்டா ரகலமு முண்ணுமோ பலியே.' [குறுந் - ௩௬௨]

என்பனவற்றால் என் சொல்லப்பட்டதாம்? சிலம்பன் தண்டாரகலமும் பலியுண்ணுமேல், தக்கது நின்னாற் செயப்படுகின்றது என்றவாறு. அதுகேட்டுத் தாய், 'என் சொல்லியவாறோ' என்னும், அவள் குறிப்பறிதற்கு; என்றவிடத்து, மேற் சொல்லியவாறே அறத்தொடு நிற்பாளாம். இனித், தெய்வம் எறியது கண்டு அருகுநின்றார்க்கு உரைப்பாளாய் உரைக்கும்; அதற்குச் செய்யுள்:

[அறிவிலன் வேலனென் றயலோர்க்குரைத்தல்]

'வாரணங் குங்கழல் வானவன் மாறன்வண் கூடலன்ன
ஏரணங் கும்பிள மென்முலை யாட்கிருந் தண்சிலம்பன்
தாரணங் காத லறிந்தும் வெறியின்கட் டாழ்ந்தமையான்
ஆரணங் காயினு மாகவிச் செவ்வே லறிவிலனே.' (கருச)

'பொன்னணங் கீர்ம்புனற் பூலந்தை யொன்னார் புலாலனைந்த
மின்னணங் கீரிலை வேற்றென்னன் கோன்விய ஞட்டவர்முன்
தன்னணங் கன்மை யறிந்தும் வெறியின்கட் டாழ்ந்தமையான்
மன்னணங் காயினு மாகலிச் செவ்வேண் மதியிலனே.' (௧௨௫)

'கடவுட் கற்சுனை யடையிறந் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தட்
குருதி யொண்பூ வுருகெழக் கட்டிப்
பெருவரை யடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி யின்னியத் தாடு நாடன்
மார்புதர வந்த படர்மலி யருநோய்
நின்னணங் கன்மை யறிந்து மண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே.' [நற்றிணை - ௩௪]

என, இவ்வாறு சொல்லக் கேட்ட தாய், 'என் சொல்லியவாறோ' என்னும், அவள் குறிப்பறிதற்கு: என்றவிடத்து, மேற்சொல்லியவாறே அறத்தொடு நிற்பாளாம். (௧௪)

[௧௫]

முற்படப் புணராத சொல்லின் மையிற்
கற்பெனப் படுவது களவின் வழித்தே.

என்பது என்னுதலிற்றோ எனின், கற்பிலக்கணமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : முற்படப் புணராத சொல் இன்மையின் என்பது — மொழிமாற்றுச் சூத்திரம். அதனைப், 'புணராத முற்படச் சொல் இன்மையின்' என்று மொழிமாற்றிக்கொள்க; கற்பு எனப்படுவது களவின் வழித்தே என்பது — கற்பு என்பதற்குச் சிறப்புடையது களவின்வழித்து என்றவாறு.

என்னை, புணராதமுன் சொல் இன்மையின், கற்பென்று சிறப்பிக்கப்பட்ட ஒழுக்கம் களவென்னும் ஒழுக்கத்தின்வழித்து என்றவாறு.

களவின்கட் புணராதமுன் சொல் இல்லை எனவே, புணராதமுன் சொல் நிகழும் என்பாரை மறுத்தாராம். இனிப் புணராதமுன் சொல் இல்லை எனவே, புணர்ச்சியுள்ளும் புணர்ச்சிப்பின்னும் சொல் உள எனப்பட்டதாம். ஆயினும், புணர்ச்சியுட் புனைவல்லை அவர்க்குத் துப்பாயினல்லது என்பது.

இனிப், புணர்ச்சியின்பின் சொற்கள் பலவும்; அவை யாவையோ எனின், நயப்புணர்த்தினவும் பிரிவச்சமும் வன்புறையும் எனக் கொள்க. அப்பெற்றிப்பட்ட களவொழுக்கின்வழி நிகழ்ந்து, பின்னைத் தமராற்பெற்று எய்துதல் கற்பு எனக் கொள்க. எனவே, இவ்வாற்றானும் உலகக்களவன்று என்பது பெற்றும். என்னை, உலகக்களவு புணராதமுன்னுஞ் சொன்னிகழ்ச்சி யுடைமையின். கற்புக் களவின்வழித்து என்னுது, 'எனப்படுவது' என்றது எற்றிற்கோ எனின், களவின்வழி நிகழாதேயும் உண்டு உலகக்கற்பு. அஃது அத்துணைச் சிறப்பிற்றன்று என்றற்குச் சொல்லப்பட்டது. எனவே, இச்சூத்திரம் பெரும்பொருட்டுக் களவினையும் கற்பினையும் கூறியிற்று என்பது. (கரு)

[ககா]

களவினுட் டவிர்ச்சி காப்புமிகி னுரித்தே
வரைவிடை வைத்த காலை யான.

என்பது என்னுதலிற்றோ எனின், களவுகாலத்துச் சென்று ஒழுகாநின்ற தலைமகற்கு இடையிடும் இடையீடு இவையென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: களவினுள் தவிர்ச்சி என்பது — களவு காலத்துத் தலைமகள் புணராது இடையிடும் இடையீடு என்றவாறு; தலைமகளை எய்தாத நாள் எனினும் ஒக்கும்; காப்பு மிகின் உரித்தே என்பது — காப்புக் கைமிக்கவழியும் உரித்து என்றவாறு; வரைவிடை வைத்த காலை ஆன என்பது — வரைவிடைவைத்த காலத்தானும் உரித்து என்றவாறு.

களவினுள் தவிர்ச்சி காப்புமிக்க வழியும் உரித்து, வரைவிடைவைத்த காலத்துக்கண்ணும் உரித்து என்றவாறு.

காப்பு என்பது — தாய் துஞ்சாமை, நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல், கூகை குழறல், கோழி குரற்காட்டல் என இவை.

மிகுதல் என்பது பெருகுதல் : அஃது ஒன்று பன்னாளும் வருதலும், பல மயங்கி வருதலும், முறையாற் றோன்றி வருதலும் என இத்திறத்தான் ஆம் என்பது.

அவற்றுள், தாய் துஞ்சாமை என்பது — இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற காலத்து ஒருநாள் தாய் கண்படாளாகி, மகளை அறிவும் ஆசாரமும் கற்பித்தற்பொருட்டாக இருக்கும்; இருந்தக்கால் அதுவும் இடையீடாம் என்பது.

நாய் துஞ்சாமை என்பது — வழியறி ஞமலி பட்டதற்கு எப்பொழுதுங் குரைத்தக்கால் அதுவும் ஆகாது என்றவாறு. என்னைகொல்லோ இவ்விடத்துப் பல்காற் குரையாநின்றது என ஆராய்ச்சி வரும், அதனால் இடையீடாம் என்பது.

ஊர் துஞ்சாமை என்பது — ஊர்கொண்ட பெருவிழா நாளாய்க் கண்படை பெறாதாயாக, அதுவும் இடையீடாம் என்பது. அவை, மதுரை ஆவணியவிட்டமே, உறையூர்ப் பங்குனியுத்திரமே, கருவூர் உள்ளிவிழாவே என இவைபோல்வன. பிறவும் எல்லாம் அப் பெற்றியானபொழுதும் இடையீடாம் என்பது.

காவலர் கடுகுதல் என்பது — காவலர் என்பார் காப்பாளர், ஊர்காத்தல் இடங்காத்தல் என இவற்றைக் கடுது காத்துப் என்று, காவலாளர் எமஞ்சூழ்ந்து விளக்கினொடு திரிதருவாரன்றே, அப்பெற்றியானபொழுதும் இடையீடாம் என்பது.

நிலவு வெளிப்படுதல் என்பது — நிலாப் பகல்போலும் பெற்றித்தாய் ஞாயிறு பட்டவாறே எழுந்து, ஞாயிறு எழுந்துணையும் விளக்கினதொன்றாய் இடையீடாம் என்பது.

பிறவும் அன்ன ; இவற்றுக் கெல்லாம்,

'காமம் மிக்க கழிபடர் கிளவி' [இறையனார் - ௩௦]

என்னுஞ் சூத்திரத்துட் செய்யுள் காட்டுதும்.

'வரைவிடை வைத்த காலை யான' என்பதே சூத்திரமாகின், காப்புமிகினும், வரைவிடை வைத்த காலையும் களவினுள் இடையீடாம் என்பது பொருந்தாது, வரைவிடைக் காப்புமிகினும் இடையீடாம் என்பதன்றி யெனின், அஃதே வரைவிடை வைத்த காலை யானும் என்னும் உம்மை ஈறுதிரிந்து, 'வரைவிடை வைத்த காலையான' என நின்றது. உம்மை இடைச்சொல்லாகலின் ஈறு திரியும்:

என்னை,

'தம்மீறு திரிதலும் பிறிதவ ணிலையலும்
அன்னவை யெல்லா முரிய வென்ப.' [இடையியல் - ரு]

என்பது இலக்கணமாகலான் என்பது. (கசு)

[கஎ]

அல்லகுறிப் படுதலு மவ்வயி னுரித்தே
யவன்வர வறியுங் குறிப்பி னான.

என்பது என்னுதலிற்றோ எனின், இதுவும் களவினுள் இடையீடு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: அல்ல குறிப்படுதலும் என்பது — குறியல்லதனைக் குறியாகக் கருதலும் என்றவாறு; குறியாமாறு போக்கிச் சொல்லுதும்; அவ்வயின் உரித்தே என்பது — இதுவும் களவினுள் இடையீடாதற்கு உரித்து என்றவாறு; அவன் வரவு அறியுங் குறிப்பின் ஆன என்பது — அவன் வரவினை அறியுங் குறிப்பு அவனானன்றிப் பிறிதொன்றினான் நிகழ்ந்தவிடத்து என்றவாறு.

அஃதாமாறு, தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற காலத்து ஒரு நாள், தலைமகன் செல்லாமே அவனாற் செய்யப்படுங் குறிப்புக்கள் தாமே வெளிப்பட்டன. அவை புன்னைக்காய் நீரிலிடுதலும், புள்ளெழுப்புதலும் என இவை.

அவை வேறாய் நிகழுமாறு: புன்னைக்காய் மூக்கு ஊழ்த்தும் விழும், வளி எறியவும் விழும், புள் துளக்கவும் விழும்.

புள் எழும்புமிடத்து வெருவியும் எழும், வேற்றுப்புள் வரவும் எழும்.

இவைகண்டு இவனின் ஆயின எனக் கருதிக் கொண்டு போந்து, அவ்விடம் புகுந்து அவனினாகாமை உணர்ந்துபோந்து, மனையகம் புகுந்த பின்னை, அவன் வந்து அக்குறி செய்யும்: செய்தக்கால் இரண்டாவது கொண்டுபோதல் ஆகாதன்றே: என்னை, 'சிறிது முன்னைப் போனானன்றே, அக்கை புடைபெயராமைப் போகின்றார்' என்று உற்றார் பின் நின்று ஆராய்தலான் என்பது. அகத்தினின்று, 'நின்னின் ஆகாதன கண்டு வந்து நின்று போந்தோம்' என்பதனை அவனுக்கு உரைக்கும், திங்கண்மேலிட்டானும் அன்னத்தின்மேலிட்டானும் என்பது: அதற்குச் செய்யுள் :

[அல்லகுறிப்பாட்டினை அண்ணற்குணர்த்தல்]

'அறைவா யதிர்கழல் வேந்திச லாற்றுக் குடியழித்த
கறைவா யிலங்கிலை வேன்மன்னன் கன்னியங் கானலின்வாய்
இறைவா யணிவளை யாயென்கொ லோவிவ் விராவினெல்லாம்
துறைவா யிளம்புன்னை மேலன்ன மொன்றுந் துயின்றிலவே.' ()

'பூநின்ற வேன்மன்னன் பூலந்தை வான்புகப் பூட்டழித்த
வேனின்ற வெஞ்சிலை வேந்த னிரணன் தகனறியும்
பானின்ற வின்றமிழ் முன்னகல் லாய்கம்பைக் கானலின்வாய்த்
தூநின்ற மென்சிறை யன்னமொன் றொன்றுந் துயின்றிலவே.' ()

'புன்னை மயப்பினும் பூஞ்சினை தோயினும்
பின்னிருங் கூந்தலென் றோழி நடையொக்கும்
அன்ன நனையாதி வாழி கடலோதம்.'

'அரவளை மென்றோ ளணுங்கத் துறந்து
கரவல மென்றோரைக் கண்ட திலையால்
இரவெலா நின்றுயா லீர்ங்கதிர்த் திங்காள்.'

இவற்றுள் யாதானும் ஒன்றன்மேல் வைத்துச் சொல்ல, 'இரவெலாம் என்பாலாராய்நின்று துயிலாராயினார் போலும்: என்னை, தாம் துயிலாதுநின்றாரன்றே துயிலாதன அறிவார்: இவற்றின் துயிலெழவினை எனது குறியென வந்து பெயர்ந்தார்போலும்' என ஆற்றானாய்ப் பெயரும். பெயர்வான் இறந்து-

படாளாயிற்று எற்றிற்றோ எனின், இறந்துபடாளன்றே, 'யான் இறந்துபடின் இவளும் இறந்துபடும்' எனக் கருதி யென்பது. அவ்வகை பெயர்வான் தன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லும்; அதற்குச் செய்யுள் :

[குறியெதிர்பெறாது நெஞ்சோடு கூறல்]

'ஒளியார் திருநுத லாளை யெளியனென் றுள்ளிவந்து
விளியா வருந்துயர் செய்தமை யால்விழி ஞாத்துவென்ற
களியார் களிற்றுக் கழனெடு மாறன் கடிமுனைமேல்
தெளியா வயவரிற் றேய்வா யளியவென் சிந்தனையே.' [௧௩௮]

'குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை
அயிரை யாரிரைக் கணவந் தாஅங்குச்
சேய ளரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே.' [குறுந் - ௧௨௮]

எனக் கண்டுகொள்க.

[௧௮]

குறியெனப் படுவ திரவினும் பகலினு
மறியக் கிளந்த விடமென மொழிப.

என்பது என்னுதலிற்றோ எனின், குறியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : குறியெனப் படுவது என்பது — குறியென்று சொல்லப்படுவது என்றவாறு ; இரவினும் பகலினும் என்புழி ஆயினும், மொழிமாற்றிப் பகலின்கண்ணும் இரவின்கண்ணும் எனக் கொள்க, பகற்குறி நிகழ்ந்த பின்னை இரவுக்குறி நிகழற் பாலதாகலான் ; அவ் வொழுக்கம் நிகழ்ந்த முறைமை நோக்கி மொழிமாற்றிச் சூத்திரம் உரைக்கப்படும். அஃதே யெனின், குறியெனப்படுவது பகலினும் இரவினும் என அமையாதோ ? என்பது கடா ; அதற்கு விடை, அவ் வொழுக்கம் மறைத்தலைத் தனக்கு அணிகலமாக உடைத்தாகலான் இரவுக்குறி பொருந்தியதனைப் பகற்குறி பொருந்திற்று என்பதனை உணர்த்துதற்பொருட்டுச் சூத்திரத்துள், 'இரவினும் பகலினும்,

என இரவுக்குறி முன்வைக்கப்பட்டது: அறியக் கிளந்த இடம் என மொழிப என்பது — உணரச் சொல்லப்பட்ட இடம் எனச் சொல்லுப ஆசிரியர் என்றவாறு.

யார்க்கு யாரோ சொல்லுப எனின், தோழி தலைமகற்குச் சொல்லியது. அஃதாமாறு, தலைமகன் தோழியை இரந்து குறையுற்றுப் பின்னின்ற இடத்து ஆற்றுவன சில சொற் சொல்லி ஆற்றுவித்துக் குறைநயப்பித்து. அவ்வாறு நின்ற தோழியைப் பின்னுந் தலைமகன் எதிர்ப்படும்: எதிர்ப்பட்டானை, 'இன்ன இடத்து வா' என்று குறிப்பினான் உணர்த்தும். அதற்குச் செய்யுள் :

[குறியிடந் தலைவன் கொள்ளக்கூறல்]

'மருள்போல் சிறைவண்டு பாடச் சிலைவண்ண வார்மணன்மேல்
இருள்போல் கொழுநிழற் பாயறிச் சார்கட்கின் றீந்தமிழின்
பொருள்போலினிதாய்ப் பகழ்மன்னன்மாறன்பொதியிலின்கோன்
அருள்போற் குளிர்ந்தன்ன பூந்துன்னு நீர்த்தெங்க ளாடிடமே.'()

'காவியர் தண்டுறை சூழ்ந்து கடையற் கறத்தவர்மேல்
தூவியம் பெய்தவன் றெண்டிவண் டார்புன்னைத் தூமலர்கள்
தாவிய வெண்மணற் றாயறிச் சார்கட்குத் தண்டமிழின்
ஆவியும் போல வினிதா யுளதெங்க ளாடிடமே.' (கசO)

அதுகேட்டு, 'இவ்விடத்துக்கண் வா' என்றாள் என்பதனை உணர்ந்து, அவ்விடத்துச் செல்லும். செல்லத், தலைமகன் வரவு உணர்ந்து, தோழி தலைமகளைக் குறியிடத்துக் கொண்டுசென்று, 'யான் செங்காந்தட்பூக் கொண்டு வருவேன், அவ்விடத்துத் தெய்வமுடைத்து, நின்னை வரப்படாது, நீ அவ்வளவும் இப் பொழிலகத்தே நில்' என்று நிறீஇ நீங்கும். அதற்குச் செய்யுள் :

[குறியிடத்துய்த்து மறைபவள் உரைத்தல்]

'அஞ்சிறை வண்டறை காந்தளம் போதுசென் றியான்றருவேன்
பஞ்சுறை மெல்லடி யாய்வரப் பாற்றன்று பாழியொன்னார்
நெஞ்சுறை யாச்செற்ற வேன்மன்னன் னேரி நெடுவரைவாய்
மஞ்சுறை சோலை வளாய்த்தெய்வ மேவும் வரையகமே.' (கசக)

'நீவிரை கோதையிங் கேநினின் றால்வரற் பாலதன்று
தீவிரி காந்தள்சென் றியான்றரு வேன்றெய்வ மங்குடைத்தால்
பூவிரி வார்பொழிற் பூலந்தை வானவன் பூவழித்த
மாவிரி தானையெங் கோன்கொல்லி சூழ்ந்த வரையகமே.' (கசஉ)

'செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய் குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.' [குறுந் - க]

இவ்வாறு சொல்லி நீங்கும். நீங்கத், தலைமகள் அப்பொழிலிடத்து நிற்கும்; நின்றாளைத் தலைமகன் எதிர்ப்பட்டுப் புணரும்; புணர்ச்சியிறுதிக்கண் தோழி வந்து, 'நின் கைபோலக் காந்தள் மலர்ந்தன கொண்டுவந்தேன், எம்பெருமாட்டி, நீட்டிக்காளென்று சீறியருளாது போந்தருள்' என்று, அவளைக் கொண்டுபோய் ஆயவெள்ளத்தொடுங் கூட்டும். இது பகற்குறியாமாறு.

இவ்வகை பகற்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகனைக் காணும்பொழுதிற் காணாப்பொழுது பெரிதாகலான் ஆற்றாளாய், நெஞ்சு மிக்கது வாய்சோர்ந்து, கடலிற்காணுங், கானலிற்காணும், புள்ளிற்காணும், நெஞ்சிற்காணும், வறிதே குழவி அழுதாற்போல, ஒரு சொற் சொல்லும்; அவ்வகை சொல்லுமதற்குச் செய்யுள் :

[நெஞ்சோடு வருந்தல்]

'பெருமா மணிமுடி மன்னரைப் பூலந்தைப் பூவழித்த
கருமா மணிவண்ணன் கோனெடு மாறன் குமரிமுந்நீர்
அருமா மணிதிகழ் கானலின் வாய்வந் தகன்றகொண்கன்
திருமா மணிநெடுந் தேரொடுஞ் சென்றதென் சிந்தனையே.' (கசுட)

தலைமகள் அவ்வாறு சொல்லினவிடத்துத் தலைமகன் கேட்பின் வரைந்து புகுவானாம்; தோழி கேட்பின் தலைமகனை வரைவுகடாவுவாளாம். யாருங் கேட்பாரில்லையாயின், தலைமகள் சொல்லி ஆற்றுவாளாம். மூடியிருந்து வேவதோர் கொள்கலம் மூடியது திறந்தவிடத்து, ஆவி எழுந்து முன் நின்ற வெப்பம் நீங்கினாற்போல, அச்சொற் சொல்ல ஆற்றாமை பண்டையிற் சிறிதளவு படுதலாம்.

இனிப், பகற்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகனைக் காணும் பொழுதிற் காணாப்பொழுது பெரிதாகலான் தலைமகள் ஆற்றாளாயினவிடத்துத், தோழி அவள் ஆற்றாமைக்குப் பரிந்து, உடனுயிருந்த புள்ளுநோக்கி இவைகண்டும் ஆற்றிச் செல்வாட்கு,

இவையும் நீங்கின, இனி எங்ஙனம் ஆற்றுங்கொல்லோ எனத் தலைமகற்குச் சிறைப்புறனாகச் சொல்லும்: அதற்குச் செய்யுள்:

[ஆற்றும்வாயில் அகன்றமையுணர்த்தல்]

'அன்னம் புரைய நடையாள் புலம்பெய்த வத்தமென்னும்
பொன்னஞ் சிலம்பு கதிரோன் மறைதலும் போயினவால்
தென்னன் திருமால் கழனெடு மாறன் திருந்துசெங்கோன்
மன்னன் குமரிக் கருங்கழி மேய்ந்தவண் டானங்களே.' (௧௪௪)

'பொருங்கழன் மாறன்புல் வாமன்னர் பூலந்தைப் பூங்குருதி
மருங்கழி நீர்மூழ்கக் கண்டவெங் கோன்றெண்டிக்கானல்வண்டார்
கருங்கழி மேய்ந்தசெங் கால்வெள்ளை யன்னங் கதிரொடுந்தம்
பெருங்கழி காதன்மை நீங்கி யிவளிற் பிரிந்தனவே.' (௧௪௫)

'மேயின தம்பெடை யோடுமெய் மெல்லிய வாளைவெந்தீப்
பாயின மாலைக்குக் காட்டிக் கொடுத்துப் பார்த்துமண்மேல்
ஆயின சீரரி கேசரிக் கன்றனை நாட்டிடைத்து
போயின தெவ்வரிற் போயின கானலிற் புள்ளினமே.' (௧௪௬)

இவ்வகை சொல்லக்கேட்ட தலைமகன், 'யான் வந்தொழுகாநின்ற இவ்வொழுகலாறுதான் இவட்கு ஆற்றாமைக்குக் காரணமாயிற்றாப் போலும்' என, அவ்வாறு வந்தொழுகாது வரைந்து புகுவானும். இவ்வகையெல்லாப் பகற்குறியுள்ளே அடங்கும் எனக் கொள்க.

இனி, இரவுக்குறி யாமாறு:

பகற்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகன் இன்றுந்தெருளும் நாளைத்தெருளும் எனத் தெருளானும் நெடுங்காலமும் வந்து ஒழுக, இவ்வொழுக்கப் புறத்தார்க்குப் புலனாயினவிடத்து இவள் இறந்துபடும், இவள் இறந்துபட இவனும் இறந்துபடும் என ஆற்றாளாய், வரைவுகடாதற்குச் செறிப்பறிவுறுக்கின்று முன்னுடைத்தாக அறிவுறாஉம். என்னை, கதுமெனத் தமர் இற்செறித்தவிடத்து எமர் எம்மை இற்செறித்தார் என்றதொன்று ஆற்றுகையும் பெறும்: அதனான், முற்படவே செறிப்பறிவுறாஉம்; என்னை, ஆற்றுமெனிற் சொல்லுவது தெளியச் சொன்னேன் எனத் தெருட்டுதற்பொருட்டு என்பது.

இனித், தோழி வரைவுகடாவுகின்றது, குறிப்பினான் வரைவுகடாவுதலும், வெளிப்படையான் வரைவுகடாவுதலும் என இருதிறத்தன.

அவற்றுள், குறிப்பினான் வரைவுகடாவுமாறு: 'யாய் எம்மை நுமப்பிற் குறிக்கொண்டு நோக்கினாள்' என்னும்; எனவே, தலைமகன், 'இவர் இற்புறப்பட்டுப் போய் விளையாடும் பதத்தர் அல்லர், இவரை இற்செறிக்க வேண்டுமென்று போலும் அவ்வாறு நோக்கியது' எனக் கொண்டு வரைந்தெய்துவானாம்.

யாய் நுமப்பிற் குறிக்கொண்டு நோக்கினாளென்றதற்குச் செய்யுள்:

[தாயறிவுரைத்தல்]

'நீலவண்ணன் வெண்குடை நேரினார் மேவுதம்மனல் வேலியானை
போரவண்ணம் காட்டிய பூழியன் பூந்தண் குருந்தொசித்த கோ
லவண்ணன போலவண்ணன காவிரி நாடன்ன காரிகையாள்
ஏர்வண்ணம் நோக்கிப் பின்னையு நோக்கின ளெம்மனையே.' ()

அல்லது, இவ்வாறு நயஞ் செறிப்பறிவுறூஉம்; அதற்குச் செய்யுள்:

[புனத்தோடுவைத்துக் குறிப்புரை கிளத்தல்]

'செயலையன்ன மாவது சொல்லாய சிலம்பதென பாழிவென்ற
நயனமன்னு வெவ்வொறிக் காவலன மாறன் கடிமுனைமேல்
அயனமன்னா போற்கொய்து மாள்கின்ற தாலணி வானுரிஞ்சும்
புயலமன்னு கோட்ட மணிவரைச் சாரலெம் பூம்புனமே.' (கசஅ)

'என்னை யழியா வகையென்னை வெற்ப விருஞ்சிறைவாய்
மன்னை யழியவென் முன்முனை போற்கொய்து மாள்கின்றதான்
தென்னோர் திகழு மழைநால் கிழிய வியலறைவாய்ப்
பொன்னோர் திகழு மணிவரைச் சாரற் புனத்தினையே.' (கசக)

இனி, இவ்விடத்து வரப்பெறுய் எனப்படுத் தலைமகற்குத் தோழி முன்னின்று சொல்லவும் பெறும்.

இனி, முன்னிலைப்புறமொழியாகத், தலைமகன் வரவுணர்ந்து, வேங்கைக்கு உரைப்பாளாய்த் தலைமகன் கேட்ப இவ்வாறு சொல்லியுஞ், செறிப்பறிவுறுத்தும்; அதற்குச் செய்யுள்:

[பணிமொழிப்பாங்கி கணியோடுகூறல்]

'திரையார் குருதிப் புனன்மூழ்கச் செந்நிலத் தன்றுவென்ற
உரையார் பெரும்புகழ்ச் செங்கோ லுசிதனெண் பூம்பொதியில்
வரையார் தினைப்புனங் கால்கொய்ய நன்னாள் வரைந்துநின்ற
விரையார் மலரின வேங்காய் நினக்கு விடையில்லையே.' (க௱௰)

'வானுடை யான்முடி மேல்வளை யேற்றியும் வஞ்சியர்தங்
கோனுடை யாப்படை கோட்டாற் றழிவித்துங் கொண்டவென்றி
தானுடை யான்றென்னன் சத்துரு துரந்தரன் பொன்வரைமேல்
மீனுடை யான்கொல்லி வேங்காய் நினக்கு விடையில்லையே.' (க௱க)

இவ்வகையுஞ் சொல்லும் : அதற்குச் செய்யுள் :

'நன்றுசெய் தாயல்ல நன்னுத லாய்நறை யாற்றுவெம்போர்
நின்றுசெய் தாருந்தி வந்த நெடுங்கைக் களிற்றுடலால் [தல்
குன்றுசெய் தான்கொல்லி வேங்கையை மெல்லரும் பாகக்கொய்
அன்றுசெய் தாமெனி னிற்பதன் றோநம் மகன்புனமே.' (க௱உ)

இங்ஙனமுஞ் சொல்லும் : அதற்குச் செய்யுள் :

'உலம்புனை தோண்மன்னன் மாடவல் லத்தட் டவருரிமை
அலம்புனை கோதைய நல்லாக்கண் டான்கொல்லிச் சாரனண்ணி
வலம்புனை வில்லோ டருவிப் புனங்கண்டு வாடிநின்றால்
சிலம்பனை யையர்க ளென்னுங்கொல் வேங்கைச்செழும்பொழிலே.'

இவ்வாறுஞ் சொல்லும் : அதற்குச் செய்யுள் :

'பொருங்கண்ணி சூடிவந் தார்படப் பூலந்தைப் பொன்முடிமேல்
இருங்கண்ணி வாகை யணிந்தவெங் கோன்கொல்லி யீர்ஞ்சிலம்பில்
கருங்கண்ணி காக்கின்ற பைம்புனங் கால்கொய்ய நாளுரைத்த
பெருங்கண்ணி யாரைப்பொன் வேங்கையென் றோவின்னும் பேசு
[வதே.'

இங்ஙனமுஞ் சொல்லும் : அதற்குச் செய்யுள் :

'பைந்நின்ற வாடர வேரல்கு லாள்செல்ல நாட்பணித்த
இந்நின்ற வேங்கை குறையா திளஞ்சந்த னங்குறைத்தா
மெய்ந்நின்ற செங்கோல் விசய சரிதன்விண் டோய்பொதியின்
மைந்நின்ற சாரல் வரையக வாணர் மடவியரே.' (க௱ரு)

இவ்வகை செறிப்பறிவுறுக்கப்பட்ட தலைமகன் தெருள்வானாயின், 'இன்ன நாள் வரைவல், அத்துணையும் இவளை ஆற்றிக்கொண்டிரு, நினக்கு அடைக்கலம்' எனக் கைப்பற்றும;

கைப்பற்ற, அதனைத் தோழி சூளுறவாகக் கருதினாள். உலகத்தார் சூளுறுவார், பார்ப்பாரையும் பசுவையும் பெண்டிரையும் தொட்டுச் சூளுறுபவாகலான், சூளுற்றானென்பதனை நினைந்து, 'நீர் வரைவல் என்றதே அமையாதோ? சூளுறவேண்டுமோ? பொய்த்ததும் வாய்த்ததும் உடையாரன்றே சூளுறுவார்? மெய்யல்லது சொல்லாதார்க்குச் சூளுறவு வேண்டுமோ? நின்கண்ணும் பொய்யுண்டாகின், மெய்யென்பது இவ்வுலகத்து நிலைபெற்றவழி இல்லையாகாதே' என்னும்: அதற்குச் செய்யுள் :

[சூளுறாஉந் தோன்றற்குத் தோழிகூறல்]

'நெய்யொன்று வேலனை மாறன்றென் னாடன்ன நேரிழையின்
மையொன்று வாட்கண் மடந்தை திறத்திட் டறந்திரிந்து
பொய்யொன்று நின்கண் ணிகழுமென் றாற்பின்னைப் பூஞ்சிலம்பா
மெய்யொன்று மின்றி யொழியுங்கொல் லோவிவ் வியலிடத்தே.'()

'திரைப்பா லிரும்புனற் சேவூ ரெதிர்நின்ற சேரலர்கோன்
வரைப்பா லடையச்செற் றான்வையை யன்ன வடநத்துவண்டார்
விரைப்பா னறுங்கண்ணி யாய்பொய்ம்மைநீசொல்லின்மெய்ம்மையெ
துரைப்பார் பிறரினி யாவர்கொல் லோவிவ் வுலகினுள்ளே.' [ன்ப

'வெள்ளி விழுத்தொடி மென்கருப் புலக்கை
வள்ளை நுண்ணிலை வயின்வயி னுடங்க
மீன்சினை யன்ன வெண்மணற் குவைஇக்
காஞ்சி நீழற் றமர்வளம் பாடி
ஊர்க்கோ மகளிர் குறுவழி [1] யிறந்த
வராஅ லருந்திய சிறுசிரன் மருதின்
தாழ்சினை யுறங்குந் தண்டுறை யூர
விழையா வுள்ளம் விழைவ தாயினுங்
கேட்டவை தோட்டி யாக [2] மீட்டாங்
கறனும் பொருளும் வழாஅமை நாடித்
தற்றக வுடைமை நோக்கி மற்றதன்
பின்னா கும்மே முன்னியது முடித்த
லனைய பெரியோ ரொழுக்க மதனா
லரிய பெரியோர்த் தேருங் காலை
நும்மோ ரன்னோர் மாட்டு மின்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண் டுளதோ விவ் வுலகத் தானே.' [அகம் - உஅசு]

1 - பிறழ்ந்த. 2 - வேட்டாங்.

என, 'யான் தனக்கு அவளை அடைக்கலமென்று கைப்பற்ற, அதனைச் சூளுறவாகக் கருதித் திரியவுணர்ந்தாளாகலான் நீட்டிக்கல் ஆகாது' எனப் பிற்றைஞான்று வரைவொடு புகுவானும்.

இனித், தெருளானாயின், 'இரவுக்குறி வாரா வரைவல்' என்னும். அதுகேட்ட தோழி இரவுக்குறியது ஏதங்காட்டி மறுக்கும். யாங்ஙனம் மறுக்குமோ எனின், 'அரவும் உருமும் புலியும் எண்கும் வெண்கோட்டியானையும் என்று இவற்றது ஏதமுடைத்து: ஏற்றிழிவுடைத்தாய அருவரையிடத்து ஒரு வேல் துணையாக நீர் ஆரிருள் நள்ளென்வரவு ஆற்றுநீர்மையமேமோ?' என்னும். என்பதுகேட்ட தலைமகன் ஆற்றுவானாயின், வரைந்து எய்தும்; ஆற்றானாயின் இறந்துபடும் எனக் கருதி, இறந்துபாட்டின் அச்சத்தினான் இரவுக்குறி நேரும். நேர்ந்தால் தலைமகற்கு, 'நின்னுட்டார் என்ன பூவினர்? என்ன சாந்தினர்? என்ன மரத்தின்கீழ் விளையாடுப?' என்னும். அது கேட்டுத் தலைமகன், 'முன்னெல்லாம் எனக்கு மறுத்தாளன்றே, மறுத்தாள் இது சொல்லிற்று ஒரு காரணம் நோக்கி' என உணர்ந்து, தானும், 'நின்னுட்டார் என்ன பூவினர்? என்ன சாந்தினர்? என்ன மரத்தின்கீழ் விளையாடுப?' என்னும். என்றக்கால் தோழி, 'காந்தளும் வேங்கையும் சூடுதும், சந்தனச் சாந்து பூசுதும், வேங்கைமரத்தின்கீழ் விளையாடுதும்' என்னும்; அதற்குச் செய்யுள்:

[குறியிடங் கூறல்]

'வந்திணங் காமன்னர் தேயமுன் றெண்மறைப் பேறுயர்த்த
கந்தணங் காமத யானைக் கழன்மன்னன் கார்ப்பொதியிற்
சந்தனஞ் சாந்துசெங் காந்தளம் பூத்தழல் போல்விரியுங்
கொந்தணங் கீர்ம்பிண்டி யாம்விளை யாடுங் குளிர்பொழிலே.' (௧௩௮)

'காந்தளம் போதெங் கருங்குழற் போது கடையலொன்றோர்
தாந்தளர்ந் தோடவைவேல்கொண்ட வேந்தன் றண்ணம்பொதியில்
சாந்தமெஞ் சாந்தம் விளையா டிடமுந் தளையவிழும்
பூந்தளம் பிண்டி யெரிபோல் விரியும் பொழிலகமே.' (௧௩௯)

குறிஞ்சிநிலமாகையான் இவ்வகை சொல்லும். அல்லாத நிலத்திற்கும் அவற்றிற்குத் தக்கவாறே சொல்லும். இவ்வகை

சொல்ல. 'ஒக்கும், "இவை செய்தாவந்து நின்மின்" என்றது போலும்' என உணர்ந்து, பிற்றை ஞான்று அப் பூச் சூடி, அச்சாந்து பூசி, அம் மரத்தின்கீழ் விளையாடற் குறிசெய்து நிற்கும் : நின்றவிடத்து அவனது வரவு உணர்ந்து தோழி சொல்லும் : அதற்குச் செய்யுள் :

[வரவுணர்ந்து உரைத்தல்]

'அணிநிற மாப்பக டுந்திவந் தார்வல்லத் தன்றலியத் [வாய்
துணிநிற வேல்கொண்ட கோன்கொல்லிச் சாரலிச் சூழ்பொழில்
மணிநிற மாமயி லென்னைகொல் பொன்னேர் மலர்தகைந்த
கணிநிற வேங்கையின் மேற்றயி லாது கலங்கினவே.' (கசு0)

'கயில்கொண்ட வார்கழற் போர்மன்ன ரோடக் கடையற்கண்சேர்
தயில்கொண்ட கோனரி கேசரி கொல்லி யருவரைவாய்ப்
பயில்வண்டுந் தேனும்பண் போல முரலும்பைம் பூம்பொழில்வா
துயில்கொண் டில துணையோடுமென் றேசெய்ய தோகைகளே.' [ய்த்

இவ்வாறு தலைமகனது வரவுணர்ந்து, தோழி, 'குவளை அலர்ந்தனவேற் காண்பாம், [1]பந்தர் முல்லை அரும்பினவேற் காண்பாம்.' எனச் சொல்லித், தலைமகளைக் கொண்டுபோதரும்; அதற்குச் செய்யுள் :

[குறியிடத்துக் கொண்டுசேறல்]

'ஆழிக் கடல்வையங் காக்கின்ற கோனரி கேசரிதன்
பாழிப் பகைசெற்ற பஞ்சவன் வஞ்சிப்பைம் பூம்புறவிற்
றூழிப் புறமஞ்ஞை யன்னநல் லாய்கொள்கம் போதுதியேல்
தாழிக் குவளைநின் கண்போல் விரியுந் தடமலரே.' (கசுஉ)

'விளைக்கின்ற பல்புகழ் வேந்தன் விசாரிதன் விண்டெதிர்ந்து
வளைக்கின்ற வேந்தரைச் செவூ ரழித்தவன் றீந்தமிழ்போல்
வளைக்கொன்று கைமங்கை பாய்சென்று கோடுகின் வாயுள்வந்து
முளைக்கின்ற முள்ளெயிற் றேர்கொண் டரும்பின முல்லைகளே.' ()

எனத் தலைமகளைக் கொண்டுபோந்து அக் குறியிடம் புகுந்து, பகற்குறியின்கண் நீங்கினவாறே நீங்கத், தனியளாய்நின்ற தலைமகளை எதிர்ப்பட்டுப் புணரும்; புணர்ச்சியிறுதிக்கண் தோழி தலைமகளைக் கொண்டுபோதரும். இஃது இரவுக்குறி யாமாறு

1 - பந்த,

குறி இரவினும் பகலினும் என்னாது, 'எனப்படுவது' என்றது எற்றிற்கோ எனின், குறியென்றற்குச் சிறப்புடையது என்றவாறு.

'வண்டும் தும்பியும் வரிக்கடைப் பிரசமுங்
கொண்டு புணர்நரம் பென்ற மூன்றும்.'

ஐந்துவாயிலானுங் கொள்ளப்படுந் துப்புரவினைத் தன்னகத்-துடைத்தாய்ப், பல்வகைப்பட்ட மரங்களானும் பொலிவுடைத்-தாய்ப், புறத்தார் அகத்தாரைக் காண்பதரிதாய், அகத்தார் புறத்தாரைக் காண்ப தெளிதாய், விழைவுவிடுத்த விழுமியோ-ரையும் விழைவுதோற்றுவிக்கும் பண்பிற்று என்பதற்குச் சொல்லப்பட்டது என்பது. அஃதேயெனின், அறியக்கிளக்-கப்பட்ட இடம் என்னாது, 'கிளந்த இடம்' என்றது எற்றிற்கோ எனின், வினைச்சொற்கள் நான்கு விகற்பமுடைய என்றற்கு; யாவை அவ்விகற்பமெனின், கருத்தன் ஏதுக்கருத்தன் கருவிக்-கருத்தன் கருமக்கருத்தன் என இவை : அவற்றுள்,

கருத்தன் என்பது — தச்சன் எடுத்த மாடம், கொல்லன் செய்த வாள் :

ஏதுக் கருத்தன் என்பது — ஏவினானைக் கருத்தாவாகச் செய்வது ; அரசர் தொட்ட குளம், அரசர் எடுத்த தேவகுலம், இத்தொடக்கத்தன :

இனிக், கருவிக் கருத்தன் என்பது — வாள் எறியும், சுரிகை குற்றும், இம்மிடா நாற்குறுணி அரிசி சோறு அடும் என இத்தொடக்கத்தன :

இனிக், கருமக் கருத்தன் என்பது — திண்ணை மெழுகிற்று, கலங் கழுவிற்று, மரங் குறைத்தது என்று சொல்லுவது.

'அறியக் கிளந்த இடம்' என்னும் அச்சொல் கருமக்கருத்-தனைய் நின்றது என்பது.

அஃதேயெனின், இவ்வகை கருமக்கருத்தனைச் சொல்-லுதற்கு இலக்கணமுண்டோ எனின், உண்டு ;

'செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே.' [வினையியல் - ௪௧]

என்பது.

அஃதேயெனின், குறியெனப்படுவ என்றாகாதே சூத்திரஞ் செயற்பாலது; என்னை, இரவுக்குறி பகற்குறி என்று இரண்டு சொல்லுகின்றமையின். இடம் என்னும் ஒருமை நோக்கிக் 'குறியெனப்படுவது' என்றார் என்பது. (௧௮)

[௧௧]

## இரவுக் குறியே யில்வரை யிகவாது.

என்பது என்னுதலிற்றோ எனின், மேற்சூத்திரத்துட் குறி இரண்டென்றார், அவற்றுள் இரவுக்குறி நிகழுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : இரவுக் குறி என்பது — இரவின்கட் குறியிடம் என்றவாறு; இல்வரை இகவாது என்பது — இல்லிடத்தைவிட்டு நீங்காது என்றவாறு.

எனவே, புறத்தன்று என்றவாறாம்.

'இரவுக் குறியே யில்வரை யிகவா
துணர வுணர்த்த லுளையி னான.'

என்றார் பிறரும் எனக்கொள்க.

இரவின்கட்குறி இல்வரை இகவாது எனப், பகற்குறி இல்வரை இகக்கும் என்பது சொல்லினார்; என்னை, இராப்புள் உண்ணா என்றார்க்கு, பகற்புள் உண்ணும் என்பது முடிந்தது. இனி, இராக்குறி யென்று ஆகற்பாலது இரவுக்குறி யென்றா-பிற்றுச் செய்யுளாகலான்.

என்னை,

'குறியத னிறுதிச் சினைகெட வுகர
மறிய வருதல் செய்யுளு ளுரித்தே.' [உயிர்மயங்கியல் - ௩௨]

என்றாராகலின்.

[உ0]

பகற்குறி தானே யிகப்பினும் வரையார்.

என்பது என்னுதலிற்றோ எனின், பகற்குறியிடம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: பகற்குறி தானே என்பது — பகற்குறியிடந்தான் என்றவாறு; இகப்பினும் வரையார் என்பது — இகந்துபடினுங் குற்றங் கூறார் என்றவாறு.

இகத்தல் என்பது ஒன்றின் இறத்தல் என்றவாறு. இகத்தல் எனினும் இறத்தல் எனினும் ஒக்கும்; ஒன்றின் இறத்தல் என்பது பலவாதல் என்றவாறு.

ஒரு ஞான்று வேங்கைப் பொதும்பினுள் ஆம்; ஒரு ஞான்று கோங்கம் பொதும்பினுள் ஆம், குறிஞ்சிநிலமாயின்.

ஒரு ஞான்று புன்னையங்கானலுள் ஆம், ஒரு ஞான்று கைதையங்கானலுள் ஆம், நெய்தனிலமாயின்.

இவ்வகை ஏனை நிலத்திற்கும் ஒக்குமாறு அறிந்து உரைக்க,

'பகற்குறிப் புணர்வுகள் பல்வா குமமே'

என்றாராகலின்.

'இகப்பினும் வரையார்' என்ற உம்மையால், பகற்குறியும் ஒன்றாகவே வலியுடைத்து: என்னையெனின், தங்குறை முடித்தற்பொருட்டு ஒரு பொழிலகத்தே கொண்டுசென்று விளையாடும் ஆயங்களும் தன்வழிய ஆகலான் என்பது.

இனி, யார் அறிவார், பண்டுபோலாது இப்பருவம் ஒரு கானலகத்தே கொண்டுபுகுகின்றாள் என்று கருதுவார்க்கு, அறிந்து பல பொழிலினுள்ளும் புகுதலிற் பல பொழிலாகவும் பெறும். (உ0)

[உக]

இரவுமனை யிகந்த குறியிடத் தல்லது
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை.

என்பது என்னுதலிற்றோ எனின், இரவுக்குறி வகுக்கப்பட்ட இடம் வேறுபாடுடையது கண்டு, அவ்வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

மேல், 'இரவுக் குறி இல்வரை இகவாது' என,[1] இல்வரையகத்ததன்றே நாற்சாரன, அவற்றுள்ளும் இரவுக்குறியாதல் சென்றது : சென்றதனை நீக்கியவாறு.

இதன் பொருள் : இரவு மனை இகந்த என்பது — இரவின்கண் மனையகத்து நீங்கிய என்றவாறு ; குறியிடத்து அல்லது என்பது — குறிக்கப்பட்ட இடத்தல்லது என்றவாறு; கிழவோற் சேர்தல் கிழத்திக்கு இல்லை என்பது — தலைமகற் சேர்தல் தலைமகட்கு இல்லை என்றவாறு

எனவே, இல்வரையகத்தே ஆக என்பதூஉம், மனையகத்து ஆகற்க என்பதூஉம் உணரப்பட்டது. அட்டில், கொட்டகாரம், பண்டசாலை, கூடகாரம், பள்ளியம்பலம், உரிமையிடம், கூத்தப்பள்ளி என இவற்றுள் நீங்கிச், செய்குன்றும், இளமரக்காவும், பூம்பந்தரும், விளையாடிடமும், அவற்றைச் சார்ந்தனவற்றுள்ளும் பிறவற்றுள்ளும் ஆக என்றவாறு. எனவே, பகற்குறியிடம்போல வேறுபட்டது ஆகற்க இரவிற்குறியிடம் என்றவாறு. அஃதேயெனின், மனையகத்து ஆக அழிவதுண்டோ எனின், குரவர்கள் உறையும் இடமாதலின் தெய்வத்தானம் என்று கருதப்படும் அல்லதூஉம், புகவும் போகவும் அருமையுடைமையானும் ஆகாது என்பது ; என்றூர்க்குச் செய்யுள்:

'வால மனையகத்துச சார்ந்தான் றலைமகன்.'

என்பதுபட வந்தன எனின், அவை அகமல்ல, அகப்புறத்தே அடங்கும் என்பது.

1 - இல்வரையகத்தன்றெனிற் சாரான்.

'இரவுக் குறியோன் றெய்து மதுவே
மனையோர் கிளவி கேட்கு மிடத்துச்
செலவுவர வில்லாத் தொழிலிற் றாகி
மனையிறந் தெல்லையின் மாண்புடைத் தாகும்
அகப்புற மாயின் மறுதலைப் படுமே.'

என்றார் பிறரும் எனக்கொள்க. (உக)

[உஉ]

அம்பலு மலருங் களவு.

என்பது என்னுதலிற்றோ எனின், களவொழுக்கினது நெடுங்காலச் செலவின்கண் இவர்க்கு நிகழும் உள்ளநிகழ்ச்சி இன்னது என்று உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: அம்பலும் அலரும் களவு என்பது — அவ்விரண்டும் நிகழ்ந்தன என்பது தாம் அறியினல்லது யாவரும் அறிவாரில்லை: இன்மையின், அவை களவு என்றவாறு; களவு என்பது, செய்தாரே அறிந்து மற்றொருவர் அறியாததாகலான் என்பது.

அம்பல் என்பது முகிழ்முகிழ்த்தல்,
அலர் என்பது சொல் நிகழ்தல்;

அம்பல் என்பது சொல் நிகழ்தல்,
அலர் என்பது இல் அறிதல்;

அம்பல் என்பது இல் அறிதல்.
அலர் என்பது அயல் அறிதல்;

அம்பல் என்பது அயல் அறிதல்,
அலர் என்பது சேரி அறிதல்;

அம்பல் என்பது சேரி அறிதல்,
அலர் என்பது ஊர் அறிதல்;

அம்பல் என்பது ஊர் அறிதல்,
அலர் என்பது நாடு அறிதல்;

அம்பல் என்பது நாடு அறிதல்,
அலர் என்பது தேசம் அறிதல்.

அது பொருந்தாது: என்னை, அம்பல் எனப்பட்டதே அலரும், அலர் எனப்பட்டதே அம்பலும் ஆயின. இஃது அம்பற்கு இலக்கணம், இஃது அலருக்கு இலக்கணம் என்று விசேடங் காட்டிற்றிலர்: இவை இரண்டால் தம்முள் வேற்றுமை பெறப்படுமாகலான் என்பது.

மற்று என்னோ எனின், அம்பல் என்பது சொல்நிகழாதே முகிழ்முகிழ்த்துச் சொல்லுவதாயிற்று: இன்னதின்கண்ணது என்பது அறியலாகாது என்பது.

அலர் என்பது இன்னானோடு இன்னாளிடை இதுபோலும் பட்டதென விளங்கச் சொல்லி நிற்பது.

அம்பல் என்பது, பெரும்போதாய்ச் சிறிதுநிற்க அலரும் என நிற்பது.

அலர் என்பது; அப்பெரும்போது தாதும் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற்போல நிற்கும் நிலைமையென வேற்றுமை சொல்லப்பட்டதாம்.

தாம் நெடுங்காலம் இவ்வொழுக்கத்தை ஒழுகினாராகலான், வேறு நின்று தங்கருமம் உசாவுவாரை உணர்ந்து, இதன் திறத்து இவ்வாராய்ச்சி என்று கருதுப. தம்மனத்து ஒரு கோட்டமுடையார் அப்பெற்றியே கருதுவது உலகத்துத் தன்மை; இவ்வொழுக்கம் பிறர்க்குப் புலனாகாதன்றே, தெய்வத்தினான் ஆயதாகலான்.

அம்பலும் அலரும் எவ்விடத்து நிகழுமோ எனின், காப்புக் கைமிக்கவிடத்து நிகழும் என்பது. களவினது நெடுங் காலத்துக்கண் இவ்வொழுக்கம் வெளிப்படுங் கொல்லோ என்னும் அயிர்ப்பினான் நிகழும் என்பது. 'அங்ஙனம் அயிர்த்த அயிர்ப்பினாற் களவொழுக்கம் ஒழிந்துநின்ற நிலைமை கற்பு என்று கொள்ளுவேமாயின், வரைந்து புகுந்ததின்மையிற் கற்பு எனலும் ஆகாது: களவினகத்தென்று கொள்ளுவேமாயின், ஒழுக்கம் நிகழ்கின்றின்மையிற் களவு எனலும் ஆகாது;

என்னைகொல்லோ இதனை ஒருபாற் சார்த்துமாறு?' என்று ஐயப்பட்டு நின்ற மாணாக்கற்கு, அம்பலும் அலரும் என்று நின்ற நிலைமையைக் களவின்பாலே கொள்க என்பது இது பொருந்தாது;

என்னை,

'தந்தை தாயே தன்னைய ரென்றாங்
கன்னவ ரறியப் பண்பா கும்மே.' [இறையனார் - உக]

என்றமையின். அவரறியாத முன்னெல்லாங் களவென்பது போதும் என்பது. (உஉ)

[உங]

## வெளிப்பட்ட பின்றையு முரிய கிளவி.

எனபது என்னுதலிற்றோ எனின், அம்பலும் அலரும் ஆயிற்றென்று உள்ளத்து வெளிப்பட்ட பின்றை நிகழற்பாலது உணர்த்துதல் நுதலிற்று

இதன் பொருள்: 'வெளிப்பட்ட பின்றையும் உரிய கிளவி' என்றாரெனினும், வெளிப்பட்டபின்றைக் கிளவியும் உரிய என மொழிமாற்றிக் கொள்க கிளவி என்பது, மகட்கூறுதல்; அதுவும் உரித்து என, மற்றும் ஒன்றுண்டு கூறற்பாலது; அஃதியாதோ எனின், அவனுடன்போக்கும் உரித்து என்றவாறு.

அஃது உரியவாமாறு சொல்லுதும்: இது பலராலும் அறியப்பட்டது என்னுங் கருத்தால் நிகழ்கின்று, தலைமகட்கும தோழிக்கும் உடனே நிகழும் இருவரும் யாமே உணர்ந்தேம் எனக் கருதுதலாற் கதுமென இந்நிலைமைக்கண் வரினும் வாராமைக்கொள்வேன் என்னுங் கருத்தினால், பண்டு அவன் வந்து பயின்ற இடத்தே தோழி செல்லும்; செல்லத், தோழி, தன் எதிர்ப்பட்ட தலைமகனை வலங்கொண்டு சார்ந்து, 'நின்னால் தலையளிக்கப்பட்ட தலையளி அலராயிற்று, பலராலும் அறியப்பட்டு' என்னும்; அதற்குச் செய்யுள்:

[அலரறிவுறுத்தல்]

'பலரா யெதிர்நின்று பாழிப்பட் டார்தங்கள் பைந்நிணம்வாய்
புலரா வசும்புடை வேன்மன்னன் வேம்பொடு போந்தணிந்த
மலரார் மணிமுடி மான்றேர் வரோதயன் வஞ்சியன்னாட்
கலராய் விளைகின்ற தாலண்ண னீசெய்த வாருளே.' (௧௫௪)

'பொருடா னெனநின்ற மானதன் பூலந்தைத் தோற்றுப்புல்லார்
இருடா னடைகுன்ற மேறவென் றோன்கன்னி யீர்ம்பொழில்வாய்
மருடா னெனவண்டு பாடுந்தண் டாரண்ணல் வந்துசெய்த
அருடா னலராய் விளைகின்ற தான்மற்றிவ் வாயிழைக்கே.' (௧௫௫)

'அறிந்தோ ரறனில ரென்றலர் சிறந்த
இன்னுயிர் கழியினு நனியின் னாதே
புன்னையங் கானற் புணர்குறி வாய்த்த
பின்னீ ரோதியென் றோழிக் கன்றே
படுமணி யானைப் பசும்பூட் சோழர்
கொடிநுடங்கு மறுகி னார்க்காட் டாங்கட்
கள்ளுடைத் தட்விற் புள்ளொலித் தோவாத்
தேர்வழங்கு தெருவி னன்ன
கௌவையா கின்ற தையநின் னருளே.' [நற்றிணை - ௨௨௭]

இது சொல்லிப், பின்னும், 'நீ இது புகுதருந்துணையும் இவ்வாறு ஒழுகுவாயாயினை, அறனறியாமையான்; அறிதி யென்னின் இது புகுதாமை வரைந்தெய்துவாய் மன்னோ, அல்லதூஉம், பிறரும் வரைந்தெய்துதற்கு முலைவிலையொடு புகுந்து பொன்னணிவான் நின்றாரும் உளர்' எனப் படைத்து மொழிந்து சொல்லும்; அதற்குச் செய்யுள் :

[மகட்பேச்சுரைத்தல்]

'நீரணி வேலி நெடுங்களத் தொன்னார் நிணமலைந்த
போரணி வேன்மன்னன் கன்னியன் னாடன்னைப் பொன்னணி
காரணி வார்முர சார்ப்பப் பிறருங் கருதிவந்தார் [வான்
வாரணி பூங்கழ லண்ணலென் னாகி வலிக்கின்றதே.' (௧௫௬)

'வேலைத் துளைத்தகண் ணேழை திறத்தின்று விண்ணுரிஞ்சுஞ்
சோலைச் சிலம்ப துணிவொன் றறிந்து சுடருமுத்த
மாலைக் குடைமன்னன் வாணெடு மாறன்வண் கூடலின்வாய்க்
காலைத் திருமனை முற்றத் தியம்புங் கடிமுரசே.' (௧௫௭)

'போர்மலி தெவ்வரைப் பூலந்தை வென்றான் புகாரனைய
வார்மலி கொங்கை மடந்தையை வேற்றோர் மணங்கருதிக்
கார்மலி வார்முர சார்ப்பப் பிறருங் கருதிவந்தார்
ஏர்மலி தாரண்ண லென்னோ விதன்றிறத் தெண்ணுவதே.' (௧௬௮)

'வேயும் புரையுமென் றோளி திறத்தின்றை யெல்லையுள்விண்
தோயுஞ் சிலம்ப துணிவொன் றறிந்துசொன் னாற்புலவர்
ஆயுந் தமிழரி கேசரி கூட லகனகர்வாய்
ஏயுந் திருமனை முற்றத் தியம்பு மெறிமுரசே.' (௧௬௯)

இங்ஙனமுஞ் சொல்லும் :

[பொன்னணிவுரைத்தல்]

'குன்றொத்த யானைச்செங் கோனெடு மாறன்றென் கூடலன்ன
மென்றொத் தணிகுழ லேழை திறத்து விளைவறிந்தே
இன்றொத்த தொன்று துணிந் திலம்பவின் றாயினெம்மூர்
மன்றத்து நின்று முழங்குங்கொ லோவை மணமுரசே. (௧௭௦)

'சலம்புரி செய்வமென் னைச்செய்வ தென்னைநை யாற்றுவென்ற
உலம்புரி தோண்மன்னன் றென்புன லூட்டொரு வற்கியைந்து
குலம்புரி கோதையைக் காப்பணிந் தார்கொடி யாடமுன்றில்
வலம்புரி யோடு முழங்குங்கொ லோவை மணமுரசே.' (௧௭௧)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட தலைமகன், 'என்னாற் செய்யப்பட்டது என்னோ?' என்னும். எனத், தோழி, 'என்னை வினவற்பாலையல்லை, நீ இதற்குத் தக்கவாறு அறிந்து செயற்பாலை' என்னும் என்பது.

'நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே.

என்பதாகலான், 'நீ ஒரு பொருளை விகற்பித்து அறியுந்துணை, யான் அறியுமாறில்லை பிற; அல்லதூஉம், யாம் குற்றேவன் மகளிர், நீர் ஏயினவாறு ஒழுகுவதல்லது, "இதுகொண்டு இது செய்மின்" என்றற்குத் தக்கேமல்லேம்' என்னும்; அதற்குச் செய்யுள் :

[முலைவிலை கூறல்]

'என்னை விதுசெய்கென் றென்சொல்ல லாமிகற் பாழிவென்ற
மின்னை யயிற்படைச் செங்கோல் விசாரிதன் வெங்கொலிநீர்த்
தென்னை யுடனினுங்கொள் ளார்விலை யாத்தமர் சீர்செய்வண்டு
முன்னாண் மலரென் றணையுங்கண் ணேழை முகிழ்முலைக்கே.' ()

இதுகேட்ட தலைமகன், 'உடன்கொண்டு போவது துணிந்தேனெனினும், நிழலும் நீரும் இல்லாத அழல்வெங்கானம் ஆற்றகில்லாள்கொல்லோ' என்னும்; என்ன, 'அன்ன வெங்கானமெனினும் எம்பெருமாட்டி நும்மொடுவரப் பெரிதும் இனியவாம்' என்னும்: அதற்குச் செய்யுள்:

[ஆதரங் கூறல்]

'பால்புரை யானை மணிமுடி மாறன்மண் பாய்கிழற்றும்
பால்புரை வெண்குடைத் தென்னன் பறந்தலைக் கோடிவென்ற
வேல்புரை வெம்மையங் கான மெனினுமவ் வேந்தன்செய்ய
கோல்புரை தண்மைய வாநும்மொ டேகினக் கொம்பினுக்கே.'()

'கழலணி போர்மன்னர் காளீர்க் கடையற் படக்கடந்த
தழலணி வேன்மன்னன் சத்துரு துரந்தான் றன்முனைபோன்
றழலணி வெம்மைய வாயினுங் கான மவன்குடையின்
நிழலணி தண்மைய வாநும்மொ டேகினெஞ் சேரிழைக்கே.'(௧௭௪)

அதுகேட்டு, 'ஆயின், உடன்போக்குவலித்தேன், நீ இதனை அவட்குச் சொல்லவேண்டும்' என, 'நன்று, எம்பெருமான் அருளிச்செய்தது எம்பெருமாட்டிக்கு உணர்த்துவல்' என்று, தலைமகனை வலங்கொண்டு போந்து, தலைமகளுழைச் சென்று, அவள் குறிப்பறிந்து, 'எம்பெருமாட்டி, நம்பெருமான் நம்மைத் தம்மொடு உடன்கொண்டுசெல்லக் கருதுகின்றார், நின்குறிப்பு என்னை?' என்னும். என்றவிடத்து, உடம்படுதலும் உடம்படாதொழிதலும் என இரண்டல்லதில்லை; சென்று வழிபடுமேயெனின் நாணிலளாயினளாம்; உடன்படாளாயின் கற்பிலளாயினளாம்; இரண்டினுள்ளும் எத்திறத்த ளாயினளோ எனின், நாணுங் கற்பு என்னும் இரண்டல்லவே அவள்கண்ணுள்ளன, அவற்றுள் நாணிற் கற்பு வலியுடைத்து; என்னை வலியுடையவாறு எனின்,

'உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று.' [களவியல் - உஉ]

என்பதாகலான், நாண் அழியினும் கற்பு அழியாமை நினைக்கும்; நினைத்து, உடன்போக்குநேர்ந்து, தலைசாய்த்து நிலங்கிளையாநிற்கும் நிலைமை இது சொல்லுவதே போன்றது; அதற்குச் செய்யுள் :

[நாணிழந்து வருந்தல்]

'எணு திகழு மழிந்துநெஞ் சேர்தமெல் லாநிறைஞ்சிக்
காணுங் கழனெடு மாறன்செங் கோனின்ற காக்குமண்மேற்
சேணு மகலா துடனென்னொ டாடித் திரிந்துவந்த
நாணு மழியத் தகுகற்பு மேம்பட லாகின்றதே.' (கஎ௫)

'அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பி னோங்குமணற் சிறுசிறைத்
தீம்புன னெரிதர வீந்துக் காஅங்குத்
தாங்கு மளவை தாங்கிக்
காம நெரிதரக் கைந்நில் லாதே.' [குறுந் - கசகூ

இன்னும் இது சொல்லுவதேபோன்றது அந்நிலைமை :

'சிலரும் பலருங் கடைக்க ணோக்கி
மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டி ரம்ப றூற்றச்
சிறுகோல் வலத்தன ளன்னை யலைப்ப
அலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவற்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉ மியறேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே
அலர்சுமந் தொழிகவிவ் வழுங்க லூரே.' [நற்றிணை - கசகூ]

இங்ஙனம் இவள் உடன்படும். உடன்பட்டது உணர்ந்துவைத்துத் தாயுழைச் செல்லும்; தாயும் மகளது வேறுபாடு கண்டு, உற்றதறியாது, நற்றிறம் படர்ந்து செல்கின்ற காலமன்றே, ஆகலான், கண்டவாறே, 'அன்னாய், என் மகட்கு இவ்வேறுபாடு எற்றினான் ஆயிற்று? எனக்குச் சொல்லாய்'

என்னும். என, 'என்னால் அறியப்பட்டதுஞ் சிறிது உண்டு' என்று அறத்தொடு நிற்குமாறு,

'தோழிக் குரியவை கோடாய் தேஎத்து.' [இறையனார் - கச]

என்ற சூத்திரத்திற் சொல்லிப் போந்தாம்; அவ்வகை அறத்தொடு நிற்கும். நிற்கச், செவிலித்தாய் இன்புற்ற மனத்-தளாய், 'என்மகள் பெரிது அறிவுடையளேகாண்' என்று, அவ்வாறு நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும். நற்றாயும் இன்புற்ற மனத்தளாய்த் தந்தைக்குந் தன் ஐயன்மார்க்கும் அறத்தொடு நிற்கும். நிற்க, அவரும் அவளது அறிவும் ஆசாரமும் கேட்டு இன்புற்ற மனத்தராய்ச் சொன்மறுத்துத் தலையிறைஞ்சி நிற்பர். இங்ஙனஞ் சென்று மாட்சிப்பட்டுக் காட்டுமேயெனின், பெரி-தும் மாட்சிப்பட்டுக் காட்டிற்று. காட்ட, 'இவள் நீரில் ஆற்றி-டைப்போய் வருந்துங் குறையென்னை?' என்று தலைமகனைச் செலவழுங்குவிக்கும்: அவ்வகையாற் சொல்லுமதற்குச் செய்யுள்:

[செல்லுந்தலைவனைச் செலவழுங்குவித்தல்]

'பாயப் புலி கடாப்வந்து பாழிப் பனைமலைத்தார்
மேதயச் சிலைதொட்ட தென்னவன் மேற்தண் பொதியிலின்வாய்
வேலொத்த தோளும் மோடு வரா விரும்பவுந்தன்
ஆயத் தவளை நினைந்துகண் ணீர்கொண் டலமந்தவே.' (கஎகூ)

'விளம்பழங் கமழுங் கமஞ்சூற் குழிசிப்
பாசந் தின்ற தேய்கால் மத்த
நெய்தெரி யியக்கம் வெளின்முதன் முழங்கும்
வைகுபுலர் விடியன் மெய்கரந்து தன்கால்
அரியமை சிலம்பு கழீஇப் பன்மாண்
வரிப்புனை பந்தொடு வைஇய செல்வோள்
இவைகாண் டோறு நோவர் மாதோ
அளியரோ அளியரென் னாயத் தோரென
நும்மொடு வரவுதா னயரவும்
தன்வரைத் தன்றியுங் கலுழ்ந்தன கண்ணே.' [நற்றி - கஉ]

இதுகேட்ட தலைமகன் செலவழுங்கும். அழுங்க, 'நாளை நீர் வரைந்து புகுதும்' என்று தவிர்த்துப் பெயர்ந்து தலைமகளுழை வந்து, 'நிழலும் நீரும் உடையவாய்க் கானந் தண்ணியவாறுஞ் சேறும்' என்று உடன்போக்கு அழுங்குவித்தவிடத்துத்,

தலைமகனும் அந்நாளில் வரைந்து புகுவோனும். இது வெளிப்-பட்ட பின்றைக் கிளவியும் உரியவாயினவாறு.

இனி, உம்மையால், உடன்போக்கும் உரித்தாமாறு: அவ்வாறு அறத்தொடுநிலை மாட்சிமைப்பட்டது இல்லையாயின், இரவுக்குறிக்கண் தலைப்பெய்விக்குமாறுபோலத், தலைமகளை முற்படுத்து உடன்போக்க மாட்சிப்படும்; படுத்து, ஓம்படை சொல்லும்; அதற்குச் செய்யுள் :

[ஓம்படுத்துரைத்தல்]

'கொங்கை தளரினுங் கூந்த னரைப்பினுங் கோதன்மற்றிவ்
அங்கை யடைக்கல மென்றே சருதி யருள்ககண்டாய்
சங்கை மணாளன் கலியது ணன்சடு மாடணற்றி
மங்கை யமரட்ட கொன்கையை ணாடன்ன மாதரையே.' (௪௨௭)

'மென்முலை வீழினுங் கூந்த னரைப்பினும் விண்ணுரிஞ்சு
நன்மலை நாட விகழல்கண் டாய்மறை யாற்றில்வென்ற
வின்மலி தானை நெடுஞ்சேர் விசாரிதன் வேந்தர்பெம்மான்
கொன்மலி வேனெடுங் கண்ணிணைப் பேதைக் கொடியினையே.' ( )

'அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த
நன்னெடுங் கூந்த னரையொடு முடிப்பினும்
நீத்த லோம்புமதி பூக்கே ழூர
இன்கடுங் கள்ளி னிழையணி நெடுந்தேர்க்
கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட் டியானைப் போஎர் கிழவோன்
பழையன் வேல்வாய்த் தன்னநின்
பிழையா நன்மொழி தேறிய இவட்கே.' [நற்றிணை - ௧௦]

'பெருநன் றாற்றிற் பேணரு முளரே
ஒருநன் றுடைய ளாயினும் புரிமாண்டு
புலவி தீர அளிமதி இலைகவர்
பாடமை யொழுகிய தண்ணறுஞ் சாரன்
மென்னடை மரையா துஞ்சு
நன்மலை நாட நின்னல திலளே.' [குறுந் - ௧௧௫]

'கனைமுதிர் ஞாழற் சினைமரு டிரள்வீ
நெய்தன் மாமலர்ப் பெய்த போல

ஊதை தூற்று முரவுநீர்ச் சேர்ப்ப
தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்
டன்னா வென்னுங் குழவி போல
இன்னா செயினு மினிது தலை யளிப்பினு
நின்வரைப் பினளென் றோழி
தன்னுறு விழுமங் களைஞரோ விலளே.’ [குறுந் - ௩௯௭]

‘இவளே நின்னல தில்லை யாயுங்
குவளை யுண்க ணிவளல தில்லை
யானு மாயிடை யேனே
மாமலை நாட மறவா தீமே’

இவ்வகை ஓம்படுத்துத் தான் தவிரும் என்றவாறு.

தான் தவிர்வதோ செயற்பாலது? போகானோ? எனின், தனது வருத்தத்திற்குக் கவன்று போகாதானல்லன், இதனைப் பண்பாக உரைத்தற்பொருட்டுத் தவிரும் என்பது. செவிலித்தாய்க்கு உரைத்தாளன்றே. அவள் அதனைப் பண்பாக உரையாளோ எனின், இவள் சொல்லியது தெளியுமாறு செவிலித்தாய் சொல்லியது தெளியார் என்றவாறு: என்னை, எப்பொழுதுங் கைவிடாத மாயினளாகலான் என்பது.

இனித், தலைமகளைத் தலைமகன் ஆற்றுவித்துக் கொண்டு சென்றதற்குச் செய்யுள் :

[மெல்லக்கொண்டேகல்]

‘பண்டா னனையசொல் லாய்மைய லேகு பறந்தலைவாய்
விண்டார் படச்செற்ற கோன்வையை சூழ்விய நாட்டகம்போல்
வண்டார் பொழிலு மணியறல் யாறு மருங்கணைந்து
கண்டார் மகிழுந் தகைமைய தியாஞ்செல்லுங் கானகமே.’ (௧௭௯)

‘சிறியபைங் கட்களி றூர்ந்துதென் பாழியிற் செற்றெதிர்ந்தார்
மறியவை வேல்கொண்ட தென்னவன் வையைநன் னாட்டகம்போன்
முறியபைம் போதுகண் மேல்வண்டு பாடி முருகுயிர்க்குந்
நறியபைங் கானமை யாது நடக்கவெ னன்னுதலே.’ (௧௮௦)

‘அழிவிலர் முயலு மார்வ மாக்கள்
வழிபடு தெய்வங் கட்கண் டாஅங்
கலமரல் வருத்தந் தீர யாழநின்
நலமென் பணைத்தோ ளெய்தின மாகலிற்

பொரிப்பூம் புன்கி னெழிற்றகை யொண்முறி
சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திமிரி
நிழல்காண் டோறு நெடிய வைகி
மணல்காண் டோறும் வண்ட றைஇ
வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே
மாநனை கொழுதி மகிழ்குயி லாலு
நறுந்தண் பொழில கானங்
குறும்ப லூரயாஞ் செல்லு மாறே.' [நற்றிணை - ௯]

எனத் தலைமகளைத் தன் ஆயத்தோடு செல்வான்போலக் கொண்டுசெல்லும். அவ்வகை போவாரை இடைச்சுரத்துக் கண்டார் சொல்லியதற்குச் செய்யுள் :

[நெறிவிலக்கிக் கூறல்]

அலைமன்னு பைங்கழற் செங்கோ லரிகே சரியரியார்
இலைமன்னு மாலைமுத் தக்குடை யாளிகல் வேந்துரைப்போன்
மலைமன்னும் வெய்யோன் மறைந்தனன் மாதுமெய் வாடினைந்தாள்
சிலைமன்னு தோளண்ணல் சேர்ந்தனை செல்லலெஞ் சிறுகுடிக்கே.' (

'நின்றுங் கெதிர்ந்தார் குருதிய ளாடு நெடுங்களத்து
வென்றான் விசாரிதன் கூடலன் றேனு நிகமெலிந்தாள்
குன்றூர் சுடரோன் மறைந்தனன் கூர்வேல் விடலைதங்கிச்
சென்று வழிகதுண் போவணித் தாலெஞ் சிறுகுடியே.' (கஅ௨)

'எம்மூ ரல்ல தூர்கணித் தில்லை
வெம்முரட் செல்வன் கதிரு மூழ்த்தனன்
சேர்ந்தனை சென்மோ பூந்தார் மார்ப
இளையண் மெல்லியண் மடந்தை
அரிய சேய பெருங்க லாறே.' [ஐங்குறுநூறு - ௩௦௩]

இன்னும் இடைச்சுரத்துக் கண்டார் இவ்வாறுஞ் சொல்லுப:

[நகரணிமை கூறல்]

'நீயு மிவளுமின் றேசென்று சேர்திர்நெல் வேலியொன்னார்
தேயும் படிசெற்ற தென்னவன் றென்புன னாட்டிளையோர்
வாயு முகமு மலர்ந்த கமல மணித்தடத்துப்
பாயுங் கயலவர் கண்போற் பிறழும் பழனங்களே.' (கஅ௩)

பிற்றைஞான்று மகளது போக்கு உணர்ந்து செவிலி மயங்கிப் பெரியதோர் கவலையளாய், 'நெருநலை இவை செய்தது இது கருதிப்போலும்' என்னும்; அதற்குச் செய்யுள் :

[கவன்றுரைத்தல்]

'ஒண்முத்த வார்கழற் கைதந்தென் னாரு வறுமுலையின்
கண்முத்தங் கொண்டு முயங்கிற்றெல் லாங்கரு வெங்கழைபோய்
விண்முத்த நீள்சுரஞ் செல்லிய வோவிழி ஞத்துவென்ற
தண்முத்த வெண்குடை யான்றமிழ் நாடன்ன தாழ்குழலே.' ()

'பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனெ னென்றனள்
இனியறிந் தேனது துனியா குதலே
கழறொடி யாஅய் மழைதவழ் பொதியின்
வேங்கையுங் காந்தளு நாறி
ஆம்பன் மலரினுந் தான்றண் ணியளே.' [குறுந் - அச]

என்று, பின்னுங் கவன்று ஆற்றாளாய், 'இவ்வகைப்பட்ட கானம் இவ்வகைப்பட்டாள் எவ்வகை செல்லுங்கொல்லோ?' என்னும்; அதற்குச் செய்யுள் :

[சுரம்நினைந்திரங்கல்]

'வேடகஞ் சேர்ந்தவெங் கானம் விடலைபின் மெல்லடிமேற்
பாடகந் தாங்கி நடந்தெவ் வாறுகொல் பாழிவென்ற
கோடக நீண்முடிக் கோனெடு மாறன்றென் கூடலின்வாய்
ஆடக மாடங் கடந்தறி யாதவென் னாரணங்கே.' (௧௮௫)

'இவ்வகை மெல்லியவாகிய அடி இவ்வகை வெய்யவாகிய கானம் எவ்வகை சென்றனகொல்லோ' என்னும்; அதற்குச் செய்யுள் :

[அடிநினைந்திரங்கல்]

'நளிர்முத்த வெண்மணன் மேலும் பனிப்பன நண்பன்பின்போய்
முளியுற்ற கான மிறந்தன போன்மொய்ம் பிறந்திகழும்
ஒளிமுத்த வெண்குடைச் செங்கோ லுசித னுறந்தையன்ன
தெளிமுத்த வாண்முறு வற்சிறி யாடன் சிலம்படியே.' (௧௮௬)

இனிச், செவிலி பின்சென்றாள் சுரத்திடைக் குரவினொடு புலம்பிச் சொல்லியதற்குச் செய்யுள் :

[குரவோடு வருந்தல்]

'மழைகெழு கார்வண்கை வானவன் மாறன்வண் கூடலன்ன
இழைகெழு கொங்கையென் பேதையொ டேதில னோடியைந்திக்
கழைகெழு குன்றங் கடப்பவு நீகண்டு நின்றனையே
தழைகெழு பாவை பலவும் வளர்க்கின்ற தண்குரவே.' (௧௮௭)

'நினைப்பரும் புண்ணியஞ் செய்தாய் குரவே நெடுங்களத்து
வினைப்பொலி மால்களி றுந்திவென் றான்விய னாட்டகத்தோர்
மனைப்பொலி பாவை பயந்தேன் வருந்தவு நீகடத்துள்
எனைப்பல பாவை பயந்துமெய் தாயொ ரிருந்துயரே.' (கஅஅ)

'வில்லவன் றானை நறையாற் றழித்துவிண் ணேறவெல்ல
வல்லவன் மாறனெங் கோன்முனை போல்சுரம் வாணுதலாள்
சொல்லவன் பின்சென்ற வாறென்ற போழ்தெனக்குச்சொல்லுமே
பல்லவ மாக்கித்தன் பாவை வளர்க்கின்ற பைங்குரவே.' (கஅகூ)

சுரத்திடைச் செல்லுந் தலைமகனையுந் தலைமகளையுங் கண்டு எதிர்வருகின்றார், 'யார்கொல் இவ்வாறு போந்தார்!' எனச் சொல்லியதற்குச் செய்யுள் :

[சுரத்திடைக்கண்டோர் குறிப்போடுகூறல்]

'வில்லான் விறலடி மேலன பொற்கழல் வெண்முத்தன்ன
பல்லா ளிணையடி மேலன பாடகம் பஞ்சவற்கு
நெல்லார் கழனி நெடுங்களத் தன்று நிகர்மலைந்த
புல்லா தவரென யார்கொல் லருஞ்சுரம் போந்தவரே.' (ககூ0)

'வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே.' [குறுந் - எ.]

இனிச், செவிலி எதிர்வருகின்ற பார்ப்பாரைக் கண்டு வினாயதற்குச் செய்யுள் :

[வேதியரை வினாதல்]

'நிழலார் குடையொடு தண்ணீர்க் கரக நெறிப்படக்கொண்
டழலா ரருஞ்சுரத் தூடு வருகின்ற வந்தணிர்காள்
கழலா னொருவன்பின் செங்கோற் கலிமது னன்பகைபோற்
குழலா ளொருத்திசென் றாளோ வுரையினிக் குன்றிடத்தே.' ()

'குடையார் நிழலுறி சேர்கர கத்தொடு குன்றிடத்து
நடையான் மெலிந்து வருகின்ற வந்தணிர் ஞானமெல்லாம்
உடையா னொளிவே லுசிதன்றென் கூடலொண் டீந்தமிழ்போல்
இடையாள் விடலைபின் சென்றனளோவில் லிருஞ்சுரத்தே.' (ககூஉ)

சுரத்திடைச் செல்லாநின்ற தலைமகள் நின்ற சூழலும், தலைமகன் எய்த வேழமும் கண்டு செவிலி சொல்லியதற்குச் செய்யுள் :

[வியந்துரைத்தல்]

'செறிகழல் வேந்தரைச் சேவூ ரமரிற் செருக்கடந்த
நெறிகெழு கோனெடு மாறன் முனைபோ னெடுஞ்சுரத்து
வெறிகமழ் கோதையிங் கேகின்ற திஃதாம் விடலைதன்கைப்
பொறிகெழு திண்சிலை வாளியி னெய்த பொருகளிறே.' (௧௧௩)

'கொடுவிற் படைமன்னர் கோட்டாற் றழியக் கணையுதைத்த
நெடுவிற் றடக்கையெங் கோனெடு மாறன்றென் னேரிமுன்னால்
இடுவிற் புருவத் தவணின்ற சூழ லிதுவுதுவாங்
கடுவிற் றொடுகணை யாலண்ண லெய்த கதக்களிறே.' (௧௧௪)

பின்சென்ற செவிலித்தாய் எதிர்வருவாரைக் கண்டு வினவ, அவ்வினவப்பட்டார் தலைமகளையும் தலைமகனையும் இன்னதோரிடம் சேர்வர்கள் என்னுமதற்குச் செய்யுள் :

[அழுங்குதாய்க்குரைத்தல்]

'ஆளையுஞ் சீறுங் களிற்றரி கேசரி தெவ்வரைப்போற்
காளையுங் காரிகை யுங்கடஞ் சென்றின்று காண்பர்வெங்கேழ்
வாளையுஞ் செங்கண் வராலு மடலிளந் தெங்குகுத்த
பாளையுந் தேறல் பருகிக் களிக்கும் பழனங்களே.' (௧௧௫)

'நகுவா யனபல பெய்துள்ள நட்டாற் றருவரைபோன்
றுகுவாய் மதக்களி றுந்திவென் றான்மனம் போன்றுயர்ந்த
தொகுவா யனசுனை சேர்குன்ற நீங்கலுந் துன்னுவர்போய்ப்
பகுவா யனபல வாளைகள் பாயும் பழனங்களே.' (௧௧௬)

இடைச்சுரத்துப் புலம்புஞ் செவிலியை எதிர்வருவார் கண்டு தெருட்டியதற்குச் செய்யுள் :

[உலகியல்புரைத்தல்]

'கடவரை காதல னோடு கடந்த கயனெடுங்கட்
படவர வல்குனும் பாவைக் கிரங்கன்மின் பண்டுகெண்டை
வடவரை மேல்வைத்த வானவன் மாறன் மலயமென்னுந்
தடவரை தானே யணிந்தறி யாதுதண் சந்தனமே.' (௧௧௭)

'உருமினை நீள்கொடி மேற்கொண்ட செங்கோ லுசிதனெங்கோன்
செருமுனை போல்சுர மீண்ட விடலையெந் தீதில்செல்வத்
திருமனைக் கேவர நல்குங்கொல் லன்றாய் விடிற்றமர்கள்
பெருமனைக் கேயுய்க்கு மோவுரை யாய்மற்றென் பேதையையே.'( )

'அருஞ்சுர மிறந்தவென் பெருந்தோட் குறுமகள்
திருந்துவேல் விடலையொடு வருமெனத் தாயே
புனைமா ணிஞ்சி பூவ லூட்டி
மனைமண லடுத்து மாலை நாற்றி
உவந்தினி தயரு மென்ப யானே
மான்பிணை நோக்கின் மடநல் லாளை
ஈன்ற நட்பிற் கருளா னாயினும்
இன்னகை முறுவ லேழையைப் பன்னாள்
கூந்தல் வாரி நுசுப்பிவர்ந் தோம்பிய
கலம்புனை யுதவியோ வுடையேன் மன்னே
அஃதறி கற்பி னன்றுமற் றில்ல
அறுவை தோயு மொருபெருங் குடுமிச்
சிறுபை நாற்றிய பஃறலைக் கருங்கோல்
ஆகுவ தறிய முதுவாய் வேலன்
கூறுக மாதோ கழங்கின் றிட்பம்
மாறா வரும்பனி கலுழுங் கங்குல்
ஆனாது துயருமெங் கண்ணினிது படீஇயர்
எம்மனை முந்துறத் தருமோ
தம்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே.' (அகம் - ௧௯௫)

இங்ஙனம் புகுந்து பெயர்ந்த பின்றைத் தலைமகன் தன் அகத்தே வதுவைக் கலியாணஞ் செய்வான் எடுத்துக்கொண்டான் என்பது கேட்ட நற்றாய், 'ஒழிந்த கலியாணஞ் செய்யினும் நம்மகத்தே வதுவைக் கலியாணஞ் செய்வான் நேருங்கொல்லோ காளையைப் பயந்தாள்' என்னும்; அதற்குச் செய்யுள்:

[நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினாதல்]

'தாளை வணங்கா தவர்படச் சங்கமங் கைத்தனது
வாளை வலங்கொண்ட மாறனில் வையத் தவர்மகிழ
நாளைநம் மில்லுள் வதுவை யயர்தர நல்குங்கொல்லோ
காளையை யீன்ற கடனறி நன்னெஞ்சிற் காரிகையே.' (௨௦௪)

'புல்லா வயமன்னர் பூலந்தை வான்புகப் பூட்டழித்த
வில்லான் விசாரிதன் கூடல் விழவினைப் போனமில்லுள்
நல்லார் மகிழ்வெய்த நாளை மணஞ்செய்ய நல்குங்கொல்லோ
கல்லார் திரடோள் விடலையை யீன்ற கனங்குழையே.' (௨௦௫)

'மையே றியபொழின் மாநீர்க் கடையன்மன் னோடவென்றான்
மெய்யே றியசீர் மதுரை விழவினை போனமில்லுள்
செய்யோர் குழலி வதுவை யயர்தர நேருங்கொல்லோ
பொய்யே புரிந்தவக் காளையை யீன்ற பொலங்குழையே.' (௨௦௬)

'நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினும்
எம்மனை வதுவை நன்மணங் கழிகெனச்
சொல்லி னெவனோ மற்றே வென்வேன்
மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை யீன்ற தாய்க்கே.' [ஐங்குறு - ௩௯௯.]

எனக் கொள்க. (௨௩)

[௨௪]

**களவு வெளிப்படா முன்னுற வரைதல்**
**களவு வெளிப்பட்ட பின்றை வரைதலென்**
**றாயிரண் டென்ப வரைத லாறே.**

என்பது என்னுதலிற்றோ எனின், களவு,

'வெளிப்பட்ட பின்றைக் கிளவியு முரிய.' [இறைய - ௨௩]

என்றமையான், வெளிப்பட்ட பின்றை வரைதல் முறைமையாயினல்லது இல்லை எனக் கொண்டுநின்ற மாணாக்கற்கு, மற்றும் வரைதலாறு உண்டென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: களவு வெளிப்படா முன்னுற வரைதல் என்பது—பலரானும் சிலரானும் அறியப்பட்டது இவ்வொழுக்கம் என்னுங் கருத்து எய்தாமுன்னம் வரைதல் என்றவாறு;

அஃது ஆமாறு: இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னை தெருண்டு வரைதலும் உரியன்,

ஆங்குத் தெருளானாயின், பாங்கற்கூட்டங் கூடித் தெருண்டு வரைதலும் உரியன்,

அங்குத் தெருளாளுய்விடின், தோழியை இரந்துபின்-னின்று அவள் தனையுறுத் தகைமை செய்யத் தெருண்டு வரைதலும் உரியன்,

அங்குத் தெருளானுய்விடின், மதியுடம்படுத்து இரந்து-பின்னின்ற நிலைமைக்கண் தோழி சேட்படுப்பத் தெருண்டு வரைதலும் உரியன்,

அங்குத் தெருளானுய்விடின், தோழியிற் கூட்டங் கூடி-யாதல், செறிப்பறிவுறுக்கப்பட்டாதல், இரவுக்குறியது ஏதம் காட்டவாதல், வரைவுகடாவப்பட்டாதல் தெருண்டு வரைதலும் உரியன்.

ஈதெல்லாம் களவு வெளிப்படா முன்னுறவரைதல் விகற்ப-மெனக் கொள்க.

இனி, வெளிப்பட்ட பின்றை வரைதல் விகற்பமின்று எனக் கொள்க. அவற்றுள், களவு வெளிப்படா முன்னுற வரைதல் சிறப்புடைத்து. இது தனக்காகாமையால் வரைந்த-மையிற் சிறப்பின்று எனக் கொள்க. இது களவு வெளிப்பாடு அன்றென்று மறுத்துக் களவு வெளிப்படா முன்னுற வரைதல், அறத்தொடுநிலை நிகழாமுன் வரைதல் என்றவாறு.

களவு வெளிப்பட்ட பின்றை வரைதல் என்பது — அறத்-தொடுநிலை நிகழ்ந்த பின்றை வரைதல் என்றவாறு ;

களவு வெளிப்படா முன்னுற வரைதலும் களவு வெளிப்-பட்ட பின்றை வரைதலும் ஆமாறு முன்னே சொல்லிப் போந்-தாம் ; அவ்வுரையே இதற்கும் உரைத்துக்கொள்க.

என்று ஆயிரண்டு என்ப வரைதலாறு என்பது — என்று இரண்டு வகை என்பர் வரைதல் முறை என்றவாறு. (உச)

[உரு]

**பட்ட பின்றை வரையாக் கிழவ**
**னெட்டிடை கழிந்து பொருள்வயிற் பிரிதலும்**
**பொருள்வயிற் பிரியா தொருவழித் தணத்தலும்**
**புரைவ தென்ப கற்பா லான.**

என்பது என்னுதலிற்றோ எனின், அறத்தொடுநிலை நின்ற பின்றை வரும் விகற்பம் உணர்த்துதல் நுதலிற்று.

மேற் சூத்திரத்து வரையும் இடம் உணர்த்தினார், அவ் வரைவிற்குவரும் இடையீடு இவை என்பது உணர்த்தற்பாற்று.

இனித், 'தலைமகளை வரைந்தெய்தினானல்லன், அறத்தொடு நின்றவாறே பிரிந்தான், ஆகலான், அன்னாள் கற்பினாளோ? களவினாளோ?' என்ற மாணாக்கற்கு, இவள் கற்பினாளே எனப்படும் என்றவாறு.

இதன் பொருள்: பட்ட பின்றை வரையாக் கிழவன் என்பது — அறத்தொடு நிலைநின்ற பின்றை வரைந்தெய்தாத தலைமகன் என்றவாறு; நெட்டிடை கழிந்து பொருள்வயிற் பிரிதலும் என்பது — நாடும் காடும் இடையிட்ட பல்காதமும் நீங்கிப் பொருட்குப் பிரியும் பிரிவும் என்றவாறு; பொருள்வயிற் பிரியாது ஒருவழித்தணத்தலும் என்பது — பொருட்குப் பிரியாது ஓரிடத்தினாய் உறைதலும் என்றவாறு; புரைவது என்ப கற்பால் ஆன என்பது — அவை பொருந்தும் கற்பினாளாகற்கு என்றவாறு.

அறத்தொடு நிலைநின்றமை என்னை தலைமகன் அறியுமாறு எனின், தோழியால் உணர்த்தப்பட்டு அறியும் என்பது.

இதன் கருத்து, இவ்விரண்டு இடையீட்டின்கண்ணும் தலைமகள் ஆற்றாளாய காலத்துத் தோழி ஆற்றுவித்தலும், ஆற்றுவித்து அதனெதிர் மொழிதலும், பிறவும் எல்லாம் கற்பினொடு ஒக்கும் என்பது.

இப்பிரிவு தலைமகள் அறியப்பிரியுமோ எனின், அறியவே பிரியும், தோழிக்கும் தலைமகட்கும் எல்லாம் உணர்த்தி என்பது. அவ்வாறு பிரிந்தவிடத்துத் தலைமகள் வேறுபட்டாள்; வேறுபட, 'எம்பெருமான் இதற்கு நல்லதுபுரிவான் பிரிவான்; பிரிய, நீ ஆற்றாயாவதோ தக்கது?' என்ற தோழிக்கு, 'யான் பிரிய ஆற்றேனாயினேன் அல்லேன்; அவர் சென்ற கானத்துத் தன்மையை நோக்கி அவர்க்கு ஏதம்வருமோ என நினைந்து ஆற்றேனாயினேனை ஏதிலர் அதனைத் திரிய உணர்ந்தார்' என ஊர்மேல் வைத்துச் சொல்லும்; அதற்குச் செய்யுள்:

[தலைவி ஊரவர் தன்மை கூறல்]

'மின்றா னனைய விளங்கொளி வேலொடு வெண்டிரைமேல்
நின்றா னிலமன்ன னேரியன் மாற னிகன்முனைபோற்
கொன்றா றலைக்குஞ் சுரமன்பர் நீங்கலுங் கோல்வளைகள்
சென்றா லதுபிறி தாகவிவ் வூரவர் சிந்திப்பரே.' (உ0எ)

[இயற்பட மொழிதல்]

இப்பிரிவின்கண்ணே ஆற்றாளாய் வேறுபட்ட தலைமகளை இவ்வாறன்றி ஆற்றுவிக்கலாகாது எனக் கருதித் தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழியும்; அதற்குச் செய்யுள் :

'தொல்கவின் றொலையத் தோணலஞ் சாஅய்
நல்கார் நீத்தன ராயினு நல்குவர்
நட்டனர் வாழி தோழி குட்டுவன்
அகப்பா வழிய நூறிச் செம்பியன்
பகற்றீ வேட்ட ஞாட்பினு மிகப்பெரி
தலரெழச் சென்றன ராயினு மலர்கவிந்து
மாமட லவிழ்ந்த காந்தளஞ் சாரலின்
ஞால்வாய்க் களிறு பாந்தட் பட்டெனத்
துஞ்சாத் துயரத் தஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத் தியம்புங்
கடுமான் புல்லிய காடிறந் தோரே.' [நற்றிணை - கச]

[இயற்பழித்தல்]

அல்லதூஉம், நெட்டிடை கழிந்து பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைமகளது ஆற்றாமைகண்டு தோழி தலைமகனை இயற்பழிக்கும்; எங்ஙனம் இயற்பழிக்குமோ எனின், 'இவளை இங்ஙனம் ஆற்றாளாகப் பிரிந்த அவரினுங் கொடிய, இவளது ஆற்றாமை கண்டும் அதற்கு நல்லது புரியாது தம் நாணின்மையாற் பகலே புகுந்து இரைதேர்கின்ற நாரைப் பறவைகள் என்னும்; அதற்குச் செய்யுள் :

'இகலே புரிந்தெதிர் நின்றதெவ் வேந்த ரிருஞ்சிறைவான்
புகலே புரியவென் றான்கன்னி யன்னாள் புலம்புறுநோய்
மிகலே புரிந்தின் றதுகண்டு மின்றிவ் வியன்கழிவாய்ப்
பகலே புரிந்திரை தேர்கின்ற நாரைப் பறவைகளே.' (உ0அ)

என்பது கேட்ட தலைமகள், 'என் ஆற்றாமை கண்டன்றே இவள் இவ்வகை சொல்லுவாளாவது' எனத் தனது ஆற்றாமை நீங்குவாளாவது பயன்.

இனி, ஒருவழித்தணந்தவிடத்துத் தலைமகள் வேறுபட, 'இவ்வகைப்பட்ட நிலத்தில் தலைமகன் நம்மைத் துறவான், நீ எற்றிற்கு ஆற்றாயாகின்றாய்?' எனத் தோழி சொல்லியதற்குச் செய்யுள் :

'அடுமலை போல்களி யானை யரிகே சரியுலகின்
வடுமலை யாதசெங் கோன்மன்னன் வஞ்சியன் னாய்மகிழ்ந்து
படுமலை போல்வண்டு பாடிச்செங் காந்தட்பைந் தேன்பருகும்
நெடுமலை நாடனை நீங்குமென் றோநீ நினைக்கின்றதே.' (உ0க)

'குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற்பாய
அழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென் றயல்வாழ்மந்தி
கலுழ்வனபோ னெஞ்சசைந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாட னீப்பனோ வல்லன்.'

எனக் கொள்க. (உநி)

[உசா]

**வெளிப்படை தானே விரிக்குங் காலைத்**
**தந்தை தாயே தன்னைய ரென்றாங்**
**கன்னவ ரறியப் பண்பா கும்மே.**

என்பது என்னுதலிற்றோ எனின், மேல் வெளிப்படையே சொல்லிப் போந்தார், அவ்வெளிப்படை இவை யென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : வெளிப்படை தானே என்பது — களவு வெளிப்படை தானே என்றவாறு ; விரிக்குங் காலை என்பது — விரித்து உணர்த்துமிடத்து என்றவாறு ; தந்தை தாயே தன்னையர் என்றாங்கு அன்னவர் அறியப் பண்பு ஆகும்மே என்பது — தந்தை தாய் தன்னையர் என்று அவர் அறியப் பண்பாகும் என்றவாறு.

பண்பு எனினும், இலக்கணம் எனினும், இயல்பு எனினும் ஒக்கும். வெளிப்படை யென்பது அறத்தொடுநிலை என்ற-வாறு. வெளிப்படை எனினும், அறத்தொடுநிலை எனினும் ஒக்கும் என, இவ்விரண்டும் ஒரு பொருண்மேற் கிடந்தன-வாயினும், கருத்து வேறுபாடுடையவாம். யாவரும் அறியப்-படாத களவு, தந்தையும் தாயும் தன்னையரும் அறியப்பாடு நிகழ்ந்தமையின், களவுவெளிப்படை யெனப்பட்டது; இனித், தலைமகள் அறன் அழியாமை நிற்றலின், அறத்தொடுநிலை யெனவும் பட்டது.

[உஎ]

அவருட்
டாயறி வுறுதலி னேனோரு மறிப.

என்பது என்னுதலிற்றோ எனின், இவர்தாம் அறியுமிடத்துத் தாய் சொல்லவன்றித் தாமாக அறிவிலர் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: அவருள் என்பது — மேற்கூறப்பட்ட மூவருள்ளும் என்றவாறு; தாய் அறிவுறுதலின் ஏனோரும் அறிப என்பது — தாய் அறிவுறுக்கப்பட்டுத் தந்தையும் தன்னையன்மாரும் அறிவர் என்றவாறு.

எனவே, செவிலித்தாய் தோழியால் அறத்தொடு நிற்கப்-பட்டு நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும்; அம்முறையானே, நற்றாய் தந்தைக்கும் தன்னையன்மார்க்கும் அறத்தொடு நிற்கும் என்பது.

செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும் என்பது பெற்றவாறு என்னை யெனின், உரையிற்கோடல் என்னுந் தந்திரவுத்தியாற் பெறுதும் என்பது. (உஎ)

[உஅ]

தந்தை தன்னைய ராயிரு வீற்று
முன்ன மல்லது கூற்றவ ணில்லை.

என்பது என்னுதலிற்றோ எனின், தந்தைக்கும் தன்னையன்-மார்க்கும் நற்றாய் அறத்தொடு நிற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இதன் பொருள்:** தந்தை தன்னையர் ஆயிரு வீற்றும் என்பது—தந்தை என்றும் தன்னையன்மார் என்றும் சொல்லப் பட்ட இரண்டு கூற்றார்க்கும் என்றவாறு; முன்னம் அல்லது கூற்று அவண் இல்லை என்பது — அவர்க்கு முன்னத்தானல்லது செவ்வனஞ் சொல்லப்பெறுள் என்றவாறு.

**அஃதாமாறு:** நற்றாய் தந்தைக்கும் தன்னையன்மார்க்கும் அறத்தொடு நிற்குமிடத்து, 'இன்னதொன்றுண்டால், அஃது என்னோ எனின், குலத்தானும் குணத்தானும் செல்வத்தானும் மிக்கான் ஒருவன், உலகத்தாரெல்லாம் ஒருகுறை வேண்டப்படுந் தன்மையன், தான் ஒருவர்பால் ஒரு குறை வேண்டுஞ் சிறுமையானல்லன், இத்தன்மையானவன் நம்மை வழிபட்டு வாழலுறும், அவனை யாம் கிழமைகொள்ள அழிவதுண்டோ?' என்னும்; என, அதுகேட்டு, அவர் என் கருதுபவோ எனின், 'இவள் கருதிச் சொல்லுகின்ற குறிப்பாவது இதுபோலும், தன் மகள் திறத்தினைகாதே' என உணர்வாராவது.

'அவண்' என்ற மிகைவாய்ப்பட்டான், முன்னத்தானன்றியும் முன்னம்போலுஞ் சொல்லானும் சிறுபான்மை சொல்லப் பெறும் என்பது.

**அது வருமாறு:** தலைமகன் பார்ப்பாரை முன்னிட்டு அருங் கலங்களோடு வரைவுவேண்டி விட்டவிடத்துத் தந்தையும் தன்னையன்மாரும் வரைவு மறுத்தார், மறுப்பார் சூழ்தலும் அருகுதலும் உடைமையான். நூற்றியாட்டைக் கரும நூற்றவரோடு எண்ணிச் செய்யப்படுமாகலாற் சூழப்படும்.

இனிக், 'கண்டீரே, தம்மகளை வேண்டுவாரைப் பார்த்திருந்தாராகாதே, நாம் இந்நூற்றிடைக் கருமநூற்றவரே, இவர்களிடை மகட்பெறுவார் யார்!' எனவும், 'பெறுதற்கு அருமையுடைத்து' எனவும் கருத அருகுப.

இனிக், 'கண்டீரே, தம்மகளை வேண்டுவார் உரைப்பனவும் பொய்போலும்' வேண்டுதற்கு இடையின்றியே பெற்றாரயின், 'இவ்வகை விரைந்து கொடுத்தாரால்' என்னும் புறவுரை நோக்கியும் அருகுப.

அல்லதூஉம், இறப்பச் சிறியாரும், தம்மின் மிக்கார், மகள் வேண்டிச் சென்றவிடத்தும் அருகுப.

இனி, உலகியலானும் அருகுப.

அல்லது, உலகியல்பல்லாவழி இவர் அருகுவதற்குச் சொல்லவேண்டுமோ என்பது; எனத், தலைமகன் வரைவு மறுக்கப்பட்டான் என்பதனை உணர்ந்த தலைமகள் ஆற்றளாமாகத், தோழி யாய்க்கு அறத்தொடு நிற்பச், செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடுநிற்கும்; அவள் தந்தைக்கும் தன்னையன்மார்க்கும் அறத்தொடு நிற்கும், முன்னம்போலுஞ் சொல்லான் என்றவாறு. அவ்வாறு சொல்லுமதற்குச் செய்யுள் :

[அறத்தோடு நிற்றல்]

'சான்றோர் வரவும் விடுத்தவர் தந்தக வுந்நுமது
வான்றோய் குடிமையு நோக்கினல் லால்வண் பொருள்கருதிற்
தேன்றோய் கமழ்கண்ணிச் செம்பியன் மாறன்செங் கோன்மணந்த
மீன்றோய் கடலிடந் தானும் விலையன்றிம் மெல்லியற்கே.' (உ௧0)

'நடையா விதுவென்று நேரினல் லானறை யாற்றுவென்ற
படையான் பனிமுத்த வெண்குடை வேந்தன்பைங் கொன்றைதங்
சடையான் முடிமிசைத் தண்கதிர்த் திங்கடன் றொல்குலமா [குஞ்
வுடையா னுசித னுலகும் விலையன்றிவ் வொண்ணுதற்கே.' (உ௧௧)

'சான்றோர் வருந்திய வருத்தமு நுமது
வான்றோய் வன்ன குடிமையு நோக்கித்
திருமணி வரன்றுங் குன்றங் கொண்டிவள்
வருமுலை யாகம் வழங்கினோ நன்றே
அஃதான்,
றடைபொருள் கருதுவி ராயிற் குடையொடு
கழுமலந் தந்த நற்றேர்ச் செம்பியன்
பங்குனி விழவின் வஞ்சியோ
டுள்ளி விழவி னுறந்தையுஞ் சிறிதே.'

என இவ்வாறு நற்றாய் சொல்லக் கேட்டுக் கொடாது விடின், இக்குலத்துக்கு வடுவுண்டுபோலும் என உணர்வாளாயது. அதனாற் போந்த பொருள் அறத்தொடுநிலை மாட்சிப்பியது.

(உ௮)

[உகூ]

காப்புக் கைமிக்குக் காமம் பெருகினு
நொதுமலர் வரையும் பருவ மாயினும்
வரைவெதிர் கொள்ளாது தமரவண் மறுப்பினு
மவனூ றஞ்சுங் கால மாயினு
மந்நா லிடத்து மெய்ந்நா ணொரீஇ
யறத்தொடு நிற்ற றோழிக்கு முரித்தே.

என்பது என்னுதலிற்றோ எனின், மேற் சூத்திரத்துள் அறத்தொடு நிற்கும் நிலை உணர்த்திப் போந்தார்; இனி, அறத்தொடு நிற்கும் இடம் கூறுவான் எடுத்துக்கொண்டார் என்பது, அஃது உணர்த்துதல் நுதலிற்று

மேற்சூத்திரத்தோடு இயைபு என்னையோ எனின், மேல் அறத்தொடுநிலை யதிகாரம் வாராநின்றதாகலான் என்பது.

இதன் பொருள் : காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும் என்பது — காவல் கைமிகப்பாட்டின் வேட்கை பெருகினும் என்றவாறு; நொதுமலர் வரையும் பருவம் ஆயினும் என்பது — அயலார் வரைந்துபுகுங் காலமாயினும் என்றவாறு; வரைவு எதிர்கொள்ளாது தமர் அவண் மறுப்பினும் என்பது — வரைவு ஏற்றுக்கொள்ளாது தமர் அவ்விடத்து மறுப்பினும் என்றவாறு; அவன் ஊறு அஞ்சும் காலம் ஆயினும் என்பது — அவற்கு நிகழும் ஏதம் அஞ்சின இடத்தும் என்றவாறு; அந்நாலிடத்தும் மெய் நாண் ஒரீஇ என்பது — அந்நாலிடத்தும் மெய்க்கணின்ற நாண் நீங்கி என்றவாறு; அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே என்பது — அறத்தொடு நிற்கும் நிலைமை தோழிக்கும் உரித்து என்றவாறு.

'காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்' என்பது—காப்பு என்பது இரண்டு வகைத்து, நிறைகாவல் சிறைகாவல் என.

அவற்றுள், நிறைகாவல் என்பது — காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகுதல் என்றவாறு,

'சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.' [குறள் - ருள]

என்பதாகலான்.

இனிச், சிறைகாவல் என்பது — தாய் துஞ்சாமை, நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர்கடுகுதல், நிலவுவெளிப்படுதல், கூகைகுழறல், கோழிகுரற்காட்டல் என இவை.

அவற்றுள், ஈண்டுச் சிறைகாவல் கொள்ளப்படும். அச் சிறைகாவலது மிகவின்கண் இடையீடாம்; இடையீடாயினவிடத்துத் தலைமகட்குப் பெரியதோர் வேறுபாடு உண்டாம்; உண்டாயினவிடத்துத் தோழிக்குப் புலனும்; புலனாயினவாறே யாய்க்கும் புலனும்; புலனாயினவிடத்து, யாய் அறிவாரை வினவும்; வினவினவிடத்து, அறிவார் தெய்வத்தினான் ஆயிற்று என்ப; அது சொல்லுதற் பயத்தது தம் கருமமாகலானும், பிறிதொன்று சுட்டியுணருந் தன்மைத்தன்று இக்குலமாகலானும் தெய்வத்தினான் ஆயிற்று என்ப. என்றவிடத்து, இவளை முன்னிறீஇத் தெய்வத்திற்கு வழிபாடு செய்விக்கும். செய்தவிடத்துக் கற்பழியும். இவட்குக் கற்பழிவு வந்ததென்றும், இவட்கு ஆற்றாமை தணியாதன்றே தெய்வத்தினான் ஆயிற்று என்றமையின் பெயர்த்தும் அதுகண்டு யாய்க்கு ஆற்றாமை பெருகுமென்றும் தலைமகளது கற்பழிவுக்கும் தாய் ஆற்றாமைக்கும் தோழி தான் ஆற்றாளாம். ஆற்றாமை யென்பது பிறிதெவ்வுணர்வுமின்றி ஆற்றாமை தானே யாவது. ஆற்றாமை ஆற்றுவதொன்றனைப் பற்றும். ஆற்றுவது பிறிதின்மையின் அறிவாரை வினவும்; வினவுமிடத்து என்னை வினவும்; யான் அறியேன் என்றதன் புறத்தாம் பிறரை வினவுவா ளாவது; என்னை வினவினவிடத்து இது சொல்லுவன் என்று கூட்டமில் நாட்டவகையாற் சிந்தித்துக்கொண்டிருக்கும். இருந்த நிலைமைக்கண், தாய் படிமக்கலத்தொடும் புகும்; புக்கு, மகளை அடியிற்கொண்டு முடிகாறும் நோக்கி, 'அன்னாய், என் மகட்கு இவ்வேறுபாடு எற்றினானாயிற்று?' என்னும். என்றவிடத்து, 'என்னால் அறியப்படுவதுஞ் சிறிது உண்டு' என்று மேற்சொல்லியவாறே மாறுகோள் இல்லாத வகையான் அறத்தொடு நிற்கும்; அங்ஙனம் அவள் நற்றாய்த் தொடக்கத்தார்க்கெல்லாம் அறத்தொடு நிற்கும் என்பது

இனி, 'நொதுமலர் வரையும் பருவம் ஆயினும்' என்பது— நொதுமலர் என்பார் ஏதிலர், அவர்தாம் வரைவொடு வந்தார் என்பது கேட்டவிடத்துத் தலைமகள் ஆற்றாளாம்; ஆற்றாளா-

யினவிடத்து, மேற்சொல்லியவாறே தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்கும் என்பது.

'வரைவெதிர்கொள்ளாது தமர் அவண் மறுப்பினும்' என்பது — தலைமகன்றமர் பார்ப்பார் சான்றோரை முன்னிட்டு அருங்கலங்களோடும் வரைதற்குப் புகுவர்; புக்கவிடத்து, ஒரு காலைக்கு மறுப்பர் பிற, போகாக் குமரியை யுடையார்போலக் கதுமென நேர்ந்திடாரன்றே! பரியம் சிறிது என்றானும், இளையளால் என்றானும், நாளும் புள்ளும் திருந்தி வாரீரோ என்றானும் அங்ஙனம் தமர்மறுத்தார் என்பதனைத் தலைமகள் கேட்டஞான்றும் ஆற்றாளாம். என்னை, 'நம்பெருமான் ஒருவர்க்கு ஒருகுறை முடிப்பினல்லது ஒருவரை ஒருகுறை வேண்டுந் தன்மையன் அல்லன்; அல்லாதான் இக்குறை வேண்டியது என்கட்கிடந்த அருளாகாதே! இவற்கு இவ்விளிவரவாக்கினேன் பாவியேன்!' எனவும், 'எம்பெருமாற்கு மறுத்தார், இனி மற்றொருவாறாகாதே!' எனவும் தலைமகள் வேறுபடும். அவ்வேறுபாடு தோழிக்குப் புலனாம்; புலனாயினவிடத்து மேற்சொல்லியவாறே அறத்தொடு நிற்கும் என்பது.

'அவன் ஊறு அஞ்சுங் காலம் ஆயினும்' என்பது — தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற நிலைமைக்கண் 'எம்பெருமான் வரும்வழி, எண்கும் வெண்கோட்டியானையும் அரவும் உருமும் புலியும் வரையரமகளிரும் வானரமகளிரும் உடைத்து, மற்றும் தெய்வங்கள் வௌவும் வண்ணத்தன, ஏதம் நிகழ்வதுகொல்லோ!' என வேறுபடும். அவ்வேறுபாடு தோழிக்குப் புலனாம்; புலனாயினவிடத்து மேற்சொல்லியவாறே அறத்தொடு நிற்கும் என்பது.

'அந்நாலிடத்தும்' என்பது — அச்சொல்லப்பட்ட நான்கு இடத்தும் என்றவாறு;

'மெய் நாண் ஒரீஇ' என்பது — மெய்க்கண் நின்ற நாண் நீங்கி என்றவாறு; நாண் உண்டாயினவிடத்துத் தாய்முன் நின்று சொல்லாள் என்பது.

'அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே' என்பது — அறம் என்பது தக்கது; தக்கதனைச் சொல்லிநிற்றல் தோழிக்கும் உரித்து என்றவாறு; அல்லதூஉம், பெண்டிர்க்கு அறம் என்பது கற்பு, கற்பின்றலைநிற்றல் என்பதூஉமாம்.

இனித், 'தோழிக்கும் உரித்து' என்ற உம்மையால், தலைமகட்கும் அறத்தொடுநிலை உரித்து என்பது. அஃதாமாறு: இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தானும், பாங்கற்கூட்டம் கூடியானும் தெருண்டு வரைந்தெய்தலுற்றுத் தமரைவிடும்; விட்டவிடத்து அவர் மறுப்பர், அஃது இலக்கணமாகலான். அங்ஙனம் மறுத்தவிடத்துத் தலைமகள் வேறுபடும். 'எம்பெருமான் மறுக்கப்பட்டமையான் மற்றொருவாற்றங்கொல்லோ!' எனக் கலங்கி வேறுபடும்; வேறுபாடு எய்தினபொழுதே தோழிக்குப் புலனாம்; புலனாயினவிடத்து, 'எம்பெருமாட்டி, நினக்கு இவ்வேறுபாடு எற்றினாயிற்று?' என்னும். என்றவிடத்து, 'இஃது எனக்குப்பட்டது, இன்னவிடத்து ஒரு ஞான்று நீயும் ஆயமும் தழையும் கண்ணியும் கோடற்கு என்னிற் சிறிது நீங்கினையாக, ஈங்கு நின்றேன் ஒரு மணிச்சுனை கண்டேன்; அம் மணிச்சுனைதான் ஆம்பலே குவளையே நெய்தலே தாமரையே என்றிப் பூக்களால் மயங்கி மேதக்கது கண்டு, வேட்கையான் ஆடுவான் இழிந்தேன்; இழுக்கிக் குட்டம் புக்கேன்; புக்குத், "தோழியோ!" என, நீ கேளாயாயினாய்; ஆக, ஒரு தோன்றல் வந்துதோன்றி எனது துயர் நீக்குதற்காகத் தன் கை நீட்டினான்; நீட்ட, யானும் மலக்கத்தான் நின் கையெனப் பற்றினேன்; பற்ற, வாங்கிக் கரைமேல் நிறீஇ நீங்கினான்; நீ அன்று கவலுதியெனச் சொல்லேன் ஆயினேன்; நீ எவ்வெல்லைக்கண்ணுங் கைவிடாதாய் அஞ்ஞான்று கைவிடுவா யாயிற்று விதியாகாது எனிற் பிறிதொன்றுவதுகொல்லோ எனக் கலங்கி வேறுபட்டேன்' என்று தோழிக்குத் தலைமகள் அறத்தொடுநிற்கும், பின்னைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும், மேற்சொன்னவாற்றான் என்பது.

அங்ஙனமாயின், தோழிகாவலொடு மாறுகொள்ளாதோ எனின், கொள்ளாது, தோழிக்கு அறத்தொடு நிற்குமாகலான் என்பது. காவலொடு மாறு கொள்ளினும் காவற்குற்றப்பட்டேன் என்று தோழி இறந்துபடாமைக் காக்கும் விதி என்பது. அஃதே யெனின், நிகழ்ந்த ஒழுக்கம் மறைத்துக்களைந்து, படைத்துமொழிந்தமையாற் பொய்யுரைத்தவாறாம்பிற எனின், 'பொய்யுரைக்கப்பட்டதாகாது; என்னை, பழியும் பாவமும் அதனால் வாராமையின்;

என்னை,

'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.' [குறள் - உ௯உ]

என்றாராகலின் குற்றமின்று என்பது.

அறத்தொடு நிற்கும் இடங்களைப் பெயரும் முறையும் சொல்லினமாத்திரையே இச்சூத்திரத்துப் பொருள். அறத்தொடுநிற்கும் இலக்கணமும், அவற்றுக்குச் செய்யுளும் மேலே காட்டிப்போந்தாம்.

[௯0]

காம மிக்க கழிபடர் கிளவியுங்
காப்புச் சிறைமிக்க கையறு கிளவியு
மாறுபார்த் துற்ற வச்சக் கிளவியு
மிரவினும் பகலினு நீவரு கென்றலுங்
கிழவோன் றன்னை வார லென்றலுந்
தன்னுட் கையா றெய்திடு கிளவியு
மன்ன மரபிற் பிறவுந் தொகைஇத்
தன்னை யழிந்த கிளவி யெல்லாம்
வரைதல் வேட்கைப் பொருள வென்ப.

என்பது என்னுதலிற்றோ எனின், வரைவுகடாவும் இலக்கணமெல்லாம் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

மேலதனோடு இயைபு என்னையோ எனின், மேலுங் களவு நீக்கிக் கற்பாவதோர் இலக்கணம் உணர்த்தினார்; இவ்வரைவும் அன்னதாகலான் அதன் பின்னே வைக்கப்பட்டது.

இதன் பொருள்: காமம் மிக்க கழிபடர் கிளவியும் என்பது — காமம் என்பது வேட்கை, மிகுதல் என்பது பெருகுதல், கழி என்பது சிறத்தல், படர் என்பது நினைத்தல், கிளவி என்பது சொல், வேட்கை மிக்குச் சிறப்பச் சிந்தித்துச் சொல்லுஞ் சொல்லும் என்றவாறு; காப்புச் சிறைமிக்க கையறு கிளவியும் என்பது — காப்புச்சிறை மிகவினாற் கையற்றுச்

சொல்லுஞ் சொற்களும் என்றவாறு ; ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவியும் என்பது — அவன் வரும் வழியது ஏதஞ் சிந்தித்து ஆற்றாளாய்ச் சொல்லுஞ் சொற்களும் என்றவாறு ; இரவினும் பகலினும் நீவருக என்றலும் என்பது — இரவின்கண்ணும் பகலின்கண்ணும் நீயிர் வந்து ஒழுகுவது ஆகாதோ எனச் சொல்லுஞ் சொற்களும் என்றவாறு ; கிழவோன்றன்னை வாரல் என்றலும் என்பது — தலைவனை இரவின்கண்ணும் பகலின்கண்ணும் வரவேண்டா என்று சொல்லுஞ் சொற்களும் என்றவாறு ; தன்னுள் கையாறு எய்திடு கிளவியும் என்பது — தன்னுட்கையாற்றினை ஏதிலது ஒன்றின்மேலிட்டுச் சொல்லுஞ் சொற்களும் என்றவாறு ; அன்ன மரபிற் பிறவும் தொகைஇ என்பது—அன்ன இலக்கணத்த பிறவுந் தொகுத்து என்றவாறு; தன்னை அழிந்த கிளவி எல்லாம் என்பது — தன் ஆற்றாமையாற் சொல்லுஞ் சொல்லெல்லாம் என்றவாறு ; வரைதல் வேட்கைப் பொருள என்ப என்பது — வரைதல் வேட்டுச் சொல்லுஞ் சொல் என்றவாறு.

[காமமிக்க கழிபடர் கிளவி]

இனிக், 'காமமிக்க கழிபடர் கிளவி'யாமாறு: பகற்குறியானும் இரவுக்குறியானும் தலைமகன் ஒழுகாநின்ற நிலைமைக்கண் ஒருநாள் ஒருகாற் கண்டு தரிக்குந் தன்மைத்தன்றும் வேட்கை ; என்னை, காணும்பொழுதிற் காணாப்பொழுது பெரிதாகலான். அவ்வகை வேட்கையளாய் நின்று புன்னைக்கானும் அன்னத்திற்கானும் கடலிற்கானும் கழிக்கானும் அவ்வகை பிறவற்றிற்கானும் [1] தன்கட்பொறை தணிப்பனவாகச் சிந்தித்துச் சொல்லுவதாயிற்று ; அதற்குச் செய்யுள் :

'தாதலர் நீண்முடித் தார்மன்னன் மாறன்றண் ணங்குமரிப்
போதலர் கானற் புணர்குறி வாய்த்தாள் புலம்பிறைய
ஏதலர் நோய்செய்வ தோகின் பெருமை யெனநெருங்கிக்
காதலர் தம்மைக் கழறினென் னானங் கருங்கடலே.' (உசஉ)

1 - தன்கட்டுறு குறை,

'ஒண்டூவி நாராய்நின் சேவலு நீயுமாய்
வண்டூது பூங்கானல் வைகலுஞ் சேறிராற்
பெண்டூது வந்தே மெனவுரைத்தெங் காதலரைக்
கண்டீர் கழறியக்காற் கானல் கடிபவோ.'

இவை கடலுக்கும் நாரைக்கும் சொல்லிய எனக் கொள்க.

இதனைத் தலைமகன் கேளா வருமேயெனின், 'இங்ஙனம் வந்தொழுக இவள் ஆற்றாளாம்' என்று ஒருவகையான்முற்பட்டுப் பிற்றைஞான்று வரைவொடு புகுவானும்; தோழி கேட்குமேயெனின், தலைமகனை முன்னின்று வரைவுகடாவுவாளாம்; யாருங் கேட்பாரில்லையெனின், ஆற்றுதலைப் பயக்கும். என்னை, மூடிவேவாநின்றதோர் கலந்தை மூய்திறந்தவிடத்து அகத்துநின்ற வெப்பங் குறைபடும்; அதுபோல, இவட்கும் அயாவுயிர்ப்பாம், அச்சொற்கள் புறப்படுதலான் என்பது. இம்மூன்றினுள் ஒன்றுகாமையில்லை யென்பது. தலைமகன் கேட்பின் இன்னதொன்றும், தோழிகேட்பின் இன்னதொன்றும், யாருங் கேட்பாரில்லையாயின் இன்னதொன்றும் என்று ஒரு பயன் சிந்தித்துச் சொல்லுமோ எனிற், சொல்லாள்; குழவி அழுதாற்போல வேட்கை மிகுதியாற் சொல்லினவிடத்து அப்பயன் நிகழும். குழவி அழுகின்றது, 'எனக்குப் பால் தம்மின்; நீர் ஆட்டுமின்' என்றழாது, துக்கம் வந்ததாக அழும்; அழ, அறிவார் பயம் எய்துவிப்ப என்பது.

[காப்புச் சிறைமிக்க கையறு கிளவி]

'காப்புச் சிறைமிக்க கையறு கிளவியும்' என்பது, காப்புச்சிறைமிகவினாற் கையற்றுச் சொல்லுஞ்சொல். காப்புத்தான் இருவகைய, நிறைகாவல் சிறைகாவல் என; அவற்றுள், நிறைகாவல் என்பது நிறையின் வேறுபாடு புறத்தார்க்குப் புலனாகாமைக் காப்பாட்கு ஆகாது முறையின் வேட்கைபெருகக் காணலுறவினான் ஆற்றாளாய்ச் சொல்லும்; அதற்குச் செய்யுள்:

'மின்கண் படாவடி வேனெடு மாறன்விண் டார்முனைமேன்
மன்கண் படாத மயங்கிரு ளுள்வந்த நீர்த்துறைவற்
கென்கண் படாத நிலைமைசொல் லாதிளஞ் சேவறழீஇத்
தன்கண் படாநின்ற வன்னத்த தேயாற் றகவின்மையே.' (௨௧௩)

'புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோற
றுன்ப முழவாய் துயிலப் பெறுதியா
லின்கள்வாய் நெய்தானீ யெய்துங் கனவினுள்
வன்கண்ணார்கானல்வரக்கண்டறிதியோ' [சிலப்.கானல்-ஙங]

எனக் கொள்க.

சிறைகாவல் என்பது, தாய்துஞ்சாமை, நாய்துஞ்சாமை, ஊர்துஞ்சாமை, காவலர்கடுகுதல், நிலவுவெளிப்படுதல், கூகை குழறல், கோழிகுரற்காட்டல் என இவை. அவற்றுள்,

தாய் துஞ்சாமைக்குச் செய்யுள் :

'ஆயுந் தமிழ்மன்னன் செங்கோ லரிகேசரிமுனைபோல்
தேயு நினைவொடு துஞ்சாண் மடமைத்தையிசை சேயிழையாள்
தாயுந் துயின்மறந் தாளின்ன நாட்டனித் தாமணைடுந்தேர்க்
காயுங் கதிரோன் மலைபோய் மறைந்த கனையிருளே.' (உகச)

இனி, நாய் துஞ்சாமைக்குச் செய்யுள் :

'வாருந்து பைங்கழற் செங்கோல் வரோதயன் வஞ்சியன்னாள்
சேருந் திறமென்னை பென்றண் சிலம்பனை திங்கள்கல்சேர்
தூருந் துயின்றிடங் காவல் கோடன்னை யுள்ளுறுத்தெல்
லாருந் துயிலினுந் துஞ்சா ஞமலி யடையிருளே.' (உகரு)

இனி, ஊர் துஞ்சாமைக்குச் செய்யுள் :

'மாவுங் களிறு மணிநெடுந் தேரும்வல் லத்துப்புல்லாக்
கோவுந் துமியவை வேல்கொண்ட கோனந்தண் கூடலன்ன
பூவும் புகையும் விரையுங் கமழ்ந்துபொன் னுருலகம்
மேவும் விழவொடு துஞ்சா திரவிவ வியனகரே.' (உகசு)

இனிக், காவலர் கடுகுதற்குச் செய்யுள் :

'அடிக்கண் ணதிருங் கழலரி கேசரி தெவ்வனுங்கக்
கொடிக்கண் ணிடியுரு மேந்திய தென்னவன் கூடலன்னாள்
வடிக்கண் ணிரண்டும் வளர்நகர் காக்குமவ் வேலினைஞர்
துடிக்கண் ணிரண்டுங்கங் குற்றலை யொன்றுந் துயின்றிலவே.' ()

இனி, நிலவு வெளிப்படுதற்குச் செய்யுள் :

'சென்று செருமலைந் தார்கள்செந் நீரமூழ்கச் செந்நிலத்தை
வென்று களங்கொண்ட கோன்றமிழ் நாடன்ன மெல்லியலாய்
இன்றிவ் விரவி னிருள்சென் றிடங்கொண்ட தெங்குக்கொல்லோ
நின்று விசும்பிற் பகல்போல் விரியு நிலாமதியே.' (உகஅ)

இனிச், சிறைகாவல் எல்லாம் வந்த செய்யுள் :

'இரும்பிழி மாகாஅரிவ் வழுங்கன் மூதூர்
விழவின் றாயினுந் துஞ்சா தாகு
மல்ல லாவண மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொ லன்னை துஞ்சாள்
பிணிகொ ளருஞ்சிறை யன்னை துஞ்சிற்
றுஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவ
ரிலங்குவே லிளையர் துஞ்சின் வையெயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழு
மரவாய் ஞமலி குரையாது மடியிற்
பகலுரு வுறழ நிலவுக்கான்று விசும்பி
னகல்வாய் மண்டில நின்றுவிரி யும்மே
திங்கள் கல்சேர்பு கனையிருண் மடியி
னில்லெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்
வளைகட் சேவல் வாளாது மடியின்
மனைச்செறி கோழி மாண்குர லியம்பு
மெல்லா மடிந்த காலத் தொருநா
ணில்லா நெஞ்சத் தவர்வா ரலரே
அதனால், அரிபெய் புட்டி லாரப் பரிசிறந்
தாதி போகிய பாய்பரி நன்மா
னொச்சி வேலித் தித்த னுறந்தைக்
கன்முதிர் புறங்காட் டன்ன
பன்முட் டின்றாற் றோழிநங் களவே.' [அகம் - ௧௨௨]

[ஆறு பார்த்துற்ற அச்சக்கிளவி]

இனி, 'ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவியும்' என்பது : ஆறு என்பது வழி, பார்த்துறுதல் என்பது பரிவுறுதல், அச்சம் என்பது குறிப்பின்றியே தோன்றும் நடுக்கம், கிளவி என்பது சொல் ; அஃதாமாறு, தலைமகன் இரவுக்குறிவந்து ஒழுகாநின்ற நிலைமைக்கண், எம்பெருமான் வரும்வழி இறப்பவும் இன்னாது, நீருடைத்துக் கல்லுடைத்து முள்ளுடைத்து ஏற்றுடைத்து இழிவுடைத்து எனக் கவறல் ; இஃதாம் ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவியென்ப ஒரு சிறத்தார் ; அவரறியார், இஃது ஆறுபார்த்துற்ற கிளவியே. இனி, அச்சக்கிளவி யென்பது, கள்ளருடைத்துப் புலியுடைத்து, எண்குடைத்து, வெண்கோட்டியானை யுடைத்து, உருமுடைத்து, பாந்தளுடைத்து எனக் கவலுங் கவற்சியாற் சொல்லுவது. அவற்றுள்,

ஆறு பார்த்துற்றதற்குச் செய்யுள் :

'உருடங்கு மாநெடுந் திண்டே ருசித னுலகளிக்கும்
அருடங்கு செங்கோ லடன்மன்னன் கொல்லி யருவரைவாய்
மருடங்கு வண்டறை சோலைப் பொதும்பின் வழங்கற்கின்றே
இருடங்கு நீணெறி யெம்பொருட் டால்வந் தியங்கன்மினே.' ()

இது கேட்ட தலைமகன் வரைவானும்.

இனி, அச்சக்கிளவிக்குச் செய்யுள் :

'பண்குடை சொல்லிவள் காரண மாப்பனி முத்திலங்கும்
வெண்குடை வேந்தன் விசாரிதன் மேற்கரை யேற்றெதிர்ந்தார்
புண்குடை வேன்மன்னன் றென்னன் பொதியிற் புனவரைவாய்
எண்குடை நீள்வரை நீரைய யெல்லி யியங்கன்மினே' (உ௨0)

'அன்பெதிர்ந் தாலும் வருதல்பொல் லாதைய வாரமருள்
முன்பெதிர்ந் தார்பட சேவைவென் றூன்முகி றோய்பொதியிற்
பொன்பிதிர்ந் தாலன்ன மின்மினி சூழ்புற்றின் முற்றியசோற்
றின்பிதிர் வாங்கியெண் கேறு திளைத்துண்ணு மீண்டிருளே.' ()

இன்னும் அவற்றிற்குச் செய்யுள் :

'கையமை வேல்விளக் காகக் கனையிரு ளள்ளிரவின்
ஐயமை தோய்வெற்ப வா னறையாற் றமர்கடந்திவ [யில்
வையமெல் லாங்கொண்ட மன்னவன் மாறன்மை தோய்பொதி
தெய்வமெல் லாமரு விப்பிரி யாத சிறுநெறியே.' (உஉஉ)

தோள்வாய் மணிசிற மங்கைக்கு வாட்டபுர் துன்னுதற்கே
நாள்வாய் வருதிவிண் டோய்சிலம் பாநறை யாற்றுநண்ணார்
வாள்வா யுகசெற்ற வானவன் மாறன்மை தோய்பொதியிற்
கோள்வா யிளஞ்சிங்க நீங்கா திரிதருங் குன்றகமே.' (உஉ௩)

கார்தண் முகையன்ன மென்விர லேழைதன் காரணமாப்
பூந்தண் சிலம்ப விரவின் வருதல்பொல் லாதுகொலாம்
வேந்தன் விசாரிதன் விண்டோய் குடுமிப் பொதியிலென்றுந்
தேந்தண் சிலம்பி 'னரிமா திரிதருந் தீநெறியே.' (உஉ௪)

அழுது புலம்பியு ழையு மிவள்பொருட் டாகவைய
தொழுதுங் குறையுற்று வேண்டுவல் வாராறுன் றூர்நிணமும்
இழுது மிடைந்தசெவ் வேனெடு மாறனெங் கோன்முனைபோற்
கழுதுந் துணிந்து வழங்கல்செல் லாத கனையிருளே.' (உஉ௫)

'பொய்தலை வைத்த வருளொடு பூங்குழ லாள்பொருட்டா
மைதலை வைத்தவண் பூங்குன்ற நாட வரவொழிநீ
நெய்தலை வைத்தவை வேனெடு மாறனெங் கோன்முனைபோற்
கைதலை வைத்துக் கழுதுகண் சோருங் கனையிருளே. (௨௨௬)

இவை தோழிக்கு உரியன.

இனித், தலைமகட்கு உரியன வருமாறு :

'பணிகொண்டு வாழா தெதிர்ந்து பறந்தலைக் கோடிப்பட்டார்
துணிகொண்டு பேய்துள்ள வேல்கொண்ட கோன்சுடர் தோய்பொதி
அணிகொண்ட தாரண்ணல் வாரல் விடர்கின் றரவுமிழ்ந்த [யின்
மணிகொண்டு கானவர் வேழங் கடியு மயங்கிருளே.' (௨௨௭)

இவ்வகை சொல்லினவிடத்துத் தலைமகன் கேட்பானாயின் வரைவானும்; தோழி கேட்பின் வரைவு கடாவுவாளாம்; யாருங் கேட்பாரில்லையாயின் தானே சொல்லி ஆற்றுவாளாம். இஃது இரவுக்குறிக்கண்ணதே.

[இரவினும் பகலினும் நீவருகென்றல்]

இனி, 'இரவினும் பகலினும் நீவருகென்றலும்' என்பது : பகற்குறியானும் இரவுக்குறியானும் வந்தொழுகாநின்ற தலைமகனை இரவும் பகலும் வாவென்று சொல்லுதல்; அதற்குச் செய்யுள் :

'உரவுங் கடல்சூ ழுலகுடை வேந்த னுசிதனென்னோர்
பரவுங் கழன்மன்னன் கன்னியங் கானற் பகலிடைநீ
வரவு மகிழ்ந்தில னென்றையல் வெய்யோன் மலைமறைந்த
இரவும் வரவென்ன வூனம தாகின தின்னருட்கே.' (௨௨௮)

இது கேட்டு, 'இவ்வகை யான் வந்தொழுகப் பொறுது போலும் இவ்வகை சொல்வாளாயிற்று' என வரைந்து புகுவானும் என்பது.

இனி, ஒருசார் ஆசிரியர் இரவினும்பகலினும் நீ வருக என்றதனை இரவுவருவானைப் பகல்வருகென்றலும், பகல்வருவானை இரவுவருகென்றலும் என்றவாறு என்ப. அவற்றுக்குச் செய்யுள் வேறு காட்டுப. அவற்றுள் இரவுவருவானைப் பகல்வருகென்றதற்குச் செய்யுள் :

[பகல்வருகேன்றல்]

'அடிமே லகலிட மெல்லாம் வணக்கி யமரர்தங்கோன்
முடிமேல் வளைபுடைத் தோளொடு மாறன்முன் னுயர்த்த
கொடிமே லுருமதிர் கூரிருள் வாரன்மி னீர்மகிழும்
படிமேற் பகல்வம்மின் வந்தால் விரும்புமென் பல்வளையே' (உஉக)

என்பது கேட்டு, யான் இரவுவந்தொழுகப் பொருளாய்ப் பகல் வம்மின் என்கின்றது எனக் கருதி வரைந்து புகுவானும்.

இனிப் பகல்வருவானை இரவுவருகென்றற்குச் செய்யுள் :

[இரவுவருகேன்றல்]

'அஞ்சா தெதிர்மலைந் தாரமர் நாட்டுட னேமடிய
நஞ்சா ரிலங்கிலை வேல்கொண்ட தென்னனன் னாடனைய
பஞ்சா ரகலல்குல் பாற்பகல் வந்தாற் பழிபெரிதாம்
மஞ்சார் சிலம்ப வரவென்ன லூன மயங்கிருளே.' (உஉ0)

என இதுசொல்லப் பகல் வருவேனை இரவு வருகென்றது இவ்வொழுக்கம் பொருமையினும் என வரைந்து புகுவானும்.

[கிழவோன்றன்னை வாரல் என்றல்]

இனிக், 'கிழவோன்றன்னை வாரல் என்றலும்' என்பது, தலைமகனை இரவின்கண்ணும் பகலின்கண்ணும் வாரல் என்று சொல்லுதல் ; அதற்குச் செய்யுள் :

[இரவும் பகலும் வாரல் என்றல்]

'ஓதங் கடைந்தம ரர்க்கமு தாக்கி யுணக்கொடுத்துப்
பூதம் பணிகொண்ட பூழியன் மாறன் பொதியிலின்வாய்
ஏதம் பழியினொ டெய்துத லாலிர வும்பகலு
மாதங் கடைந்தமென் னோக்கி திறத்தைய வாரன்மினே.' ()

'கறங்குவெள் ளருவி பிறங்குமலைக் கவாஅற்
றேங்கம ழிணர வேங்கை சூடித்
தொண்டகப் பறைச்சீர்ப் பெண்டிரொடு தொகைஇ
மறுகு வாங்குஞ் சிறுகுடிப் பாக்கத்
தியன்முரு கொப்பனை வயநாய் பிற்படப்
பகல்வரிற் கௌவை யஞ்சுது மிகல்கொள
விரும்பிடி கன்றொடு விரைஇக் கயவாய்ப்
பெருங்கை யானை கோட்பிழைத் திரீஇ

யடுபுலி வழங்கு மாரிரு ணெடுநாட்
டனியை வருத லதனினு மஞ்சுது
மென்று குவள்கொ ளுனே பன்னாட்
புணர்குறி செய்த புலர்குர லேனற்
கிளிகடி பாடலு மொழிந்தன
ளளிய டாளின் னளியல திலளே.' [அகம் - கக௮]

ஒன்று மறுப்பின் ஒன்றின்கண்ணே நிற்குங்கொல்லோ என்று, இரண்டும் மறுத்து வரைவின்கண்ணே படுத்தவாறு எனக் கொள்க.

[தன்னுட்கையா றெய்திடுகிளவி]

'தன்னுட் கையாறு எய்திடு கிளவியும்' என்பது, தன்னுட் கையாற்றினை ஏதிலது ஒன்றின்மேலிட்டுச் சொல்லுதல்; அதற்குச் செய்யுள் :

'தன்பொற் சினத்துரு மேந்திய கோன்கன்னித் தாழ்துறைவாய்ப்
பொன்போன் மலர்ப்புன்னைக் கானலு நோக்கிப் புலம்புகொண்ட
என்போ லிரவினெல் லாந்துயி லாதுநின் றேங்குதியால்
அன்போ டொருவற் கறிவழிந் தாயோ வலைகடலே.' (உ௩உ)

'பொன்றான் பயப்பித்து நன்னிறங் கொண்டு புணர்ந்தகன்று
சென்றா ருளரோ நினக்குஞ்சொல் லாய்செந் நிலத்தைவெம்போர்
வென்றான் வியனில வேந்தன் விசாரிதன் வெல்கழல்சேர்ந்
தொன்றார் முனைபோற் கலங்கித்துஞ் சாயா லொலிகடலே.' ()

'பறைவா யொலியோதம் பந்த ருகளுந்
துறைசேர் சிறுகுடியார் துஞ்சினுந் துஞ்சாய்
நிறையின் மருண்மாலை யெம்போல நீத்த
துறைவ னுடையையோ நீவாழி வீராய்.'

'என்போல் இரவினெல்லாந் துயிலாய் நீயும் நின்காதலர்மாட்டு என்போல் அறிவிழந்தாயோ?' என்னும்; என்றது தலைமகன் கேட்பின் வரைவானும்; தோழி கேட்பின் வரைவுகடாவுவாளாம்; யாருங்கேட்பாரில்லையாயின் தானே சொல்லி ஆற்றுவாளாம்.

'அன்னமரபிற் பிறவுந்தொகைஇத் தன்னை அழிந்த கிளவி எல்லாம்' என்பது, அன்னமரபிற் பிறவுந் தனது ஆற்றாமையாற் சொல்லுஞ் சொல் எல்லாம், என்றவாறு ;

'வரைதல் வேட்கைப் பொருள என்ப' என்பது, வரைதல் வேட்பும், வரைதல் வேட்டுச் சொல்லுஞ் சொற்களும் என்றவாறு; வரைதல் வேட்புத் தலைமகள் சொல்லும் சொல்லெல்லாம்; தலைமகனைத் தோழி சொல்லுஞ் சொல்லெல்லாம் வரைதல் வேட்டுச்சொல்லுஞ் சொற்கள் என்றவாறு.

'அன்னமரபிற் பிறவும்' என்றதனாற் பகற்குறிக்கண்ணும் இரவுக்குறிக்கண்ணும் வந்து ஒழுகுந் தலைமகற்குத் தலைமகளும் தோழியும் ஆற்றாத்தன்மையராய் வரைவு பயப்பச் சொல்லுஞ் சொல்லெல்லாங் கொள்க அக்கிளவி பல; அவற்றுட் சில வருமாறு:

[நிலைகண்டுரைத்தல்]

'செய்ந்நின்ற வேலொடு மாறனெங் கோனந்த ணேரியென்னு
மைந்நின்ற குன்றச சிறுகுடி நீரைய வந்துநின்றாற்
கைந்நின்று கூப்பி வரையுறை தெய்வமென் றுதுகண்டோர்
மெய்ந்நின் றுணர்ப வெனினுய்யு மோமற்றிம் மெல்லியலே.' (உ௩௪)

என்பது, 'இரவுக்குறியிடத்து வந்து நின்றால், கண்டார் நும்மை முருகவேள் என்று கருதாது, மெய்ம்மை உணர்பவாயின், இவள் பெருநாணினளாகலின் இறந்துபடுமே!' என்னும்; அதுகேட்டுத் தலைமகன், 'பெரியதோர் இழுக்குடைத்தாக ஒழுகினேன்காண்' என, அன்று ஒருவகையான் முற்பட்டுப் பிற்றைஞான்று வரைவானாம்.

இன்னும், 'அன்னமரபிற் பிறவும்' என்றதற்குச் செய்யுள்:

[படைத்து மொழிகிளவி]

'அன்றாய் நெருந லிகழ்ந்தது சேளயல் வேந்திறைஞ்சும்
பொன்னார் கழலொடு மாறன் குமரியம் பூம்பொழில்வாய்
மின்னார் மணிநெடுந் தேர்கங்குல் வந்தின்று மீண்டதுண்டால்
என்னா முகஞ்சிவந் தெம்மையு நோக்கின ளெம்மனையே.' (உ௩௫)

என்பது இரவுக்குறியின்கண் தலைமகன் சிறைப்புறத்தானாவதறிந்து தலைமகட்குத் தோழி படைத்து மொழிந்து சொல்லியது. எங்ஙனமோவெனின், 'நெருநல், "என்னை நீர் விளையாடுங் கானலிடத்து ஒரு தேர்வந்து போயிற்று?" என

முனிந்து என்னை முகநோக்கிப் போயினள் அன்னை, இன்னது கருதி யென்பது அறியேன்' என்னும்; என, 'ஒக்கும், யான் வந்து ஒழுகுகின்ற ஒழுக்கம் புறத்தார்க்குப் புலனாயிற்றுப்-போலும்' எனப் பிற்றை ஞான்றே வரைந்து புகுவானும்.

இன்னும், 'அன்னமரபிற் பிறவும்' என்றதற்குச் செய்யுள் :

'பண்ணிவர் சொல்லிகண் டாடென்னன் பாழிப் பகைதணித்த
மண்ணிவர் சீர்மன்னன் வாணெடு மாறன் மலயமென்னும்
விண்ணிவர் குன்றத் தருவிசென் றாடியொர் வேங்கையின்கீழ்க்
கண்ணிவர் காதற் பிடியொடு நின்ற கருங்களிறே.' (உ௩௬)

என்பது, பகற்குறிவந்து ஒழுகுந் தலைமகற்குத் தோழி படைத்துமொழிந்து வரைவுகடாயது. அவ்வகைத்தாற் களிற்-றோடு ஒருபிடி வேங்கைக்கீழ் நின்றபடி கண்டு, 'இதுபோல நம் பெருமானும் நமக்கு வழிபட முடியுங்கொல்லோ' என்றாள் என்பது.

இன்னும், 'அன்னமரபிற் பிறவும்' என்றதற்குச் செய்யுள் :

'தொடுத்தான் மலரும்பைங் கோதைக்குத் தூதாய்த் துறைவனுக்கு
வடித்தான் படாவணந் சொல்லுங்கொல் வானோர்க் கமிழ்தியற்றிக்
கொடுத்தான் குலமன்னன் கோட்டாற் றழித்துத்தென் னாடுதன்
படுத்தான் பராங்குசன் கன்னியங் கானற் பறவைகளே.' [கைப்

இதுவும் அப்பொருட்கு ஏற்பச் சொல்லிக்கொள்க.

அஃதேயெனின், இச் சூத்திரத்துட் சொல்லப்பட்டன எல்லாம் தலைமகட்கேயுரியனவும், தோழிக்கே யுரியனவும், தலை-மகட்கும் தோழிக்கும் உரியனவும் என மூன்று வகைப்படும்:

காமமிக்க கழிபடர் கிளவியும், தன்னுட்கையா றெய்திடு கிளவியும் எல்லாம் தலைமகட்கே உரிய.

இரவினும் பகலினும் நீவருக என்றலும், கிழவோன் றன்னை வாரல் என்றலும் இவ்விரண்டும் தோழிக்கே உரிய.

ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவியும், காப்புச் சிறைமிக்க கையறு கிளவியும் இருவருக்கும் உரிய.

உரிமையால் தம்மையழிந்த கிளவியெல்லாம் என்று பன்-மையாற் சொல்லாது ஒருமையாற் சொல்லியது எற்றிற்கோ எனின், தோழி தலைமகள் என இருவரையும் வேறுபடுத்துக்

கருதாது ஒருவராகவே கருதற்பொருட்டாக ஒருமையாற் புணர்த்தார் என்பது. (௩௦)

[௩௧]

ஆறின் னுமையு மூறு மச்சமுந்
தன்னை யழிதலுங் கிழவோற் கில்லை.

என்பது என்னுதலிற்றோ எனின், களவுகாலத்துத் தலைமகனது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று. மேற் சூத்திரத்தோடு இயைபுஎன்னையோவெனின், மேற்சூத்திரத்துள் ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி என்றாற்குத், தலைமகன்கண்ணும் ஆறுபார்த்துறவு உண்டென்று கருதுவானாயிற் கருதற்க என்றதற்குச் சொல்லப்பட்டது.

இதன் பொருள் : ஆறு இன்னுமையும் என்பது — ஆறு எனினும் வழி யெனினும் ஒரு பொருட்கிளவி, வரும்வழி ஏற்றுடைத்து இழிவுடைத்து இழுக்குடைத்துக் கல்லுடைத்து முள்ளுடைத்து என்றல்; ஊறு என்பது — இடையூறு, புலியானும் யானையானுஞ் சூரரமகளிரானும் கள்ளரானும் எண்கானும் இடையூறுடைத்து என்றல்; அச்சம் என்பது — அஞ்சப்படுவன கண்டவிடத்து மனக்குறிப்பின்றியே அஞ்சுவது, அச்சமும் இவன்கணில்லை யென்றவாறு; தன்னையழிதலும் என்பது — தன்கண் ஒருதுன்பம் வந்தவிடத்து எனக்காகாததோ ரொழுக்கம் எடுத்துக்கொண்டேன் எனத் தன்னை நெஞ்சினால் நோதலும் என்றவாறு; கிழவோற்கு இல்லை யென்பது — இனையன தலைமகற்கு இல்லை என்றவாறு.

அஃதேயெனின், இவற்கு அவையுளவாய்வைத்து நினையாமையின் இல்லையோ? இல்லையாயே இல்லையோ? எனின், உளவேயெனின் நினையானாயினும் வந்து நிகழும். உலகத்து உயிர்வாழ் சாதிகளெல்லாம் தம் சாக்காடு நினைத்துச் செல்கின்றவுளவே? இல்லையன்றே; இல்லையெனினும் அவை வந்தே நிகழ்ந்துவிடும். அதுபோல இவன் நினையானாயினும் உளவாயின் நிகழவேண்டும்; இனி, இல்லையாயே யில்லையெனின், இல்லனை இல்லையென வேண்டுவதில்லை; என்னை, ஆகாயப்பூ இல்லை என வேண்டா, அதுபோல என்பது; என்றார்க்கு இல்லதனையே

இல்லையென்றார், இவன் உலகத்துத் தலைமகனல்லன், புலவரால் நாட்டப்பட்ட தலைமகன் என்பதனை யாப்புறுத்தற்கு. உலகத்துத் தலைமகனாயின் இவையெல்லாம் இல்லாமையில்லை யென்பது. கிழவோற்கில்லையெனவே கிழத்திக்கும் தோழிக்கும் அவையுள என்பது பெற்றாம். அவர் ஆறு இன்னாது என்றும் இடையூறுகள் உள என்றும் அவற்றிற்கு அஞ்சுதலும், நம்பெருமான் தனக்குத் தகாத இளிவரவொழுக்கம் ஒழுகுதற்குக் காரணமாயினேமாகாதே யென்று தம்மையழிதலும் உடையர் என்றவாறு.

அஃதேயெனின், வயிரமுடையான் ஒருவன், வயிரம் உருவெறியும் என்று அஞ்சான், அதுபோல இவரும் அஞ்சாதுவிடற்பாலார் பிற, அவற்கு அவையின்மையால் எனின், அதுவன்று; பெண்மை யென்பது ஒருபொருளைப் பட்டாங்கு அறியாமையாகலான், அவை அவற்கு இல்லையெனினும் உளவாகக் கருதுப என்பது. அஃதேயெனின், மேல் இவனைப் பொருவிறந்தான் என்று போதரப்பட்டதன்றே? பட்டமையான் அச்சமும் தன்னையழிதலும் இல்லையென்க் கொள்ளாமோ? மனத்தான் வரும் நோயெல்லாம் உணர்வின்மையான் வரும் என்பது கடா; அதற்கு விடை, இவன் ஞானத்தையும் ஒழுக்கத்தையும் விதி இழுக்கினமையாற் சிற்றறிவினர் தன்மை உண்மையான் உளகொல்லோ என்று கருதின் அவை யில்லை யென்பது போதரச் சொல்லப்பட்டது. (௧௧)

[௧௨]

களவினுட் டவிர்ச்சி வரைவி னீட்டந்
திங்க ளிரண்டி னகமென மொழிப.

என்பது என்னுதலிற்றோ எனின், களவினுள் தங்கி ஒழுகும் ஒழுக்கம் இத்துணைக் காலமல்லது இல்லை யென்று வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: களவினுள் தவிர்ச்சி என்பது — களவினுள் தங்குதல் என்றவாறு; வரைவின் நீட்டம் என்பது — வரைந்தெய்துந்துணை நீட்டிக்குங்காலம் என்றவாறு; திங்கள் இரண்டின் அகமென மொழிப என்பது — இரண்டு திங்களகம் எனக்கொள்க என்றவாறு.

இவ்வாற்ருனும் இஃது உலகத்து இயல்பன்று என்பது பெற்றும், உலகத்தொழுக்கத்திற்குக் காலவரையறை இன்மை-யான் என்பது. இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தவிடத்துப் பிராய-மும் ஈங்கே உரைக்கப்பட்டதாம். பதிருேராண்டும் பத்துத் திங்களும் புக்க தலைமகளோடும், பதினையாண்டும் பத்துத் திங்-களும் புக்க தலைமகனைப்போலும் புணர்தல்வேண்டிற்றென்பது பெற்றும். இவளும் இருதிங்கள் களவொழுக்கொழுகப் பன்னீ-ராட்டைப் பிராயத்தாளாம். அது மக்கட்பேற்றுக்குக் காலம்; களவொழுக்கத்திற்குப் பொருந்தாதெனை விலக்கப்பட்டதாம் ஆசிரியரான் என்பது. இவனும் இருதிங்கள் களவொழுக்கு ஒழுகப் பதினுருட்டைப் பிராயத்தாளும். அஃது ஆண்மை நிலைபெறுங் காலமாகலாற் களவொழுக்கிற்கு விலக்கப்பட்டது என்பது. அஃதேயெனின் இருதிங்கள் என்னுது அகம் என்றது எற்றிற்கோ எனின், இருதிங்களுள் ஐந்தானும் ஆருனும் நாள் உளவாகக் களவொழுக்கு ஒழிந்துநின்று, வரைந்துபுகுவத-ேனுடும் மறுப்பதனேடும் அத்துணை நாளும் புக்கு நிறைந்து நின்றபின்னை அதுபடின் மிகுவான் புகும் என்பது. அஃதே யெனின், இருவர்க்கும் மூப்புப் பிணி சாக்காடும் இல்லையென்று மேற் சொல்லியதனேடு மாறுகொண்டு காட்டிற்றும், அதுபட உரைத்தமையின் என்பது. எங்ஙனமோ எனின், இருதிங்கட் புகப் பன்னீராட்டைப் பிராயத்தாளேயாயக்கால் பின்னைப் பதின் மூவாட்டைப் பிராயத்தாளாய் இவ்வகை நூற்றிருபது புக்குத் தலைமடியவேண்டும் என்பது; இவற்கும் அம்முறையே கொள்க என்பது; மூப்புப் பிணி உள்வழிச் சாக்காடுண்மையா-னென்பது கடா. அதற்குவிடை எங்ஙனமோ எனின், இரு திங்கட்புக இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய் இவனும் பதினுருட்டைப் பிராயத்தாளுய்ச் செல்வதல்லது, மற்றையன நிகழா; உலகினேடு இத்துணை மாத்திரையே யொத்து, மற்றை விகற்பமெல்லாம் ஒவ்வா எனக் கொள்க. ஒத்து ஒவ்வாதா யன்றே செல்கின்றது என்பது. அஃதேயெனின்,

'அண்ணுந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியிற் ருழ்ந்த
நன்னெடுங் கூந்த னரையொடு முடிப்பினும்
நீத்த லோம்புமதி பூக்கே மூர.' (நற்றிணை - ௧0)

என இலக்கியம் வருவன உளவாலோவெனின், அஃதில்லை-மன், அஃது எய்திடினும் என்றவாறு.

இனி, ஒரு திறத்தார், 'திங்கள் இரண்டினகம்' என்பதனைச் சொல்லுமாறு :

பிறைத்திங்கள் மதித்திங்கள் என இரண்டு; அவற்றுட் பிறைத்திங்கள் முன்னொளியாய்ப் பின்னிருளாம்; மதித்திங்கள் பின்னொளியாய் முன்னிருளாம்; அவ்விரண்டுஞ் சந்தித்துநின்ற இருட்காலத்தாக என்றவாறு. அது பொருந்தாது; என்னை காரணமெனின், இரவுக்குறிக்கே சொல்லினமையான். அல்ல-தூஉங் காலவரையறையின்றியே எஞ்ஞான்றும் இருட்டிங்கட்-கண்ணே களவொழுக்கம் வேண்டப்பட்டதாம் என்பது.

இனி, ஒரு சாரார், 'திங்களிரண்டினகம்' என்பதனை ஒரு திங்-களை இரண்டு கூறிட்ட ஒரு கூறு என்று பதினைந்து நாளாகச் சொல்லுப. அதுவும் பொருந்தாமை அறிந்துகொள்க. (௩௨)

[௩௩]

களவினுட் டவிர்ச்சி கிழவோற் கில்லை.

என்பது என்னுதலிற்றோ எனின், களவுகாலத்துத் தலைமகனது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள் : களவினுள் தவிர்ச்சி கிழவோற்கு இல்லை என்பது — களவுகாலத்துத் தலைமகன் காரணமாக இடையிடும் இடையீடு இல்லை என்றவாறு.

'தலைமகற்கில்லை' எனவே, அருத்தாபத்தியால் தலைமகள் காரணமாக உண்டு என்பது.

இன்னும், 'களவினுள் தவிர்ச்சி கிழவோற்கில்லை' என்ப-தனானே கற்பினுள் தலைமகள் காரணமாக இடையீடில்லை யென்றும். என்னை, இவன் ஒரு ஞான்று ஒருகால் அக்குறி-யிடத்து வந்து பெயருந் தலைமகளைச் சார்ந்த இடையூறுகள் எய்தானும் என்பது.

இனி, ஆண்மைமிக்க தலைமகன் பிரிவு வேண்டுவதல்லது தலைமகள் வேண்டாள் கற்பினகத்து என்றவாறு. இது சொல்ல-வேண்டா; என்னை காரணம் எனின்,

'களவினுட் டவிர்ச்சி காப்புமிகி னுரித்தே
வரைவிடை வைத்த காலை யான.' (இறையனார் - கசு)

எனவும்,

'அல்லகுறிப் படுதலு மவவயி னுரித்தே
யவன்வர வறியுங் குறிப்பி னான.' [இறையனார் - கஎ]

எனவும் இவ்வகையான் இடையீடு தலைமகளைச் சார்ந்துழிய-வாகலாற் பெறப்பட்டது என்பது. இனி, ஒதல் காவல் பகை-தணிவினை என இவை தலைமகனியல்பாதலாற் கற்பினுள் தலை-மகன் இடையீடாகலும பெறப்பட்டது ஈங்கு உரைக்க வேண்டா என்பது. அவ்வகை இலேசினாற் பெறப்படும். அதனையே மாணாக்கன் இனிதுணரல்வேண்டி எடுத்தோதினார் என்பது.

அல்லது, ஒரு திறத்தார், களவினகத்துத் தலைமகளுழைத் தங்கிப் பிற்றைஞான்று போதல் தலைமகற்கு இல்லை என்றவாறு என்ப; அது பொருந்தாது. வந்து பெயர்வதல்லது நீட்டிக்கில் இடையீடாம், அஃது உணரப்படுமாகலான் என்பது. மற்று என்னோ எனின், களவினுள் தவிர்தல் என்பது தமியனா-கற்றன்மை யொழிதல் என்றவாறு. நோய்தவிர்ந்தது வெப்-புத் தவிர்ந்தது என்ப, ஒழிநதது என்பார்

இனிக், 'கிழவோற்கில்லை' என்பது, தலைமகற்கு இல்லை என்றவாறு. எனவே, அவ்விருதிங்கள்காறுந தெருளாதே வந்தொழுகுபு தலைமகன், தலைமகளாயின் அவ்விடத்து அன்று தெருளாளாயின் பிற்றை ஞான்று உணரும் என்பது ஆயின், இவனாகாதே தெருளற்பாலான், பெருஞானத்தனாகலான், இவ-ளாகாதே தெருளாது விடற்பாலாள் அவன்றனைப் பேரறிவின ளன்மையானெனின், அதுவன்று. அவன்கணின்ற தமியனாதற் றன்மையை விலக்குவது இல்லை; இன்மையான், அப்பெற்றி சுட்டப்பட்டது. இவள்மாட்டு அதனை விலக்குவதுண்டன்றே, இவனது இளிவரவிற்கும் வருத்தத்திற்கும் கவன்ற கவற்சி யென்பது. அதனான் இவன் தெருளாமைக்கும் இவள் தெருடற்கும் காரணம் இது என்பது. (நட)

களவு முற்றும்.

# கற்பு

# இறையனார் களவியல்

## கற்பு

[௫௪]

கற்பினுட் டுறவே கடிவரை வின்றே.

என்பது என்னுதலிற்றோ எனின், இங்குநின்றுங் கற்பினது இலக்கணம் உணர்த்துதல் நுதலியெடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் பொருள். கற்பினுள் துறவே என்பது — கற்பினகத்து நீங்கும் நீக்கம் என்றவாறு, துறவு எனினும், நீக்கம் எனினும், பிரிவு எனினும், அகற்சி எனினும் ஒக்கும்; கடிவரைவு இன்றே என்பது — கடிந்து வரையப்படாது ஆசிரியர்களால் என்றவாறு.

அஃதேயெனின், 'கற்பினுட் டுறவே கடித லின்றே' எனவும், 'வரைத லின்றே' எனவும் சொல்லாது, 'கற்பினுட் டுறவே கடிவரை வின்றே' என்றது எற்றிற்கோ எனின், ஆசிரியர்களால் விலக்கவும்படாது, இத்துணைக்காலம் என்று வரையறுக்கவும் படாது என்றவாறு. எனவே, களவினகத்துப் பிரியும் பிரிவு ஒருகாலல்லது இல்லை யென்றவாறு. களவினகத்துப் பகற்குறிநிலைமைக்கண்ணும் இரவுக்குறிநிலைமைக்கண்ணும் வந்து பிரியுமாகலான் அதுவும் பல்காலும் நிகழ்தலுடைத்துப்பிற எனின், அவை யெல்லாம் ஆசிரியராற் பிரிவென்று வேண்டப்படா, ஒரு கருமநோக்கிப் பெயர்ந்தன அன்மையின். அல்லதூஉம், அவையேயானும் வரையறை யுடைத்தாகலான் என்பது. (௧)

[ரு௫]

**ஓதல் காவல் பகைதணி வினையே**
**வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்**
**றாங்க வாறே யவ்வயிற் பிரிவே.**

என்பது என்னுதலிற்றோ எனின், மேற் கற்புக்காலத்துப் பிரிவு பல என்றார், அவையிற்றைப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

**இதன் பொருள்** : ஓதல் என்பது — கல்வி [1] காரணத்துப் பிரியும் பிரிவு என்றவாறு ; காவல் என்பது — நாடு காத்தற்குப் பிரியும் பிரிவு என்றவாறு ; பகைதணிவினை என்பது — இருவர் அரசர் தம்மிற் பொருப என்றவிடத்து அவரைச் சந்து செய்வித்தற்குப் பிரியும் பிரிவு என்றவாறு; வேந்தர்க்கு உற்றுழி என்பது — வேந்தர் என்பார் அரசர், அரசர்க்குற்றுழிப் பிரியும் பிரிவு என்றவாறு ; பொருட்பிணி என்பது — பொருட்குப் பிரியும் பிரிவு என்றவாறு; பரத்தை என்பது — புறப்பெண்டிர் மாட்டுப் பிரியும் பிரிவு என்றவாறு; பரம் என்பது புறம், அஃது ஆரியச்சொல் : என்று என்பது, எண்ணுதற்கு உரியதோர் வாய்பாடு ; ஆங்கு என்பது, அசைச்சொல்; ஆறு என்பது, அவற்றது தொகை ; அவ்வயின் என்பது — [2] அவ்விடத்து என்றவாறு ; பிரிவு என்பது — நீக்கம் என்றவாறு.

ஏ என்பது, ஈற்றசை ஏகாரம்.

பெயர், சொல்லப்பட்ட பெயர் ; முறை, கிடந்த முறை ; தொகை, ஆறு எனக்கொள்க.

இனி, ஓதற்குப் பிரியும் பிரிவு முன் வைக்கப்பட்டது, தலையான பிரிவாகலானும் உயர்ந்தோர்க்கு உரித்தாகலானும் என்பது. பரத்தையிற்பிரிவு பின் வைக்கப்பட்டது, காமம் பின் வைத்து எண்ணப்படுமாகலான் என்பது.

அஃதே யெனின், இவர் முன் பொருவிறந்தார் என்பதனோடு மாறுகொண்டது இச்சூத்திரம்; என்னையோ எனின்,

1 - காதலித்துப். 2 - கற்பினிடத்து.

தலைமகளை எய்தியிருந்தே இவன் ஓதுவான் பிரிவான் எனின், முன் ஞானமிலனும்; இலனாகவே, ஞானத்தின் வழியது ஒழுக்கமாகலானும், ஒழுக்கத்தின் வழித்துத் தலைக்குலமாகலானும் இவையெல்லாங் குறைவுபட்டானும் என்பது.

இனிக், காவல் என்பது, இவன் நாட்டைப் பிறர் புகுந்து அலைப்பதும் கொள்வதும் செய்ய, அவரை நீக்குதற்கு நீங்குமே எனின், ஆண்மையிற் குறைபட்டானும் என்பது.

இனிப், பகைதணிவினை யென்பது, சந்துசெய்வித்தற்குப் பிரியுமேயெனின், தூதுவனாயினானும்; தூதுவராவார் பிறர்க்குப் பணிசெய்து வாழ்வார் ஆவர்; அவரது பொருவிறப்பு என்னையோ என்பது.

இனி, வேந்தற்குற்றுழிப் பிரியுமே யெனின், [1] கருமஞ்செய்வானும்; கருமஞ் செய்வது என்பது, இறப்பவும் இளிவந்ததோர் ஒழுக்கம்; பிறர்குறிப்பன்றித் தன்குறிப்பு இல்லையெனப்படும்; ஆகலின், அவரது பொருவிறப்பு என்னையோ என்பது.

இனிப், பொருள்வயிற் பிரியுமே யெனின், முன்னர்ப் பொருளிலன் ஆயினானும்; ஆகவே, எள்ளுநர்ப் பிணித்தலும் இரந்தோர்க்கீதலும் என்றும் இவையெல்லாம் பொருட்குறைபாடு உடையார்க்கு நிகழாமையின் இக்குறைபாடெல்லாம் உடையனும்; அவையுடையானது பொருவிறப்பு என்னையோ என்பது.

இனிப், பரத்தையர்மாட்டுப் பிரியுமேயெனின், இவன் கண்டார்கண் தாழ்வானும்; ஆகலான், தலைமகள்மாட்டே கிடந்த அன்பிலன் ஆயினானும். அல்லதூஉம், கண்டுழி யெல்லாம் உள்ளத்தைச் செலீஇ, உள்ளத்தின்வழி ஓடுமாகலான் நிறையிலன் ஆயினானும்; நிறையிலானது பொருவிறப்பு என்னையோ என்பது.

இவை யெல்லாஞ் சொல்லப் பெரிது மாறுகொண்டு காட்டிற்று எனின், மாறுகொள்ளாது; மாறுகொள்ளாமைக்குக் காரணம் என்னையோ எனின்,

1 - கருமச்சேவகனும்.

ஓதற்குப் பிரியும் என்பது, கற்பான் பிரியும் என்பதன்று; பண்டே குரவர்களாற் கற்பிக்கப்பட்டுக் கற்றான், அறம் பொருள் இன்பம் வீடுபேறுகள் முதலிய நூல்களெல்லாம்; இனிப், பரதேசங்களினும் அவை வல்லார் உளரெனிற் காண்டற்கும், வல்லார்கள் உள்வழிச் சென்று தன் ஞானம் மேற்படுத்து அவர் ஞானங் கீழ்ப்படுத்தற்கும் பிரியும் எனக்கொள்க.

இனி, நாடு காத்தற்குப் பிரியும் என்பது, நலிவார் உளராக நலிவு காத்தற்குப் பிரியும் என்பதன்று; நாட்டகத்து நின்றும் நகரகத்துத் தமக்கு உற்றது உரைக்கலாத மூத்தார்களும் பெண்டிர்களும் இருக்கைமுடவரும் கூனரும் குருடரும் பிணியுடையாரும் என இத்தொடக்கத்தார்தம் முறைக்கருமங் கேட்டுத் திருத்துதற்பொருட்டாகவும், காட்டகத்து வாழும் உயிர்ச்சாதிகள் ஒன்றனையொன்று நலிவன உளவாயினவிடத்துத் தீதென்றவற்றை முறைசெய்தற்கும், கொடிவலைப்பட்டுக் கிடந்தனவற்றைத் துயக்க நீக்குதற்பொருட்டாகவும், வளன் இல்வழி வளம் தோற்றுவித்தற்பொருட்டாகவும், தேவகுலமே சாலையே அம்பலமே என்று இத்தொடக்கத்தனவற்றை ஆராய்தற்கும், அழிகுடியோம்புதற்கும பிரியும் என்பது. அல்லதூஉம், பிறந்த உயிர் தாயைக்கண்டு இன்புறுவதுபோலத் தன்னாற் காக்கப்படும் உயிர்வாழ்சாதிகள் தன்னைக் கண்டு இன்புறுதலின் தான் அவர்கட்குத் தன் உருக்காட்டுதற்கும், மாற்றரசர் ஒற்று வந்தவிடத்து அவர் முன்னர்த் தனது ஊக்கங் காட்டுதற்பொருட்டாகவும் பிரியும்; அதனானே மாற்றரசரும் திறை கொடுப்பர் என்பது.

இனிப், பகைதணிவினை யென்பது, தூதுவர்போலச் சந்து செய்வித்தற்குப் பிரியும் என்பதன்று; இருவர் அரசர் நாளைப் பொருதும் இன்றுபொருதும் என்று முரண்கொண்டு இருந்த நிலைமைக்கண் தான் [1] அவருக்கரசனாகலின், 'இம்மக்களும் இவ் விலங்குகளுமெல்லாம்பட இவ்விரண்டு குலத்திற்கும் ஏதம் நிகழும்; அதனால், இப்போரொழிக்கற்பாலேன்' என்று இருவரையும் இரந்து சந்துசெய்வித்தலும் ஒன்று; அல்லதூஉம், தேவரும் அசுரரும் பொருதகாலத்துத் தேவரையும் அசுரரையும்,

[1] அருளரசனாகலின்.

'ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஒறுப்பல் யான்' எனப் பாண்டியன் மாகீர்த்தி சந்துசெய்வித்ததுபோல், 'இருவரின மிகைசெய்தீரை ஒறுப்பல்' என்று சந்துசெய்வித்தலும் ஒன்று, இருவரையும் ஒறுக்குந்துணை ஆற்றலுடைய ஞைகலான் என்பது. அஃதே யெனின், தன்னகத்து இருந்துவிட அமையாதோ அன்னவாற்றலனுகலான், தான் செல்லவேண்டுமோ எனின், செல்ல வேண்டும் என்பது. என்னை, காதலர்ப் பிரிந்து ஒரு கருமம் முடிப்பதனின் மிக்க ஆள்வினையில்லை யென்பது. ஆதலாற் பிரிந்தே சந்துசெய்விக்கும என்பது.

இனி, வேந்தர்க்குற்றுழி என்பது, அவர்க்குச் சேவகனைப் பிரியும் என்பதன்று; தனக்கு நட்டான் ஓரரசன் சென்றவிடத்து அவற்கு [1] ஆபதம் அறுத்தல் இயையாதென்று நீக்குதற்குப் பிரியும் என்பது.

இனிப், பொருட்பிணி என்பது, பொருளிலனைப் பிரியும் என்பதன்று; தன் முதுகுரவாரற் படைக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட பொருளெல்லாம் கிடந்ததுமன், அதுகொடு துய்ப்பது ஆண்மைத்தன்மை யன்றெனத் தனது தாளாற்றலாற் படைத்த பொருள்கொண்டு வழங்கி வாழ்தற்குப் பிரியும் என்பது; அல்லதூஉம், தேவர்காரியமும் பிதிரர்காரியமும் தனது தாளற்றலாற் படைத்த பொருளாற் செய்தனவல்லது பயன் படாது; என்னை, தாயப்பொருளாற் செய்தது தேவரும் பிதிரரும் இன்புறார்; ஆதலான், அவர்களையும் இன்புறுத்தற்குப் பிரியும் என்பது.

இனிப், பரத்தை என்பது, [2]பொதுப் பெண்டிர்மாட்டுப் பிரிவு; இவள்கண் அன்பிலனைக் கண்டார்கண் தாழ்ந்து நிறையிலனைப் பிரிந்தான் அல்லன்; என்னை, தலைமகளின் நீங்கி ஆடல்காண்பல் பாடல்கேட்பல் எனப் பிரியும்; பிரிய, அவற்றின்கட் சென்ற உணர்ச்சி தலைமகண்மாட்டு நின்ற உணர்வினை மறைப்பிக்கும்; என்னை, இரண்டுணர்வு உடனில்லாமையின்; அவ்வகை மறைப்ப இவர்கண்ணதே உள்ளமாம்

1 - ஆய மறுதலையை வென்று நீக்குதற்குப் பிரியும்,
2 - புறப்பெண்டிர்,

என்பது ; என்னை, தாம் இயல்பாகவேயும் பிறரால் நயக்கப்படும் வனப்புடையார், ஆடற்றகையானும் பாடற்குரலானும் நயப்பித்துக்கொள்வம் என்று எடுத்துக்கொண்டார், அவர்கண் நயப்புச் சொல்லவேண்டுமோ என்பது. அவற்றது பொருள் அறியாது கடாயினுய், இஃது அவற்றுப் பொருளென்றுகொள்க என்பது.

இனிப் பிரிவுகளை வேறு வேறு உரிமை கூறுமிடத்து அவற்றுக்குச் செய்யுள் காட்டுதும். (உ)

[ ௩௨ ]

அவற்றுள்
ஓதலுங் காவலு முயர்ந்தோர்க் குரிய.

என்பது என்னுதலிற்றோ எனின், மேற் சொல்லப்பட்ட பிரிவினை நிறுத்தமுறையானே முன்பு இரண்டும் இன்னார்க்கு உரிய என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : அவற்றுள் என்பது — மேற் சொல்லப்பட்ட அறுவகைப் பிரிவினுள்ளும் என்றவாறு ; ஓதலும் காவலும் என்பது — ஓதற்குப் பிரியும் பிரிவும் நாடுகாத்தற்குப் பிரியும் பிரிவும் என்றவாறு ; உயர்ந்தோர்க்கு உரிய என்பது — உயர்ந்தோர் என்பார் பார்ப்பாரும் அரசரும், அவ்விருவர்க்கும் உரிய என்றவாறு.

ஓதற்குப் பிரியும் பார்ப்பான், நாடுகாத்தற்குப் பிரியும் அரசன் என நிரனிறையாகக் கொள்க. அது பொருந்தாது; என்னை, ஓதலும் காவலும் அந்தணர் அரசர் என்று இருவர்க்கும் உரியவெனினும் நிரனிறையாவது என்றூர்க்கு, அவ்வாறு சொல்லிற்றிலராயினும் பொருள்வகையான் நோக்க ஒக்கும் என்பது. என்னை, உயர்ந்தோர்க்கு உரிய எனவே, உயர்ந்தோராவார் பார்ப்பாரும் அரசருமே யாகலான் என்பது. என்றூர்க்கு, உயர்ந்தோர்க்கு உரிய என்றதனைப் பார்ப்பார்க்கே உரிய என்று கொள்ளாமோ எனின், கொள்ளப்படாது ; காவல் பார்ப்பார் தொழிலன்று, ஆகலின் இருவர்க்கும் உரிய என்பது பெறுதும் ; அல்லதூஉம், உரையிற்கோடல் என்பது தந்திரவுத்தியாகலானும் இருவர்க்கும் உரிய என்பது பெறுதும்.

ஓதற்குப் பிரிதலுறுந் தலைமகன் தோழியால் தலைமகட்குப் பிரிவுணர்த்துவிக்கும்; அதற்குச் செய்யுள் :

[ஓதற்பிரிவுணர்த்தல்]

'மைதா னிலாததங் கல்வி மிகுத்து வருவதெண்ணிப்
பொய்தா னிலாதசொல் லார்செல்வர் போலும்புல் லாதமரே
செய்தார் படச்செந் நிலத்தைக் கணைமழை திண்சிலையாற்
பெய்தான் விசாரிதன் [1]றென்னனன் னாட்டுறை பெண்ணணங்கே.'

காவற்குப் பிரியலுறுந் தலைமகன் தோழியால் தலை-மகட்குப் பிரிவுணர்த்துவிக்கும்; அதற்குச் செய்யுள் :

[காவற்பிரிவுணர்த்தல்]

'தேக்கிய தெண்டிரை முந்நீ ரிருநிலந் தீதகலக்
காக்கிய செல்வது காதலித் தாரன்பர் காய்ந்தெதிரே
யாக்கிய வேந்த ரமர்நா டடையத்தன் னஞ்சுடர்வாள்
நோக்கிய கோனந்தண் கூட லனைய நுடங்கிடையே.' (௨௧௧)

என்பது. (௧)

[௧௭]

**வேந்துவினை யியற்கை பார்ப்பார்க்கு முரித்தே.**

என்பது என்னுதலிற்றோ எனின், பார்ப்பார்க்குப் பிரிவென்று ஓதப்பட்டது கல்வி விளக்குதற்குப் பிரியும் பிரிவன்றே, அதுவல்லது பிறிதும் ஒரு பிரிவு உண்டென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : வேந்து என்பது அரசு; வினை என்பது செய்கை; இயற்கை என்பது தன்மை; பார்ப்பார்க்கும் உரித்தே என்பது பார்ப்பார்க்குங் கிழமையுடைத்து என்றவாறு.

என்பதனாற் போந்த பொருள், வேந்தர் செய்வித்தற்கு உரிய சந்து பார்ப்பார்க்கும் உரித்து என்றவாறு. வேந்தர்க்குச் சந்து செய்வித்தல் உரித்து என்று மேற்சொல்லிப் போந்தாரா-யினன்றே, 'வேந்துவினை இயற்கை பார்ப்பார்க்கும் உரித்தே' என்பது எனின், அது மேற்சொல்லினான். என்னை, காவல், பகைதணிவினை என இரண்டினையும் ஒருங்குவைத்து அவ்விரண்-

1 - றென்புன னாடன்ன பெண்கொடியே.

டினையும் அரசர்க்குரிய என்றமையின் அப்பொருட்டு என்பது என்னை அரசர்க்கு உரித்தாமாறு எனின், இருவரரசர் வேறு-பட்டு மாறுகொண்டிருந்தவிடத்து அவர்களைச் சந்துசெய்வித்-தற்குப் பிரியாதுவிடின், அவர்களைச் சார்ந்து வாழ்வாரும் அவர்கள்நாடும் பெரிதுங் கெடுமன்றே; அதனை நீக்கும் பெரு-மையுடையான் அதனை நீக்காது உடன்பட்டிருப்பது பாவமும் பழியுமாகலான், அரசர்க்கு உரித்து: அவ்வகை அவர்க்கு உரித்தாகிய சந்து பார்ப்பார்க்கும் உரித்து; என்னை, அவரும் பெருமையுடையர் ஆகலான். அதற்குச் செய்யுள்:

தாக்கிய போர்வய வேந்த ரிருவர்க்குஞ் சந்திடைநின்
றூக்கிய செல்வது காதலித் தார்நம ராமருள்
வீக்கிய வார்கழல் வேந்தர்தம் மானம்வெண் மாத்துடனே
நீக்கிய கோனெடு நீர்வையை நாடன்ன நேரிழையே. (உ௪0)

என்பது. (௪)

[ந அ]

அரச ரல்லா வேனை யோர்க்கும்
புரைவ தென்ப வோரிடத் தான.

என்பது என்னுதலிற்றோ எனின், சந்து செய்வித்தற்குப் பிரியும் பிரிவு அரசர்க்கன்றியும் வாணிகர்க்கும வேளாளர்க்கும் உரித்து என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: அரசர் அல்லா ஏனையோர்க்கும் என்-பது — அரசரல்லாத ஏனையோராவார் ஒழிந்த வாணிகரும் வேளாளரும் என்ற இருவர்க்கும் என்றவாறு; புரைவது என்ப ஓரிடத்தான என்பது — பொருந்தும் என்ப அவர் இல்வழி என்றவாறு.

அரசரில்லாதவழி வாணிகரும் வேளாளரும், வேறுபட்டு மாறுகொண்ட இருவரையும் சந்து செய்வித்தற்குப் பிரியப் பெறுவார் என்பது. பொருளானும் ஆள்வினையானும் அர-சரோடொப்பர், வாணிகரும் வேளாளரும் என்னும் வேற்றுமை யல்லது என்பது. அஃதே யெனின், மேற்சூத்திரம் வேண்டா, 'அரசரல்லா ஏனையோர்க்கும்' எனவே, பார்ப்பாரும் அடங்குவர்

ஆகலான் என்பது; என்றார்க்கு, அதுவன்று; அரசரல்லா ஏனையோர் என்பது அரசரிற் பின்சொல்லப்படும் வாணிகரையும் வேளாளரையும் தழுவுதற்குச் சொன்னார் என்பது. அல்லாக்கால், 'வேந்துவினை இயற்கை பார்ப்பார்க்கும் உரித்து' என்றார்மன் என்பது. இவ்விருவர்க்கும் செய்யுள் மேற்காட்டிற்றே கொள்க. (ரு)

[௩௧]

வேந்தர்க் குற்றுழிப் பொருட்பிணிப் பிரிவென்
றாங்க விரண்டு மிழிந்தோர்க் குரிய.

என்பது என்னுதலிற்றோ எனின், வாணிகர்க்கும் வேளாளர்க்கும் உரியதோர் பிரிவு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : வேந்தர்க்கு உற்றுழி என்பது — அரசர்க்கு உற்றுழி என்றவாறு; பொருட்பிணிப் பிரிவு என்பது — பொருள்வேட்கையிற் பிரியும் பிரிவு என்றவாறு; என்று என்பது, எண்ணுதற்குரியதோர் வாய்பாடு; ஆங்க என்பது, அசைச்சொல்; இரண்டு என்பது, தொகை; உம்மை, முற்றும்மை; இழிந்தோர்க்கு உரிய என்பது — வாணிகர்க்கும் வேளாளர்க்கும் கிழமையுடைய என்றவாறு.

இழிபுயர்படச் சொல்லினரால், இழிந்தார் என்பது பொருவிறப்பினொடு மாறுகொள்ளும் எனின், கொள்ளாது; இந் நூல் உலகினோடு ஒத்தும் ஒவ்வாதும் நடக்கின்றதாகலான் உலகியல் நோக்கிச் சாதிவகையான் இழிந்தார் எனப்பட்டது. ஒழிந்தனவற்றாற் பொருவிறப்பு இருவர்க்கும் ஒக்கும் என்பது.

அவற்றுள், வேந்தற்குற்றுழிப் பிரியுந் தலைமகன் தோழியால் தலைமகட்குப் பிரிவுணர்த்துவித்துப் பிரியும்; அதற்குச் செய்யுள் :

[வேந்தற்குற்றுழிப் பிரிவுணர்த்தல்]

'வாரார் முரசின் விரைசேர் மலர்முடி மன்னவற்காய்ச்
சேரார் முனைமிசைச் சேறலுற் றார்நமர் செந்நிலத்தை
ஓரா தெதிர்ந்தா ருடன்மீ துலாவி யுருள்சிவந்த
தேரான் றிருவளர் தென்புன னாடன்ன சேயிழையே.' (உ௬௪)

'கன்னவி ரேண்மன்னன் றெம்முனை மேற்கல வாரைவெல்வான்
வின்னவி றேளன்பர் செல்வர் விசய சரிதனென்னுந்
தென்னவன் சேரார் படநறை யாற்றுச செருவடர்த்த
மன்னவன் கூடல்வண் டீந்தமி ழன்ன மடமொழியே.' (உசஉ)

தலைமகன் வேந்தர்க்குற்றுழிப் பிரிந்தவிடத்துத் தலைமகள் வேறுபட்டு ஆற்றாளாயினள் எனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பதுபடத் தலைமகள் சொல்லியதற்குச் செய்யுள் :

[கார்மிசை வைத்தல்]

'படலைப் பனிமலர்த் தாரவர் வைகிய பாசறைமேற்
றொடலைக் கமழ்நறுங் கண்ணியி னாய்சென்று தோன்றுங்கொல்லோ
அடலைப் புரிந்தசெவ் வேலரி கேசரி தென்குமரிக்
கடலைப் பருகி யிருவிசும் பேறிய கார்முகிலே.' (உசங)

என்பது;

'வாமா னெடுந்தேர் வயமன்னர் வாண்முனை யாக்கும்வண்டார்
தேமா நறுங்கண்ணி யாய்சென்று தோன்றுங்கொல் சேரலர்தங்
கோமான் கடற்படை கோட்டாற் றழியக் கணையுகைத்த
ஏமாண் சிலையவன் கன்னிநன் னீர்கொண்ட ஈர்ம்முகிலே.'(உசச)

இதுவும் அது.

அதுகேட்ட தோழி, 'இவள் பிரிவாற்றாமையான் அன்று வேறுபட்டது; அவர் குறித்துப் பிரிந்த கார் வரப், பிரிந்த பாசறைக்கண் தோன்றியக்கால், தாம் எடுத்துக்கொண்ட வினை முடியாது மீள்வர்கொல்லோ எனப்போலும் இவள் ஆற்றாளாயது; யான் பிழைக்க உணர்ந்தேன்' என ஆற்றுவாளாவது.

வேந்தர்க்குற்றுழிப் பிரிந்த தலைமகன் தான் குறித்த பருவவரவின்கண் வினைமுற்றி மீளலுறுவான் தேர்ப்பாகற்குச் சொல்லியதற்குச் செய்யுள் :

[நிலைமை நினைந்து கூறல்]

'இன்பார்ப் பொடுங்க வலஞ்சிறை கோலி யிடஞ்சிறையால்
அன்பாற் பெடைபுல்லி யன்ன நடுங்கு மரும்பனிநாள்
என்பாற் படரொடென் னுங்கொ விருஞ்சிறை யேற்றமன்னர்
தென்பாற் செலச்செற்ற கோன்வையை நாடன்ன சேயிழையே.'()

'அன்புடை மாதர்கண் டாற்றுங்கொ லாற்றுக் குடியடங்கா
மன்புடை வாடவென் றான்றமிழ் நாட்டு வலஞ்சிறைக்கீழ்
இன்புடை யேரிளம் பார்ப்புத் துயிற்றி யிடஞ்சிறைக்கீழ்
மென்பெடை புல்லிக் குருகு நரல்கின்ற வீழ்பனியே.' (உசக)

இது கேட்ட தேர்ப்பாகன் விரைந்து போதற்கு ஒருப்படுவானும்.

இன்னும், வேந்தர்க்குற்றுழிப் பிரிந்து வினைமுற்றிய தலைமகன் இவ்வாறுஞ் சொல்லும் ; அதற்குச் செய்யுள் :

[வினைமுற்றி நினைதல்]

'கடியா ரிரும்பொழிற் கண்ணன்று வாட்டியின் றுங்கலவார்
படியார் படரொடு மாமதின் மேல்வந்து பாரித்ததால்
வடியா ரயினெடு மாறனெங் கோன்கொல்லி வண்டிவர்பூங்
கொடியா ரிடையிள மான்பிணை நோக்கி குழைமுகமே.' (உசஎ)

[1] 'கயவாய் மலர்போற் கருங்கண் பிறழுவெண் டோடிலங்க
நயவார் முனைமிசைத் தோன்றின்று நட்டாற் றெதிர்ந்ததன்னை
வியவார் படையிட்டெண் காதஞ் செலசசென்று மீன்றிளைக்கும்
வயவாள் செறித்தவெங் கோன்வஞ்சி யன்னாள் மதிமுகமே.'

'தங்கிய வொள்ளொளி யோலைய தாய்த்தட மாமதின்மேற்
பொங்கிய வேந்த ரெரிமூழ்கத் தோன்றின்று போதுகண்மேற்
பைங்கயல் பாய்புனற் பாழிப்பற் றாரைப் பணித்ததென்னன்
செங்கய லோடு சிலையுங் கிடந்த திருமுகமே.' (உசஅ)

இதுகேட்ட தேர்ப்பாகன் விரைந்து கடாவுவானுவது பயன்.

இங்ஙனம் வினைமுற்றிய பின்னையன்றி முற்றுவிடத்துஞ் சொல்லுமோ எனின், சொல்லான் ;

என்னை,

'கிழவி நிலையே வினையிடத் துரையார்
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்.'

[கற்பியல் - சஇ]

என்பதாகலான், வினைமுற்றிய பின்னையே சொல்லும் என்பது.

1 இது சில ஏடுகளில்மட்டுங் காணபபடுகிறது.

வேந்தர்க்குற்றுழிச் சென்று வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியதற்குச் செய்யுள் :

[பாகற்குரைத்தல்]

'வென்றே களித்தசெவ் வேனெடு மாறன்விண் டார்முனைமேற்
சென்றே வினைமுற்றி மீண்டன நங் காருஞ் சிறிதிருண்ட
தின்றே புகும்வண்ண மூர்கநின் டேரிள வஞ்சியென்ன
நின்றே வணங்கு நுடங்கிடை யேழை நெடுநகர்க்கே.' (உ௫௦)

'உலகுட னிழற்றிய தொலையா வெண்குடைக்
கடல்போற் றானைக் கலிமா வழுதி
வென்றம ருழந்த வியன்பெரும் பாசறைச்
சென்றவினை முடித்தன மாயி னின்றே
கார்ப்பெயற் கெதிரிய காண்டகு புறவிற்
கணங்கொள் வண்டி னஞ்சிறைத் தொழுதி
மணங்கொண் முல்லை மாலை யார்ப்ப
உதுக்காண் வந்தன்று பொழுதே வல்விரைந்து
செல்க பாகநின் வல்வினை நெடுந்தேர்
வெண்ணெல் லரிநர் மடிவாய்த் தண்ணுமை
பன்மலர்ப் பொய்கைப் படுபுள் ளோப்புங்
காய்நெற் படப்பை வாணர் சிறுகுடித்
தண்டலை கமழுங் கூந்தல்
ஒண்டொடி மடந்தை தோளிணை பெறவே.' (அகம் - உ0௪)

இன்னும் பிறவுஞ் சொல்லும் ; அதற்குச் செய்யுள் :

'பட்டா ரகலல்குற் பாவையுங் காணுங்கொல் பாழிவெம்போர்
அட்டா னரிகேச சரியைய மாயிரம் யானைமுன்னாள்
இட்டான் மருகன்றென் னாட்டிருண் மேகங்கண் டீர்ம்புறவிற்
கட்டார் கமழ்கண்ணி போன்மலர் கின்றன காப்பிடவே. (உ௫க)

'புரிந்தமெல் லோதியை வாட்டுங்கொல்வல்லத்துப்போரெதிர்ந்தார்
இரிந்த வகைகண்ட வாண்மன்னன் றென்னாட் டிருஞ்சுருள்போய்
விரிந்த புதவங்கண் மேய்ந்துதம் மென்பிணை கையகலா
திரிந்தநின் கோட்ட கலைமா வுகளுஞ் செழும்புறவே. (உ௫உ)

'செறிகழல் வானவன் செம்பியன் மாறன்றென் னாடனைய
வெறிகமழ் கோதைகண் வேட்கை மிகுத்தன்று வெள்ளஞ்சென்ற
நெறிகெழு வெண்மணன் மேனெய்யிற் பால்விதிர்த் தன்னவந்நுண்
பொறிகெழு வாரணம் பேடையை மேய்விக்கும் பூம்புறவே.' ()

'ஆழித் திருமா லதிசயற் காற்றுக் குடியுடைந்தார்
சூழிக் களிற்றிற் றானைகதிண் டேர்துயர் தோன்றின்றுகாண்
கோழிக் குடுமியஞ் சேவறன் பேடையைக் கால்குடையாப்
பூழித் தலையிரை யார்வித்துத் தானிற்கும் பூம்புறவே. (௨௫௪)

'கைம்மாப் புறவின் சுவடு தொடர்ந்து கனல்விழிக்கு
மொய்ம்மா மதக்களி வேழங்கள் பின்வர முன்னுகதேர்
நெய்ம்மா னயினெடு மாற னிறைபுனற் கூடலன்ன
மைம்மாண் குழலாள் பரமன்று வானிடை வார்புயலே.'(௨௫௫)

'முன்றா னுறந்தா வடிமுள் ளுறீஇமுடு காதுதிண்டேர்
என்றா லிழைத்தவற் றோடிற்றை நாளு மிழைக்குங்கொலாம்
ஒன்றா வயவர்தென் பாழிப் படவொளி வேல்வலத்தால்
வென்றான் விசாரிதன் றென்புன னாடன்ன மெல்லியலே.' (௨௫௬)

இவை யெல்லாஞ் சொல்லக்கேட்ட தேர்ப்பாகன் கடிது கடாவுவானாவது பயன்.

'கடிக்கண்ணி வேந்தரை யாற்றுக் குடிக்கன்னி வாகைகொண்டே
முடிக்கண்ணி யாவைத்த மும்மதில் வேந்தன் முசிறியன்ன
வடிக்கண்ணி வாட வளமணி மாளிகைச் சூளிகைமேற்
கொடிக்கண்ணி தாம்வண்ண நண்ணிவந் தார்த்தன கொண்டல்
[களே' (௨௫௭)

இதுவும் மேலவற்றோடு ஒக்கும்.

இனி, முகில் நோக்கிச் சொல்லுவானாய்த் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியதற்குச் செய்யுள் :

[முகிலோடு கூறல்]

'பண்டேர் சிறைவண் டறைபொழிற் பாழிப்பற் றாவரசர்
புண்டேர் குருதி படியச்செற் றான்புன னாடனையாள்
கண்டே ரழிந்து கலங்கு மவடன் கடிநகர்க்கென்
திண்டேர் செலவன்றி முன்செல்லல் வாழி செழுமுகிலே.'(௨௫௮)

இது கேட்ட தேர்ப்பாகன் விரைந்து தேர் கடாவுவானாவது பயன்.

வேந்தர்க்குற்றுழிப் பிரிந்து வினைமுற்றிப் புகுந்த தலைமகனது வரவுணர்ந்து தோழி தலைமகட்குச் சொல்லுமதற்குச் செய்யுள் :

[வரவேடுத்துரைத்தல்]

'கொற்றங் கயின்மன்னன் கோநெடு மாறன்றென் கூடலன்ன
முற்றா விளமுலை மாதே பொலிகநம் முன்கடைவாய்ச்
செற்றார் பணிதிறை கொண்டநம் மன்பர் செழுமணித்தேர்ப்
பொற்றார்ப் புரவிக ளாலித்து வந்து புகுந்தனவே' (உருக)

'ஆரு மணியிளம் போந்தையும் வேம்பு மலர்ந்துதண்டேன்
வாருங் கமழ்கண்ணி வானவன் மாறன்றன் மாந்தையன்னாய்
காருங் கலந்து முழங்கியின வீசின்று காதலர்தந்
தேருஞ் சிலம்பிப் புகுந்தது நங்கள் செழுநகர்க்கே.' (உசO)

இனித், தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி, வினைமுற்றி மீள்வார் சொல்லிய பருவமதுதாகி வந்தது என்னும்; அதற்குச் செய்யுள் :

[பருவத்தூது பாங்கிபகர்தல்]

'முன்றான் முகிழ்முலை யார முயங்கி முறுவலுண்டு
சென்றார் வரவிற்குத் தூதா யெழுந்தது தென்புலிப்பை
[1]வென்றான் விசாரிதன் வேனெடு மாறன் வியன்முடிமேல்
நின்றான் மணிகண்ட மபோலிருள் கூர்கின்ற நீண்முகிலே' (உசக)

இனித், தலைமகன், வினைமுற்றிப் புகுந்து, தலைமகளோடு இனிதிருந்து, தோழிக்குச் சொல்லியதற்குச் செய்யுள் :

[தலைமகன் தோழிக்குக் கூறல்]

'மடையார் குவளை நெடுங்கண் பனிமல்க வந்துவஞ்சி
யிடையா ளொடுஞ யினிது கழிந்தன் றிலங்குமுத்தக்
குடையான் குலமன்னன் கோநெடு மாறன் குளந்தைவென்ற
படையான் பகைமுனை மேற்சென்று காடிய பாசறையே.' (உசஉ)

இனிப், பொருட்குப் பிரியலுற்ற தலைமகன் தோழியால் தலைமகட்குப் பிரிவு உணர்த்துவித்தற்குச் செய்யுள் :

1 - வென்று னழிய நறையாற நகத்துவென முனமுடிமேல.

[பொருட்பிரிவுணர்த்தல்]

'இல்லா ரிருமையு நன்மையெய் தாரென் றிருநிதிக்குக்
கல்லார் சுரஞ்செல்வ தேநினைந் தார்நமர் காய்ந்தெரிந்த
புல்லா ரவியநெல் வேலிப் பொருகணை மாரிபெய்த
வில்லான் விசாரிதன் றென்புன லூடன்ன மெல்லியலே.' (உ௬௩)

அது கேட்டு ஆற்றுந்தன்மையளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியதற்குச் செய்யுள் :

[தலைமகள் ஆற்றுதுரைத்தல்]

'ஊனங் கடிந்த வுயர்குடை வேந்த னுசித னென்னார்
மானங் கடிந்துவல் லத்தமர் வாட்டிய கோன்படிமேல்
ஏனங் கடிந்தசெங் கோன்மன்னன் றெம்முனை போலெரிமேய்
கானங் கடந்துசென் றேபொருள் செய்வது காதலரே.' (உ௬௪)

தோழி தலைமகணிலைமை தலைமகற்குச் சொல்லியதற்குச் செய்யுள் :

[தலைவி நிலைமை தோழி சாற்றல்]

'விரைதங்கு நீண்முடி வேந்தன் விசாரிதன் வெம்முனைபோல்
வரைதங்கு கானமர் செல்லுப வென்றலும் வாணுதலாள்
நிரைதங்கு சங்கங் கழலக்கண் ணித்திலஞ் சிந்தநில்லா
அரைதங்கு மேகலை மெல்லடி மேல்வீழ்ந் தரற்றினவே.' (உ௬௫)

'மன்னேந் தியபுகழ் வாளெடு மாறன்றன் மாந்தையன்ன
மின்னேந் தியவிடை யாய்நமர் செல்வர்வெங் கானமென்னப்
பொன்னேந் திளமுலை பூந்தடங் கண்முத்தந் தந்தனபோய்
என்னேந் தியபுக ழீரினிச் செய்யு மிரும்பொருளே.' (உ௬௬)

இதுவும் மேலதனோடு ஒக்கும்.

இனித், தோழி தலைமகனை, 'நீர் பிரிந்தவிடத்து இவ்வகை நெடியவாகிய கங்குல்களைத் தமியளாய் எவ்வகை நீந்தி ஆற்றும்?' என்னும் : அதற்குச் செய்யுள் :

[கங்குல்மிசை வைத்தல்]

'வருநெடுங் கங்குலெவ் வாறிவண் நீந்தும்வல் லத்துவென்ற
செருநெடுந் தானையெங் கோன்றெவ்வர்போலச்சென்றத்தமென்னு
ஒருநெடுங் குன்றம் மறைந்துல கெல்லா முலாய்க்குணபாற் [ம்
றிருநெடுங் குன்றங் கடந்தால் வருவது செஞ்சுடரே. (உ௬௭)

'படர்ந்தாழ் பணைமுக யானைப் பராங்குசன் பாழிவென்ற
விடர்தாழ் சிலைமன்னன் வெல்களம் போல விரிந்தவந்தி
நடந்தா விடையிருள் போய்க்கடை யாமநல் லூழிமெல்லக்
கடந்தா லதற்பின்னை யன்றே வருவது காய்கதிரே.' (உகூஅ)

இதுவும் அது.

தோழி தலைமகற்குப் பிரிவு நேர்ந்து, 'நன்று செய்தாய், அவர் செல்லுங் கானம் இவ்வகைப்பட்டது' என்னும்; அதற்குச் செய்யுள் :

[கானத்தியல்பு தோழியுரைத்தல்]

'தேனக்க தாரவர் காண்பர்செல் லார்செல்ல வோட்டியன்று
கானக் குழன்மங்கை நன்றுசெய் தாய்வென்று வாய்களிந்த
மானக் கதிர்வேல் வரோதயன் கொல்லி வரையணைந்த
கானத் திடைப்பிடி கையக லாத கருங்களிறே.' (உகூகூ)

இனித், தோழி தலைமகட்குப், 'பொருண்முடித்து வந்தான் எம்பெருமான்' என்னும் ; அதற்குச் செய்யுள் :

[தலைமகன் வரவு தோழி கூறல்]

'இருண்மன்னு மேகமுங் கார்செய் தெழுந்தன வெல்வளையாய்
மருண்மன்னு வண்டறை தாரவர் தாழுமிம் மாநிலத்தார்க்
கருண்மன்னு செங்கோ லரிகே சரியந்தண் கூடலன்ன
பொருண்மன்னு மெய்திப் புகுந்தனர் வந்துநம் பொன்னகர்க்கே.'

மற்றும், இவ்விடத்துப் பிரிவிடை மெலிந்து ஆற்றுளாகிய தலைமகளைப் பருவம் வந்ததென்று வற்புறுப்ப, வன்பொறை யெதிரழிந்து சொல்லியதற்குச் செய்யுள் :

[வன்பொறை எதிரழிந்து கூறல்]

'தகரக் குழலாய் தகவில ளேசங்க மங்கைவென்ற
சிகரக் களிற்றுச்செங் கோனெடு மாறன்றென் கூடலின்வாய்
மகரக் கொடியவன் றன்னிள வேனின் மலர்விலைக்குப்
பகரக் கொணர்ந்தில்லந் தோறுந் திரியுமிப் பல்வளையே.' (உஎ0)

'அழுந்துபடு விழுப்புண் வழும்புவாய் புலரா
எவ்வ நெஞ்சத் தெஃகெறிந் தாங்குப்
பிரிவில புலம்பி நுவலுங் குயிலினுந்
தேறுநீர் கெழீஇய யாறுநனி கொடிதே
அதனினுங் கொடிய டானே மதனின்

றுய்த்தலை யிதழ பைங்குருக் கத்தியொடு
பித்திகை விரவுமலர் கொள்ளீ ரோவென
வண்டுசூழ் வட்டிய டிரிதரூஉந்
தண்டலை யுழவர் தனிமட மகளே.' [நற்றிணை - ௯௭]

இவ்விடத்துச் செய்யுட்கள் பலவும் வந்தவழிக் கண்டு கொள்க. (௯)

[௫௦]

## காதற் பரத்தை யெல்லார்க்கு முரித்தே.

என்பது என்னுதலிற்றோ எனின், மேல் எல்லாப் பிரிவுகளையும் சிறப்பு வகையான் உணர்த்தினார்; இனிப், பரத்தையிற் பிரிவு [1] எல்லார்க்கும் உரித்து என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: காதற் பரத்தை எல்லார்க்கும் உரித்தே என்பது — பரத்தையிற்பிரிவு எல்லாவருணத்தார்க்கும் உரித்து என்றவாறு.

தம்மைக்கண்டு காதலித்தார் என்பது அறிவன்றே,பேரறி-வினராகலான்; அன்னார்தாம் பின்னைத் தலையளியாது விடுவது அருளன்று; அதனால், எல்லார்க்கும் உரித்து எனக் கொள்க. இவ்வுரை பொருந்தாது; என்னை காரணம் எனின், மிக்காரைக் கண்டால் இழிந்தாரும் உயர்ந்தாரும் மற்றும் எல்லாரும் காதலிப்ப, அவர்மாட்டெல்லாம் பிரியவேண்டும். பிரியவே, எல்லாக் குற்றமும் தங்கித் தலைமையொடு மாறுகொள்ளும்; அல்லதூஉம், அன்பினாற் பிரியார் அருளினாற் பிரிவர் என்ப-தூஉஞ் சொல்லப்பட்டதாம். அதனாற் காதலித்தாள்மாட்டுப் பிரியும் பிரிவு அமையாது எனக்கொள்க.

இனி, ஒரு திறத்தார், காதலைச் செய்யும் பரத்தை காதற் பரத்தை என்ப; என்னை காரணம் எனின், வைகலும் பாலை துய்த்துச் செல்வான் ஒருமகன் இடையிடை புளியுங்காடியும் உண்டக்காலாம்பிற பாலினது விசேடம் அறிவானாவது. அஃதே போலத் தலைமகள் குணங்களைத் துய்த்துச் செல்லாநின்றான் இடையிடை சிறுகுணத்தராகிய பரத்தையர்மாட்டுப் பிரிந்து

1. நால்வர்க்கும்.

வரத் தலைமகண்மாட்டுக் காதல் பெருகும். அல்லாதுவிட்டக்கால் இவள் குணம் [1]பொருவரியது என்பது அறியலாகாது. என்னை, இன்னாதது ஒன்று உண்மையான் இனியதன் இன்பம் அறியப்படும் என்பது. இவ்வுரையும் பொருந்தாது. என்னோ காரணம் எனின், அவரொடு சார்த்திக்கொண்டன்றே இவள் குணங்களைப் பெரிய என்று அறிவது எனின், அவர்மாட்டுப் பிரியாது விட்டவிடத்து இவடன் குணங்களை மிக்கனகொல்லோ மிக்கிலகொல்லோ என ஐயப்பட்டு நின்றாகல்வேண்டும். அங்ஙனமாயின், தான் அவள் என்னும் வேற்றுமையில்லார் என்பதனொடு மாறுகொள்ளும். என்னை, தம் குணங்களை ஐயப்படுவார் இன்மையான் என்பது.

மற்று என்னோ உரை எனின், தலைமகனாற் காதலிக்கப்பட்ட பரத்தை எனக்கொள்க. அஃதே யெனின், இவன் கண்டாரை யெல்லாங் காமுறுவானாகானோ எனின், ஆகான்; ஆகாதவாறு சொல்லுதும்: தலைமகனால் தலைநின்று ஒழுகப்படுவன அறம் பொருள் காமம் என மூன்று; அம்மூன்றினையும், ஒருபகலை மூன்று கூறிட்டு, முதற்கட் பத்துநாழிகையும் அறத்தொடு-பட்டுச் செல்லும்; இடையன பத்துநாழிகையும் அருத்தத்-தொடுபட்டுச் செல்லும்; கடையன பத்துநாழிகையும் காமத்-தொடுபட்டுச் செல்லும்; ஆதலான், தலைமகன் நாழிகை அளந்துகொண்டு கருமத்தொடுபடுவான், தலைமகளும் வேண்-டவே தானும் வேண்டிப்போந்து அத்தாணி புகுந்து அறங் கேட்பதும் அறத்தொடுபட்டுச் செல்வதும் செய்யும்; நாழிகை அளந்துகொண்டு இடையன பத்துநாழிகையும் இறையும் முறையும் கேட்டு அருத்தத்தினொடுபட்டு வாழ்வானும். அவற்று நீக்கத்துக் கடையன பத்துநாழிகையுட் தலைமகளுழைப் போதரும்; போதர, அப்போதரவு பார்த்திருந்த பரத்தையர் குழலூதி யாழெழீஇத் தண்ணுமையியக்கி முழவியம்பித் தலைமகனை இங்குக் கூத்துண்டு என்பது அறிவிப்ப; என்னை,

'குழல்வழி யாழெழீஇத் தண்ணுமைப் பின்னர்
முழவியம்ப லாமந் திரிகை.'

[1] - ஒருவழியது.

என்று கூத்தநூலுடையாருஞ் சொன்னாராகலின் என்பது. அவ்வகை அறிவிக்கப்பட்ட தலைமகன் நாம் இதனை ஒருகால் நோக்கிப் போதும் என்று செல்லும்; சென்றக்கால், அவர் தங்கண் தாழ்விப்பர் என்பது. அஃதே யெனின், இப் பரத்தையரைத் தலைமகன் தலைமகளை எய்தியிருந்தே உடையனாதல், எய்தாததன்முன் உடையனாதல் இரண்டல்லது இல்லை. அவற்றுள் எய்தியிருந்தேயுடையனாயினானே யெனின், தலைமகள் குணமேயுமன்றிப் பிறவும் இன்பஞ்செய்வன உளவாகக் கருதினானாம்; ஆகவே,

> 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
> ஒண்டொடி கண்ணே யுள.' [குறள். - ௧௧௦௧]

என்பதனொடு மாறுகொள்ளும் என்பது.

இனித், தலைமகளை எய்தாதமுன் உடையனாயினானே யெனின், முன்னும் இவன் கற்ற காலமின்றிக் காமத்துக்கண்ணே கெழுமி வருகின்றானாம்; ஆகவே, நெறியின் வளர்ந்தான் அல்லனாம் என்பது.

மற்று என்னோ உரை எனின், தலைமகளை எய்தாதமுன்னே பரத்தையரை உடையன் என்பது. எனவே, மேற்சொல்லப்பட்ட குறை எய்தாதோ எனின், எய்தாது. குரவர்கள் இவனறியாமையே இவனுரிமை இது எனவும், இவன் யானையும் குதிரையும் இவ்வெனவும், மற்றுமெல்லாம் இவற்கென்று வகுத்துவைத்துத் தாம் வழங்கித் துய்ப்ப என்பது. அவ்வகையே குரவர்களான் இவனுரிமை என்றே வளர்க்கப்பட்டாராகலான் தலைமகளை எய்துவதன்முன் உளர் என்பது. இவன் முன்னே தன் உரிமையாவது அறிந்தவாறு என்னை எனின், தலைமகன் தலைமகளை நீங்கித் தருமமும் அருத்தமும் உள்பட்டுத் தலைமகள்மாட்டுப் போதருமிடத்து, அவர் முன்சொன்னவாறே குழலும் யாழும் தண்ணுமையும் முழவும் இயம்புப; இயம்பினவிடத்து, 'இஃது என்னை?' என்னும்; என்றக்கால், 'அது நின் உரிமை அன்றோ' என்ப. என்றார்க்கு, 'அஃது என் உரிமையாயினவாறு என்னை?' என்னும்; என்றவிடத்து, 'நின் குரவர்களான் நினக்கு உரிமையாக வகுக்கப்பட்டார்' என்ப.

[illegible]ளாம் குரவரது பணி மாறுகொள்ளலாகாது' என்பதனாற் [illegible] ங்குச் செல்லும்; சென்றானை அவர் தங்கண் நயப்பிப்ப [illegible]பது. இது பரத்தையிற்பிரிவு நிகழுமாறு.

அஃதே யெனின், மற்றைப் பிரிவெல்லாம் வேண்டுக, ஆள்வினைமிகுதி உடைமையான்; இப்பிரிவு எற்றிற்கோ எனின், பரத்தையிற் பிரிந்தான் தலைமகன் என்றால், ஊடலே புலவியே துனியே என்றிவை நிகழும். நிகழ்ந்தால், அவை நீக்கிக் கூடினவிடத்துப் பெரியதோர் இன்பமாம்: அவ்வின்பத் தன்மையை வெளிப்படுப்பன அவை எனக்கொள்க. இவன் மென் சுவைமேல் நடந்தானோர் ஆசிரியனாகலான் இப்பிரிவு வேண்டினான் என்பது.

அஃதே எனின், காதற்பரத்தை எல்லார்க்கும் உரியள் என்றாகாதே சூத்திரம் செய்தற்பாலது, 'உரித்து' என்று அஃறிணைவாய்பாட்டாற் சொல்லிற்று எற்றிற்கோ எனின், பிரிவதிகாரம் வாராநின்றமையான் பிரிவும் உரித்து என்று சொல்லப்பட்டது.

பரத்தையர்மாட்டுப் பிரியும் பிரிவின்கட் செய்யுள்:

[தோழி வாயின் மறுத்தல்]

'மைவா ரிரும்பொழில் வல்லத்துத் தெவ்வர்க்கு வான்கொடுத்த
செய்வா யயினெடு மாறன்றென் னுடன்ன நேரிழையாய்
இவ்வாய் வருவர்நங் காதல ரென்னவுற் றேற்கெதிரே
செவ்வாய் துடிப்பக் கருங்கண் சிவந்தன சேயிழைக்கே.' (உஎஉ)

பரத்தையிற் பிரிந்த தலைமகன் பெயர்த்துந் தோழியை வாயில்வேண்டத் தோழி வாயின்மறுத்தாள் என்பது. என் சொல்லி வாயின்மறுத்தாளோ எனின், 'எம்பெருமானது நிலைமை இன்னதென்று சொல்லலுற்றேன், எனது குறிப்பறிந்து இந்நிலைமையள் ஆயினாள், இதற்குத் தக்கதறிந்து செய்மின்' என்று வாயின்மறுத்தாள் என்பது.

இனிப், பரத்தையிற் பிரிந்த தலைமகற்கு வாயிலாப் புக்க பாணன் தலைமகளால் வாயின்மறுக்கப்பட்டு முன்னின்று நீங்கியதற்குச் செய்யுள்:

[பாணன் புலந்துரைத்தல்]

'சென்றே யொழிக வயலணி யூரனுந் தின்னத்தந்த
கன்றே யமையுங்கல் வேண்டாபல் யாண்டு கறுத்தவரை
வென்றே விழிஞங்கொண் டான்வியன் ஞால மிகவகலி
தன்றே யடியே னடிவலங் கொள்ள வருளுகவே.' (உஎ௫)

மற்றும் வாயில்பெறாது பரத்தையிற் பிரிந்த தலைமகன் மகனை வாயிலாகக்கொண்டு புக்கானைக் கண்டு பொறாமை நீங்கவேண்டித் தோழி சொல்லியதற்குச் செய்யுள் :

[பொறாமை நீங்கத் தோழி புகறல்]

'இழுது நிணத்தின் றிருஞ்சிறைத் தெம்மன்ன ரின்குருதி
கழுது படியக்கண் டான்கன்னி யன்னமின் னேரிடையாய்
அழுது சுவற்சென்ற வக்கரை யானொடும் வந்தமையாற்
றொழுது வழிபடற் பாலை பிறைப்பெண்ணை ரோன்றலையே. (உஎ௪)

'வாரார் சிறுபறை பூண்டு மணிக்கா சுடுத்துத்தந்தை
போரான் சுவலி னிருப்பவந் தான்பிறைப் பெண்ணப்பெறாய்
நேரா வயவர் நெடுங்களத் தோடநெய் வேனினைந்த
பாரார் புகழ்மன்னன் றென்புன னாடன்ன பல்வளையே.' (உஎ௫)

இது மேலதனோடு ஒக்கும் பொருட்டு.

மகன்வாயிலாகப் புக்கவிடத்துத் தலைமகள் சிவப்பாற்றினள் ; அது குறிப்பறிந்து தோழி தலைமகற்கு இந்நிலைமையளாயினள் என்னும் ; அதற்குச் செய்யுள் :

[தலைவி ஆறியது தோழிகூறல்]

'மிடைமணிப் பூண்மன்ன ரோட விழிஞத்து வென்றவன்றாட்
புடைமணி யானையி னன்கன்னி யன்னாள் பொருகயற்கண்
ணுடைமணி யானொடு நீவர வூடற் சிவப்பொழிந்து
மடைமணி நீலத் தணிநிறங் கொண்டு மலர்ந்தனவே.' (உஎ௬)

பரத்தையிற் பிரிந்த தலைமகன் வாயில் பெற்றுப் புகுந்து தலைமகளைப் பொறாமை நீக்கத் தலைமகள் பொறாமை நீங்குவாள் சொல்லியதற்குச் செய்யுள் :

[புனலாட்டிய ஈரம் புலர்த்தி வருகெனறல்]

'பங்கயப் பூம்புன லுடன் பராங்குசன் பாழியொன்னார்
மங்கையர்க் கல்லல்கண் டான்மணி நீர்வையை வார்துறைவா
வெங்கையைத் தீம்புன லாட்டிய வீரம் புலர்த்திவந்து
மங்கையிற் சீறடி தீண்டிச்செய் பீர்செய்யு மாரருளே.' (உஎஎ)

இஃது என்சொல்லியவாறோ எனின், 'நீர் நெருநல் நுங்காதலியைப் புனலாட்டிய ஈரம் புலர்த்திவந்து எமக்குச் செய்யும் ஆரருள் செய்யீர்' என்றாள் என்பது. (எ)

[சுக]

பிரிவி னீட்ட நிலம்பெயர்ந் துறைவோர்க்
குரிய தன்றே யாண்டுவரை யறுத்தல்.

என்பது என்னுதலிற்றோ எனின், தலைமகன பிரிந்துறையும் இடத்துக் காலவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: பிரிவின் நீட்டம் என்பது — பிரிவினது நெடுங்காலைச் செலவு என்றவாறு, நிலம் பெயாந்து உறைவோர்க்கு என்பது — இடத்தின் நீங்கி நாடிடையிட்டும் காடிடையிட்டும் உறைவோாக்கு என்றவாறு, உரியது அன்றே யாண்டு வரையறுத்தல் என்பது — உரித்தன்று யாண்டு வரையறுத்துப் பிரிதல் என்றவாறு.

என்பதனாற் போநத பொருள யாதோ எனின், நாளும திங்களும் இருதுவும் வரையறுத்துப பிரிப என்பது. இன்ன நாளுள் வருதும், இன்ன திங்களுள் வருதும், இன்ன இருதுவின் வருதும் என்று சொல்லிப் பிரியும் என்பது.

நாட்குறித்துப் பிரியலுறுந் தலைமகன் பிரிவுணர்த்தப்பட்ட தோழி சென்று தலைமகட்குச் சொல்லியதற்குச செய்யுள்:

[நாட்குறித்தது தோழியுரைத்தல்]

'கேளே பெருக்கு மரும்பொருள் செய்தற்குக் கேடிறிங்கள்
நாளே குறித்துப் பிரியலுற் றார்நமர் தீவிழியால்
ஆளே கனலுங்கொல் யானைசசெங் கோலரி கேசரிதன்
வாளே புரையுந் தடங்கண்ணி யென்னோ வலிக்கின்றதே.' (உஎஅ)

திங்கள்குறித்துத் தலைமகன் பிரிய \ பட்டாள் தலைமகள்; வேறுபட, ஆற்றாள் எனக் கவன்ற தே, ழிக்கு, ஆற்றுவல் என்பதுபடத் தலைமகள் சொல்லியதற்குச் செய்யுள் :

'வார்ந்தார் கருமென் குழன்மங்கை மாகிதிக் கென்றகன்ற
ஈர்ந்தா ரவர்நின்று காண்பர்கொல் லோவிக லேகருதிச
சேர்ந்தார்ப் புறங்கண்டு செந்நிலத் தன்றுதிண் டேர்மறித்துப்
பேர்ந்தான் [1] றனது குலமுத லாய பிறைக்கொழுந்தே.' (உஎக)

என்பது என் சொல்லினளோ எனின், 'யான் ஆற்றேனாயன்று வேறுபடுகின்றது, அவர் குறித்த திங்களது வரவு கண்டு தாம் எடுத்துக்கொண்ட பொருள் முடியாதுபெயர்வர்கொல்லோ என ஆற்றேனாவது' என்றாள் என்பது.

இனிக், கார் என்னும் இருதுக் குறித்துப் பிரிந்தான் தலைமகன்; பிரியப், பருவவரவின்கண் வேறுபட்டாள் தலைமகள்; வேறுபட, ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு, ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியதற்குச் செய்யுள் :

[2] 'தொழித்தார் சிறைவண் டறைகுழ லாய்கங்கை சூழ்சடைமேல்
இழித்தான் மணிகண்டம் போல விருண்டன காரிகையே
விழித்தார் படவிழி ஞக்கடற் கோடித்தன் வெஞ்சுடர்வாள்
கழித்தான் குமரிநன் னீர்கொண் டெழுந்த கணமுகிலே.' (உஅ0)

'உளங்கொண்டு வாடின்று நட்டாற் றெதிர்ந்தா ருதிரவெள்ளங்
குளங்கொண்டு தோற்பித்த கோனெடு மாறன்கை போலுங்கொண்
களங்கொண்டு கார்செய்த காலைக் களவின் கவைமுகத்த [டல்
விளங்கண் டகம்விட நாகத்தி னுவொக்கு மீர்ம்புறவே.' (உஅக)

எனவே, என் சொல்லினளோ எனின், 'யான் ஆற்றேனாயன்று வேறுபடுகின்றது; அவர் குறித்த பருவம் வந்தது கண்டு தாம் எடுத்துக்கொண்ட பொருள் முடியாது வருவர்கொல்லோ என ஆற்றேனாயினேன்' என்பது.

பனி யென்னும் இருதுக் குறித்துத் தலைமகன் பிரிய, அப்பருவ வரவின்கண் தலைமகள், ஆற்றாளாம் எனக் கவன்ற தோழிக்குச், சொல்லியதற்குச் செய்யுள் :

1-விசாரிதன் றன்முத லாய. 2-இச்செய்யுள் மிகையாகக் காணப்படுகிறது.

'சுழலும் வரிவண் டலம்பச சொரிமதம் வாய்ப்புகரின்
றழலுங் களிற்றரி கேசரி தென்புன ஞடணையாய்
கழலும் வரிவளை காக்கவந் தின்று கனலுஞ் செந்தீத்
தழலுங் குளிர்ந்து பொடிப்படப் போர்க்கின்ற தாழ்பனியே.' ()

'தனியார் தகைநலம் வாட்டுங்கொ லாற்றுக் குடிதனது
குனியார் சிலையொன் றி ஞல்வென்ற கோன்கொங்க நாட்டகொல்
கனியார் களவினன் முள்ளிற் கதிர்முத்தங் கோப்பனபோற் [லைக்
பனியார் சிதர்நுனி மேற்கொண்டு நிற்கும் பருவங்களே.'(உஅந)

இளவேனிற் பருவங் குறித்துத் தலைமகன் பிரிந்த விடத்து, அப்பருவ வரவின்கண் தலைமகள் ஆற்ருளாம் எனக் கவன்ற தோழி சொல்லியதற்குச் செய்யுள் .

[தோழி கவன்றுரைத்தல்]

'வானலங் கொண்டகை யான்மன்னன் மாறன்றன் மாந்தையன்ன
டானலந் தேயப் பனியோ கழிந்தது தண்குவளைத்
தேனலம் போது வளாய்வந்து தண்டென்ற றீவிரியும்
வேனலங் காலமெவ வாறு கழியுங்கொன் மெல்லியற்கே '(உஅச)

வேனிற் பருவங் குறித்துப் பிரிந்த தலைமகன் பிரிய வேறுபட்டாள் தலைமகள்; வேறுபட, ஆற்ருள் எனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பதுபடத் தலைமகள் சொல்லியதற்குச் செய்யுள் :

[தலைமகள் தோழிக்குரைத்தல்]

'மெல்லிய லாய்கங்கண் மேல்வெய்ய வாய்விழி ஞத்துவென்ற
மல்லிய ஞேண்மன்னன் சென்னி நிலாவினன் வார்சடையோன்
வில்லியல் காமனை சுட்டசெந் தீசுடர் விண்டவன்மேற்
செல்லிய பாரித்த போன்றன பிண்டியின் றேமலரே.' (உஅரு)

எங்ஙனம் ஆற்றுவல் என்பதுபடச் சொல்லிஞளோ எனின், 'இவ்வேனில் வரவின்கண் நம்மேல் இவ்வகை வெய்யவாகி விரியாநின்ற பிண்டியலர் அவர்க்கும் இவ்வகை வெம்மையைச் செயயுமன்றே, செய்தவிடத்துத் தாம் எடுத்துக்கொண்ட பொருள்முடியாது மீள்வர்கொல்லோ என ஆற்றேஞகின்றேன்' என்ருள் என்பது.

இச்சூத்திரம் தவளைப் பாய்த்தல்,

'வேந்தர்க் குற்றுழி' [இறையனார் - நக]

என்னுஞ் சூத்திரத்துடன் நோக்குடைத்து என்பது. (அ)

[சஉ]

பாத்தையிற் பிரிவே நிலத்திரி பின்றே.

என்பது என்னுதலிற்றோ எனின், பரத்தையிற் பிரிவு நாடிடை-யிட்டு நீங்கி உறைதல் இல்லை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

மேற் சூத்திரத்துள் எய்தியது விலக்கியவாறு.

இதன் பொருள் : பரத்தையிற் பிரிவே என்பது — பரத்-தையர்மாட்டுப் பிரியும் பிரிவு என்றவாறு ; நிலத்திரிபு இன்றே என்பது — இடத்திரிபு இன்று என்றவாறு.

என்பது இடத்தின் நீங்கி இயையப் பெறார் என்வாறு.

பரத்தையிற் பிரியுங் காலத்து நாடிடையிட்டும் காடிடை-யிட்டும் பிரியப்படாது என்றவாறு.

எனவே, ஒரூரது என்பதூஉம், ஒரிடத்தது என்பதூஉம் உணர்த்தப்பட்டதாம்.

இனி, ஒரு திறத்தார், தன்னிடத்ததே என்ப ; அது சொல்-லுதல் பொருந்தாது ;

[1] 'மாண்டொழின் மாமணி கறங்கக் கடைகழிந்து.' [அகம்-சுசு]

எனவும்,

'வருகதில் லம்மவெஞ் சேரி சேர.' [அகம் - உஎசு]

எனவும் இவை யெல்லாஞ் சான்றோர் செய்யுளுண்மையான்.

இனி, நிலத்து நீங்காது எனவே, ஒரூரது என்பது பெறப்-பட்டது ; பட்டமையான், தன்னிடத்ததாகவும் பெறும். தன்-னிடத்து நீங்கிச் [2] சேயதாகவும் பெறும் என்பது.

இனி, ஒரிடத்தது [3] என்பதனன், தலைமகன் இடம் பெரி-தாகலான், தலைமகளது இடமும் பரத்தையர் சேரியும் வேறாய் நீங்கி இருக்கும் ; அது தன்னுள்ளே செய்குன்றமும் வாவியும் விளையாட்டிடமும் எல்லாம் உடைத்தாயிருக்கும் என்பது. (சு)

---

1 - மாண்றோர். 2 - சேரியதாகவும். 3 - என்பதனே.

[௪௩]

பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
பூப்பின் புறப்பா டீரா றுநாளு
நீத்தகன் றுறைத லறத்தா றன்றே.

என்பது என்னுதலிற்றோ எனின், தலைமகன் பரத்தையிற் பிரிந்தவிடத்துத் தலைமகட்குப் பூப்பு நிகழ்ந்த காலத்துத் தலைமகன் இவ்வாறு ஒழுகும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: பரத்தையிற் பிரிந்த கிழவோன் என்பது — புறப்பெண்டிர்மாட்டுப் பிரிந்த தலைமகன் என்றவாறு; மனைவி பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும் என்பது — கிழத்தி பூப்புப் புறப்பட்ட நாண்முதற் பன்னிருநாளும் என்றவாறு; நீத்து அகன்று உறைதல் அறத்தாறு அன்றே என்பது — நீத்தும் அகன்றும் உறைதல் அறநெறியன்று என்றவாறு

எனவே, நீயாதும் அகலாதும் உறைதல் அறநெறி என்றவாறும்; என்பது, சொற்கேட்கும்வழியும் கூடியும் உறைக என்றவாறு. இவ்வாறு உறைதல் செயற்பாண்மைய என்றவாறு.

அஃதாமாறு: தலைமகன் பரத்தையிற்பிரிந்த காலத்துத் தலைமகட்குப் பூப்புத் தோன்றிற்று; தோன்றத், தலைமகன் உணரும். எங்ஙனம் உணருமோ எனின், வாயில்கள் உணர்த்த உணரும் என்பது. என்னை வாயில்கள் உணர்த்துமாறு எனின், தலைமகன் வாயில்களும் தலைமகள்மாட்டு உளவாம்; தலைமகள் வாயில்களும் தலைமகன்மாட்டு உளவாம்; ஆகலான், அவர்கள் உணர்த்த உணரும் என்பது; அல்லதூஉம், தலைமகள் தமரன்றே தலைமகற்கு நாளாளும் படிமக்கலத்தொடு செல்வார், அற்றைநாளாற் செங்கோலத்தொடுஞ் செல்ல உணரும் என்பாரும் உளர்.

இனி, ஒரு திறத்தார், பூப்பு நிகழ்ந்த நாளாலே [1]சேடி-யைச் செங்கோலஞ்செய்து செப்புப்பாலிகையுட் செம்பூவும்

1 - இளம்பிடியைச்.

நீரும் கொண்டு அவன் அடிமேற் பெய்து போக, உணரும என்பாரும் உளர். இது மேலாயினரிடங்களிற் பூப்பு உணர்த்துமாறென்று இவ்வகை சொல்லுவர். நல்லது அறிந்துகொள்க.

இவ்வகை பூப்பு உணர்த்தப்பட்ட தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதற்குச் செய்யுள் :

[தலைமகன் தன் நெஞ்சிற்குரைத்தல்]

'மஞ்சா ரிரும்பொழில் வல்லத்து வாண்மன்னர் போரழித்த
அஞ்சா வடுகளி யானையி னானகன் ஞாலமன்ன
பஞ்சா ரகலல்கு லாடன்மை சொல்லும் படாமுலைமேற்
செஞ்சாந் தணிந்தவந் தாள்செய்ய கோலத்துச் சேயிழையே.' ()

இவ்வகையாற் பூப்பு உணர்ந்து வாயில்களோடுஞ் சென்று தலைமகளிடத்தானைப் முந்நாளுஞ் சொற்கேட்கும்வழி உறைவானைவது. உறைந்தபின்னை ஒன்பதுநாளுங் கூடி உறைவானைவது.

முந்நாளுஞ் சொற்கேட்கும்வழி உறைதற்குக் காரணம் என்னையெனின், தலைமகன் பரத்தையர்மாட்டானைக முன்னின்ற பொருமை [1]உண்டன்றே, அது முந்நாளுஞ் சொற்கேட்கும்வழி உறையவே நீங்கும். நீங்கிய பின்னைக் கூட்டமாகவே கரு நின்று அது மாட்சிப்படும். அது நோக்கி உணர்த்தப்பட்டது. அதனான் அறமெனப்பட்டது.

அல்லாதுவிடின், தலைமகண்மாட்டு ஓர் பொருமை தோன்றும், பரத்தையர்மாட்டுநின்றும் வந்தான் என; அப்பொருமை ஒரு வெகுளியைத் தோற்றுவிக்கும்; தோற்றிய வெகுளி பெரியதோர் வெப்பத்தைச் செய்விக்கும்; வெப்பத்திற் கரு மாட்சிப்படாதாம்; படாதாகவே, அறத்தின் வழுவாம் என்பது. அதனான், முந்நாளுஞ் சொற்கேட்கும்வழி உறைவானும் என்பது.

பூப்புப் புறப்பட்ட முந்நாளும் உள்ளிட்ட பன்னிருநாளும் என்பது துணிபுற்றுங்கு முந்நாளுங் கூடி உறையப் படுங் குற்றம் என்னோ எனின், பூப்புப் புறப்பட்டஞான்று நின்ற கரு வயிற்றிலே அழியும்; இரண்டாம் நாளின் நின்ற கரு வயிற்றிலே

1 - உண்டென்று எய்தும்.

சாம; மூன்றாம் நாள் நிற்குங் கருக் குறுவாழ்க்கைத்தாம், வாழினும் திருவின்றாம்; அதனாற் கூடப்படாது என்ப.

'பூப்புமுதன் முந்நாட் புணர வுணரின்
யாப்புறு மரபின் முனிவரு மமரரும்
யாத்த கரண மழியு மென்ப.'

எனப் [1]பலரும் ஓதினாராகலான் அமையாது என்பது. (சo)

[சச]

கற்பினுட் பிரிந்தோன் பரத்தையின் மறுத்தந்
தப்பொருட் படிப்பினும் வரைநிலை யின்றே.

என்பது என்னுதலிற்றோ எனின், மேலைச் சூத்திரத்திற்கு உரியதோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: கற்பினுட் பிரிந்தோன் என்பது — பரத்தையர் சேரியனாய்ப் பூப்பு உணர்த்தப்பட்ட தலைமகன் என்றவாறு, பூப்பு நிகழ்ந்த முதன்மூன்று நாளும் வந்து சொற்கேட்கும்வழி உறைவானில்லையின் தலைமகன் கற்பினுட் பிரிந்தோன் எனப்பட்டான்; கற்பு என்பது பூப்பு என்றவாறு; அப்பூப்புக் கற்புக்காலத்தன்றிக் களவுகாலத்து நிகழாமை நோக்கிப் பூப்பினையுங் கற்பு என்று சொல்லினார் என்பது; பரத்தையின் மறுத்தந்து என்பது — அம்மூன்று நாளுங் கழித்துப் பரத்தையர்சேரிநின்று நீங்கி வருவது என்றவாறு; அப்பொருட் படிப்பினும் என்பது — அறத்தாறுபடிப்பினும் என்றவாறு; அறத்தாறு படுத்தல் என்பது, தலைமகளை வாயில்களால் சிவப்பாற்றுவித்துப் புக்குத் தலைமகளோடு புணர்தல்; வரைநிலை இன்றே என்பது — குற்றமெனப்படாது அத்துணைச் சிறப்பின்றாயினும் என்றவாறு.

தலைமகளை வாயில்களாற் சிவப்பாற்றுவித்தற்குச் செய்யுள்:

[தலைமகளைச் சிவப்பாற்றுவித்தல்]

'பொன்னார் புனலணி யூரன்வந் துன்னிற் புறங்கடையா
னென்னா வளவிற் சிவந்தாள் சிவந்து மியல்பதுவன்
றன்னா யெனச்சிவப் பாற்றினள் வல்லத் தரசவித்த
மின்னா ரயின்மன்னன் றென்புன னாடன்ன மெல்லியலே.' (உஅஏ)

என்பது. (சக)

[1] • பிறரும்.

[சரு]

## புகழுங் கொடுமையுங் கிழவோன் மேன.

என்பது என்னுதலிற்றோ எனின், தலைமகற்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: புகழும் கொடுமையும் என்பது — புகழ் என்பது தக்கான் எனப்படுதல், கொடுமை என்பது தகான் எனப்படுதல் என்றவாறு; கிழவோன் மேன என்பது — அவை இரண்டும் தலைமகன்கண்ண என்றவாறு.

எனவே, இத்தன்மைத்துத் தலைமகன் ஒழுகலாறு என்றவாறு. அஃதாமாறு தலைமகண்மாட்டு உறைந்தக்கால் தக்கான் எனப்படுதலும், பரத்தையர்மாட்டு உறைந்தக்கால் தகான் எனப்படுதலும் என்றவாறு.

யாராலோ அவை சொல்லப்படுவது எனின், வாயில்களான் எனக் கொள்க. அவர், 'புகழுடையன்' என்பதற்குச் செய்யுள் :

[தக்கானென்றல்]

'கோடிய நீள்புரு வத்து மடந்தை கொழும்பணைத்தோள்
வாடிய வாட்ட முணர்ந்து மனையிடை வந்தமையால்
ஆடியல் யானை யரிகே சரிதெவ்வர் போலகன்று
நீடிய காதலர் தாமே பெரியரிந் நீணிலத்தே.' (உஅஅ)

இனி, அவர், 'தகான்' என்றதற்குச் செய்யுள் :

[தகானென்றல்]

'விண்டுறை தெவ்வர் விழிஞத் தவியவெள் வேல்வலங்கைக்
கொண்டுறை நீக்கிய கோன்வையை நாடன்ன கோல்வளையிவ்
வண்டுறை கோதை வருந்தநல் லாரில்லுள் வைகுதலால்
தண்டுறை சூழ்வய லூரன் பெரிதுந் தகவிலனே.' (உஅகூ)

என்பது. (கஉ)

[சகா]

## கொடுமை யில்லைக் கிழவி மேன.

என்பது என்னுதலிற்றோ எனின், தலைமகளது பெருமை உணர்த்துதல் நுதலிற்று

இதன் பொருள்: கொடுமை இல்லை என்பது — தக்காள் எனப்படுதலல்லது தகாள் எனப்படுதல் இல்லை என்றவாறு; கிழவி மேன என்பது — தலைமகண்மாட்டு என்றவாறு.

தலைமகள் எக்காலத்தும் ஒருதன்மையள் என்றவாறு; தலைமகன் தன்மாட்டு வந்து உறைந்த காலத்தே தக்காளாய்ப் பரத்தையர்மாட்டுச் சென்று உறைந்த காலத்துத் தகாள் ஆங்கொல்லோ எனின், ஆகாள் என்றவாறு; அதற்குச் செய்யுள்:

[தலைவி சிறப்புரைத்தல்]

'நிரந்தாங் கெதிர்ந்தா ரவியச்செல் வேலித்தன் னீள்சிலையால்
சரந்தான் றுரந்துவென் றூன்றமிழ் நாடன்ன தாழ்குழலாள்
பரந்தார் வருபுன லூரன்றன் பண்பின்மை யெங்களையுங்
[1] கரந்தாள் கடலிட மெல்லாம் புகழ்தருங கற்பினளே.' (உ௬0)

[2] இது தலைமகன் பரத்தையர்சேரியனாகத் தலைமகள்பக்கற் புக்க பாணன் தலைமகளது நிலைமை கண்டு தன் விறலிக்குச் சொல்லியது. (௧௩)

[௪௭]

## கிழவோன் முன்னர்க் கிழத்தி தற்புகழ்தல் புலவிக் காலத்தும் புரைவ தன்றே.

என்பது என்னுதலிற்றோ எனின், தலைமகள் திறத்து இன்னதோர் குணம் உண்டு என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: கிழவோன் முன்னர்க் கிழத்தி தற்புகழ்தல் என்பது — தலைமகன்முன்னர்த் தலைமகள் தன்னைப் புகழ்தல் என்றவாறு; புலவிக் காலத்தும் புரைவது அன்றே என்பது — புலவிக்காலத்தன்றே அஃது உரியது, அந்தக் காலத்துந் தகாது என்றவாறு.

எனவே, தலைமகள் எவ்விடத்தும் தன்னைப் புகழப்பெறாள் என்பது. எனவே, தலைமகளது பெருமை பெற்றாம். இனிக், கிழவி தற்புகழ்தல் பெறாள் என, பரத்தை தற்புகழ்தல் பெறும்

1 - கரந்தா ளகலிட. 2 - இம் மூன்றுவரிகள் மிகையாகக் காணப்படுகின்றன.

என்பது போந்தது. அவ்வாறு பரத்தை தற்புகழ்தற்குச் செய்யுள் :

[பரத்தை தற்புகழ்தல்]

'வெஞ்சுடா நோக்கு நெருஞ்சியி னூரனை வெண்முறுவற்
செஞ்சுடர் வாண்முகத் தாண்முன்னை யென்பாற் றிரியலனேல்
அஞ்சுடர் வேலரி கேசரி கோளமை ஞட்டுடைந்தார்
தஞ்சுடர் வாட்படை போல வுடைகவென் சங்கங்களே.' (உகக)

பிறவும் அன்ன கண்டுகொள்க. (கச)

[சஅ]

நாடு மூரு மில்லுஞ் சுட்டித்
தன்வயிற் கிளப்பிற் புலவிப் பொருட்டே.

என்பது என்னுதலிற்றோ எனின், தலைமகள் தற்புகழ்ந்தாளாகற்க, இவ்வாறு சொல்லியக்கால் அதுவும் புலவிநிமித்தம் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : நாடும் ஊரும் இல்லும் சுட்டி என்பது — நாடே ஊரே இல்லே இவற்றைக் கருதி என்றவாறு; தன்வயிற் கிளப்பிற் புலவிப்பொருட்டே என்பது — தன்கட் சொல்லிற் புலவிப்பொருட்டாம் என்றவாறு.

தான் உறையும் நாட்டையும், தன் ஊரையும், தான் பிறந்த குடியையும் சொல்லித் தலைமகள் தற்புகழ்ந்தாளாகற்க; இவ்வாறு சொல்லியக்கால், இது புலவிப்பொருட்டாம் என்றவாறு. அஃதாமாறு, 'எம்நாடு இறப்பவுஞ் சிறியாராலே வாழப்படுவது' எனவும்,

'குறும்புகு ழிருக்கை மறந்தலை மணந்து
சிறுகூழ் வல்சியிற் சில்வரை யிற்றே
அந்நாட் டுள்ளு மெம்மூ ராமே
புல்வாய் வலக்கொல் லேசிதர் பற்றி
வளநனி குறைந்த வாரித் தன்றே
அவவூ ருள்ளும் பிறந்த வில்லங்
கல்லாச சிறியோ ருள்ள மன்றே.'

'அன்ன சிறியரொழுக்கம் நுமக்குத் தக்கதன்றே! அல்லதூஉம், எம்பெருமாற்கெனின் இறப்பவும் பெருந்தன்மைய அன்றே! அங்கீரார்க்கு இவ்வாறு தலையளி பொறுக்குமன்றே' எனவும் சொல்லுதல். இவ்வாறு சொல்லினவிடத்துத் தலைமகன் மாட்டுப் புலவியே கொள்ளக் கருதிச் சொன்னாளாம் என்பது. அதற்குச் செய்யுள் :

[தலைவி தற்புகழ்தல்]

'வெறிதரு பூந்தார் விசாரிதன் வேலைமுந் நீர்வரைப்பின்
நெறிதரு கோல்செல்லு மெல்லையுள் ளேமல்ல நீர்மையில்லாச
சிறியவர் வாழ்பதி யேயெம ரில்லஞ் சிறிதெமக்கே
எறிபுன லூரவெவ் வாறு மமையுநின் னின்னருளே.' (உகஉ)

(கரு)

[சுகூ]

அவன்வயிற் கிளப்பின் வரைவின் பொருட்டே.

என்பது என்னுதலிற்றோ எனின், இவ்வாறு சொல்லின் வரைவின்பொருட்டாகும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள். அவன்வயின் கிளப்பின் என்பது — நாடும் ஊரும் இல்லும் சுட்டித் தலைமகனைச் சார்த்திச் சொல்லின் என்றவாறு; வரைவின்பொருட்டே என்பது — வரைதல் என்பது, நீக்கிநிறுத்தற் பொருளவாம் என்றவாறு.

யாதினை நீக்கிநிறுத்தலோ எனின், புலவியை நீக்கி நிறுத்தல். அஃது என்னை பெறுமாறு எனின், மேற்சூத்திரத்திற், 'புலவி' என்று அதிகாரம் வாராநின்றதாகலான் என்பது.

பரத்தையிற் பிரிந்து வாயிலாற் புக்க தலைமகனை ஏற்று எதிர்கொண்டு வழிபட்டாள்; வழிபட்ட பின்னைக் காரணத்தின் நீங்கிய பொறுமைக்குக் காரணம் பெற்றுத் தோற்றிற்று. அது தோற்றத், தலைமகனை ஒன்றன் தலைக்கீடாகச் சொல்லுதல்; 'எம்பெருமான், நீர் பெரிதாகிய நாட்டிற் பெரிதாகிய ஊரிற் பெரிதும் மிக்க குலத்திற் பிறந்த பேரொழுக்கத்தினீர்க்குத் தகாதே சிறியேமாகிய எந்திறத்துத் தலையளி!' எனச் சொல்லுதல்; இவ்வாறு சொல்லுவாள் புலவி நீக்குவான் சொல்லிற்று என்பது; அவ்வாறு சொல்லியதற்குச் செய்யுள் :

[மிக்கீர்க்கிது தக்கதன்றென்றல்]

'வரியவண் டார்தொங்கன் மான்றேர் வரோதயன்வல்லத்தொன்னார்
கரியவை வேல்கொண்ட காவலன் காக்குங் கடலிடம்போற்
பெரியநன் னுட்டிற் பெரியநல் லூரிற் பெரியவில்லிற்
குரியநிக் கீர்க்கியல் பன்றுகொ லிவ்வா றெழுகுவதே.' (உகூ௩)

இச்சூத்திரத்தைப் பருந்துவிழ்க்காடாகக் கிடந்ததென்று, களவினுள் வரைவின்பொருட்டாக என்பாரும் உளர். அது பொருந்தாது. என்னை,

'வரைதல் வேட்கைப் பொருள' [இறையனார் - ௩௦]

என்ற சூத்திரத்துள், 'அன்ன மரபிற் பிறவுந் தொகைஇ' என்ற வழி அடங்கும். அல்லதூஉம், கற்பினுட் களவுகொணர்ந்து உரைத்தல் பொருந்ாது (௧௬)

[௫௦]

உணர்ப்புவயின் வாரா வூட லுற்றோற்
புலத்த லுனே கிழவற்கும் வரையார்.

என்பது என்னுதலிற்றோ எனின், தலைமகட்கே உரியதோர் இலக்கணம் ஓரிடத்துத் தலைமகற்கும் உரித்து என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: உணர்ப்புவயின் வாரா ஊடல் தோன்றின் என்பது — உணர்த்துதற்கு இடம்வாரா ஊடல் தலைமகட்கு வெளிப்பட்டு நிற்பின் என்றவாறு; புலத்தல்தானே கிழவற்கும் வரையார் என்பது — புலந்து சொல்லுதற்றன்மை தலைமகற்கும் வரையார் என்றவாறு.

அவை தலைமகட்கே உரியவல்ல; அவை இந்நேரத்துக்கண் தலைமகற்கும் உரிய என்றவாறு.

தலைமகள்மாட்டு ஊடல் தோன்றுமிடத்து மூன்று வகையான் ஊடல் தோன்றும், செய்தான்கொல்லோ எனவும் செய்யாநின்றான்கொல்லோ எனவும் செய்யுங்கொல்லோ எனவும். அவற்றுள், செய்யாநின்றான்கொல்லோ என்னும் நிகழ்காலத்-

துப் பிறத்தல் என்பது, பரத்தையைத் தேரேற்றினான், பூச்சூட்டினானால், அவளோடு ஆடினான்கொல்லோ எனப் பிறப்பது. இனிச் செய்தான் என்பது இறந்தகாலத்துத் துணிபு பற்றி * நிகழ்வது. இனி எதிர்காலத்துச் செய்யுங்கொல்லோ என நிகழ்வது. அவற்றுள் நிகழுங் காலத்தது தான் நிகழ்ந்து உணர்த்துதற்கு இடனுடைத்தன்று; தெற்றென அறிந்தேனல்லாதேன் எம்பெருமானை வருத்துவலோ எனவுந் தானேயும் மீடல் நிலையுடைத்து. சிறிது சொல்லவும் மீண்டும் நிலையுடைத்து, இனி, எதிர்காலத்தே நிகழ்வதும் மீண்டும் நிலையுடைத்து, தெற்றென அறிந்தேனல்லாதேன் ஒருகாலத்து நிகழ்வதெனக் கருதுதல் பொருந்தாது. என்னை, யாறு வருகின்றதென்று ஆடை தலைச்சூடாரன்றே என்பது. இனி, இறந்தகாலத்துத் துணிவுபற்றி நிகழ்ந்த துண்டே, அஃதெல்லாம் முன்னர்ச் செய்தானாகலானும், அஃது உணர்ததுதற்கு இடம், அது செய்திலேன் எனச் சொல்லிவிடின மறைவதன்றாகலான் என்பது அன்றியும் செய்திலேன் என்பானாயின், செய்த தலமேலுஞ் செம்பூச் சிதறினாற் போலக் கொடுமையுடைததாம. அதுதான் உணர்த்துதற்கு இடனாயிற்று என்பது, அவ் வூடல் தோன்றுமெனின் என்றவாறு.

எந்நேரத்துக்கண்ணே தோன்றுவது எனிற் சொல்லுதும்: பரத்தையர் சேரியினின்றும் பறுத்தந்து தோழியை வாயிலாகக் கொண்டான்; கொள்ளத், தோழி புக்குப் பல காரணமுங் காட்டினாள்: காட்டுவாள், 'நாம் இல்லிருந்து [1]இறைவழிபட்டு, மக்களை வளர்த்து, விருந்து புறந்தருதலல்லது போகத்துள்ளாமன்றே, அல்லாம் ஊடலும் புலவியும் துனியும் கொள்ளற்பாலமல்லம்;

அல்லதூஉம், வண்டோரனையர் ஆடவர், பூவோரனையர் மகளிர் என்பது; என்னை, வண்டுகள் தாதூதுமிடத்து [2]நன் மலரே ஊதுவேம் என்னா, எல்லாமலரும் ஊதும்; இனிப், பூவாயினக்கால், 'எம்மையே ஊதா எல்லாப்பூவையும் ஊதின' என்று புலவாதன்றே; அதுபோலத் தலைமகனும் எல்லாப் பெண்பால்களையுந் தலைப்பெய்தற்றன்மையான்; அவர் தன்மை

1 - இறைவழிப்பட்டு. 2 - நாண்மலரே.

அறிவேம், போம்பொழுது புறந்தொழுது வரும்பொழுது முன் தொழுது ஏற்றுக்கொண்டு வழிபடுதலல்லது மலைத்தற்கண்ணேமல்லம்; மலைத்து இப்பெற்றியமாதல் தலைமையன்று;

அல்லதூஉம், இவ்வாறே வழிபடாதே நம்பெருமானை வருத்தி என்செய்தும் என்று ஏற்றுக்கொண்டு வழிபடுவது 'பொருளேபோலக் காட்டும்' என்று இங்ஙனஞ் சொல்ல, 'அஃதொக்கும்பிற' என்று அப்போதைக்குச் சிவப்பு நீங்கிற்று; நீங்கப் 'புகுதுக' என்றாள் என, அவன் புக்கான். புக்குப் பள்ளியிடத்தானாக, உள்ளுடைத்தாகிய சிவப்புத்தோற்றிற்று; தோன்றக் கண்சிவந்து நுதல் வேறுபட்டுக் காட்டினாள்; காட்டப் பெயர்த்தும் ஆற்றானாயினான்; ஆற்றானாய் நின்று இறந்தகாலத்து நிகழ்ந்தனவற்றைப்பற்றிப் புலந்து சொல்லும். 'என்னை, மேலைக்காலத்து நாம் ஆற்றாமாகத் தான் ஆற்றாளாய் நாம் ஆற்ற ஆற்றிவருகின்ற இவளேயெனின், இற்றையினாங்கு நாம் ஆற்றாமாயது அறியாமையால்; இவ்வாற்றாமை எண்ணாதற்றிலாமையின் அணங்காதல்; இவள்போல்வதோர் தெய்வம், நீ அவளெனக் கவன்றாமடைமையால், இவளார், நீயார்' என்பது நெஞ்சிற்குச சொல்லும்: அதற்குச் செய்யுள்:

[தலைமகன் நெஞ்சிற்குரைத்தல்]

'இல்லென் றிரவலர்க கீதல்செல் லாதவ ரிலலமெனப்
புல்லென்று வாடிப் புலம்பனெஞ் சேமக் கியார்பொருநதார்
வில்லொன்று சேர்பொறி வானவன் மாள விழிஞங்கொண்ட
கொல்லொன்று வாட்படை யான்றமிழ் நாடன்ன கோல்வளையே.'

'அரையணங் குந்துகி லாளல்ல ளாற்றுக் குடியில்வென்ற
உரையணங் குந்தமிழ் வேந்த னுசிதனெண் பூம்பொதியில்
வரையணங் கோவல்லே யோவென்ன யான்மம்ம ரெய்தவுண்கண்
ணிரையணங் கும்பனி நீர்கொள்ள நின்றவிந் நேரிழையே.' (உகரு)

என்பது, தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லியது. அது கேட்ட தலைமகள், 'மேனாள் யான் செய்த குற்றேவல் உட்கொள்வானாயது என்கட் பேரருளினானன்றே, இவ்வகைப் பேரருளினான்திறத்து இவ்வகை சிவத்தல் தகாது' என்று சிவப்பு நீங்குவாளாவது. (கள)

[௫௧]

நிலம்பெயர்ந் துறையு நிலையியன் மருங்கிற்
களவுறை கிளவி தோன்றுவ தாயிற்
றிணைநிலைப் பெயர்க்கோள் கிழவற்கும் வரையார்.

என்பது என்னுதலிற்றோ எனின், இன்னுங் கற்புக்காலத்துத் தலைமகற்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: நிலம் பெயர்ந்து உறையும் நிலையியன் மருங்கின் என்பது — நிலம்பெயர்ந்து உறையும் என்பது, உள்ளத்துக்கண் நிலைபெற்றவிடத்து என்றவாறு; களவுறை கிளவி தோன்றுவது ஆயின் என்பது — களவு காலத்திற்குரிய சொல் தலைமகள்மாட்டுத் தோன்றுமே எனின் என்றவாறு; திணைநிலைப் பெயர்க்கோள் கிழவற்கும் வரையார் என்பது — திணைநிலைப் பெயர்ந்துகொள்ளுங் கோள் தலைமகற்கும் வரையார் என்றவாறு.

அஃதாமாறு, தலைமகளை எய்திக் கற்புக்காலத்து ஒழுகாநின்ற நிலைமைக்கண் நெஞ்சு பொருட்குப் பிரிதும் என்றது என்பது.

'நட்டாரை ஆக்குதலும் செற்றாரைச் சிதைத்தலும் பொருட்குறைபாடு உடையார்க்கு நிகழாவாகலாற் குறைபாடு நீங்கப் பொருட்குப் பிரிதும்' என்ற நெஞ்சிற்குத் தலைமகன், 'நாம் பொருட்குப் பிரிய இவள் ஆற்றுமேற் பிரிதும், ஆற்றாளாயின் ஒழிதும்' என்று நெஞ்சினோடும் ஒருப்பட்டுத் தலைமகளுழைப் புக்கான். புக்குப் பள்ளியிடத்தானாகிப் பெரியதோர் அருளிச்செய்கை செய்தான், செய்யத் தலைமகள், 'எம்பெருமான் பண்டும் அருளிச்செய்கை செய்தான், இவை பண்டே போலா, பெரிதும் [1]இழிதக்கனபோலக் காட்டின, பிரியக்கருதினான் கவடு போலும்' என, அவளும், ''மறந்து நின்னிற்பிரியேன் பிரியின் ஆற்றேனாவேன்'' என்ற சொல் பொய்ப்பட்டதாம்' என ஆற்றாளாயினாள். அவ்வாற்றாத்தன்மை தலைமகற்குப் புலனாயிற்றாக, 'இவள் குறிப்பினானே பிரிவுணர்ந்து ஆற்றாளாயினாள், பிரிதும் என்று சொல்லின் இறந்துபடும்' என்று தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியதற்குச் செய்யுள்:

1 - இழுமத்தக்கன.

[நெஞ்சிற்குரைத்தல்]

'துளியுந் துறந்தவெங் கானஞ் செலவின்று சொல்லுதுமேல்
ஒளியுந் திருநுதல் வாடியும் யாள்கொ லுசிதனென்ற
தெளியுஞ் சுடரொளி வாண்மன்னன் செங்கோ லெனசசிறந்த
அளியும் பொருதுநெஞ் சேகைய நின்றவிவ வாயிழையே.' ()

இவ்வண்ணம் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியதற்குச் செய்யுள் :

[தலைமகன செலவழுங்கல்]

'மையார் தடங்கண் வரும்பனி சோர வருந்திநின்றிந்
நெயயார் குழலா ளினைய ஈறையாற்று நின்னைவென்ற
கையார் கொடுஞ்சிலைச செங்கோற் கலிமதன் காய்கலிக்கு
வெய்யான் பகையென நீங்குது மோநெஞ்சம வெஞ்சுரமே.'(உகஎ)

'செருமால் கடற்படைச சேரலர் கோனறை யாற்றழியப்
பொருமால் சிலைதொட்ட பூழியன் மாறன் பொருமுனைபோல்
அருமா ரெறிபொருட் கோல்செல்வ தன்றுநெஞ் சேயவடன்
பெருமா மழைககண்ணு நீழுநிலந் துரதன பேதுறவே.' (உகஅ)

இவ்வாறும நெஞ்சிற்குச சொலலிச செலவழுங்கும்.

'மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே
யரும்பிய சுணங்கி னம்பகட் டிளமுலைப்
பெருந்தோ ளுணுகிய நுசுப்பிற்
கல்கெழு கானவா நல்குறு மகளே' [குறுந் - எக]

இவ்வாறு பாலைநிலத்தானையினனை செலவழுங்கி மருதநிலத்தானையினன் எனக்கொள்க அது, 'திணைநிலைப் பெயர்க்கோள்' கிழவற்கும உண்டாயினவாறு. பிரிவினை வேண்டாள் தலைமகளாயினும தலைமகனும வெண்டாதாகை, இந்நோத்துக்கண் என்றவாறு

ஒருவன, 'நிலம்பெயர்ந்து உறையும் நிலையியன் மருங்கின்' என்பது, உடன்கொண்டு போவேன் எனத தலைமகன் உள்ளத்தின்கண் நிலைபெற்றவிடத்து என்னும்.

'களவுறை கிளவி' என்பது, களவுறைந்த காலத்து உரியசொல், அறத்தொடுநிலை என்றவாறு எனக்கொள்க.

'தோன்றுவதாயின' என்பது, தலைமகன்மேல் தோழி-மாட்டுத் தோன்றுமே எனின் என்றவாறு.

'திணைநிலைப் பெயர்க்கோள் கிழவற்கும் வரையார்' என்-பது, பாலைநிலத்தானாயினான் தலைமகன் மருதநிலத்தானாயினான் என்றவாறு.

கிழவற்கும் வரையார் என்ற உம்மையால் கிழத்திக்கும் வரையார் எனக்கொள்க. அவளும் உடன்போக்குக்கொண்டு பாலைநிலத்தாளாயினாள், இவன் ஒழிந்தமை சொல்ல மருதநிலத்-தாளாயினள் எனக்கொள்க. மேல் உடன்போக்குச் சூத்தி-ரத்துள் உரைக்கும் பொருள் இதுவென்று கொள்க.

'பொருள்வயிற் பிரியினும புணர்ந்துடன் போகினு
மதுபிரி வுரைப்பினும் பாலை யாகும்.'

[ருஉ] (கஅ)

**நிலம்பெயர்ந் துறையு மெல்லாப் பிரிவு**
**மொழிந்தோ ரறியவு மறியா மையுங்**
**கழிந்துசேட் படூஉ மியற்கைய வென்ப.**

என்பது என்னுதலிற்றோ எனின், இதுவும கற்புக்காலத்துத் தலைமகன் பிரிவின்கண் உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதனபொருள் : நிலம் பெயாந்து உறையும எல்லாப் பிரி-வும் எனபது — பரத்தையிற் பிரிவொழித்து எல்லாப் பிரிவும் என்றவாறு; ஒழிநதோர் அறியவும் அறியாமையும என்பது — தலைமகளும் தோழியும் அறியவும் அறியாமையும் என்றவாறு; கழிந்து சேட்படும் இயற்கைய என்ப என்பது — காடிடை-யிட்டும் நாடிடையிட்டும் அகன்று உறைதற்றன்மையர் என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

எனவே,

'ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தற் குற்றுழிப் பொருட்பிணிப் பிரிவு' [இறையனார் - ருரு]

என்று, இவற்றிற்குப் பிரிகின்று தலைமகளும் தோழியும் அறியச் சொல்லிப் பிரியவும் உரியன், அறியாமைப் பிரியவும் உரியன், அவ்விரண்டும் இலக்கணம் என்பது.

அவற்றுள் அறியாமைப் பிரிதல் பயமின்று.

அறியப் பிரிவது, 'யான இன்னதோரிடத்து இன்னதோர் கருமம் முடித்து வருவேன்' என அவளை உடன்படுத்துப் பிரிவே தக்கது.

அல்லாது, அவன் சொல்லாது பிரிந்தவிடத்து, 'இவ்வகை சொல்லாது பிரிதற்குக் காரணம் என்னைகொல்லோ!' எனக் கவல்பவாகலின், அதுவன்று அறியாமைப் பிரிதல் என்பது.

சிலநாள் இடையுடைத்தாக ஒரதிகாரபபடுத்து, 'அங்ஙனம் பிரிந்து ஒரு கருமம் முடித்துக்கொண்டு வந்தார் தலைமக்கள், தலைமகளிரும் அவர் அது முடிதது வருந்துணையும் ஆற்றியிருந்தார், அஃது உலகத்தினதுபண்பு' என்னும். என, 'ஒக்கும்பிற, தலைமக்கள் பிரிந்து பொருள்முடித்து நின்றக்கால் தலைமகளிர் ஆற்றாரபவே' எனின், 'அவரது ஆள்வினையை இடையூறு செய்தாராவர்பிற, அதனால், அவா பிரிந்து பொருண்முடித்து வருந்துணையும் ஆற்றுவதேயாகாதே செய்யப்படுவது' என, 'ஆற்றுவேன்' என்றாள், இடையுடைத்தாலோ என்பதனன். என்னை, சாதலும் கெடுதலும் எல்லாவுயிரும அறியுமன்றே என்பதனாற் கலஙகாவாம்; அன்னது இவட்கு என்பது, இங்ஙனம் உணர்த்திவைத்தார். பிரியும் ஞான்றா கதுமெனக் கலங்கி ஆற்றாளாகவும் பெறும், பிறர் சாநதன்மையான் என்பதனால்; பெற்றதே இலேசாகப் பிரிவது கருமம் என்று முற்படாது பிரிதலும்உடையன் என்பது அதனான் '"ஆற்றுவேன்" என்றாயன்றே, ஆற்றாளாவதற்குக் காரணம் இல்லைபிற, பொய்யாத் தன்மையளாகலான்;' இன்னும் உணாத்துவித்தற்குத்தோழியை ஒம்படை ஏவிப் பிரியவும் பெறும் என்பது. அறியப் பிரிவது வலியுடைத்து.

அறியாமைப் பிரிந்த தலைமகனையுடைய கிழத்தி சொல்லியதற்குச் செய்யுள் :

'செல்லா ரவரென் றியானிகழ்ந் தேன்சுரஞ் செல்வதென்கண்
ஒல்லா ளவளென் றவரிகழ்ந் தார்மற் றுவையிரண்டுங்
கொல்லா ரயிற்படைக் கோனெடு மாறன் குளந்தைவென்ற
வில்லான் பகைபோ லெனதுள்ளந் தண்ண மெலிவிக்குமே.' (

அஃதேல், நிலம்பெயர்ந்து உறையும் பிரிவும் ஒழிந்தோர் அறியவும் அறியாதேயும் என அமையாதே, 'எல்லாம்' என்றது எற்றிற்கோ எனின், களவுகாலத்தும் ஒரு பிரிவு சொல்லப்பட்டது, நிலம்பெயர்ந்து உறைவது பட்டபின்றை வரையாக் கிழவன் நெட்டிடை கழிந்து பொருள்வயிற் பிரிவது என : அங்கும் அறியப் பிரியவும், அறியாமற் பிரியவும் எனச் சொல்லப்பட்டது என்பது.

'சேட்படும் இயற்கையது' என அமையாதே, 'கழிந்து' என்றது எற்றிற்கோ எனின், கழிந்தபின்றைக் கழிதலே யல்லது இடைச்சுரத்தே நின்றானும் அந்நிலத்தே நின்றானும் மீளுதலில்லை என்பது; என்னை, சிற்றறிவினரன்றே, ஒரு கருமம் எடுத்துக்கொண்டு முடிப்பான் புக்கு, முடியாது தவிர்வார் என்பது.

> 'ஆடிய வெறியு மழுங்கிய செலவு
> நாடுங் காலை யில்லெண மொழிப'

என்றாராகலின்.

இன்னும், அறியாமற் பிரிதற்குச் செய்யுள் :

> 'செல்வா ரல்லரென் றியானிகழ்ந் தனனே
> வீவா ளல்லளென் றவரிகழ்ந் தனரே
> யாயிடை யிருபே ராண்மை செய்த
> பூச லல்லார்க் கதுவி யாஙகெ
> னல்ல னெஞ்ச மலமலக் குறுமே' [குறுந் - சு௩]

என்பதூஉங் கொள்க. (சுகூ)

[௩௩]

**எல்லா வாயிலுங் கிழவோன் பிரிவயிற்**
**பல்லாற் றானும் வன்புறை குறித்தன் று.**

என்பது என்னுதலிற்றோ எனின், பிரிவிடை ஆற்றாளாய தலைமகளை ஆற்றுவிக்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இதன் பொருள் :** எல்லா வாயிலும் என்பது — தலைமகனும் கிழத்தியும் ஒழிந்த எல்லா வாயில்களும் என்றவாறு ;

தோழியும் பார்ப்பானும் பாணனும் பாடினியும் என இவர்கள் என்றவாறு; கிழவோன் பிரிவயின் என்பது — தலைமகன் நாடிடையிட்டும் காடிடையிட்டும் பிரியும் பிரிவின்கண் என்றவாறு; பல் ஆற்றானும் வன்புறை குறித்தன்று என்பது — பல நெறியானும் ஆற்றுவித்தலைக் கருதின என்றவாறு.

என்பது, பருவம் குறிக்கப்பட்ட தலைமகள் பருவவரவின்கண் ஆற்றாளாய்க், 'கார்ப்பருவம் வரும்வழி அவர் பாணிப்பாரல்லர், வந்தார், வாராநின்றார், வருவர்' எனவும், 'இதனைப் பருவமன்றென்றும் பழித்து, அதனைப் பருவமே எனக் கருதினாயேயெனில் அவராற் குறிக்கப்பட்ட பருவமன்று; என்னை, அவர் பொய்யுரை உரையார் ஆகலான்; யாம் தெளியேம்' எனவும், காலங் காட்டியும், சொகினஞ் சொல்லியும், யாழ் பண்ணியும் எல்லாப் பாசுரத்தானும் தலைமகளை ஆற்றுவிக்கும் என்றவாறு. தலைமகன்றன்னை, 'அன்பிலன் கொடியன்' எனவும் இத்தொடக்கத்தன எல்லாஞ் சொல்லியும் ஆற்றுவிக்கும்.

அவற்றுட் பருவ வரவின்கண் ஆற்றாளாய தலைமகளை ஆற்றுவித்தற்குப் படைத்து மொழிந்தது பருவமன்று என்றதற்குச் செய்யுள் :

[பருவமன்றென்றல்]

'கடாவு நெடுந்தோக் கலிமத னன்கலி தேயசெங்கோல்
நடாவு நகைமுத்த வெண்குடை வேந்தனண் ணார்மதில்பாய்ந்
திடாவு மதமா மழைபெய்யு மோதை யெனமுழங்கப்
பிடாவு மலர்வன கண்டோ மெலிவதென் பெண்ணணங்கே.'()

'விடக்கொன்று வைவேல் விசாரிதன் மற்றிவ் வியலிடம்போய்
நடக்கின்ற செங்கோ லொருகுடை வேந்தனண் ணார்முனைபோற்
கடக்குன்றஞ் சென்றநங் காதலர் பொய்யலர் நையல்பொன்னே
மடக்கொன்றை வம்பினைக் காரென வெண்ணி மலர்ந்தனவே.'

'பூரித்த மென்முலை யாயன்று பூலந்தைப் போர்மலைந்த
வேரித் தொடையல் விசய சரிதன்விண் டோய்கொல்லிமேல்
மூரிக் களிறு முனிந்துகை யெற்ற முழங்குகொண்டல்
மாரிக்கு முல்லையின் வாய்நக வேநீ வருந்துவதே.' (௩௦௪)

'நீரற வறந்த நிரம்பா நீளிடைத்
துகில்விரித் தன்ன வெயிலவி ருருப்பி
னஞ்சுவரப் பனிக்கும் வெஞ்சுர மிறந்தோர்
தாம்வரத் தெளித்த பருவங் காண்வர
விதுவோ வென்றிசின் மடந்தை மதியின்று
மறந்துகடன் முகந்த கமஞ்சூன் மாமழை
பொறுத்தல் செல்லா திறுத்த வண்பெயல்
காரென் றயர்ந்த வுள்ளமொடு தேர்வில
பிடவுங் கொன்றையுங் கோடலு
மடவ வாகலின் மலர்ந்தன பலவே' (நற்றிணை - 99)

இவை பிரிவிடைப் பருவங்கண்டு ஆற்றுளாய தலைமகளை; 'இது பருவமன்று; என்னை, அவர் பொய்யுரையாராகலான்; வம்பினைப் பருவம் என்று தம் மடமையாற் பிடவும் கோடலும் கொன்றையும் மயங்கிப் பூத்தன' என்று வற்புறுத்தாள்.

[வருவரேன வற்புறுத்தியது]

'மையார் தடங்கண் மடந்தை வருந்தற்க வாண்முனைமேல்
செய்யா ரயிலவர் காணப் பொழிந்த செடுங்களத்து
வெய்யா ரமரிடை வீழசெந் தூவிவெள் ளம்புதைத்த
கையார் சிலைமன்னன் கன்னிநன் னீர்கொண்ட கார்முகிலே.' ()

இது பிரிவிடையாற்றுளாகிய தலைமகளைத் தோழி, 'அவர் குறித்த பருவம் வந்ததாகலின் அவரும் பொய்யார், வருவர்' என வற்புறுத்தியது.

'கொடியார் செடுமதிற் கோட்டாற் றரசர் குழாஞ்சிதைத்த
வடியா ரயிற்படை வானவன் மாறன்வண் கூடலன்ன
துடியா ரிடையாய் வருந்தல் பிரிந்த துளங்கொளியார
அடியார் கழலா ரணுகவந் தார்த்த தகல்விசும்பே.' (டு௪)

இதுவும் அது.

'ஆமா னனையமென் னோக்கி யழுங்க லகன்றுசென்ற
தேமா நறுங்கண்ணி யாரையுங் காட்டுங்தென் பாழிவென்ற
வாமா செடுந்தேர் மணிவண்ணன் மாறன்வண் டீந்தமிழ்நர்
சேர்மான் கொடிமே லிடியுரு மார்க்கின்ற கூர்ம்புயலே.' (டு௫)

இதுவும் அது.

* 'கருந்தண் புயல்வண்கைத் தென்னவன் கைம்முத் தணிந்திலங்கும்
இருந்தண் குடைநெடு மாற னிகன்முனை போனினைந்து
வருந்தன் மடந்தை வருவர்நங் காதலர் வானதிரக்
குருந்தம் பொருந்திவெண் முல்லைக ளீன்றன கூரெயிறே.' ()

இதுவும் அது.

* 'புலமுற்றுந் தண்புய லேக்கிப்பொன் போலப் பசந்ததின்பால்
நலமுற்றும் வந்த நலமுங்கண் டாய்நறை யாற்றெதிர்ந்தார்
குலமுற்றும் வாடவை வேல்கொண்ட மாறன் குரைகடல்சூழ்
நிலமுற்றுஞ் செங்கோ லவன்றமிழ் நாடன்ன நேரிழையே.' ()

இதுவும் அது.

'அறையார் கழன்மன்ன னாற்றுக் குடியழ லேறவென்று
கறையார் சுடர்வேல் வலங்கொண்ட கோன்கடன் ஞாலமன்னாய்
நிறையாம் வகைவைத்து நீத்தவர் தேரொடு நீமறந்த
இறையார் வரிவளை சேரவந் தார்த்தன வேர்முகிலே.' (௩௦அ)

இதுவும் அது.

அஃதே யெனின், 'எல்லாவாயிலுங் கிழவோன் பிரிவயின் வன்புறை குறித்த' என்னாது, 'பல்லாற்றானும்' என மிகைபடக் கூறியவதனான் கற்புக்காலத்துக் கடிமனை சென்ற செவிலி, தலைமகனது நிலைமையும் தலைமகளது நிலைமையும் பார்த்து வந்து நற்றாய்க்குச் சொல்லியனவும் கொள்க; அதற்குச் செய்யுள் :

[செவிலி நற்றாய்க்குரைத்தல்]

'திருநெடுங் கோதையுந் தெய்வந் தொழாளொடவ் வவர்மேற்செலினும்
பெருநெடுந் தோளண்ணல் பேர்ந்தன்றித் தங்கான்பிறழவில்செங்கோல்
அருநெடுந் தானை யரிகே சரியந்தண் கூடலன்ன
கருநெடுங் கண்மட வாயன்ன தாலவர் காதன்மையே.' (௩௦க)

'பார்மன்னன் செங்கோற் பராங்குசன் கொல்லிப் பனிவரைவாய்க்
கார்மன்னு கோதையன் னாளு மருந்ததிக் கற்புடையாள்
தேர்மன்ன னேவசென் றாலு முனைமிசைச் சேர்ந்தறியா
போர்மன்னு வேலண்ணல் பொன்னெடுந் தேர்பூண் புரவிகளே.'

* 'கூரா ரயில்கொண்டு நேரார் வளம்பல கொண்டவென்றித்
தேரான் வரோதயன் வஞ்சியன்னா டெய்வஞ் சேர்ந்தறியாள்
வாரார் கழன்மன்னன் றானே பணிப்பினும் வல்லத்துத்தன்
நேரார் முனையென்றுந் தங்கி யறியா னெடுந்தகையே' (௩௧௧)

பிறவுங் கொள்க.

---

* இக்குறிபெற்ற பாட்டுக்கள் மிகையாகக் காணப்படுவன.

'கானங் கோழி கவர்குரற் சேவ
லொண்பொறி யெருத்திற் றண்சித ருறைப்பப்
புதனீர் வாரும் பூநாறு புறவிற்
சீறூ ரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செலினுஞ்
சேர்ந்துவா லறியாது செம்ம லோரே.' [குறுங் - உஉஉ]

மற்றுங் கற்புக்காலத்துக் கிளவிகள் இது நிலமாகக் கொள்ளப்படுவனவெல்லாம் அறிந்துகொள்க.

[ருச]

வன்புறை குறித்த வாயி லெல்லா
மன்புதலைப் பிரிந்த கிளவி தோன்றிற்
சிறைப்புறங் குறித்தன் றென்மனார் புலவர்.

என்பது என்னுதலிற்றோ எனின், மேற் சூத்திரத்து ஆற்றுவித்துக்கொண்டிருக்குமாறு உணர்த்திப் போந்தார், இனித், தலைமகன் பிரிவெடுத்துக்கொண்டு பிரியுமிடத்து வாயில்களுக்கு உணர்த்த, வாயில்கள் தலைமகட்குப் பிரிவுணர்த்தத் தலைமகளது வாயில்க ளாமிடத்துச் சிறைப்புறத்தானாக அவன் கேட்கும் அணிமைக்கண் உணர்த்துக என்பது உணர்த்துதல் நுதலிற்று;

இனித், தலைமகனது பிரிவின்கண் தலைமகள் ஆற்றாளாயினவிடத்துச் சிறைப்புறங் கூறியும் ஆற்றுவிக்க என்பது உணர்த்துதல் நுதலிற்று என்பாரும் உளர்

· **இதன் பொருள்:** வன்புறை குறித்த வாயிலெல்லாம் என்பது — தலைமகளை ஆற்றுவிக்கும் வகையால் ஆற்றுவித்தற்குரிய வாயிலெல்லாம் என்றவாறு; அன்பு தலைப்பிரிந்த கிளவி தோன்றின் என்பது — தலைமகன் பிரிவின்கண் தலைமகள் ஆற்றாளாயினவிடத்து என்றவாறு; என்பது அவ்விடத்து வாயில்கள் ஆற்றுவிக்கற்பால, ஆற்றுவிக்ககில்லாதவிடத்து; சிறைப்புறம் குறித்தன்று என்மனார் புலவர் என்பது — சிறைப்புறத்துக்கண்ணுறுத்து ஆற்றுவிக்க எனச் சொல்லுவர் கற்றுவல்லோர் என்றவாறு.

'சிறைப்புறங் குறித்தன்று' என்பது, கற்பெனப்பட்ட சிறைமேல்வைத்து ஆற்றுவித்தல் என்பது. அஃதாமாறு, மேற் சொல்லின முறையானெல்லாம் ஆற்றுவிப்பவும் ஆற்றுளாய்நின்ற தலைமகளை இவ்வாற்றானே ஆற்றுவித்துக் காண்பன் எனக் கருதி, 'நம்பெருமாட்டி பிறந்த குலம் மேனாள்தொட்டும் ஒழுக்கச் சிதைவின்றி விழுப்பமுடைத்தாய் ஓங்கி வாராநின்றதொரு பெருங்குலமன்றே, அக்குலத்தை நீ அழித்தல் தக்கதோ! நாணும் கற்பும் அன்றே பெண்டிர்க்கு அணிகலமாவன என்பதனால், இக்குலத்தினவர் கற்பெனப்பட்ட சிறை அழியாமை காத்துக்கொண்டொழுகினார், அதனை நீ அழிக்கின்றாயாகலின் நின்கட் பெரியதோர் பழியாக்குகின்றாய்' என்றும், 'நம்பெருமானும் தமது ஆண்மைத்தன்மை காட்டிப்பிரிந்தார், நீயும் அவர் கருதியது முடித்துவருந் துணையும் கற்புக்காத்திருக்க வேண்டும்' என்றும், 'சான்றோர்மகளிர் என்பார் சிறியரன்றிப் பெரியராகல்வேண்டும்; அத்தன்மையென்பது தங்குலநோக்கித் தம் கற்புக்காத்து ஒழுகின், அதனின் மிக்கதில்லை' என்றும் இவ்வகை ஆற்றுவித்தல், 'சிறைப்புறங் குறித்தல்' என்பது; அதற்குச் செய்யுள்.

[சிறைப்புறங்குறித்தல்]

'உலத்திற பொலிந்ததிண் டோண்மன்னன் றெண்டே ருசிதன்மற்றிந்
நிலத்திற் பொலிந்தசெங் கோலவ னீள்புனற் கூடலன்ன
நலத்திற்கு நாணிற்கு நகற்பிற்கு [1]ஞானத்தி னல்லநங்கள்
குலத்திற்கு நாசகந்தன் றலின்மை யாகுதல் கோல்வளையே.' ()

இவ்வகை சொல்லி ஆற்றுவித்தலே, 'சிறைப்புறங் குறித்தல்' என்றவாறு. (உக)

[௫௫]

சிறைப்புறங் குறியா தோன்றலு முளவே
யவற்புணர் வறியுங் குறிப்பி னான.

என்பது என்னுதலிற்றோ எனின், தலைமகன் பிரிந்தவழித் தலைமகள் ஆற்றுளாயினவிடத்துத் தலைமகனது வரவுசொல்லி ஆற்றுவிக்க என்பது உணர்த்துதல் நுதலிற்று.

1 - ஞாலத்தி.

இதன் பொருள்: சிறைப்புறம் குறியா தோன்றலும் உளவே என்பது — மேல் தோழி கற்பெனப்பட்ட சிறையை அழிக்கின்றாயென்றன்றே ஆற்றுவித்தது, அவ்வாறன்றி வருவனவும் உள என்றவாறு; அவன் புணர்வு அறியும் குறிப்பின் ஆன என்பது — தலைமகன் வினைமுற்றியானும் பொருண்முற்றியானும் வருங் குறிப்பின்கண் என்றவாறு.

அஃதாமாறு, மேல் அவ்வகையாற் பிரிவெடுத்துக்கொண்டு ஆற்றுவித்தார், ஆற்றல் கண்டு பிரிந்தவழித் தோழி தலைமகளை ஆற்றுவித்துக்கொண்டு இருந்தாளன்றே; இருந்தவிடத்துத் தலைமகனும் தான் எடுத்துக்கொண்ட வினை முடித்தானன்றே; முடித்தவழியாற் குறித்தகாலம் வந்தது என்று மறுத்துஞ் சார்ந்தானன்றே; சார்ந்த இடத்துச் [1] சங்க படகம் வந்து இசைத்தன. இசைப்பத், தோழி தலைமகனது வரவுணர்ந்து, 'எம்பெருமாட்டி, நீ இறந்துபடுவான் புக்காயால், கண்டாயன்றே, உள்ளாரால் எய்தப்படாத பொருளில்லை, நீ ஆற்றியுள்ளாயாகின்றே இன்றும் எம்பெருமானை வழிபடுவாயாயினை-யாயிற்று' என இவ்வாறு சொல்லுதல், 'சிறைப்புறங் குறியா தோன்றலு முளவே' என்பது.

சங்க படகம் இசைப்பச் சங்கினை வாழ்த்திச் சொல்லியதற்குச் செய்யுள்:

[சங்கினை வாழ்த்தல்]

'தேனிற வார்கண்ணிச செம்பியன் மாறன் செழுங்குமரி
வானிற வெண்டிரை மால்கடற் றோன்றினை மண்ணளந்த
நீனிற வண்ணனு மேந்தினன் றம்மு னிறம்புரைநீம்
பானிற வெண்சங்கை யார்நின்னின் மிக்க படிமையரே.' (௨௧௩)

'புரிவளை வான்கோடு புத்தேளோ டொத்தி
இருவமர் மார்பனு மேந்தினன் றம்முன்
உருவம் புரையுநின் கேழ்.'

என்பதூஉங் கொள்க. (௨௨)

---

1 - சங்கு படகம், 2 - சங்கம் படகம.

[௫௬]

திணையே கைகோள் கூற்றே கேட்போ
ரிடனே கால மெச்ச மெய்ப்பாடு
பயனே கோளென் றாங்கப் பத்தே
யகனைந் திணையு முரைத்த லாறே.

என்பது என்னுதலிற்றோ எனின், மேற் களவும் கற்பும் உணர்த்தினார், இனி அவ்விரண்டும்பற்றி வருகின்ற பாட்டினை இக்கூறப்பட்ட பத்திலக்கணத்தானும் உரைக்க என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: திணை யென்பது பல்பொருள் [1] ஒரு சொல்லாய்க் கிடந்தது: நிலத்திணையும் திணை யென்ப, குலத்திணையும் திணை யென்ப, ஒழுக்கத்திணையும் திணை யென்ப; ஆகவே, ஆகுபெயரால், அவரால் ஒழுகலாறு நிகழ்ந்த இடத்தையும் திணை என்றார்; அவை, குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என ஐந்துவகைப்படும்.

அவை அறியுமிடத்து, முதல் கரு உரிப்பொருள்பற்றி அறியப்படும் என்றவாறு. அவ்விலக்கணமெல்லாம் மேல்,

'அன்பி னைந்திணை'

[இறையனார் - க]

என்றதன்வழியே உணர்த்திப் போந்தாம். அவை திணை யெனப்படுவன.

அகப்பாட்டின் ஒரு பாட்டுக் கேட்டவிடத்து இவ்வைந்திணையுள்ளும் இன்னதொன்றுபற்றி வந்ததென்று சொல்லுவது.

இனிக், கைகோள் என்பது, களவு கற்பு என்றவாறு; இது களவுபற்றி வந்தது, இது கற்புப்பற்றி வந்தது என அறிவது.

இனிக், கூற்று என்பது, கூறுதற்கு உரியாரை அறிந்து, அவருள் இன்னார் கூறினார் இப்பாட்டு என்பது அறிவது; அக்கூறுதற்கு உரியாரைச் செம்பூட்சேயார், கூற்றியலுள்ளும், தொல்காப்பியனார் பொருட்பாலுள்ளும் கண்டுகொள்க.

1 - ஒரு சொல் ஒன்றாய்க்.

'பார்ப்பான் பாங்கன் றோழி செவிலி
சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோ
டளவியன் மரபி னறுவகை யோருங்
களவினிற் கிளவிக் குரிய ரென்ப.' [செய்யுளியல் - கஅக]

'பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற வறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த கிளவியொடு தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்.' [செய்யுளியல் - கஅஉ]

என்று ஓதினார் தொல்காப்பியனார் எனக் கொள்க.

இச்சொல்லப்பட்டாருள் இன்னார் கூற்று என்றறிவது.

இனிக், கேட்போர் என்பது, இன்னார் கூற இன்னார் கேட்டார் என்றறிவது; தோழி கூறத் தலைமகள் கேட்டாள், தலைமகள் கூறத் தோழி கேட்டாள், தோழி கூறத் தலைமகன் கேட்டான், தலைமகன் கூறத் தோழி கேட்டாள் என்று இவ் வகையனவு மெல்லாம் அறிந்து உரைப்பது.

இடம் என்பது, அவ்வாறு ஒருவர் கூற ஒருவர் கேட்கு-மிடம் என்றறிவது; அவை, தன்மை முன்னிலை படர்க்கை என்பன. அவற்றுள், யான் என்பது தன்மை, நீ யென்பது முன்னிலை, அவன் என்பது படர்க்கை அவற்றுள் இன்னது-பற்றி வந்ததென்று அறிவது.

காலம் என்பது, இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என மூன்றுவகைப்படும்; அவற்றுள், உண்டான் என்பது இறந்தகாலம், உண்ணாநின்றான் என்பது நிகழ்காலம், உண்பான் என்பது எதிர்காலம். இவற்றுள் இன்னதுபற்றி வந்ததென்று அறிவது.

எச்சம் என்பது ஒழிவு, அஃது இரண்டு வகைப்படும். சொல்லெச்சமும் குறிப்பெச்சமும் என. அவையாமாறு முன்னர்ச் சொல்லுதும்.

மெய்ப்பாடு என்பது எட்டுவகைப்படும்: அவை — நகை, அழுகை, இளிவரல், மருட்கை, உவகை, அச்சம், பெருமிதம்,

வெகுளி என இவை; அவற்றுள் இன்னதோர் மெய்ப்பாடு வந்ததென்று அறிவது.

பயன் என்பது, இது சொல்ல இன்னது பயக்கும் என்று அறிவது.

கோள் என்பது, ஒரு பாட்டினகத்துப் பொருள்கொண்டு நிற்கும் நிலை; அஃது ஐந்துவகைப்படும் — விற்பூட்டு, விதலையாப்பு, பாசிநீக்கு, கொண்டுகூட்டு, ஒருசிறைநிலை என; அவற்றுள் இன்னதோர் பொருள்கொண்டு நின்றது இப்பாட்டு என்று அறிவது. அவற்றுள்,

விற்பூட்டுப்பொருள்கோள் வருமாறு :

'வருவர் வயங்கிழாய வாட்டாற் றெதிர்நின்று வாண்மலைந்த
உருவ மணிநெடுந் தேர்மன்னன் வீய வொளிதருமேற்
புருவ முரிவித்த தென்னவன் பொன்னங் கழலிறைஞ்சாச
செருவெம் படைமன்னர் போலவெங் கானகஞ் சென்றவரே.' ()

இனி, விதலையாப்பு வருமாறு :

'பண்டா னனையசொல் லாய்பரி விட்டுப் பறந்தலைவாய்
விண்டார் படசெற்ற கோன்கொல்லிப் பாங்கர் விரைமணந்த
வண்டார் கொடியின் னுடங்கிடை போல வணங்குவன
கண்டாற் கடக்கிற்ப ரோகட வாரன்பர் கானகமே.' (ருகஙி)

பாசிநீக்கம் வருமாறு :

'சென்றூர் வருவது நன்கறிந் தேன்செருச செந்நிலத்தை
வென்றான் பகைபோன் மெலியன் மடந்தையும் வெற்பெடுத்து
நின்றா னளந்த நிலமுங் குளிர்ந்தது நீள்புயலாற்
பொன்றான் மலர்ந்து பொலங்கொன்றை தாமும் பொலிந்தனவே.'

கொண்டுகூட்டுப் பொருள்கோள் வருமாறு :

'கோவைக் குளிர்முத்த வெண்குடைக் கோனெடு மாறன்முந்நீர்
தூவைச் சுடர்வே லவர்சென்ற நாட்டுள்ளுந் துன்னுங்கொல்லோ
பூவைப் புதுமலர் வண்ணன் றிரைபொரு நீர்க்குமரிப்
பாவைக் கிணையனை யாய்கொண்டு பண்டித்த பன்முகிலே.' ()

**ஒருசிறைநிலை** வருமாறு :

> 'கோடன் மலர்ந்து குருகிலை தோன்றின கொன்றைசெம்பொன்
> பாடன் மணிவண்டு பாண்செயப் பாரிதத பாழிவென்ற
> ஆட னெடுங்கொடித் தேரரி கேசரி யந்தண்பொன்னி
> நாடன் பகைபோன் மெலிகின்ற தென்செய்ய நன்னுதலே.' ()

**விற்பூட்டு** என்பது, தலையும் கடையும் பொருள்கொள்வது.

**விதலையாப்பு** என்பது, தலையும இடையும கடையும பொருள்கொள்வது.

**பாசிநீக்கம்** என்பது, சொற்றோறும் அடிதோறும பொருளேற்று நிற்பது;

**கொண்டுகூட்டு** என்பது, சொற்களைக் கொண்டுகூட்டிப பொருள்கொள்ளுமாறு அறிநதுகொள்வது.

ஒருசிறைநிலை யென்பது, ஒரு பாட்டினகததுச சொல்லப் பட்ட பொருள் ஒருவழி நிற்பது

ஆங்கப்பத்தே என்பது — ஆஙகு என்பது அசைசசொல பத்து என்பது தொகை. ஏ என்பது ஈற்றசை ஏகாரம்.

அகனைந்திணையும உரைத்தலாறே என்பது — அகனைந் திணையும் அறிந்து உரைக்க அகபபாட்டினை வல்லோர் சொல்லு மிடத்து என்றவாறு

> 'மூளிதரு வேனற்கட் கானவ ராரப்ப முங்கிறகணஙகள
> தளிதரு தண்சிலம் பாதக்க தன்று தரணிதன்மேல்
> அளிதரு செங்கோ லரிகே சரியந்தண் கூடலன்ன
> ஒளிதரு வாணுத லாணைய விவவா றெழுகுவதே' (௩௧௧)

இப்பாட்டிற்குத்

**கைகோள் - களவு ;**

**கூற்று - தோழிகூற்று ;**

**கேட்டான் - தலைமகன் ;**

**இடம் - முன்னிலை ;**

காலம் - எதிர்காலம், வந்து ஒழுகாநின்றானுக்கு உரைத்த-மையான் நிகழ்காலமாகவுங் கொள்க ;

எச்சம் - நீ யென்பது எஞ்சிற்று ;

மெய்ப்பாடு - அச்சம், இவ்வொழுக்கம் பிறரறியின் இறந்து-படும் என்னும் நிலையினளாயினமையின் ;

பயன் - வரைவுகடாதல் ;

பொருள்கோள் - தளிதரு தண்சிலம்பா தக்கதன்று இவள் நைய இவ்வாறு ஒழுகுவது எனக் கொண்டமையின், விதலை-யாப்பு.

> 'மானக் கடுஞ்சிலை மான்றேர் வரோதயன் வாண்முனைபோன்
> றானப் படிசினைந் தூடல்பொன் னேயுறு வெஞ்சுரத்து
> நானக் குழன்மிசை நான்கொய்து கொண்டு நயந்தணிந்த
> கானக் குரவினம் போதே கமழுமென் கைத்தலமே.' (௩௨௦)

இப்பாட்டுத்

திணை - மருதம ;

கைகோள் - கற்பு ,

கூற்று - தலைமகன கூற்று, தலைமகன் பரத்தையைக் கோலச்சிறப்புச் செய்தானென்று வேறுபாடுற்ற தலைமகள் குறிப்பறிந்து தலைமகன் சொல்லியது ;

கேட்டாள் - தலைமகள் ;

இடம் - முன்னிலை ;

காலம் - இறந்த காலம் பற்றிவந்த நிகழ்காலம் ;

எச்சம் - என்னோடு என்பது எஞ்சிற்று ;

மெய்ப்பாடு - நடுக்கம் ;

பயன் - கேட்டுத் தலைமகள் ஊடல் தீர்வாளாவது ;

பொருள்கோள் - விதலையாப்பு, 'யான் கொய்து அணிந்த குரவினம் போதே இன்னும் கமழும் என் கைத்தலம்' என்று மூன்றிடத்துப் பொருள்கொண்டமையான் என்பது. (உ௩)

[௫௭]

அவற்றுள்
எச்சமுங் கோளு மின்மையு முரிய.

என்பது என்னுதலிற்றோ எனின், மேற்கூறப்பட்ட பத்தினுள்ளும் எச்சமும் கோளும் இன்றியும் உரிய என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : அவற்றுள் என்பது — மேற் கூறப்பட்ட பத்தினுள்ளும் என்றவாறு ; எச்சமும் கோளும் இன்மையும் உரிய என்பது — எச்சமானும் கோளானும் அவ்விரண்டினுள்ளும் ஒன்றொழிந்தும் இரண்டும் ஒழிந்தும் நிற்கவும் பெறும் என்றவாறு.

அவற்றுள், எச்சமின்றி வந்ததற்குச் செய்யுள் :

'ஆமா னனையமென் னோக்கி யழுங்க லகன்றுசென்ற
தேமா நறுங்கண்ணி யாரையுங் காட்டுந்தென் பாழிவென்ற
வாமா நெடுந்தோ மணிவண்ணன் மாறன்வண் டுந்தமிழ்நர்
கோமான் கொடிமே லிடியுரு மாக்கின்ற கூர்ம்புயலே' (௩உக)

இனிக், கோளின்றி வந்தது வருமாறு :

'வாடு நிலைமையை நீக்கிமண் காத்தவல் லத்தெதிர்ந்தார்
ஓடு நிலைமைகண் டான்வையை யொண்ணுதன் மங்கையரோ
டாடு நிலைமையை யல்லை யவரொடம் பூம்பொழில்வாய்
நீடு நிலையையு மல்லைசொல் லாயென் னெடுந்தகையே' (௩உஉ)

எனக்கொள்க. (உ௪)

[௫௮]

சொல்லே குறிப்பே யாயிரண் டெச்சம்.

என்பது என்னுதலிற்றோ எனின், மேற்கூறப்பட்ட எச்சம் இரண்டு வகைப்படும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : சொல்லே குறிப்பே ஆயிரண்டு எச்சம் என்பது — சொல்லெச்சமும் குறிப்பெச்சமும் என இரண்டு எச்சம் என்றவாறு.

சொல்லெச்சம் என்று சொல்லப்பட்ட வாய்பாடன்றிப் பிறவாய்பாட்டால் தோன்றினும் என்றவாறு.

எச்சம் என்பது ஒழிதல் என்றவாறு.

சொல்லெச்சத்திற்குச் செய்யுள் :

'பள்ளத்து நீலம் பறந்தலைக கோடிப்பட் டார்குருதி
வெள்ளத்துச செழுநகழு நீர்வைத்த கோன்றெண்டி வண்டுமென்பூ
வள்ளத்துத் தேமகிழ் கானல்வந் தார்சென்ற தேர்வழியெம்
உள்ளத்தி னூடு சிதையவந் தூரு மொலிகடலே.' (௩உ௩)

இனிக், குறிப்பெச்சம் வந்த செய்யுள் :

'இடியார் முகிலுரு மேந்திய கோனிர ணேதயன்றன்
வடியா ரயிலன்ன கண்ணிதன் வாட்ட முணர்ந்துவண்பூங்
கடியார் கருங்கழி மேய்கின்ற கானற் கலந்தகன்ற
கொடியா ரினுமிகத் தாமே கொடிய குருகினமே.' (௩உ௪)

எனவுங் கொள்க.

[ருக]

முற்படக் கிளந்த பொருட்படைக் கெல்லா
மெச்ச மாகி வருப்வழி யறிந்து
கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே.

என்பது என்னுதலிற்றோ எனின், இந்நூலுள் எடுத்தோத்தே, இலேசே என்று இவற்றான் முடியாது நின்றனவெல்லாம் இது புறனடையாகத் தந்து கொணர்ந்துரைக்க என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : முற்படக்கிளந்த பொருட் படைக்கு எல்லாம் என்பது — முன்னால் உரைக்கப்பட்ட சூத்திரத்துப் பொருட்கெல்லாம் என்றவாறு; எச்சம் ஆகி வரும் வழி அறிந்து என்பது — ஒழிவுபடவரூஉம் இடம் ஆராய்ந்து என்றவாறு; கிளந்த அல்ல வேறு பிற தோன்றினும் என்பது — சொல்லப்பட்ட வாய்பாடின்றிப் பிறவாய்பாடு தோன்றினும் என்றவாறு ; கிளந்தவற்று இயலான் உணர்ந்தனர் கொளலே என்

பது — அச்சொல்லப்பட்ட பத்து இலக்கணத்தானே உணர்ந்து உரைக்கப்படும் என்றவாறு.

இது களவிடத்தொழிந்தது, கற்பிடத்தொழிந்தது என்று அறிந்து என்றவாறு.

தலைச் சூத்திரத்துள், 'அன்பினைந்திணை' என்றதல்லது அன்பு உணர்த்துமாறு ஆண்டு உணர்த்தியதில்லை, இதுவே ஒத்தாகத்தந்து உணர்ந்து அதன் விகற்பமெல்லாங் கொள்க.

அன்பினுடைய ஐந்திணைக்குரிய இறைச்சிப்பொருள் உணர்த்தியதில்லை ; அவை,

'தெய்வ முணவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ' [அகத்திணையியல்-20]

ஐவகை நிலத்தின் ஓதப்பட்ட இடமும் காலமும் தெய்வமும் உணவும் மாவும் மரமும புள்ளும் பறையும் செய்கையும் யாழும ஆடூஉப்பெயரும் மகடூஉபபெயரும் அவ்வவ நிலத்துக்கு மக்களும் நீரும் இருதுவும் என்றித் தொடக்கத்தனவும். ஐந்திணைக்குரியன உரிப்பொருளும், அவற்றின் நிமித்தமும, ஐந்திணைக்குரிய விகற்பமும் அவை எல்லாம் இதுவே ஒத்தாகத்

இனி, எண்வகை மணத்தின் விகற்பமும இதுவே ஒத்தாகத் தந்துரைக்க.

இனிக், கந்தருவ வழக்கின் விகற்பமும் இதுவே ஒத்தாகத் தந்துரைக்க.

இயற்கைப் புணர்ச்சியின் இருவரும் தம்முள் தலைப்பெய்யுமாறும், புணரும் இடத்துத் தன்மையும், அது கன்மேற் பொதும்புபட்டுக் கோட்டுப்பூவும் கொடிப்பூவும் நிரந்து, மேற் சித்திரப்படாம் விரித்தாலேபோன்று,வண்டும் தும்பியும் வரிக்கடைப் பிரசமும் யாழும் குழலும் முரன்று, கடற்றிரையும் கானியாறும் முழவும் துடியும் பாடியம்ப, இரவோரன்ன கொழுநிழற்றாய், நிலவோரன்ன வெண்மணலொழுகி, அகத்தார் புறத்தாரைக் காண்டல் எளிதாய்ப், புறத்தார் அகத்தாரைக் கண்டல் அரிதாய், வாரேனும் விழைவைத்தவிர்த்தோரும் விரும்பிய

பொழிலுள், இயற்கைப் புணர்ச்சியது இறுதிக்கண், தலைமகளை ஆற்றுவித்துப் பிரியும் பிரிவும் இதுவே ஓத்தாகத் தந்துரைக்க.

இனிப், பாங்கற்கூட்டத்துக்கண் தலைமகனது வேறுபாடு கண்டு பாங்கன் வினவத் தலைமகன் சொல்லினவும், அவை கேட்ட பாங்கன் கழறினவும், பாங்கற்கு எதிர்மறையாகச்சொல்லினவும், எதிர்ப்பட்ட தலைமகனது ஆற்றாமை கண்டு பாங்கன் தலைமகற்குக் கவன்றனவும், கவன்றபாங்கன் நின்னாற் காணப்பட்ட உரு எவ்விடத்து எத்தன்மைத்து என்றதுவும், தலைமகன் இன்னவிடத்து இத்தன்மைத்து என்னாற் காணப்பட்ட உரு என்னுமாறும், அதுகேட்ட பாங்கன் அவ்விடத்து எதிர்சொல்லுமாறும், அவ்விடம் புக்குப் பாங்கன் தலைமகளைக் கண்டு நின்று சொல்லினவும், பாங்கன் மீண்டுவந்து இடம் காட்டினவும் இதுவே ஓத்தாகத் தந்துரைக்க.

'அவ்வியல் பல்லது' [இறையனார் - ச]

என்னுஞ் சூத்திரத்துவிகற்பம் இதுவே ஓத்தாகத் தந்துரைக்க.

தலைமகன் தோழியை இரந்து குறையுறுமாறும்,

குறையுறுநின்றவழித் தோழி கையுறைமறுக்குமாறும்,

மதியுடம்படுக்குமாறும்,

படுத்தவழி இருவர்குறிப்பும்பற்றிக் கூட்டமுண்மை உணருமாறும்,

உணர்ந்தாள் அது நெஞ்சிற்குச் சொல்லுமாறும்,

பின்னைத் தோழி தலைமகனது ஆற்றாமைக்குக் குறைநேருமாறும்,

நேர்ந்தாள் தலைமகளைக் குறைநயப்புக் கூறுமாறும்,

தமர் இற்செறித்தவழித் தலைமகளது கற்பழிவு நோக்கி அறத்தொடு நிற்குமாறும்,

குறையுறுநின்ற தலைமகனைத் தலைமகளது அருமை கூறிச் சேட்படுக்குமாறும்,

தோழி அறத்தொடு நிற்கும் விகற்பமும்,

இரவுக்குறி விகற்பமும்,

பகற்குறிக்கண் தோழியும் தலைமகனும் சொல்லும் விகற்பமும்,

இரவுக்குறி நிகழுமிடம் இன்னவிடம் என்று சொல்லும் விகற்பமும்,

இரவுக்குறிக்கண் அம்பலும் அலருமு உண்டாமாறும்,

இரண்டும் களவாமாறும்,

வெளிப்பட்டபின்றை நிகழுஞ் சொல்லும்,

புணர்ந்துடன் போக்கும்,

உடன்போக்கின்கண் தோழியும் தலைமகனும் சொல்லும் விகற்பமும்,

இடைச்சுரஞ் செலவழுங்குமாறும்,

அறத்தொடுநிலை மாட்சிமைப்படாதவிடத்துத் தோழி தலைமகளைக் கையடை தந்தாள் ஒழியுமாறும்,

தலைமகன் ஏன்றுகொண்டு போமாறும்,

அவர்களை இடைசசுரத்துக் கண்டார் சொல்லும் வாய்பாடும்,

செவிலி பின்செல்லுமாறும்,

பின்செல்ல இடைச்சுரத்துக் கண்டார் சொல்லும் முறைமையும்,

கண்டார் இடைச்சுரத்துத் தலைமகளது நிலைமையுரைத்து மீட்குமாறும்,

தலைமகன் மகிழ்ச்சியாமாறும்,

தலைமகன் பொருள் முதலாயினவற்றிற்கு வரைவிடை வைத்துப் பிரிந்தவழி, தலைமகளைத் தோழி ஆற்றுவிக்குமிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவனவும்,

வரைவொடு புக்கவழித் தந்தையும் தன்னையன்மாரும் மறுக்குமாறும்,

அவ்வழி நற்றாய் அறத்தொடு நிற்குமாறும்,

கற்புக்காலத்துத் தலைமகன் தலைமகளைப் பிரியும் பிரி-வென்று சொல்லப்பட்ட பிரிவும்,

பிரிந்தவிடத்துத் தலைமகள் ஆற்றுளாகத் தோழி வற்புறுத்-தனவும்,

பருவங்காட்டினவும்,

தலைமகன் வினைமுற்றுவித்து வந்தவாறும்,

அஃதுணர்ந்த தோழி சொல்லினவும்,

தலைமகன் வினைமுற்றினான் தேர்ப்பாகற்குச் சொல்லினவும், முகிலுக்குச் சொல்லினவும்,

தலைமகன் தலைமகளுடனுயிருநது தோழி கேட்பச் சொல்-லினவும்,

மற்றும், பரத்தையிற் பிரிவின்கண் துனியும் புலவியூடலும் அவற்றது விகற்பமும்,

பரத்தையிற் பிரிந்த தலைமகற்குத் தலைமகள் வாயின்மறுத்-தனவும்,

வாயில்வேண்டிப் பாணன் முந்துறுத்தனவும்,

வாயில் பெற்றுப் புக்கனவும், மற்றும் பிறவுமெல்லாம் இதுவே ஒத்தாகத் தந்துரைக்க. (உ௯)

[௬௦]

களவு கற்பெனக் கண்ணிய வீண்டையோ
ருளநிக ழன்பி னுயர்ச்சி மேன.

என்பது என்னுதலிற்றோ எனின், மேல்வகுத்த களவு கற்புக்-கட்குப் பிறிதும் ஆவதோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் : களவு கற்பு எனக் கண்ணிய என்பது — களவென்றும் கற்பென்றும் புலவோரால் வகுத்துரைக்கப்பட்ட ஒழுக்கங்கள் என்றவாறு ; ஈண்டையோர் என்பது — இவ்வுல-கத்திற் பிறந்தானும் சஞ்சரித்தானும் பொருந்துவோரது என்ற-வாறு ; உளம் நிகழ் அன்பின் உயர்ச்சிமேன என்பது — உயர்

குலத் தலைவன் தலைவி யென்று இன்னோரது உளத்து நிகழ்கின்ற அன்பினது உயர்வின்கண்ணவாம் என்றவாறு.

தேவர்க்கும் நாகர்க்கும் இவ்வொழுக்கம் அவர் உலகத்து இல்லை என்பார், 'ஈண்டையோர்' என்றார். எனவே, அன்னோர்க்கு அஃது ஓரோர் காலத்து இவ்வுலகத்து நிகழும் என்றாயிற்று. அஃது இவ்வுலகிலும் இயற்கையான் நிலைபெறுக புலவரான், 'இல்லது இனியது நல்லது' என நாட்டப்பட்டதோர் ஒழுக்கம் என்பார், 'கண்ணிய' என்றார்.

இனி, இரட்டுறமொழிதலான், 'ஈண்டையோர்' என்பதை ஒருபெயராகக் கொள்ளாது, 'ஈண்டை ஓர்' எனக் கொண்டு,

'தானே யவளே தமியர்' [இறையனார் - உ]

என்றதனால், தானே அவள், அவளே தான் என இயன்ற ஈருடலின் ஒருயிர்போல்வார் உளத்து என்று கொள்ளினும் அமையும்.

'அன்பின் உயர்ச்சி' எனவே, அஃதில்லாவிடத்து இவ்வொழுக்கங்கள் நடைபெறா என்பதூஉம், அதனானே அஃது உயர்ந்தோர்மாட்டது என்பதூஉம், அவருள்ளும் அரசர்க்கே சிறந்தது என்பதூஉம் பெற்றாம். அற்றாயின், 'உயர்ந்தோர் மேன' எனப் பாடமோதலாகாதோ எனின்,

'அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினுங்
கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்.' [அகத் - உங.]

என மற்றை வருணத்தோர்க்குஞ் சிறுபான்மை அஃது உரியது என்று தழீஇக்கோடல் கருதப்பட்டது என்க. (உள)

## இறையனார் களவியலுக்கு

### நக்கீரனார் செய்தருளிய உரை

### முற்றுப்பெற்றது.